MASTER
NEGATIVE
NO. 1996-1244

MICROFILMED 1996

AMERICAN THEOLOGICAL
LIBRARY ASSOCIATION

EVANSTON, ILLINOIS 60201

DAY MISSION MONOGRAPHS ON MICROFILM: SET I

A JOINT PRESERVATION PROJECT OF
THE AMERICAN THEOLOGICAL LIBRARY ASSOCIATION AND
YALE DIVINITY SCHOOL LIBRARY, FUNDED IN PART BY
THE PEW CHARITABLE TRUSTS

REPRODUCTIONS MAY NOT BE MADE WITHOUT
PERMISSION FROM
THE AMERICAN THEOLOGICAL LIBRARY ASSOCIATION

COPYRIGHT

The copyright law of the United States - Title 17, United States Code - concerns the making of photocopies or other reproductions of copyrighted material.

Under certain conditions specified in the law, libraries and archives are authorized to furnish a photocopy or other reproduction. One of these specified conditions is that the photocopy or reproduction is not to be "used for any purpose other than private study, scholarship, or research." If a user makes a request for, or later uses, a photocopy or reproduction for purposes in excess of "fair use," that user may be liable for copyright infringement.

This institution reserves the right to refuse to accept a copy order if, in its judgement, fulfillment of the order would involve violation of the copyright law.

Author:
Beschi, C. J.

Title:
Instructions to catechists

Place:
Madras

Date:
1849

BIBLIOGRAPHIC RECORD TARGET

Author: Beschi, C. J.

Title: Instructions to catechists : in twenty chapters, with an appendix of eight chapters / by C. J. Beschi.
Published: Madras : American Mission Press, 1849.
Description: 16 cm.
Subjects (Library of Congress):
Missions--India.

MICROFILMED BY
PRESERVATION RESOURCES
BETHLEHEM, PA 18017

on behalf of
American Theological Library Association and
Yale Divinity School Library

A Joint Preservation Project of the
American Theological Library Association and
Yale Divinity School Library, funded in part by the
Pew Charitable Trusts

Film Size: 35mm
Image Placement: 2A
Reduction Ratio: 8:1
Date Filming Began: 4/23/96
Camera Operator: RWS

BIBLIOGRAPHIC IRREGULARITIES

MAIN ENTRY: Beschi, C.J.

Instructions to catechists

_____ Page(s) missing/not available: ________________

_____ Volume(s) missing/not available: ________________

X Illegible and/or damaged page(s): pages 122, 181

X Page(s) or volume(s) misnumbered: pagination begins with page 3

_____ Bound out of sequence: ________________

_____ Page(s) or volume(s) filmed from copy borrowed from: ________________

X Other: Bleedthrough and stained pages throughout

יהי אור
העם
ההלכים
בחשך
ראו אור
גדול
THE DAY
MISSIONS LIBRARY
YALE UNIVERSITY

வேதியரொழுக்கம்,

OR

INSTRUCTIONS TO CATECHISTS.

IN TWENTY CHAPTERS.

WITH AN APPENDIX OF EIGHT CHAPTERS.

BY REV. C. J. BESCHI.

7113

MADRAS:
PRINTED AND SOLD AT THE AMERICAN MISSION PRESS.
1849.

Tib5
B46

அட்டவணை.

அதிகாரம்.	காரியம்.	பக்கம்.
	பாயிரம்,	௩
க.	வேதியர் தொழிலியல்பு,	௬
உ.	வேதியர் தொழிலின் மாட்சி,	௰உ
௩.	வேதியர் தொழில் எவர்க்கும் பொதுத் தொழில்,	உக
ச.	வேதியர் தொழிலுக்காயத்தம்,	௩ச
ரு.	பிறருக்குதவத்தன்னைக்காத்தல்,	சச
௬.	தன்னைக்காக்கப் பிறரைமறவாதிருத்தல்,	ருரு
எ.	பிறரை ஈடேற்றத் தன் நல்லொழுக்கமே முதல்வழி,	௬௬
அ.	பிறரை ஈடேற்ற ஆண்டவரை மன்றாடுவதிரண்டாம்வழி,	எ௯
௯.	பிறர் ஈடேற்றத்துக்காசை அதற்கு மூன்றாம்வழி,	அ௯
௰.	சொன்னஆசையைப்பற்றுவிக்கும் நியாயங்கள்,	௱உ
௰க.	தன்னை நம்பாமல் ஆண்டவரை முழுதும் நம்புதல்,	௱௰௯
௰உ.	பிறர் உயிரொன்றையேயன்றிப் புறக்கோலத்தைப் பாராதிருத்தல்,	௱உ௬
௰௩.	அன்புகாட்டல்,	௱௩க
௰ச.	பிறர் பொருளாசை காட்டாதிருத்தல்,	௱சஉ
௰ரு.	இடமும் காலமும் தெரிதல்,	௱ச௯

அதிகாரம்.	காரியம்.	பக்கம்.
௰௬.	வழிதப்பினவரோடே நுழைந்து தம்மோடிழுத்தல், - - -	௩௫௬
௰௭.	பலனைக்காணமலும் துணிவுவிடாதிருத்தல், - - - - -	௩௬௧
௰௮.	தம்மோடொருப்படல், - - -	௩௬௮
௰௯.	வேதியர் தொழிற்குத்துணை, - -	௩௭௯
௨௰.	வேதியரொழுக்கத்துக்குறுதி, - -	௩௯௫

வீரமாமுனிவர் சரித்திரம்.

வீரமாமுனிவர் (**Beschi**) இத்தேசத்திற்கு வந்தவரலாற்றைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம். இரட்சகரவதாரம்பண்ணின எருசலேம் நகரத்திலிருந்து பலதேசங்களிலும், அவருடைய மார்க்கம் பிரசித்தமாகி, அநேகரால் அங்கிகரிக்கப்பட்டு வந்தது. அப்படியே உரோமை நகரத்திலும் கிறிஸ்துமார்க்கம் பிரபலமாயிருந்தது. அவ்விடத்தில் பிரதான போதகராயிருந்த பாப்பானவருடைய உத்தரவால் சவரியார் என்பவர் (**Xavier**) பொர்த்துக்கீசுக்காரர் முகாந்தரமாய் இத்தேசத்திற்கு வந்து பாப்புமார்க்கத்தைப்பரப்பினர். அதன் பின்பு தத்துவபோதகர் (**Robert De Obili**) இத்தேசத்திற்கு வந்து தமிழ்ப்பாஷையிலும் சமஸ்கிருதபாஷையிலும் தேறினவராயிருந்து, பாப்புமார்க்க வேதசாஸ்திரங்களை மிகுதியும்செய்து வெளிப்படுத்தி வந்தார். இவர் உரோமைப் பிராமணனென்று சொல்லிக்கொண்டதனால், மதுரையிற்கூடின பிராமணர்கள் தூஷணித்ததற்குத்தக்க உத்தரவுசொல்லி, பின்பு தாம் செய்த நூல்களுள் யூதப்பிராமணனென்றும் சொல்லிக்கொண்டார். தன்னைப்பிராமணனென்று சொன்னதை அசத்தியமல்லவென்று தாம் உரோமைபுரிக்குப்போய் அங்கும் ரூபித்தார். இப்படியிருக்கையில் இப்பொழுது தேசத்தில் வீரமாமுனிவரென்றும் நம்பூரி ஐயரென்றும் சொல்லப்பட்டவர்கள் இத்தாலிய தேசத்தில்பிறந்து வளர்ந்து உரோமை மடத்தில் வேத சாஸ்

திரம்முதலிய பற்பல நூல்களைக் கற்றுணர்ந்து சந்நி யாசிகளாகி, பாப்புவினால் இத்தேசத்துக்கு அனுப் பப்பட்டு, (சூளாஞூ) இவ்விடத்துக்கு வந்தார் கள். அவர்களில் நம்பூரி ஐயர் மலையாள நாட்டுக் குப்போனார். வீரமாமுனிவர் என்பவர் இந்தத்தமிழ் நாட்டிலே தாபனப்பட்டுத் தமிழ் இலக்கண இலக் கியங்களை ஆராய்ந்து மகாவித்துவானானார். பின்பு முன் தத்துவபோதகர் செய்த வேத சாஸ்திரங்களைக் காப்பாற்றும்பொருட்டும், அதை யாவரும் போற் றும்பொருட்டும் வேண்டிய உதவி நூல்களைத் தாம் செய்வதுமன்றி, இவர் இத்தாலியா, கிறேக், எபி ரேயு, லத்தீன், பொர்த்துக்கீஸ் முதல் அநேக பா ஷைகளிலே தேர்ந்தவராயிருந்தாலும்; தமிழ்ப்பா ஷையில் இலக்கணங்களை நன்றாய் ஆராய்ந்து இரு பது வருஷம்வரையில் திருவள்ளுவர் முதலான வர்களால் செய்யப்பட்ட இலக்கியங்களைப் பரி சோதித்து அரிய நூல்களைத்தாமுஞ்செய்தார். மே லும் இவர் தம்முடைய ஆராதனையின் கொள்கை யொன்று தவிர மற்ற எவற்றிலும் சைவ சமய சந்நியாசிகளைப்போல் வேஷமும், செய்கையும் உள்ளவராயிருந்தார். அல்லாமலும் நாடுகடோறும் யாத்திரைபண்ணுகிறவராயும், ஏழைக்கு உபகாரி யாயும், கோவில்வேலைகளுக்கு முதல் உபகாரஞ் செய்கிறவராயும், அநேகம் பிள்ளைகளுக்குப் பாஷை களைக் கற்பித்து உத்தியோகங்கொடுக்கிறவராயுமி ருந்தார். இப்படியிருக்கையில் முத்துச்சாமி சாராய பாளையக்காரனுடைய ஊரைச்சேர்ந்த கோணுங்குப் பமென்ற ஆரியனூரில் ஒரு கோவில் கட்டுவித்துப் பின்பு ஒரு தமிழர் ஸ்திரீயின் ரூபமாய் ஒரு மாதாப் படத்தையெழுதி மனில்லாவுக்கனுப்பி ஒரு ஸ்திரீ யினுடைய உயர்வுக்குச்சரியாய் ஒரு மாதாச் சுரூ

பழுங்கையில் ஒரு வருஷத்துக் குழந்தையைப்போல இயேசுநாதருடைய சுரூபமுஞ்செய்வித்து அதை மயிலாப்பூருக்கழைப்பித்து அதற்குப் பெரியநாயகி அம்மனென்று பெயரிட்டு, அவ்விடத்தில் ஸ்தாபித்து அப்பொழுது பதினைந்து பாடலும்பாடினார். ஏலாக்குறிச்சித் திருக்காவலூரில் சிலர் பாப்புமார்க்கக் கோவிலுக்குத் தத்தம்பண்ணிக்கொடுத்த நிலத்தில் அடைக்கலநாயகி பெயரால் ஒரு கோவில் கட்டுவித்து (௲எ௱உ௰௫) தேம்பாவணியென்னும் ஒரு காவியத்தைப்பாடினார். (௲எ௱உ௰௬) அதற்குப் பதவுரையிட்டார். வீரமாமுனிவரென்னும் நாமம் இந்நூலின் முகாந்தரமாகவும் தன் செய்கையின் முகாந்தரமாகவும் காரணப்பெயராய் வழங்கிவந்தது. இந்நூலன்றியும் அநேக நூல்களை அவர் செய்திருக்கிறார். எவைகளெனில்; திருக்காவலூர்க்கலம்பகம், அடைக்கலமாலை, கலிவெண்பா, கித்தேரியம்மானை, அன்னையழுங்கலந்தாதி, அநேக கீர்த்தனைகள், வண்ணங்கள், தேவாரங்கள், அவரிடத்தில் கற்றுச் சொல்லிகளைந்துபேரிருந்து அவர் பாடும்பாட்டை முடிக்கும்பொழுதிவர்களும் எழுதிமுடிப்பார்கள். இதுவன்றியும், (௲எ௱உ௭௰) வேதியரொழுக்கம் என்னும் ஒரு புஸ்தகத்தையும், ஞானவுணர்தலென்னும் ஒரு புஸ்தகத்தையும் செய்தார். (௲எ௱உ௮௰) பதினெட்டு அதிகாரங்களையுடைய வேதவிளக்கம் என்னும் ஒரு புஸ்தகத்தையும், வேதமறுத்தலென்னும் ஒரு புஸ்தகத்தையும் செய்ததுமன்றி; தமிழருக்கும், தமிழ்ப்பாஷையைக் கற்கப்புகும் எவர்களுக்கும் பிரயோசனமாக (௲எ௱௩௰) தொன்னூல்விளக்கம் என்னும் இலக்கணத்தையும் (௲எ௱௩௰) சதுரகராதியையுஞ்செய்தார். இவைகளுமன்றி; திருச்சபைக்கணிதமென்றொரு சோதிடநூ

லேயும் செய்தார். வாதம் வயித்தியம் என்பவைக ளுக்கு வேண்டிய நூல்களையும் செய்தாரென்றும் கேள்வியாயிருக்கிறது. மேலும் செந்தமிழ் கொடுந் தமிழென்னும் இருவகையும், அகராதிகளையும், த மிழ்ப்பாஷையிலே மொழிபெயர்த்து ஏராளமாய்ப் பரப்பினார். இந்த மொழிபேர்த்த புஸ்தகங்களின் விவரம் என்னவென்றால்; கொடுந்தமிழ் இலக்க ணத்தை (௲௭௱௨௰௮) லத்தீன்பாஷைப்படுத்தி, (௲௨௰௮) தரங்கம்பாடியில் அச்சுப்பதிப்பித்தார். செந்தமிழ் இலக்கணத்தில் எழுத்துச்சொல் யாப்பு இவைகளைச்சேர்த்து லத்தீன்பாஷையில் மொழி பேர்த்ததுமன்றித் தொன்னூல்விளக்கத்தையும் அப் படிச்செய்தார். அதற்குப்பின்பு தமிழில் உண்டு பண்ணின கொடுந்தமிழுக்கும், லத்தீனுக்கும் அக ராதியும் பொர்த்துக்கீசுப்பாஷையையும் லத்தீன் பாஷையையும் சேர்த்துத் தமிழிலே மொழிபேர்த்த ஒரு அகராதியும், கொடுந்தமிழ் வாசிப்பதற்கு வான சாஸ்திரமும், அதற்கு லத்தீன் மொழிபேர்ப்பும், வாக்கிய சித்தாந்த கணிதத்துக்கு லத்தீன் மொழி பேர்ப்பும், தெலுங்குபாஷைக்கு லத்தீனிலே வியா கரணமுஞ்செய்தார். இவையல்லாமலும் திருவள் ளுவர்குறளை லத்தீன்பாஷையிலே மொழிபேர்த்து வியாக்யானம்பண்ணினார். இவைகளைத்தவிரவும் இன்னம் பல நூல்களைச்செய்தாரென்றும் கேள்வி யாயிருக்கிறது.

மேலும் இவர் திருச்சிராப்பள்ளிக்கு நபாபாய் இருந்த சந்தாசாய்பிடத்திலே சம்பாஷிக்கும்படி பாரிசும், துலுக்கும் மூன்று மாதத்துக்குள்ளாகக் கற்றுக்கொண்டு, அவரிடத்திற்போய்ப் பேசினதி னிமித்தம் இஸ்மத சந்நியாசியெனப் பேர்பெற்று இவருடைய சாமத்தியத்தினாலே அவருக்கு மந்

திரியாயிருக்க ஏதுவிருந்தது. அக்காலங்களில் இவருடைய சமுசாரங்களிலே மிகுந்த ஆடம்பரமான தொண்டுகள் இவருக்கு நடந்துவந்தன. அப்படியிருந்தும் குருத்தொழிலும் தவறுமல் கல்விமுயற்சியிலும் வழுவாமல் இருந்தார். அப்படி இருக்கையில், சிலர் இவருடனே தற்கிக்கப்புறப்பட்டு ஏலாதேபோவார்கள். ஆனல் இரண்டு பண்டாரங்கள் மவுனமாய் அவரைச் செயிக்கும்பொருட்டு அவருக்குமுன்பாக இரண்டுவிரலைக்காண்பிக்க அதற்குத் தாம் ஒரு விரலைக்காண்பித்துக் கையைத்தட்டப் பண்டாரங்கள் அதினுடைய அர்த்தந்தெரியாமல் சபதத்தைவிட்டு அவரை வணங்கிப் பொருள் கேட்க அவர் சொன்னர். பண்டாரங்கள் மறுமொழிபேசாமல் போய்விட்டார்கள். இதுவுமல்லாமல் ஒன்பது பண்டாரங்கள் இவருடனே தற்கித்து வெல்லக்கூடாமல் ஆறுபேர் கிறிஸ்தவர்களானர்கள். மூன்றுபேர் சடையறுக்கப்பட்டு வெட்கப்பட்டு ஓடிவிட்டார்கள். அந்தச்சடைகள் கலாபனைவரைக்கும் திருக்காவலூர்க் கோவிலில் இருந்ததாம்.

பின்னையும் இவர் திருச்சிராப்பள்ளி நபாபுக்கு விரோதிகள்வந்து முற்றிக்கைபோட்டபொழுது, இவர் கடந்துபோய்க் காயலான் பட்டணத்துக்குச் சமீபமான மணப்பாட்டிலே பாப்புமார்க்கக்கோவிலின் மடத்தில் வாசம்பண்ணி இரண்டு வருஷமாய்த் தாம்செய்த நூல்களைப் பிரசித்தம்பண்ணி (௲௭௱௪௰௨) மரணமடைந்தார்.

வீரமாமுனிவர் செய்த

வேதியரொழுக்கம்.

INTRODUCTORY.

பாயிரம்.

மேற்குல மனிதர் செய்யவேண்டிய ஆறு தொழில்களில், * வேதத்தைப் போதித்தலும் ஒன்றாகையால், மேற்குலத்தோரை வேதியர் என்பார். ஆயினும், இப்பெயர் தொழிற் பெயர் ஆகையில் அந்தத் தொழிலைச் செய்வார் யாவரும், எக்குலத்தில் பிறந்தாராயினும் வேதியர் என்னப்படுவது நியாயமாமே. ஆதலால், வேதத்தைப் போதிக்கும் குருக்களும், இவர்களிடமாக வேத உணர்ச்சிகளைச் சொல்ல அனுப்பப்பட்ட உபதேசிகளும், வேதியர் என்னப்படுவார்கள். இது மெய்யாயினும், வேதியரொழுக்கமென்று நாம் இப்புத்தகத்தை எழுதத் துணிந்தபோது, வேதியரென்னும் பெயரால் குருக்களைக் குறித்தோமென்று நினைக்கவேண்டாம். காரணக் குருக்கள் யாவரும் பொன்மலை உச்சிமேல் விளங்கின செஞ்சுடரொப்ப நிற்க; நாம் அவர்கள் பாதத்

* இந்துமதஸ்தருடைய சாஸ்திரப்படி குறித்த அவ்வாறு தொழில்களாவன. ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவைகளாம்.

தை அண்டி அவர்களிடத்தில் ஒரு கதிரிரந்து சிறு மீனுக நின்றேமாகில் பாக்கியந்தானே. அவர்கள் வழுவாதொழுகும் உத்தம முறையைக் கண்டு, நாமும் தூரமாயினும் பின்சென்றேழுக வருந்துவோமொழிய அவர்கள் பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தைக் காட்ட நினைப்போமோ? ஆகையால், இதிலே வேதியரென்று போது விசேஷமாய் உபதேசிகளைக் குறித்தோமென்று அறியக்கடவீர்கள். விசேஷமாயென்றேம், அதேதேனில்; நாங்கள் கரையேற விலகவேண்டிய தீவினை, செய்யவேண்டிய நல்வினை, அறியவேண்டிய சத்தியங்கள், இவையெல்லாம் பிறர்க் குணர்த்துவது உபதேசிகளுக்குமாத்திரம் தொழிலாமென்று நினைக்கத் தேவையில்லை. இந்தத் தொழிலைச் செய்வது உபதேசிகளுக்கல்லாதே சில பெயர்களுக்கும் கடனுகி எவர்க்கும் பெரும் பலனுமே. தாய் தகப்பன் தம் மக்களுக்கும், ஆண்டவர் தம் அடிமைகளுக்கும், மூப்பர் தம்மைச் சேர்ந்த இளையோர்க்கும் தீவினை விலக்கி, நன்னெறி காட்டி, அவர்களை மேற்கரையேற்ற வருந்துவது கடன்தானே. இக்கடனில்லாதவர்களும், பிறருயிர் கெடுவதற்கிரங்கிப் பிறரையும் கதியில்சேர்க்கப் பிரயாசப்பட்டால், இந்த அரிய தயையால் தங்களுக்கு உத்தம பலனே விளைவதும், விளைந்த பலன் ஒருநாளும் கெடாது வளர்வதும் சந்தேகமற்ற நிச்சயந்தானே. ஆதலால், இதி

லே உபதேசிகளை விசேஷமாய்க் குறித்து இப் புத்தகத்தை எழுதினாலும், பொதுப்பட யா வர்க்கும் நன்மையாக முடிக்கப் பிரயாசப்படு வோம். இதனால் இத்தொழில் இயல்பும் மாட்சியும் இன்னதென்று சொன்னபின்னர், இத்தொழில் எவர்க்கும் பொதுத்தொழிலென் று காட்டுவோம். மீளவும், தான் கரையேறு வதன்றியே பிறரையுமேற்ற வருந்துவது உத் தம தேவ தொழிலேயாகி, இதிலே பிறர்க்குத வியின்றி, தனக்கும் கேடாக யாதொருவன் பிழை செய்தால், எல்லா நிர்ப்பாக்கியங்களி னும் நிர்ப்பாக்கியம் ஆகுமென்றமையால், இத்தொழில் செய்வதற்கு ஆயத்தமும், பிற ருக்குதவத் தன்னைக் காத்தலும், தன்னைக் கா ப்பதுவேண்டிப் பிறரை மறவாதிருத்தலும், இதற்கு அஞ்சினவர்க்கு உறுதியும் சொல்லி, அத்தொழில் பலிக்கும்படிக்கு வழிகள் பல வற்றையும் அதனை நன்றாய் முடிக்கும் முறை கள் பலவற்றையும் காட்டி, இருபது அதிகா ரங்களாக இப்பயனை வகுத்துத் தருவோம். நாம் இதைக் குறை வழுவின்றி முடிக்கவும், இதிலே நாம் நினைத்த பலனை எவரும் கைக் கொள்ளவும், மனிதரை இரட்சிக்கும் இத் தொழிலைச் செய்ய மனுக்குலத்தொரு மகனாக வந்த இயேசுநாதருதவ மன்றுடி, அவர் திருப் பாதத்தை நமது தலையணியாக ஏற்றி வணங் குகிறோம்.

முற்றிற்று.

க. அதிகாரம்.

NATURE OF THE CATECHISTS' WORK.

வேதியர் தொழில் இயல்பு.

அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் தீமோத்தேயருக்கு எழுதின முதல் நிருபம் நான்காம் அதிகாரம் பதினாறும் வசனத்தில் சொன்னதாவது; "உன்னைக் காத்தலும், பிறரை உணர்த்தலும் செய்வாய். இவ்விரண்டையும் விடாமல் முடிக்க வருந்துவாயாகில் உன்னையும், உன் புத்திகளைக்கேட்டவர்களையும் கரையேற்றுவாயென்றார்." சின்னப்பர் இதிலே சொன்ன இவ்விரண்டையும் ஒருப்பட முடிப்பது வேதியர் தொழில் இயல்பாமே. அவனவன் தான் தான் கரையேறப் பிரயாசப்படுவது எவர்க்கும் கடனாம். இப்பூவுலகில் இன்பமாய் உண்ணவும், அலங்காரமாய் உடுக்கவும், திரளாய்ப் பொருளைக் குவிக்கவும், கீர்த்தியாய்ப்பேரொளி தேடவும், செல்வமாய் நெடுநாள் இங்கே வாழவும், மனிதருக்குள்ளே பிறந்தவர் ஒருவருமில்லை. இங்கே தரும நன்னெறி வழுவாதொழுகி மோட்சகதிபெற்று, அங்கே முடியாக் காலத்துயிர் வாழ்ந்திருப்பவே எல்லாரையும் ஆண்டவர் உண்டாக்கினார் என்றறிவோம். எவ்வகைச் செல்வம் பெற்றாலும், எவ்வகை நூல் படித்தாலும், எவ்வகைத் திறமடைந்து இராச்சியங்களை ஆ

ண்டாலும், முன்னும் பின்னும் ஒருநாள் எவ ரும் சாவதொழிய, பிறந்தவருட் சாவாதாரில் லை. இப்படியே நாலுநாள் இங்கே கீர்த்தி யும் செல்வமும் பெற்று வாழ்ந்த பின்னர் அவ லமாய்ச் செத்து, என்றென்றைக்கும் நரக வேதனை அநுபவிக்க விழுவது அள்வறுக்கப் படாத நிர்ப்பாக்கியமல்லோ? ஆகையால், வழிப்போக்கர் தங்கும் சாவடியாக இப்பூவுல கத்தை எண்ணி, இங்கே வாழினும், வருந்தி னும் பாரமல்லவென்று முடியா மோட்சத்தி லேவாழ விடாத கருத்தோடு எவரும் பிரயா சப்படுவது நியாயந்தானே. இதுவே மனிதர் எல்லாருக்கும் நன்மையொழிய, தேடத்தகும் மற்றொரு மெய்யான நன்மையில்லை. இத னை இழந்து, தீயோர் நரகத்தில் என்றென்றைக் கும் வேக விழுவது நமக்குத் தீமையொழிய அஞ்சத்தகும் மற்றொரு தீமையுமில்லை. இ தெல்லாம் ஸ்திரமாய் மனதில் உணர்ந்து தே றித் தான் கரையேற வருந்துவதல்லாதே இ தை அறியாதவர்களுக்கும் அறிவித்து, இதை அறிந்து எண்ணுதவர்களுக்கு மனதில் தைக் கக் காட்டி, மற்ற யாவரையும் மேற்கரையே ற்றப் பிரயாசப்படுவதே உபதேசிகள் செய்யும் தொழில் இயல்பாமே. ஆகையால், இத் தொழில் விளைவிக்கும் நன்மையின்மேல் நமக் கு நன்மையில்லாமையால், இத் தொழிலின் மேலும் உத்தம தேவ தொழிலொன்று இல்லை யென்பது நிச்சயந்தானே. ஒருவன் கண் கே

ட்டு, கண்காட்டியுமின்றி, செவ்வழி தப்பித் தாழ்ந்த குழியில் விழப்போகிறதைக் கண்டாயாகில், அவன் உன் இனமல்லவென்றும், அக்குழியில் நீயே விழாதேபோனால், உனக்குப் போதுமென்றும் பேசாதே போவாயோ? போனாயாகில், கொடிய நிஷ்டூரமென்று மனதிரங்கி உடனே, விழாதே நில்லென்று கூப்பிட்டு ஓடிப்போய், அவன் கையைப்பற்றி நன்னெறியில் நிறுத்தப்போவாயல்லோ? அஞ்ஞானத்தாலும், பொருளாசையாலும், காம மயக்கத்தாலும், பகை வெறியாலும், ஞானக்கண்ணாகிய அறிவுகெட்டு உயிர்க்குருடர் பலரே திரிந்து, புண்ணிய நெறியில் வழுவித் தவறி நரகக்குழியில் விழுவதைக் கண்டு, மனமிரங்காமலும் உணர்ச்சியாகிய கையைத் தந்து, வழியில் நிறுத்தாமலும் போவது நல்லதோ? அவன் என் இனத்தானல்லவென்றும், இது என் தொழிலுமல்லவென்றும் உன்னாலான உதவி செய்யாமற்போனால் கொடிய நிஷ்டூரமல்லோ? பூவுலகத்தின் வஞ்சனைக்கஞ்சி, வனத்தில் புகுந்து நெடுநாள் சஞ்சலமின்றி ஞானமே தவமே நிழலைச்செய்யச் சுகமாயிருந்த முனிவர் * முதலாய் மற்றவர் உயிர்கெட்

* மெய்ப்பத்தர்கள் உலகத்தவர்களுக்கு உப்பாகவும், ஒளியாகவுமிருக்கிறார்களென்று கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றினபடியால், இப்பேர்ப்பட்டவர்கள் இதற்கு மாறாக நாட்டை விட்டுக் காட்டிற்சென்று .தவம் செய்து கொண்டிருப்பது தகாதே.

டேரி நரகத்தில் விழுவதைக் கண்டிரங்கி, வனத்தை நீங்கிப் பகைபட அடிபட நாட்டில் வந்து, விழுவாரைத்தாங்கி, விழுந்தாரைத் தூக்கி, கெட்டாரை மறித்து உயிர் பிழைக்க நிறுத்தி எவர்க்கும் உறுதிசொல்லத் துணிந்ததறிவோம். அப்படியே அறுபது வருஷமாக மனிதர் முகத்தைக் காணுதரிய ஒரு வனத்தில் ஒளித்திருந்த அசேற்சமனேன்கிற மாதவரும், பெரு அந்தோனியாரும், திருச்சபை அவசரங்களைக் கண்டிரங்கிச் செய்தார்கள். அப்படியே வீரராயனேன்பவன் திருச்சபையைப் பகைத்து, வேத முறையின்படியே சனங்களை நடக்கவொட்டாதிருப்பதைக் கண்டு ஒரு முனிவர் வனத்தை விட்டுச் சகலர்க்கும் உறுதி சொல்லிக்கொண்டு திரிந்தார். இவரை ஒரு நாள் இராயன் கண்டு, முனியாயிருக்க நீ வனத்தில் கிடவாதிங்கே வந்து திரிவது நியாயமோவென்று கோபித்ததற்கு, அவர் சொன்ன மறுமொழியாவது; மதுமலர் மெத்தைமேல் சுகமே வளர்ந்த பெண்ணுயினும் தன் தகப்பன் வீடு தீப்பற்றியெரியக் கண்டால், தன் சுகவிருக்கை விடாமலும், அங்கங்கேயோடித் தண்ணீர் எடுத்து வார்த்துப் பற்றின தீயை அவிக்கப் பாராமலுமிருப்பாளோவென்ன! அப்படி நீ கொடுங்கோலால் வேதத்தையும் நீதியையும் பகைத்து, திருச்சபையிலெங்கும் கொளுத்தின தீயைக்கண்டு, தவத்தின் சுகத்தோடினிதாய் வனத்தில் வளர்ந்த நானும் என்

ணிருக்கை விடாமலும் பற்றின தீயை அவிக்க ஞானவுணர்ச்சிகளை எவர்க்கும் சொல்லாமலு மிருப்பேனேவென்றார். இதற்கு அர்ச்சேய சிஷ்ட கிறிசோஸ்துமேன்பவர் மற்றொருவ மை சொல்லிக் காட்டினார். அதாவது; கப் பலேறின சிலரே காற்றிறகாகக் கொண்டு பறந்த தன்மையில், பாய் விரித்தொரு குறை வுமின்றிக் கடலில் ஓடிக்கொண்டு வருகை யில், மற்றொரு கப்பல் கெடுவதைக் கண்டா ல், உடனே அவர்களுக்கிரங்கிப் பாய்களைச் சுருக்கித் தங்கள் யாத்திரையை நிறுத்தி வடங் களையும், மரங்களையும் எறிந்து, தங்களாலான உதவிகளெல்லாம் செய்வார்களல்லோ! அப் படி நாமும் இப்பூவுலகிலிருக்குந்தனையும் அலைந்த வினைக்கடலின்மேல் கப்பலை நடத் தினவர்களாக நிற்போம். இதிலே மற்றவர் கெடுவது கண்டால், அவர்கள் யாரோவென் றுமலும், நமக்கு இதனால் குறைவென்ன வென்றிராமலும், பிறர்குறை எங்குறையென் று கெடுவார்க்கிரங்கி நம்மாலான தன்மையில் அவர்களுக்கு உதவப் பிரயாசப்படக்கடவோ ம். இது நீதிமுறையின்படியே தம்மைப் போலே மற்றோரையும் சிநேகிக்கும் உத்தம தன்மையே. இதுவே உபதேசிகள் தந்தொ ழிலியல்பாய்ச் செய்யவேண்டிய முறைமை. ஆகிலும், தாம் கரையேறத் தம்மைக் காத்த லும், பிறரைக் கரையேற்ற அவர்களை உணர்த் தலும், உபதேசிகள் தொழிலியல்பென்றபோ

தில் இந்தத் தொழிலால் தேடப்படும் பலன் இருவகையாக வேறுபட நினைக்கவேண்டாம். நீ உபதேசித் தொழிலைக் கைக்கொண்ட பின்னர் உன் ஈடேற்றமும், பிறர் ஈடேற்றமும் இவ்விரண்டும் ஒன்றுகப் பிணிக்கப்பட்ட தன்மையைப் பார்க்கும்பொழுதில், பிறரை எவ்வளவாக மோட்சகரையிலேற்றப் பிரயாசப்படுவாயோ அவ்வளவாக நீயும் மோட்சத்தில் அதிக வரிசை பெற்று வாழ்வாய். அல்லது பிறத்தியார் கரையேற உன்னுலானமட்டும் உதவி செய்யாயாகில், நீயும் கரையேற மாட்டாய். பலரைக் கரையில் சேர்க்க ஏற்றுக்கொண்டு, கப்பலை நடத்தும் மாலுமியின் அசட்டையினுல் நடுவழியில் கப்பல் கீழே கல்லிலே மோதி உடைந்துபோய், மற்ற யாவரும் அமிழ்ந்திப்போகையில், மாலுமி தானும் தப்பிக் கரையில் சேர்வானேவென்ன. ஆகிலும், கப்பல் நன்ருய் ஓடிவருகையில், ஒருவரிருவர் அசதியினுலாயினும், ஆங்காரத்தாலாயினும் தவறிக் கடலில் விழுந்து செத்தாலும், மாலுமியும் மற்றவர்களும் கரையேறுவார்களல்லோ? அப்படியே நீ எல்லாரையும் கரையிலேற்ற உனக்குக் கடனுமில்லை. உன் வார்த்தை கேளாமல், சிலரே மோசம் போனுலும் உனக்குக் குறைவுமில்லை. நீயே செய்யவேண்டியதைச் செய்யாமல், கப்பல் உடைந்தாற்போல உன் குறைவினுல் மற்றவர்கள் நரகத்தில் போக, நீ தப்பி மோட்ச கரை

யில் சேர்வாயென்று நம்பவேண்டாம். ஆகையால், தன் ஈடேற்றத்துக்கும், பிறர் ஈடேற்றத்துக்கும் பிரயாசப்படுவது இவ்விரண்டையும் பிரியாமல் ஒன்றாக எண்ணி, மிகவும் சந்தோஷத்தோடே இந்தத் தேவ தொழிலிலே எவரும் நடக்கக்கடவார்கள்.

உ. அதிகாரம்.

EXCELLENCE AND IMPORTANCE OF THE CATECHISTS' WORK.

வேதியர் தொழிலின் மாட்சி.

தன்னையல்லாதே பிறரையும் இரட்சிக்கப் பிரயாசப்படும் தொழில் எவ்வளவு உத்தம தொழிலோவெனில்; சுதனாகிய சர்வேஸ்வரன் தாமே இந்தத் தொழிலைச்செய்ய மனிதனாய்ப் பிறந்து, தாமே எளியனாய்த் திரிந்து, மனமகிழ்ந்து இன்பமாப் அடி, மிதி, நிந்தைபட்டுக் கொடிய மரணத்தை வலிய அடைந்தாரென்று நினைத்தால், இதன்மேல் இந்தத் தேவ தொழிலின் மாட்சியைக் காட்ட, மீளவும் ஏதாகிலும் சொல்லவேண்டுமோ? ஆகிலும், இது மிக விளங்கும்படிக்குச் சில நியாயங்களை விரித்துக்காட்டித் தருவோம். சர்வேஸ்வரன் ஒன்றுமில்லாமையில் வானுலகத்தையும் அதிலே சந்திர சூரிய நட்சத்திரங்களை உண்டாக்கி

யும், கடல் சூழ்ந்த பூவுலகத்தையும், அதிலே தீங்கனிமுதற்கொண்டினிய யாவையும் பொன் மணி முதற்கொண்டழகிய யாவையும் படைத்தும், இவையெல்லாவற்றையும் எத்தனங்களாகக்கொண்டு, மனிதர் எல்லாரும் எளிதாய்க் கரையேறச் செய்தாரல்லோ? மீளவும் தாம் மனிதனுய்ச் செய்த புதுமைகளும், பட்ட பாடுகளும், சிந்தின இரத்தமும், உண்டாக்கின தேவத்திரவியாநுமானங்களும், திருச்சபையிலே ஸ்தாபித்த மற்ற முறைகளும், மனிதர் எல்லாரையும் கரையேற்றமாத்திரமல்லோ உதவியாகச் செய்தார். இது இப்படியாகையில், ஆண்டவர் இவ்வளவு ஆசையோடே விரும்பின மனிதர் ஈடேற்றம்முடிக்க நாமும் அவருக்கு ஊழியம் செய்துகொண்டு திரிவது தேவ தொழிலென்பதற்குச் சந்தேகமுண்டோ? அர்ச்செயசிஷ்ட சின்னப்பர் தீமோத்தேயருக்கு முதலாம் நிருபம் இரண்டாம் அதிகாரம் நாலாம் வசனத்தில் எழுதினதாவது; "மனிதரெல்லாரும் உண்மை அறியவும், அறிந்து மேற்கதியடையவும், ஆண்டவருக்குத் திருவுளந்தானே என்றார்." அப்படி மனிதர் எப்போதும் மேற்கரையேறுவார்களென்று ஆண்டவர் மிகவும் விரும்பி இதுவே அவருக்கு ஒழியாத தயையினுசையாகி, அவர் தாம் பாடுபட்டு இறந்தாலும், இன்னும் எண்ணப்படாத மனிதர் நரகத்திலே விழுவார்கள் என்று கண்டதினுலல்லோ பூங்காவனத்தில்

இரத்த வேர்வையாக வருந்தினர். இது இப்படியாகையில், ஒருவனைமாத்திரம் கரையேற்ற நாமே பிரயாசப்பட்டால், எவ்வளவாக ஆண்டவருக்குப் பிரியமாகுமென்று நினைக்கத்தகும் தன்மையல்ல. ஆகையால், அர்ச்சேயசிஷ்ட கிறிசோஸ்துமென்பவர் எழுதினபடியே இரப்போர்க்கிரங்கி,தன் கைப்பொருளைக் கொடுப்பது புண்ணியமாயினும், உலகிலுள்ள திரவியமெல்லாவற்றையும் உடையவனுகி, எல்லாவற்றையும் இரந்தார்க்குப் பிச்சையாக வகுத்திட்டாலும், ஓர் உயிரைமாத்திரம் கரையேற்றுவது அதிலேயும் உத்தமந்தானே. அத்தன்மையாக, அர்ச்சேயசிஷ்ட கிறகோரி என்பவர் எழுதினபடியே, செத்தவனை எழுப்பினுலும் பாவி ஒருவனைமாத்திரம் திருப்பி நன்னெறியில் நிறுத்துவதே அதிலேயும் உத்தம தொழிலாமே. இதனுலல்லோ எழுந்திருங்களென்று செத்தவர்களை எழுப்பின இயேசுநாதர் பாவிகளை இரட்சிக்க அடி, மிதி, நிந்தைபட்டு, இரத்தமெல்லாம் சிந்திக் கொடிய மரணத்தை அடைந்தார். ஒரு சொற்கொண்டு முடித்த தொழிலே பெரிதென்பாயோ? அத்தனை பாடுபட்டிறந்து முடித்த தொழிலே பெரிதென்பாயோ? ஆகையால், பிடித்த பசாசுகளை ஓட்டவும், தீராத நோய்களை நீக்கவும், இறந்த மனிதர்களை எழுப்பவும், மற்றப் புதுமையெல்லாம் செய்யவும், உனக்கு வல்லமை ஆண்டவர் தந்தாலும் பா

ரமல்ல. மோட்ச வழியை அறியாதார்க்குக் காட்டிப் பிறரை மேற்கரையேற்ற உன்னைத் தெரிந்துகொண்டதனால், ஆண்டவர் உனக்கு அதிக பட்சத்தைக் காட்டினாரென்று சொல்லத்தகுமே. அப்படியே அர்ச்சேயசிஷ்ட அருளப்பர் சுவிசேஷம் பத்தாம் அதிகாரம் பதினேழாம் வசனத்தில் பிதாவாகிய சர்வேஸ்வரன் தன்மேல் வைத்த திவ்விய பட்சமிகுதியை இயேசுநாதர் சொல்லி, அதன் முகாந்தரம் காட்டவேண்டுமென்று தன்னைக்கொண்டேல்லாவற்றையும் உண்டாக்கினதென்றாரோ? இல்லை. இங்கே தாம் செய்த புதுமைகளை அதற்குக் காரணமென்றாரோ? இல்லை. தாமே பிதாவின் வார்த்தை மீறாமல், நடப்பது அந்தப் .பட்சத்துக்கு முகாந்தரமென்றாரோ? இல்லை. இவையெல்லாவற்றையும் சொல்லாமல், "மனிதரை இரட்சிக்க நான் என்னுயிர் தந்து இறப்பேனென்றமையால், பிதா என்மேலே மிகவும் பட்சம் வைத்திருக்கிறார் என்றார்." அப்படியே அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் பிலிப்பியருக்கெழுதின நிருபம் இரண்டாம் அதிகாரம் ஒன்பதாம் பத்தாம் பதினோராம் வசனங்களில் எழுதினதாவது; "இயேசுநாதர் மனிதரை இரட்சிக்க நிந்தைபட்டு உயிர் தந்திறந்ததனால் ஆண்டவர் அவரை உயர்த்தி, வானுலகும் பூவுலகும் கீழுலகும் எல்லாம் ஒருங்குடன் கூடிப் பணிந்து வணங்கத்தகும் படிக்கு, அவர் திருநாமத்தை எல்லா நாமங்

களினும் மேலாகச் செய்தார் என்ருர்." இதோ, மனிதரைக் கரையேற்றப் பிரயாசப் படும் இத்தேவ தொழிலிலே சகல நன்மைக் கும் காரணராகிய ஆண்டவர் பட்சத்தை மிகு தியாக விளைவிக்கும் தொழிலுமாகி, எவ்வுல கங்களிலுமெங்கும் ஒளி பெற்றுயர்ந்த மாட் சியையுடைய வழி அதாமே. ஆகையால், முட்டமுடிவுபோக நன்னெறியில் வழுவா தொழுகி, ஆண்டவருக்குப் பிரியமாக நடந்த நல்லோரெல்லோரும் நித்திய பேரின்ப தரி சனத்தை அடைந்து, மோட்சத்தில் வாழ்ந்து ஆளுவாரென்பது நிச்சயந்தானே. ஆயினு ம், தாம் வழுவாமல் நடந்ததொழிய, பிறரை யும் நடத்திக்கொண்டு கரையேற்றப் பிரயா சப்படுவார். யாவரும் மற்ற மோட்சவா சிகளில் நவக்கிரகங்களைப்போல என்றென் றைக்கும் விளங்கா நிற்பாரென்று வேதத்தில் எழுதப்பட்டதறிவோம். சொன்னதெல்லாம் ஆராய்ந்துபார்க்கில் உபதேசத்தொழிலின் மாட் சி எவ்வளவு உயர்ந்ததென்று காணப்படுமே. அதன் மாட்சியை அறிந்ததினுலல்லோ சீ யோன்மாநகரில் விளங்கின அர்ச்சேயசிஷ்ட கத்திரின் அம்மாள் உபதேசஞ்சொல்லிக்கொ ண்டு திரிந்தவர்கள் தெருவிற்போகக்கண்டால், அவர்களை மிகவும் பணிந்துவணங்குவதல்லா தே உடனேபோய் அவர்கள் அடிவைத்தவி

டத்தில் முத்தஞ்செய்வாள் * என்று அவள் சரித்திரத்தில் வாசித்திருக்கிறோம். நீங்கள் உபதேசிகளோவெனில், ஆண்டவர் உங்களைத் தெரிந்துகொண்டு, உங்களுக்குத் தக்க உத்தியோகத்தின் பெருமையை அறிந்து, இயேசுநாதர் தமக்குரியதென்று தாமே இங்கே எடுத்த தேவ தொழிலை முடிக்க, உங்கள்மேல் வைத்த பாரத்தைக்கண்டஞ்சி, அவ்வளவு உயர்ந்த உத்தியோகம் உங்களுக்குத் தகாதென்றும், உங்களால் முடிக்கலாகாதென்றும், ஆண்டவர் உதவியொன்றை நம்பி, பய நடுக்கத்தோடே இந்தத் தேவதொழிலைச் செய்யப் பிரயாசப்படக்கடவீர்கள்.

இதுவே நியாயமொழிய உங்களுக்கு வந்த உத்தியோகத்தின் மேன்மையை அறிந்து, மற்றவர்களை நிந்தித்து உங்களைக் கனமாயெண்ணி ஆங்காரிகளாய்த் திரிவது நியாயமல்ல. மரப்பாவையின்மேலே தங்கத்தைப் பூசினாலும் மரமும் தங்கமாகுமோ? நீ அடைந்த உத்தியோகம் பெரிதாயினும், நீ உடனே பெரியவனானாயோ? புறத்துப் பூசின தங்கம்

* இலிஸ்திரா ஊரிலே பருனபாவும், பவுலுஞ்செய்த அற்புதங்களைச் சனங்கள் கண்டு, அவர்களை வணங்கத் துணிந்ததை அக்குருக்கள்மார் கேள்விப்பட்டு, விசனத்தினால் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள் ஓடி மனிதர்களே, என்னத்திற்கு இப்படிச் செய்கிறீர்கள்! நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனிதராயிருக்கிறோமென்று சொன்னார்களே, இதறிந்து செய்தாளோ? செய்தது தகுமோ?

ஒளிவிட உள்ளே மரப்பாவை உளுக்கொண் டழிவதுபோல, நீயும் இந்தத் தேவ உத்தி யோகத்தால் ஆங்காரங்கொண்டால், புறத்து மேன்மையோடே விளங்கினாற்போலத் தோ ன்றி உள்ளழிந்து உயிர்கெடுவது நிச்சயந்தா னே. செந்நெற்கதிர் மணிகொள்ளாமுன்னே நிறுவிநிற்குமல்லாதே பழுத்தபின்பு குனிந்து பணியக் காண்போம். பொற்பாத்திரமாயி னும் நிறைந்ததாகில் ஓசைவிடாதல்லோ? ஒருவன் மேன்மையும் பெருமையும் அ டைந்ததற்குத் தாழ்ச்சியே குன்றாத அடை யாளமாமே. சாலோமோன் வேதசத்தியமாக எழுதிவைத்ததாவது, "எவ்வளவு அடைந்த வரங்களால் உயர்ந்தாயோ அவ்வளவு உ ணர்வில் உன்னைத் தாழ்த்தக்கடவாய். அப் போது ஆண்டவனுக்குகந்தவனாவாய் என் றார்." மீளவும் சிலபேர் உபதேசிகளாக வைக்கப்பட்டவுடனே தங்கள் உத்தியோக மேன்மையைத் தாங்கவேண்டுமென்று விலை யேறப்பெற்ற உடைகளும், உடைமைகளும் தரித்து அடப்பக்காரனொருவனைப் பின்வரக் கூட்டிக்கொண்டுதிரிய, கிராமங்களைச் சுற்றிப் போகையில் தங்களைக் காண ஒருவன் வரா திருந்தால் அவனை வெகுண்டு தண்டிக்கச் சங்கையில் பெருமையும், விருந்தில் சிறப் பும் தேடத்தொடங்குவார்கள். அப்படி ந டப்பதென்னவென்று அவர்களைக்கேட்கில், எங்களுக்கு உத்தியோகம் பெரிதல்லோ, எங்

களைப்பற்றி இதெல்லாம் செய்யாமல் இத் தொழிற்பெருமையைத் தாங்கச் செய்வோ மென்பார்கள். ஆயினும் இதெல்லாம் லௌ கீக உத்தியோகங்களுக்கு வேண்டியதாயினும் இந்தத் தேவதொழிலுக்கு வேண்டுவதல்ல. இது தனக்குள்ள பெருமையே தனக்குப் போதுமல்லாது உங்களால் இந்தடைவில் பெருமை அடையத் தேவையில்லை. இடி ந்துவிழும் வீட்டுக்கு முட்டுக்காலிட்டு, அத னைத் தாங்குவாரோழிய எதினுலும் அசை க்கப்படாத கல்லால் கட்டின அரண்மனை க்கு இது வேண்டுமோ? இந்தத் தேவ தொழிலின் மாட்சியை இயேசுநாதர் தாங் கினதின்மேலும் நீங்கள் தாங்குவீர்களோ? அ வர் செய்துகாட்டின தன்மையால் இனி நாம் சொல்லப்போகிறபடியே தாழ்ச்சி, பொ றுமை, தயை, தவமுதலிய மற்றப்புண்ணியங் களே இந்தத் தொழிலுக்கேற்ற துணையுமுதவி யுமாகுமொழிய, மற்ற லௌகீகச் செல்வமெல் லாம் அதற்குக் கேடாகுமென்றறியக் கடவீர் கள். பின்னையும் சிலர் ஏற்றுக்கொண்ட இந்தத் தேவதொழிலின் மாட்சியைச் சற்றும் மதியாமல், பாவத்துக்கடுத்த சரசங்களைச் செய் யாதேபோனால், போதுமென்றெண்ணி மற் றதில் எந்நேரமும் சிரிப்பும், விளையாட்டுமாகப் பேசக்கூசார்கள். கேட்ட யாவரும் சிரிக்கச் சரசங்களைச் சொல்வது கூர்ந்தபுத்தியின் சூட் சி என்பார்கள். ஆயினும், இது கூத்தாடிக்

கு நல்லதொழிய உபதேசிக்கு யோக்கியமென் பவோ? இப்படிப்பட்ட சரசங்கள் மற்ற வர்கள் வாயிலே சரசங்களாகி, உபதேசி வா யிலே தேவதூஷணமாகுமென்றார். அர்ச் சேயசிஷ்ட அமுதநாதர் அதற்குச் சொன்ன நியாயமேதெனில், தேவபூசை செய்யக்குறித் து வைத்த சீலைகளைக் கூத்தாடி உடுத்தால், மகா தோஷமாகுமல்லோ? அப்படியே சத் திய வேதத்தைப் போதிக்க ஸ்தாபித்திருக்கிற உபதேசி வாயினல் கூத்தாடிக்கேற்ற சரசங் கள் புறப்பட்டால், கனதோஷமென்னத் தே வையில்லையோ? அர்ச்சேயசிஷ்ட சின்னப் பர் தாமே எபேசியருக்கெழுதி "வீண்சரச மெல்லாம் கிறிஸ்தவர்கள் மகிமைக்கோவ்வா மையால், அதன் பெயர் முதலாய் உங்களுக் குள்ளே கேட்கப்படவும் வேண்டாம் என் ருர்." இஃதிப்படியானல், உபதேசி மகி மைக்கேற்றதென்பாயோ! இயேசுநாதர் பல முறை அழுததொழிய ஒருமுறையாகிலும் சிரித் தாரென்றெழுதினதாகக் காணேமே. ஆகி லும், துக்க முகத்தோடே திரியவும்வேண் டாம். அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் தாமே நல்ல கிறிஸ்தவர்கள் எல்லாரும் எப்போதும் மலர்ந்த முகத்தோடே சந்தோஷமாயிருக்கக் கட்டளையிட்டார். பின்னையும் உங்களுக் குள்ளே சந்தோஷமாகிக் கேளாமல் காணப் படும் சிரிப்புகோண்டாலும் பாரமல்ல. மற் றச் சனங்கள் முன்பாகச் சரசமாய் விளையாடி

வீண் கதைகளைச் சொல்லிச் சிரிக்கும் உபதே சியோவெனில், தன் தொழில் மாட்சியைக் கெடுக்கத் திரியும் துரோகி என்னப்படுவான். மீளவும் இதிலே புறத்தியார் உடற்குறையாகி லும் குணக்குறையாகிலும் குத்திச்சொன்ன சரசமுழுதும் சொல்லவும் கேட்கவும் வேண் டாம். முனையில் கூர்ந்த அம்பைப்போல இப்படிப்பட்ட சரசங்கள் அத்தனைக் கூர்மை யோடே சொல்லியிருந்தால், அத்தனை ஆழ மாகத் தைத்து உள்ளுருவிக் கேட்டவர்கள் அதை மறக்கவும் குறிக்கப்பட்டவன் அதி னால் அடைந்த கஸ்தியாறவும் எளிதாய்க் கூ டாதல்லோ? அப்படிப் புறத்தியாருக்கு ம னநோவ நாம் சிரிக்கவோ? இது தன்னைப் போல மற்றோரையும் சிநேகிக்கும் தன்மை யோ? நீங்கள் இப்படிச் சிரித்தால் நாமோ அழுவது நியாயம்.

---

௩. அதிகாரம்.

DUTY OF CATECHISTS IS COMMON TO ALL.

வேதியர் தொழில் எவர்க்கும் பொதுத்தொழில்.

மேல் அதிகாரத்தில் சொன்னதைக்கேட் ட சிலரே இந்தத் தேவ தொழிலின் மாட்சி யை அறிந்த தன்மையில் ஞான காய்மகாரப் பட்டுச் சொன்ன தொழிலைச்செய்யத் தெரிந்

துகொள்ளப்பட்டவர்களே பாக்கியவான்கள். நாங்கள் அதற்குப் பேறுபெற்றவர்களல்ல வென்று மனதில் வருந்தி நிற்பார்களாகிலும், இப்படி நொந்து வருந்துவது நியாயமல்ல. இதுவே எல்லாருக்கும் பொதுத்தொழிலாகி எவரும் தாம் கரையேறுவதன்றி ஆண்டவ ருக்குப் பிரியமாகப் பிறரையும் கரையேற்றப் பிரயாசப்படுவதற்கு இடமுண்டாமென்று இ தில் எவர்க்கும் ஆறுதலாகக்காட்ட இருக்கி றோமாகையால், முந்தி இதிலே அறியவேண் டியதாவது; இத்தொழில் தேவதொழிலேயாகி, மனிதர் வல்லமையெல்லாம் கடந்ததாமே. உழுது விதைத்துப் பயிராகி ஒன்று நூறாக விளைவிப்பது கர்த்தர் உதவியால் மனிதரும் செய்வார்கள். ஆயினும் ஐந்து அப்பங்க ளைக் கையில் ஏந்தி, ஐயாயிரம் பெயர்களுக் குத் திருத்தியாகப் பகுத்து, பன்னிரு கூடை யும் மிஞ்சச்செய்வது இயேசுநாதர் தமது தேவ பலத்தைக்கொண்டு செய்யும் புதுமையொழி ய மனிதராலாகும் தன்மையல்ல. அப்படி யே சகல கல்வி நூல்களைப் படித்தலும், இரா ச்சியங்களை ஆண்டு நடத்தலும், படைகளை வெட்டிச் செயங்கொள்ளலும் ஆண்டவர் உத வியால் மனிதர் செய்தாலும் வழுவின பாவி களைப் புண்ணிய நெறியில் திருப்பி நிறுத்த லும், பசாசு அடிமை நீக்கி மீட்டலும், அவர் களை மோட்ச கரையிலேற்றலும் ஆண்டவரா லாகுமொழிய நம்மால் முடிக்கத்தகும் தொழி

லல்ல. இஃதிப்படியாகக்கொள்ள நாம் இனி விரிவாய் எட்டாம் அதிகாரத்தில் சொல்லப் போகிறபடியே பிறரைக் கரையேற்ற ஆண்ட வரை வேண்டிக்கொள்வது உத்தம வழியா மே. அஞ்ஞானத்து அந்தகாரத்தாலும், காம கோப ஆங்காரத்திருளாலும், மூடின இந்நாட் டின்மேல் ஆண்டவர் தந்திருக்கடாட்சத்தை வைத்திரங்கி, தமது சத்தியவேதத் திருவிளக் கேறிப்ப விளங்கி எல்லாரையும் கரையேற்ற உத்தம வழியாம் வேண்டுதல்தானே. ஆகை யால் அஞ்ஞானத்திருளில் கிடந்தவர்களை விள க்கப் பாவச்சேற்றில் தூங்கினவர்களை எழுப் பக் கடவுள் சித்தமிரங்கிச் செய்யும்படிக்கு விடாத ஆசையோடே அவரை வேண்டிக் கொள்ளுவது எவராலுமாகாத தொழிலோ என்ன. ஒன்றறியாதவரும், ஒன்றில்லாத வரும், மூலையில் கிடந்தவரும், கிழவிகளும், கைம்பெண்களுமுதலாய்ப் பிறரும் கரையே ற வேண்டிக்கொள்ளப்படாதேன்பார்களோ? இதற்குச் செலவு செய்யவும், சாஸ்திரம் அறி யவும், வல்லமை செலுத்தவும் வேண்டுமோ? உன் வீட்டில் நின்று பிரியாமலும், உன் தொ ழில் ஓய்ந்துவிடாமலும், உன் பொருள் நேர்ந் து கெடாமலும் செய்யத்தகும் தொழில் அல் லவோ? ஆண்டவரோடே வழக்குப்பேசி னாற்போலத் துணிந்து பேசி, என் ஆண்டவ ரே! பாவிகள் திரும்பாமல் நரகத்தில் விழுந்த தினால் தேவரீருக்கு வரும் ஆதாயமென்ன?

பாவிகளைக் கரையேற்ற அல்லோ தேவரீர் உலகில் இறங்கி, மனிதனாகப்பிறந்து, மிதி யடிப்பட்டு, சிலுவையில் அறையுண்டு இறந் து, பட்ட பாடுகளும், செய்த செலவும், சிந் தின இரத்தமும், அடைந்த மரணமும் வீணா ய்ப்போவது நல்லதோ? தேவரீர் முழுச்சித் தமாக வேண்டுமென்றால், உம்மாலாகாததோ ன்றுண்டோ? உமது திருமுகத்தில் நின்று ஒரு தேவ கதிரே இந்நாட்டிலுமிறங்கி விளங் கவிட்டால், மூடின அஞ்ஞான இருள் ஒழி யாது நிற்குமோ? நெடுநாள் பரவின பாவ விரவு விடியாதிருக்குமோ? உம்மை வேண் டிக்கொள்ளும் நானே பாவியாயினும், இந்த நாடெல்லாம் அறநெறி இழந்து பேறொன்றில் லாததாயினும், பிதாவே! எங்களைப்பாராமல் உமது திருக்குமாரன் திவ்விய முகத்தைப் பார்த்து, கோபமாறி எங்கள்மேல் இரங்கக் கடவீர். எங்களுக்காகவும் அவர் தம்முயி ரைத்தந்தாரில்லையோ என்ன, இந்த நாட்டிற் கு வேண்டியும், அவர் தந் திவ்வியகுருதியைச் சிந்தினாரில்லையோவென்ன, இவர்கள் சத்தி யத்தை அறியவும், பாவத்தைவிடவும் மாட் டார்களென்னவும் தேவையில்லை. மாட் டோமென்பவர்கள் வேண்டுமெனச்செய்வது தேவரீராலாகும் கருமமல்லோ? அர்ச்சிய சிஷ்ட சின்னப்பர் பாவியாயிருந்து, திருச் சபையைப்பகைத்து உபாதிக்கப்போகையில் அவர் மனந்திரும்பி, உமக்கு அப்போஸ்தல

ராகச்செய்தவர் தேவரீரல்லோ? பாபிலோனிய நகரில் மூன்று பிள்ளைகளுக்கு நெருப்புக் குளிரச்செய்தீர். யூதருக்குக் கடல் பிளந்து வழிவிடச்செய்தீர். அக்கடல்தானே இராயப்பருக்கு நிலைவழியாகச்செய்தீர். நெருப்பினும் சுடுநெஞ்சினராயினும், கடலினும் அலைந்த உணர்வினராயினும் உம்முடைய சித்தத்துக்கிணங்காமல் நிற்க வல்லவருண்டோ? உமது திருநாமமே எங்கும் புகழப்படவும், உமது குணவுரிமை எவரும் அறியவும், உம்மை ஒரு மொழியாக உலகெல்லாம் துதிக்கவும் செய்வீராக; சுவாமி என்று வேண்டிக்கொள்ளக்கடவீர்கள். இதையும் பலவற்றையும் நாட்டிற்கெல்லாம் பொதுவாகவும், இவனவனுக்கு வேண்டிய விசேஷமாகவும் ஆசையோடு எந்நேரமும் அழுதுகொண்டு சொன்னீர்களானால் பிறரை இரட்சிக்க உத்தம வழியாமென்பதற்குச் சந்தேகமில்லை. இதனால் எத்தனைமுறை நாம் விரிவாக ஒருவனுக்கு நியாயங்களைச் சொல்லிக்காட்டினவிடத்தில் கேட்கமாட்டாதவனாய் ஒரு நாள் இணங்கிக் கேட்டபோது, நாமே சொன்ன புத்திகளால் அவனைத் திருப்பினோமென்றிருக்க, ஆண்டவர் சந்நிதியிலே நாம் கொண்ட செயம் அதல்லவாகி அவன் பெண்சாதி நெடுநாள் விடாமல் அவனுக்காக வேண்டிக்கொண்டு விட்ட கண்ணீர்களே செய்த கருமம் அதென்று சகலத்தையும் வெளியாக்கும் நாளாகிய

நடுத்தீர்ப்புநாளிலே காண்போம். இதேல்லாம் இப்படியாகையில், புருஷன் சத்தியத்தைக் கேட்கவும், மகன் நியாயத்துக்கிணங்கிப் பாவத்தை விடவும் மாட்டாமையில் அவர்களை வைது திட்டிச் சண்டையிடுவதை விட்டு அவர்கள் மனந்திரும்பி நன்னெறியில் வரும்படிக்கு ஆண்டவரை அவர்களுக்காக ஓயாமல் வேண்டிக்கோள்வது நியாயமல்லோ? அந்தச் சண்டையால் அவர்கள் அதிகமாய்ப்பகைத்து, பாவத்தினிலைக்க உதவுமன்றியே உங்களுக்கும், பல பாவங்களை விளைவிக்கும் கள்ள ஞானமாகுமொழிய அவர்களைக் கரையேற்ற ஆசையுமல்ல, வழியுமல்ல, மீளவும் பிள்ளை வேண்டுமேன்றும், அந்தப் பிள்ளை வாழவேண்டுமேன்றும், வியாதி தீர, மாடு பிழைக்க, தொழிலே பலிக்க, பயிரே விளைய அடிக்கடி வேண்டிக்கோள்வாருமுண்டேன்றறிவோம். இதுவொழிய மகன் பாவத்தை விடவும், புருஷன் தருமனுக நடக்கவும், தானும் பிறரும் உயிர் பிழைத்துக் கரையேறவும் வேண்டுதல் செய்தது காணேம். இற்றைவரைக்கும் சொன்னபடி வேண்டிக்கோண்டு, புறத்தியாரையும் கரையேற்ற எவராலுமாகும் இம்முதன் முறையுமொழியப் போதுவாய் நிற்கும் மற்றேரு வழியாம் அதன் நல்லொழுக்கந்தானே. கிறிஸ்தவர்கள் சொல்லும் தப்பறையும், செய்யும் புரட்டும், நடக்கும் தாறுமாறும் கண்ட அஞ்

ஞானிகள் நம் சத்தியவேதத்தைத் தூஷணிக்
கக் காரணமாகுமல்லவோ! அப்படிச் செய்வ
தற்கு அஞ்ஞானிகளுக்கு நியாயமில்லை. கதிர்
ப்பட்டாலும், சில செந்தாமரை மலராததி
னால் அது சூரியன் கதிர்க்குறையென்பவோ!
சுரங்காய்ந்தவர்கள் குடித்த பசுவின் பாலால்
செத்ததினால் அமிர்தமாகிய பசுவின்பால் நஞ்
சென்பவோ! சத்தியவேதத்தைக் கேட்ட
வர்கள் நியாயத்தை மறுத்துச் செவ்வே நடவா
ராயினும், வேதமே அநியாயமென்பதற்கு இ
டமுண்டோ! இல்லையே. ஆகிலும், அநி
யாயமாய் அஞ்ஞானிகள் சொல்வதை அறியா
மல் சொன்னதினால், அவர்களை ஆண்டவர்
கோபியாமல், அநியாயமாய் அந்தத் தூஷணங்
களைச் சொல்லக் காரணம் தந்த கிறிஸ்தவர்களை
மிகவும் கோபித்துத் தண்டிப்பாரென்றறிவோ
ம். அப்படியே பிறதாரத்தைத் தீண்டின
தாவீது செய்த பாவத்தைக் கண்டு அழுததினா
ல், ஆண்டவர் அந்தப் பாவத்தை உடனே
பொறுத்தோமென்றார். ஆயினும், அதனால்
அஞ்ஞானிகள் ஆண்டவர் தேவ நாமத்தைத்
தூஷணிக்கக் காரணமாயிருந்ததினால், பிறந்த
பிள்ளை ஆக்கினையாகச் சாவச் செய்தாரென்று
வேதத்தில் எழுதப்பட்டதாமே. பிறதாரத்
தைத் தீண்டின பாவம் கொடியதாயினும்,
அதனைப் பொறுத்த சுவாமி தமது திருநாமத்
தைத் தூஷணஞ்சொல்லக்காரணம் தந்ததைப்
பொறுக்கமாட்டாமல், உடனே தண்டித்தா

ரல்லோ? ஆகையால், மிகவும் எச்சரிக்கை யோடே நடந்து, நம்மால் மாசில்லாத வேதத் துக்கு இகழ்ச்சியும், விக்கினமும் வராதபடிக் குப் பிரயாசப்படக்கடவோம். அப்படியே கிறிஸ்தவர்களுடைய தீயவொழுக்கத்தால் வே தத்துக்கு இகழ்ச்சி வருவதுபோல, அவர்கள் காட்டின நல்லொழுக்கம் அதற்குப் பெருமை யாகி அதுவே வளர்ந்து பரம்ப வழியாம். ஆ லமரத்தின் விழுது தரையில் ஊன்றிப் பெருகு மளவில், முதல் மரமும் பெருகி உயர்ந்து, கொப்புகளை நீட்டிப் பேறும்பெற்று நிழலை எங் கும் பரப்பக்காண்போம். சொன்ன விழுது நன்ருய்ப் பெருமையைத் தாங்கி, முதல்மரம் வளர்வதற்கு உதவியானாற்போலே நீங்களும் புண்ணியங்களால் செவ்வே நின்று, தாழ்ச்சி யால் தரையிலூன்றி, நீங்கள் அதில் பேலன் கொண்டிங்கே வளருமளவாக உங்கள் தாயா கிய சத்தியவேதத்தின் மகிமையைத் தாங்கி, அதுவே எல்லாருக்கும் நன்மையாக நிழலைச் செய்து, பரம்பி வளரும்படிக்குச் செய்யக்கட வீர்கள். யாப்போன் இராச்சியத்தில் அர்ச் செயசிஷ்ட சவரியாரும், மற்ரொரு சந்நியாசி யும், நெடுநாள் பல நியாயங்களைக் காட்டின இடத்தில் ஒருவரும் இந்தச் சத்தியவேதத் தைக் கேட்கமாட்டாதிருக்கையில், ஒரு நாள் சவரியாரோடே வந்த சந்நியாசி பிரசங்கம் சே ய்துகொண்டிருக்க, ஒருவன் நிந்தையாக அவ ரை முகத்தில் துப்பினன். அதற்கவர், சற்

றும் அசையாமல், முகத்தைத் துடைத்துத் தொடுத்த பிரசங்கத்தைச் சொல்லிக்கொண்டு முடித்தார். அதைக்கண்டு அவர்கள் இந்தப் பொறுமையும், இந்தத் தைரியமும் படிப்பிக்கும் வேதமே சத்தியவேதமென்றும் எங்கள் மதங்களில் இதற்கொத்த தொன்றுண்டோ இல்லையென்றுந்தேறி எண்ணப்படாத சனங்கள் சத்தியவேதத்தைக் கேட்கத் துணிந்தார்கள். இதோ, குருக்களும், உபதேசிகளும், அர்ச்சேயசிஷ்ட சவரியார் முதலாய்ச் செய்யும் பிரசங்கத்தினால், திரும்பாதவர்கள் உங்கள் தரும நடக்கையால், சத்தியத்துக்கிணங்கி மோட்ச வழியிலே வருவார்களென்பது நியாயமல்லவோ? துன்பமே வரினும் புரட்டு, பொய்யைச் சொல்லாதிருக்க ஆதாயம் வரினும், பிறர் பொருளைத் தீண்டாதிருக்க, இறந்தாலும் நிறையைக்கைவிடாதிருக்க, இறந்தாலும் தீமைசெய்யாதிருக்க, தீமைசெய்வார்க்கு நன்மைசெய்ய, ஒரு கன்னத்தடிப்பார்க்கு மறு கன்னத்தைக் காட்ட, நிந்திப்பாரைத் துதிக்க, பகைப்பாரைச் சிநேகிக்க, மற்றுண்டான இத்தொகைப்பட்ட தரும நடக்கையால், நீங்களே ஆணும் பெண்ணுமெல்லாரும் உத்தம உபதேசிகளாகி, இந்தச் சத்திய வேதம் பரம்பவும், புறத்தியாரும் உங்களோடே மேற் கதி சேரவும் செய்வீர்களென்பதற்குச் சந்தேகமில்லை. இஃதிப்படியாகையில், வேதியர் தொழில் எவருஞ்செய்யத் தகும் பொ

துத்தொழிலென்பது நியாயமல்லோ. மூன்றுவது சொன்ன இரண்டு வகையுமொழியப் புறத்தியாரைக் கரையேற்ற அவனவன் தனக்குரிய முறையால், எவர்க்கும் நல்ல புத்திகளைச்சொல்லி உதவக்கடவான். தர்க்கஞ்செய்து, பொய்மையை மறுத்து, நியாயங்களை ஒப்புவிப்பதே உபதேசிகள் தொழிலாயினும், பெண்பிள்ளைகள் முதலாய்க்கூடி வேலைசெய்யுமிடத்தில், அசல் வீட்டில் நடக்கும் செய்திகளையும், புறத்துக்கேட்ட ஆவலாதிகளையும், பாவம் விளைவதற்குச் சொல்லாமல், தருமத்துக்கடுத்ததை உயிர் பிழைக்கப்பேசிக் கொண்டிருக்கக்கூடாதோ? ஆகிலும் சாஸ்திரிகள் ஆகமத்தை விரித்து ஓதுவித்தாற்போலவும், ஞானிகள் தேவ நிலையுணர்ச்சிகளைக் கக்கினாற்போலவும், ஆங்காரமாய்ச் சித்திரம் பேசாமல், தங்களுக்குரிய பேச்சுப் பேச்சாக அறிந்த நியாயத்தையும் தாங்கள் கேட்ட புத்திகளையும் சொல்லக்கடவார்கள். புறத்தியார் மனது நோவாததற்கு நீ உன்னைப்பற்றிப்பேசினாற்போல மற்றவர்களை உணர்த்துவது உபாயந்தானே, அப்படியே புறத்தியார் பயந்து நடக்க, நீயே இதை அதைக்கேட்டு மிகவும் பயந்தாயென்பாய். உன் ஆங்காரத்தைத் தாழ்த்தக் கோயிலிலே கேட்ட இன்ன புத்தி மிகவும் உதவினதென்பாய். இலௌகீகச் செல்வ நிலையாமை இதிலே அதிலே கண்டமையால், அதின்மேலாசை மறுத்துப்போய் என்

றென்றைக்கும் நிற்கும் செல்வமாகிய மோட்சத்தின்மேல் மாத்திரம் உனக்காசை வந்ததென்பாய். பகலும் இரவுமாக உழைத்துப் புழுப்புழுத்து அழியும் சரீரத்தை நாலுநாள் வளர்த்த பின்பு, தீயவியாதெரியும் நரகத்தில் ஆத்துமா கெட்டு, முடியாத பாடுகளைப்படப் போவேணுகில், என்னைப்பார்க்க மதிகேட்டவரில்லையென்பாய். இத்தொகைப்பட்ட பலவற்றையும் சொல்லி, தன்னுயிர் பிழைப்பது வேண்டிப் பேசினுற்போலச் சொன்னுலும், சூழக்கேட்டவர்களுக்கும் உதவாதோவென்ன, யானை தன் துதிக்கையைக்கொண்டு, தன் மேலே தண்ணீரை இறைக்கும்போது, சூழ முளைத்த புல்லும் இனிதாய் முளையாதோ! அப்படி நீங்கள் கூடியிருக்குமளவில், பல தழல்சேர்ந்தொன்றையொன்று கொளுத்தினுற்போல, தேவ பயபத்தி வளர்ந்து சுறுசுறுப்பாகப் பேசக்கடவீர்கள். மீளவும் குருக்களும், உபதேசிகளும், நெடிய பிரசங்கங்களைக்கொண்டு உதவுகிறதைப்பார்க்க ஒரோரிடத்தில் அதிலேயும், நீங்கள் புறத்தியார் கரையேற உதவி செய்யலாமென்பது நிச்சயந்தானே. நீங்கள் கூட நின்றதினுல் ஒருவன் மயங்கி விழுவதைக்கண்டு சமயத்தை விடாமல் கை தந்து அவனை நிறுத்த உங்களாலாகும்படியே மடத்திலிருக்கும் குருக்களாலும், அங்கங்கே திரியும் உபதேசிகளாலும் ஆகுமோவென்ன, போட்டவனையின் வடிம்

பு ஙக்கிவரும் பெரும்வெள்ளம் ஓரிடத்தினம்
கண்டதை அறுக்கத்துவக்கும்பொழுதில், அங்
கே நின்ற ஒரு பையல் முதலாய் இரண்டுணே
டை மண்ணைப்போட்டு அணைகெடாதுறதியா
ய் நிற்கும்படிக்குச் செய்வானல்லோ? அப்
படி அவன் செய்யாமல் ஒரு சாண் வழியால்
புகுந்த வெள்ளம் ஒரு கணத்தில் அணையெல்
லாம் கரைத்திடித்தோடி வருகையில் மீள
வும் அணையைப்போட எத்தனை பெயர்கள்
கூடினும், எத்தனை நாள் வருந்தினும் அதை
நன்றாய் அடைப்பதரிதல்லோ? இத்தன்
மையே துன்ப வெள்ளம்வந்து மூடி உள்ளு
டைந்து ஒருவன் பாவத்துக்கு அணையாகக்
கொண்ட பிரதிக்கினை இடிந்தழிய இருக்கை
யில், அவனுக்குச் சிநேகிதன் ஒருவன், ஒருத்
தி அதை அறிந்து அந்தச்சமயம்விடாது ஓர்
இரண்டு நியாயங்களைச் சொல்லிக்கரட்டினல்
கொண்ட பிரதிக்கினைவிடாமலும், பாவவெள்
ளத்தில் அவன் உயிர்கெடாமலும், நிலைபெற
ச்செய்வதெளிதே. அந்த இரண்டு வார்த்தை
சமயத்துக்குச் சொல்லாதிருந்தால் அவனும்
சோதனை தாங்கமாட்டாமல் அதினுட்பட்டுப்
பாவத்தமிழ்ந்தினபின்பும், சத்தியவேதத்தை
மறுத்தபின்பும், குருக்களும், உபதேசிகளு
ம் நெடுநாள் பிரயாசப்பட்டாலும் அவனைத்
திருப்பிக் கரையேற்றுவதரிய கருமந்தானே.
ஆகையால் பிள்ளைக்கு வியாதி வந்ததினலும்,
இனத்தார் இகழ்ச்சி சொன்னதினலும், அர

ண்மனையார் பயமுறுத்தினதினாலும், ஒருவன் ஒருத்தி தத்தளிக்கிறது அறிந்தவுடனே இயேசுநாதர் மீட்டுக்கொண்ட ஆத்துமத்தைப் பசாசு கைக்கொள்ளுமோவென்று மற்றொன்றும் பாராமல் அணுகிப்போய் உறுதிகளைச்சொல் லித் தேற்றி, பிறரையும் கரையேற்ற ஆசையுள்ள யாவருமுதவப் பிரயாசப்படக்கடவர்கள். அப்படியே எந்நேரமும் அவனவனண்டையில் உபதேசியிருக்கக்கூடாமையால் நீங்களே ஒரு நல்ல வார்த்தையினாலெழும்பும் கோபத்தை மாற்றி, பற்றியெரியும் காமத்தை அவித்து, தத்தளிக்கும் விசுவாசத்தை நிறுத்தி, அவனவன் முழுதும் கெடாதபடிக்கு எளிதாய்ச் செய்யலாமென்றிருக்கையில் நமக்கென்னவென்றிருந்தால் நிட்டூரமல்லோ? அப்படி இயேசுநாதர் திவ்விய இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் பசாசுக்கடிமையாகக் கெடுவதைப் பார்த்துக்கொண்டிருப்பீர்களோ? அவர் விலைமதியாத தம்மிரத்தத்தைச் செலவழித்து இரட்சித்த ஆத்துமங்களுக்காக நீங்கள் ஒரு வார்த்தையும் செலவழிக்கத் துணியமாட்டீர்களோ? உங்களுக்கு மற்றவர்களையும் கரையேற்ற ஆசையில்லாமையால், அந்தப்படியே விழுவாரைத் தாங்காமல் விழுந்தவரை மிதித்தாற்போலப் புறத்தியார் தத்தளிப்பது கண்டு உங்களாலியன்றமாத்திரம் உறுதிசொல்லாமல் கெட்டானென்று புறணிபேசி, இவனவன் குற்றங்களை உங்

களுக்குள்ளே தூற்றுவது உங்களுக்குள்ள முறையல்லோ? இதின்பிறகு புறத்தியாரை யும் கரையேற்றத் தேரிந்துகோள்ளப்பட்ட உ பதேசிகளே பாக்கியமுள்ளவர்களேன்றும் இந் தத் தேவதொழிலேச்செய்ய நீங்கள் பேறுபேற் றதல்லவேன்றும் வருந்திச்சோல்வது நியாய மோ? இதோ காட்டின முறையால் எவ ரும் உபதேசிகளாக நடக்கலாமே. சோன் ன மூன்று வழியால் எவரும் குறைவில்லா மல் பிரயாசப்பட்டால், உலகமேல்லாம் சத் தியத்தை அறியவும், அறிந்த சத்தியத்தின்படி நடந்து, எவரும் தப்பாமல் கரையேறவும் காண்போமல்லோ.

---

௪. அதிகாரம்.

CATECHISTS' PREPARATION.

வேதியர் தொழிலுக்காயத்தம்.

தன்னோடே மற்றவரும் கரையேற உதவி உபாயம் செய்யும் தோழில் முன்சோன்னபடி அரிய தேவதோழிலாகையில், அதை உத்தி யோகமாகச்செய்யும் உபதேசிகள் குறைவரா தபடிக்கு மிகவும் பிரயாசப்படக்கடவர்களா கையால், முந்தி அதற்கு வேண்டிய ஆயத்த மேதேன்றிங்கே காட்டித்தருவோம். நமது கர்த்தராகிய இயேசுநாதர் நம்மை இரட்சிக்க

மனிதனுனதோழிய நமக்குத் தருமவழியைக் காட்ட இங்கே குருவாகவும் வந்தருளினுர். இதனைப்பற்றி நாமே நடந்து சேய்தபடியே நீங்களும் சேய்யக்கடவீர்களேன்ருர். அவ ரோவெனில் எல்லாத்துக்கும் குறைவற்றவல் லவர். எல்லாவற்றையும் வழுவற அறிந்த வராகியும், தமக்கு முப்பது வயது நிறைந்த பின்பு மாத்திரம் உபதேசஞ்சோல்லத் துவக் கிருரேன்றும், துவக்கு முன்னே வனத்திற் போய், உபவாசமாய்த் தியானத்தில் நாற்பது நாளுமிருந்து, அருந்தவத்தை முடித்தாரேன் றும், வேதத்தில் எழுதப்பட்டதறிவோம். அவர் தாம் பன்னிரு வயதில் கோயிலிலி ருந்தபோது, மூத்தோர் சோன்னதை வணங் கியுணரவும்,அவர்களை வினவிக்கேட்கவுமிருந் தாரேன்று சுவிசேஷகர் எழுதினுர்களல்லோ? இஃதிப்படியாகையில் சிலரோரு தவமுமின் றி, வயதில் இளைஞராயினும் இருபத்தேட்டுப் பிரசங்கங்களைக் கிளிப்பிள்ளைபோல் படித்த மாத்திரத்தில், படிக்கிறவர்களுக்குள்ளே இ ருக்க நாணி, மற்றவர்களைப் படிப்பிக்க உப தேசிகளாகச் சுதந்தரமாய்க் கேட்கக் கண்டு, நாமேன்ன சோல்லக்கடவோம். இந்தத் தேவ தோழிலின் அருமையை எவ்வளவாகி லும் அறிந்ததாயினும், வயது முற்ருமலும், புண்ணியங்களைச் சம்பாதியாமலும், இதற் குத்துணியப் பயப்படுவார்கள். ஆகிலும், நாலேழுத்தோருப்படக்கூட்டி நாக்கிட்டின்றிச்

SSIONA... ...ORITY . SOHO

செவ்வே வாசிக்க அறியாமுன்னே பிறர்க்கு உபாத்தியாக நினைப்பாருண்டோ? எவ்வகை மரமும், எவ்வகைப் புல்லுமுதலாய் முளைத்தவுடனே சிறுமையில் காய்ப்பதுண்டோ? இறகுமுளைத்து, பருவமுற்று முன்னே, இளம் பறவை கூட்டை விட்டுப் பறக்கத்துணியுமோ? துணிந்தாலும் பருந்துக்கிரையாகுமொழிய, அதில் ஒன்றுகிலும் பிழைத்துப் பறக்குமோ? சூல்நாள் முகியாமுன்னே பிறந்த பிள்ளை பெரியதாவது காண்பாருண்டோ? ஈரச்சுவர்மேல் சுவரையேற்றி வைத்தால், அடியோடிடிந்து விழுவதொழியக் குறித்த வீடுயர்ந்து முடியுமோ? இப்படி எல்லாம் பருவத்திலாகவேண்டுமென்றிருக்க, இந்தத் தேவ தொழிலிலேமாத்திரம் பருவமும் ஆயத்தமும் தேவையில்லையென்று நினைப்பார்களோவென்ன, நம்முடைய கர்த்தரோவெனில் அப்படி நினையாமல், முன் சொன்னபடி தாம் செய்ததுந்தவிர அப்போஸ்தலரை உபதேசிகளாக ஸ்தாபித்து எங்கும் சத்திய வேதத்தைப் போதிக்கக் கட்டளையிட்டாலும் உடனே போகவிடாமல், அர்ச்செயசிஷ்ட லூக்கா என்பவர் சுவிசேஷத்தின் இருபத்து நான்காம் அதிகாரம் நாற்பத்தோன்பதாம் வசனத்தில் எழுதினபடியே “இஸ்பிரித்து சாந்துவின் வரங்களால் அதற்குரிய வல்லமையுடையவராக மட்டுமெங்கும் போகாமல் ஊரிலுட்காந்திருங்களென்றார்.” இஸ்பிரித்து சாந்து தரும்

வல்லமை இயேசுநாதர்தாமே அப்போஸ்தல ருக்குக் கொடுக்கக்கூடாதிருந்ததோ! கூடி னும் இந்தத் தொழிலில் வேண்டிய ஆயத்த மின்றித் துணியலாகாதென்று காட்டத் தாமே அதற்குவேண்டிய வரங்களைக் கொடுத்தவுட னேஅனுப்பாமல்,இஸ்பிரித்துசாந்துவினுடை ய உதவிவரம் வருந்தனையும், பலநாட்காத் துக்கொண்டிருக்கக் கட்டளையிட்டார். மீள வும் இந்தத் தொழிலுக்கு வேண்டிய ஆயத்தம் எப்படிக்கொத்ததென்றால், இதிலேதானே அறியப்படுமே. அதெப்படியெனில், இஸ்பி ரித்துசாந்துவாகிய சர்வேஸ்வரன் அப்போஸ்த லர்மேலிறங்கி, அவர்களை உபதேசஞ்சொல்வ தற்குரியராகச் செய்யத்தந்த வரங்கள் இருவ கையென்றறிவோம். முதலாவது,சகல சாஸ் திரங்களுமறியவும், சகல பாஷைகளையும் பே சவும் வரத்தைத்தந்தார். இரண்டாவது,தே வபத்தி முதல் சகல புண்ணியங்களையும்,நிலே யாகவும் நிறையாகவுந்தந்தார். இந்த இருவ கையாயத்தமும் சத்தியவேதத்தைப் போதித் துப் புறத்தியாரையும் கரையேற்ற வேண்டிய தாமே. ஆகையால் முந்திக் கல்விச் சாஸ்தி ரம்வேண்டியதென்போம். வேத சாஸ்திரங் களெல்லாம் மற்றச் சாஸ்திரங்களினும் அரிய தாகிலும் அதைப் படிப்பிக்கத் துணிந்து, உப தேசிகளாகத் திரிகிறவர்கள் மற்றதிலொன்றும் அறியார்களென்று கண்டால், எல்லாவற்றிலும் உத்தம சாஸ்திரத்தைப் பிறர்க்கோதுவிப்பதே

தென்று அஞ்ஞானிகள் சொல்லார்களோ? இயேசுநாதர்முதலாய்ச் சுவிசேஷத்தில் எழுதினபடியே வேதவுணர்ச்சிகளைப் போதித்துக்கொண்டு திரிவதை யூதர்கள் கண்டு தங்தேவ சுபாவத்தால் அவர் எல்லாவற்றையும் அறிந்தவரென்றறியாமல் பள்ளிக்கூடத்தில் இவர் படிக்கக் காணுமே இப்படிப் படியாதவர் வேதத்தைப் படிப்பிக்கிறதாவதேதென்றார்கள். ஆகையால, சில உபதேசிகளைப்பார்க்கும்போழுது, நாமும் அழுவது நியாயமாமே. உபதேசிகளாய்த் திரிந்த சிலரே இருசொற்பிழையாமல் எழுதவும், இரு வரி தவருமல் வாசிக்கவுமாட்டாமல், சத்தியவேதத்துக்கு இகழ்ச்சியாகவும், அஞ்ஞானிகள் நம்மை நகைக்கவும் திரிவார்களல்லோ? நாமே அறியக்கூடிய சில கிறிஸ்தவர்களுக்கு ஒரு உபதேசி சரித்திர புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கையில், எழுத்துங் தவறச்சொல்லும் வழுவவசனமும் மயங்க விடறிக் குளறித் தாறுமாருகிறதைப்பொருமல் கூடநின்ற அஞ்ஞானி ஒருவன் அப்புத்தகத்தைப் பறித்து நெடுநேரம் எல்லாருக்கும் வாசித்துக்கொண்டிருந்தான். உபதேசிக்குத்தானே அஞ்ஞானி ஒருவன் நம்முடைய ஞான புத்தகங்களை வாசிக்கவேண்டியதின்பின் அஞ்ஞானிகள் நம்மை நகைத்தால் நாம் தலைகுனிந்து நாணுவதோழியமறுமொழிசொல்வதுண்டோ? இதெல்லாம் சொல்லும்போது நீங்களெல்லா

ரும் தொல்காப்பிய நாயனுரொப்பக் கவிராய ராகவேண்டுமென்று சொல்வோமோ? அப் படியே உபதேசிகள் உலகக் கல்வியிலும், நிகரில்லாத சாஸ்திரிகளானுல் பாக்கியந்தா னே. ஆகிலும் கண்ணிடமாக முகத்திரண் டு புண்ணுடையதென்றுற்போல, ஒன்றுமறி யாத உபதேசியை உபதேசியென்னப்பட வோ? உழவறியாத குடியானவனும், ஆயு தம் பிடிக்க அறியாத சேவகனும், கண் தே ரியாத சித்திரக்காரனும், கைவழங்காத சிலம் பக்காரனும், சப்பாணிக்கூத்தரும், ஊமைத் தூதரும், இவர்களே ஒன்றுமறியாத உபதே சிக்குச் சமானமென்னக்கடவோம். இதெல் லாம் இப்படியாகக்கொள்ள உபதேசியாகு முன்னே எவ்வளவாகிலும் படிக்கப் பிரயா சப்பட்டவன் உத்தியோகம் வந்தபின்பு கை யிலொரு சுவடியெடாமலும், தானே ஒரு வரி எழுதாமலுங்கிடப்பவன் நினைத்த கருத் தென்ன? தனக்குப் படிப்பெல்லாம் வந்த தென்று நினைத்தானே? தன் தொழிலுக்குப் படிப்பெல்லாம் ஆகாதென்று நினைத்தானே? இவ்விரண்டுமல்ல. அவன் நினைத்ததே தெனில், இந்தத்தொழிலினுல் பிறரைக் கரை யேற்ற ஆண்டவருக்கு ஊழியஞ்செய்ய நினை யாமல், தனக்குச் சம்பளம் வருவதுமாத்திரம் நினைத்தான். ஆதலால் சத்திய வேதத்தைப் பரப்பவும், திருச்சபைக்கு ஊழியஞ்செய்ய வும், படிப்புவேண்டியதானுலும், அது தான்

நினைத்த கருத்தல்ல. ஆகையில் தனக்கு உத்தியோகம் அமைந்தவுடனே தான் நினைத்ததைக் கைக்கொண்டதனால், படிப்பைக் கைவிட்டான். ஆகையால் இப்படிக்கோத்தவராரேனில், ஆண்டவரைச் சேவியாமல் திருச்சபைக்கு ஊழியஞ்செய்யாத வயிற்றுப தேசிகள்தானே. ஆகிலும் அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் பிலிப்பியருக்கெழுதினபடியே இப்படிப்பட்டவர்கள் இயேசுநாதருக்கு ஊழியஞ்சேய்யாமல், தம் பிழைப்பை மாத்திரந்தேடித் தம் வயிறேன்றே தங்களுக்குத் தெய்வமாகையில், வயிறழிந்து புழுத்தகாலத்தில் சர்வகேடுகளே அவர்களுக்குக் கதியாம். இதுவும் தவிர இப்போது முதலாய் ஆயுதம் பிடியாத சேவகனுக்கு எத்தனைநாள் சம்பளம் நடக்கும்? சேவியாமல் வாங்கின சம்பளத்துக்கு மனிதர் கேளாராயினும், ஆண்டவர் தன்னைக் கண்டிதமாகக் கேளாரோவேன்ன, இதிலே சோன்னதைப்பற்றி எதாகிலுங் கற்றவர்கள் தங்களை எண்ணியடைந்த கல்வியிலுன்றி ஆங்காரங்கோள்ளவும்வேண்டாம். இயேசுநாதர் தமக்கு உபதேசிகளாக அப்போஸ்தலரைத் தேரிந்தவிடத்தில், ஒருவனையாகிலும் கல்வி வல்லவனாகத் தேரிந்தவரல்ல. வேதத்தைப்போதிக்கக் கல்வியே உதவுமேன்பதற்கு இஸ்பிரித்துசாந்துவானவரைக் கோண்டு சகல சாஸ்திரங்களையும் அப்போஸ்தலருக்குத் தந்து, அவர்கள் கற்ற நூலால் அங்

தத் தொழிலை முடிக்கலாமென்றெண்ணுத தற்கு, படித்த கல்வியில்லாரைத் தெரிந்து கொண்டார். நாமோவெனில் ஆண்டவரை வீணுகச் சோதித்தாற்போல அற்புதமாகக் கல் விகளை நமக்கும் தருவாரென்று பார்த்துக் கொண்டிராமல் பிரயாசப்பட்டுப் படிக்க வேண்டியதுதானே. படித்தாலும் புறத்தி யாரையும் கறையேற்றும் தொழில் ஆண்டவர் உதவியாலாகுமொழிய, நாம் கற்ற நூலாலாகா தென்றதில் ஊன்றுதிருப்பது நியாயந்தானே. ஆண்டவரால் பகைவரை வெல்லக் கீதை யோன் கூட்டின முப்பத்தீராயிரம் வீரர்க ளுக்குள்ளே ஆண்டவர் முந்நூறுபேரைத்தெ ரிந்து மற்றவர்களைப் போகவிட்டதுந்தவிர, அந்த முந்நூறு வீரர் முதலாய் ஆயுதமெடுக்க வொட்டாமல், அற்புதமாக நூற்றிருபதினுயிர ம்பகைவரைச் சாவச்செய்வது மிகவும் அரிய வெற்றியைத் தந்தாரென்று வேதத்திலெழுதப் பட்டதல்லோ! இதைக் கண்டெதிர்த்த ப கைவர் மேலே படையைக்கூட்டாமலும், ஆயுதம் எடாமலும், புதுமையாக வெற்றி யாகுமென்றிருந்தால் நல்லதோ? ஆகிலும் நம்மாலானதெல்லாவற்றையும் செய்தபின்பு ஆண்டவருதவியால் கருமமாகவேண்டுமென் று நிச்சயிப்பதே நியாயம். இதனுலல்லோ பலமுறை நன்றுய்ப்படித்த உபதேசி ஒரு வன் உயர்ந்த நியாயங்களை இருளறத் தெ ளிந்து, நளின வசனங்களை வழுவறச்சேர்த்

து இக்கவிராயனுகப் பேசினவிடத்தில் அவ ன் தன் சாஸ்திரத்தை எண்ணினதினுல், பயனென்றின்றி வியர்த்தனுய்ப் போவான். அவன்போனபின் ஒரு கைம்பெண்சாதி வந் து, தாழ்ச்சியிலூன்றிப்பிறருயிரைக் கரையேற் றவாசை மிகுதியால் சொன்னதைக் கேட்டு, மனந்திரும்பிச் சத்தியத்தை அறியவும்,மோட் சவழியில் சேரவும் துணிந்து, முன் உபதேசி சொல்லிய நியாயங்களுக்கு அசையாதவர்கள் இவள் புன்சொற்கிணங்கி வருவதைக் கண் டோம். இதனுல் கல்விசாஸ்திரம் இந்தத் தொழிலுக்கு நல்லதாயினும், தாழ்மை முதற் பல புண்ணியமெல்லாம் அதிலேயும் மிகவும் வேண்டியதென்று சொல்லக்கடவோம். ஆ கையால், இஸ்பிரித்துசாந்து அப்போஸ்தலர் மேலிறங்கிச் சகல சாஸ்திரமும் அறியவும், சக லபாஷையும் பேசவும்வல்லமை தந்தபோது, விசேஷமாய் அவர்களிடத்தில் பயபத்தி, விசு வாசம், மற்றச் சகல புண்ணியங்களேயும் அள வுமின்றி மாறுமின்றி நிலேயாகத்தந்து, சத்தியத் தைப்போதிக்க ஒத்த உபதேசிகளாக்கினுரே ன்றறிவோம். இதனுலல்லோ முன் காட் டினபடி அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் "உன் னேக்காத்தலும், பிறரையுணர்த்தலும் செய்வா ய்" என்றெழுதினுர். பிறரையுணர்த்தாமுன் னே உபதேசிகள் தங்களேக் காக்கவேண்டிய கடமையாமே. சுடு நீரைத்தொட்டால் குளிர் பிடிக்குமோவென்ன, ஆமணக்கு நட்டால்

ஆச்சாவிளையுமோவென்ன, அத்தன்மையால் கோபத்தைக்கொண்டு பொறுமையும், காமத்தைக்கொண்டு தவமும், ஆங்காரத்தைக்கொண்டு தாழ்மையும்,பாவங்களைக்கொண்டு புண்ணியங்களும் பதிக்கப்படுமோவென்ன, நீயே தேவபத்தி, தாழ்மை,நிறை,பொறை,ஞானம், மற்றச் சுகிர்த புண்ணியங்கள் யாவையுங்கொண்டிருந்தாலல்லோ பிறரிடத்தில் அவைகளை விளைவிப்பதற்குரியனுவாய். நீருட்கொண்ட மேகம் மழைதருமொழிய வெள்ளையாய்ப்படர்ந்த மாசுகள் பெய்வது கண்டாருண்டோ? தனக்கில்லாததைப் புறத்தியாருக்குக் கொடுப்பாருண்டாகில், நீயும் புண்ணியமில்லாதவனுயினும், மற்றவர்களைப் புண்ணியவான்களாகச் செய்வாய். ஆகையால், இந்தத் தேவதொழிலைச்செய்ய ஆசையுள்ள யாவரும் இயன்றமாத்திரம் கல்விசாஸ்திரம் படிப்பதன்றியே உத்தம புண்ணியங்கள் எல்லாவற்றையும் உத்தமமுறையால் சம்பாதித்துத் தாங்கள் அதற்கு ஆயத்தம் செய்யக்கடவர்கள். செய்யாராயின் மண்ணின்மேலேற்றின கோபுரம் விழுவதுபோலவும், வேரில்லா மரமே காய்வதுபோலவும், முதலில்லா வாணிகன் கெடுவதுபோலவும், உயிரில்லா உடலே அழிவதுபோலவும், இந்த ஆயத்தமில்லாத உபதேசியும், இந்தத்தொழில் பயன்கொள்ளாமல் கெடுவானேன்பதற்குச் சந்தேகமில்லை. இந்த இரண்டாம் வகை ஆயத்தம் மிகவும் வேண்

டியதாகையில், இந்த விஷயத்தில் இனிப் பல அதிகாரங்களிலே பலவற்றையும் சொல்லிக் காட்டுவோமாகையால், இதிலே இம்மாத்திரம் சொன்னது போதுமென்று நியத்தினோம்.

ரு. அதிகாரம்.

THE NECESSITY OF SELF-GOVERNMENT IN THOSE WHO WOULD SAVE OTHERS.

புறத்தியாருக்குதவத் தன்னைக் காத்தல்.

புறத்தியாரை மோட்சகரையேற்ற வருத்தித் தானே நரகக் குழியிலே வேவ விழுந்தால், பித்தனும் செய்யமாட்டாதவியாபாரமல்லோ தன்னைப்போலே மற்றேரரையும் சிநேகிப்பது நியாயமொழிய மற்றவர்களைச் சிநேகித்து ஆதரிக்கத் தன்னைப் பகைத்துக் கெடுப்பது அக்கிரமந்தானே. இதனாலல்லோ அர்ச்சேயசிஷ்டசின்னப்பர் கோரிந்தியருக்கெழுதின முதல்நிருபம் ஒன்பதாம் அதிகாரம் இருபத்தேழாம் வசனத்தில் "மற்றவர்களுக்கு நன்னெறி காட்டிக்கொண்டு திரிகையில், நானே வழுவிக் கேடாதபடிக்குப் பிரயாசப்படுகிறேனென்றார்." தான் கேட்டழிந்து மற்றவர்களுக்கொளி தரும் விளக்குப்போலாகாமல், தனக்கொருகேடின்றி உலகமெல்லாம் விளக்கும் சூரியன்

கதிர்போலாகவும், எவர்க்கும் தெண்ணீர்தந்
து, தனக்குச் சேறும், தூரையும் வைத்துக்
கொள்ளும் கிணறுபோலாகாமல், தண்ணீர்
குறையாமலும், தெளிவு மாறுமலும், சுனை
ஆறு குளங்களுக்கெல்லாம் கசிவு வழியால்
தண்ணீரை வகுக்கும் கடல்போலாகவும், நீ
யும் உன் ஆத்துமத்துக்கோர் குறைவும் வரா
மல், மற்றவர்களைக் கரையேற்றப் பிரயாசப்
படக்கடவாய். இயேசுநாதர் மத்தேயுசுவிசே
ஷத்தின் பதினாறும் அதிகாரம் இருபத்தாறும்
வசனத்தில் சொன்னபடி, "உன் ஆத்துமத்
துக்கொரு கேடு வந்தால், நீ உலகில் எல்லா
ரையும் இரட்சித்திருந்தாலும் உனக்கு வரத்
தகும் லாபமேன்ன! புறத்தியாரை மோட்ச
கரையேற்ற உன்னுயிர் தந்து செத்தால் உத்
தம புண்ணியந்தானே. உன் ஆத்துமமாயி
னும், பிறர் ஆத்துமமாயினும், மோட்சத்தில்
பிழைத்து வாழ நீச உடலைக் கெடுப்பது நல்
லதே. பிறர் ஆத்துமம் பிழைக்க உன் ஆத்
துமம் கெடும்படிசெய்வது அக்கிரமந்தானே.
திருக்கடை யூராருக்கு நான் முன் எழுதின
நிருபத்தைப்பார்க்கில், இதற்குரிய பலநியா
யங்கள் காணப்படும். இதெல்லாம் இப்
படியாகக்கொள்ள, புறத்தியாரை இரட்சிக்
கப் பிரயாசப்படுகிறவன் தான் வழுவிக் கே
டாதபடிக்கு மிக்க எச்சரிக்கையோடே தன்
னைக் காக்கக்கடவன். அதேனெனில்; மிகு
ந்த எச்சரிக்கையில்லாதாயின், இந்தத் தொழி

லால் பிறர் பாவங்களை விட்டுவிலகும்போது, தனக்குப் பாவம் விளைவதற்கு இதுவே வழியாம். கொள்ளைக்காச்சலுக்கு மருந்து கொடுப்பவன் தன்னை மிகவும் காவானாயின், பிறரைப் பிழைப்பித்துத் தானே சாவான். கொள்ளைக்காச்சலினும் கொடிதாம் பாவத்தினேயல்லோ. அப்படி ஒரு வைப்பாட்டியை வைத்திருந்தவனுக்கு அவளைக் கைவிடச்சொல்லி, மற்றொருவன் நெடுநாள் பல நியாயங்களைக் காட்டிக்கொண்டுவந்தான். காட்டின நியாயங்களால் அவனே தெளிந்து,வைப்பாட்டியைக் கைவிட்டொழித்தான். இவனோவெனில்; இந்த முகாந்தரமாகப் பலமுறை அந்த ஸ்திரீயோடே பேசினவிடத்தில் வேண்டிய எச்சரிக்கையில்லாமையால், நெருப்பின் முகத்தில் அசைவாடின வைக்கோல்போலக் காமத்தீயுள்ளே பற்றி மதியுமயங்கி, தான் அவள் வலையிலகப்பட்டு, நியாயங்களைக்கொண்டு புறத்தியானிடத்தில் பிடுங்கின வைப்பாட்டியைத் தன்னைக்காவாத மயக்கத்தால் தானே வைத்துக்கொண்டு முழுவதும் கெட்டான். ஆகையால், பிசின் தொட்டால் ஒட்டுமென்று அதைத் தொடவேண்டினும், முன்னே கையில் எண்ணெய் பூசிக்கொண்டு தொடுவாரல்லோ. அப்படி நீயும் பாவங்களை விலக்க வருந்துமளவில், பாவியாகாதபடிக்கு ஞானத்தையே அதற்குமுன் நன்றாய்ப் பூசிக்கொண்டு, புறத்தியார் பாவ மயக்கம் உனக்

குள்ளே ஒட்டாததுவேண்டி உன்னை மிகவும் காக்கக்கடவாய்.

ஆயினும் இதிலே இன்னமதிகமாய்த் தெளிவாகும்படிக்கு முந்தி அறியவேண்டியதாவது; இதுவே உத்தம தேவதொழிலும், இதுவே பரம நியாயங்களைச் சொல்லிக்காட்டும் தொழிலும், இதுவே மேற்குலத்தோர்க்கோத்த தொழிலுமாகையில், உன்னை எல்லாருமணுகி வணங்கவும், சூழ்ந்து புகழவும், தங்களுக்கு உன்னைப் பெரியோனென்று உன்னிடத்தில் வழக்குப்பேசவும், உன் தீர்வைகேட்டிணங்கிப் படியவும், தங்களைக் கரையேற்றப் பிரயாசப்படும் நீயென்று யாவரும் உன்னைக் கையிலேந்தவும், ஏந்தி மன்றாடவும் காண்பாய். அப்பொழுது உன் மனதிடத்தில் மிகவும் தாழ்ச்சியே வேருட்கொள்ளாதாயின் அடிவேரில்லாதபோது, அடித்த காற்று முகத்தில் அசைந்துவிழும் மரமேபோல ஆங்காரமே மேற்கொண்டு உன் ஆத்துமமே கெடாதிருப்பது அரிதாம். மீளவும், மற்ற இடங்களின்மேலும், நீ திரியும் நாட்டில் அதிகமாய்ப் பாவிகள் நன்னெறியில் வந்து, திரும்பவும் தெளிவற்ற அஞ்ஞானிகள் தெளிந்து சத்தியத்தை அறியவும் கண்டால், ஆண்டவர் உதவியால்மாத்திரமான கருமமிதென்று தாழ்ச்சியே தருமறிவினால் நிச்சயித்துத் தெறினலொழிய மற்ற உபதேசிகளைப்பார்க்க நீயே வல்லவனென்றும், உபாயனென்றும், உத்தம பிரயாசியென்றும் உன்

மனதில் எண்ணினல், ஆங்காரமே ஓங்கி ஆண்டவருக்குத் துரோகியாகாதிருப்பதரிதே.

இரண்டாவது, இந்தத்தொழில் ஆங்காரத்தைத் தூண்டியெழுப்பும் பல சமயங்கள் உள்ளதாயினும், அதன்மேலும் காமத்தைப்பற்றுவிக்கும் காரணங்கள் அநேகமுண்டாம். நீ இந்தத் தொழிலைச்செய்ய உன் வீட்டைவிட்டுப் பலநாட்பிரிந்து புறத்துத்திரிவதினலும், எவ்வகை ஸ்திரீகளோடும் பேசவேண்டியதினலும், தடையில்லாமல் எவ்வகை வீட்டிலும் நுழைய உனக்கு வாசல் திறந்ததினலும், காமத்தில் வழுவின ஸ்திரீகளுக்கும் புத்தி சொல்ல வேண்டுமென்றதினலும், எந்நேரமும் நெருப்பிலே திரிபவர்போலே நடந்து, காமத்தீயுட்பற்ருமலும், அதன் புகையாகிலும் புறத்துநிறங்கெட வீசாமலும் நடப்பதரிதே. உலகம் வர்த்திப்பது வேண்டியதல்லாதே பற்றின காமத்தீயை அவிப்பது வேண்டியும் ஆண்டவர் விவாகத்தைக் கட்டளையிட்டாரென்றறிவோம். இதனல் அவ்வகைத் தீயிலெரிவதைப்பார்க்க விவாகஞ்செய்வதே நல்லதென்று அர்ச்செயசிஷ்ட சின்னப்பர் எழுதினர். ஆகையால், சமயத்துக்கிந்த ஆறுதலில்லாதவர்கள் தடையில்லாமல் எங்கும் திரிகையில், ஐம்பொறி வழியால் இந்தத் தீயுட்பற்ருததற்கு மிகவும் எச்சரிக்கையோடிருக்கக் கடவர்கள். அப்படியே எந்தப் பழக்கமாயினும் நாணமென்னும் வேலியைத் தாண்டாதிருக்க

வும், எந்த உறவினமாயினும் பெருமையேன்னும் துணையை அகலாதிருக்கவும், எந்த அவசரமாயினும் சாட்சியின்றி ஸ்திரீகளோடே தனித்து வீட்டிலே பேசாதிருக்கவும், எந்தச் சமயமாயினும் தீவினையச்சமே மதயானைக்கொரு பாகனாகக் கைவிடாதிருக்கவும், எந்தச் சரசமாயினும் உனக்கது நிறையில்லாத தோஷமாகவேண்ணிச் செய்யாதிருக்கவும், எந்த எச்சரிக்கையாயினும் போதாதேன்று உன் பலத்தை நம்பாமல், ஆண்டவர் இரங்கி உதவிசெய்ய இடைவிடாமல் தாழ்ச்சியுள்ள ஆசையோடு அவரை வேண்டிக்கொள்வாய். இவற்றையும், பலவற்றையும் விடாமற்செய்து, காமவெள்ளத்தில் அமிழ்ந்துபோகிறவர்கள் தீக்கடலாகிய நரகத்தில் புகாததுவேண்டி, நீயே அவர்களைத் தூக்கிக் கரையிலேற்ற வருந்தும்போது நீயும் கால் தடுமாறி விழுந்து வெள்ளத்தோடே போகாதபடிக்கு, மிகவும் உன்னைக் காக்கவேண்டியதல்லோ.

மூன்றுவது, புலமையிற் பேரிது பொருளாசையென்பார். அதேனெனில்; பொருளின்மேல் ஆசையெழும்பினவளவில் கற்ற நூலும் மறந்துபோய்க் கல்வி நல்லோரும் மயங்குவரென்று அதற்கர்த்தமாகும். இந்த வலையிலும் அகப்படாததற்கு மிகவும் உபதேசிகள் தங்களைக் காக்கவேண்டியதாமே. அதேனெனில்; நீயே திரிந்து, பிறரையுணர்த்தப் போனவிடத்தில் ஒருவன் அன்புகாட்டி, நாலு

நாள் உன்னை நிறுத்தி, நாலு வகைக் கறிகளு ம், நெய்யும், பாலும், அமுதோடூட்டினுனாயி னும், சமயத்துக்குப் பத்தைந்து தந்து உதவி னுனாயினும், உன் கண்மேலே மாசிட்டாற் போல அவன் குறை காணவும், அதற்கு அவ னைக் கண்டிக்கவுமாட்டாய். அவன் குறை குருக்களிடத்தில் வெளியாகி இதேதென்றவர் கேட்பினும், முன்னேதாகிலும் உள்ளதென்று கேட்டிருந்தேன். ஆயினும் இப்போது இ தெல்லாமில்லை. இவனைப் பகைத்த சிலர் தூறினதைக் கேட்டு நானே விசாரித்தவிடத் தில் பகையால் வந்த பொய்ப்பேச்சல்லாது இதிலூன்றத்தகும் பழுதொன்றுமில்லையென் று வெளியாகாததை மறைக்கவும், மறைக் கப்படாததற்கொரு போக்குச்சொல்லவும் பிர யாசப்படுவாய். இதோ, பொருளாசையைப் பற்றி உன் நெஞ்சறியப் பொய்யைச்சொல்லி உன் தோள்மேல் அவனை நரகத்திற்கொண்டு போய் இருவரும் அங்கே விழத் துணிந்தாய். உபதேசிகளெல்லாருக்கும் இருக்கும்பொருள் சிறுமையைப்பார்க்கில் இதிலே மிகவும் எச் சரிக்கையோடிருந்தாலொழிய, நீதியின்கோல் கோணித் தங்கள் தேவ தொழிலை மறுத்துப் ப லரோடே தாங்களும் நரகத்திலேவிழத் தடுமா றுவதெளிதே. ஒருவனால் வந்த நன்றி அவ னோடே தன்னைப்பிணிக்கும் பாசமென்பார். அப்படிப் பிணிக்கப்பட்டபின்பு செவ்வே நடப்பதரிதாம். ஆயினும், சமயத்துக்கு உ

தவின சிநேகிதன் கண்கெட்டு இடறிப்போ
கக்கண்டால், நீயும் உன்கண்ணிரண்டையும்
பிடுங்கி அவனோடே தவறிக் குழியில் விழுவது
சிநேகமேன்பவோ? உதவினோனென்று சிநே
கம் வைத்தால் அவனை மோட்சகரையிலேற்ற
அதிகமாய் ஆசையும் வைத்துச் செவ்வழி தப்
பி, அவன் தடுமாறினதைக் கண்டவளவில்
அவனைக் குழியில் தள்ளினாற்போல அவன்
குற்றங்களை மறையாமல் அவனுக்கு விசேஷ
மாய்த் திறந்து, திறந்த வழியால் அறிந்த உறுதி
களைச்சோல்லி, செய்த குற்றத்தை வெறுக்கக்
காட்டி, உபதேசியின் சிநேகிதனேன்னும்
பெயர் தனக்கு வேண்டுமாகில், தேவ உபதே
சத்துக்குத் தக்கதாய் நடக்கவுஞ்சோல்வாய்.
சிநேகிதனாயினும் நோவுமேன்று அவன்பட்ட
புண்ணுக்கு மருந்திடாமலும், வயித்தியனுக்
கதைக் காட்டாமலுமிருப்பது நல்லதோ? உ
றைக்கும் காரமாயினும், சுடுநேருப்பேன்கி
லும் நல்லதேன்று புண் முற்றிப்போய் வெகு
தூரம் நாற்றம் படர்ந்து வினைசெய்யாமுன்னே
வருத்தஞ்செய்தாயினும் அதை ஆற்றப்பார்ப்
பாயல்லோ? உன் சிநேகிதத்தைப்பற்றி அவ
ன் சரீரத்துக்கிந்த உதவி செய்யத் துணிந்தபடி
யே அவன் ஆத்துமத்துக்கும் உதவத் துணியா
மலேன்ன? அவன் தன் போருளால் உன்
சரீரத்துக்கு உதவினதற்குக்கைமாறாக அவன்
ஆத்துமத்தைக் கரையேற்ற மிகவும் நீ வருந்
தத் தேவையில்லையோ? இப்படிப் பட்ச

முறையால் அவனை நீ சினந்தவிடத்தில், வியாதியோடே மதியுங்கெட்ட பித்தனைப்போல, நீ சொல்லிக் காட்டின நியாயங்களைக் கேளாமல் சிநேகத்தை அவன் முறித்தாலும், உன்னை நன்றியறியாதவனென்று இகழ்ந்தாலும், அந்த இகழ்ச்சிக்கஞ்சவேண்டாம். உனக்கு அவன் சிநேகத்தின்மேலும் ஆண்டவர் சிநேகம் வேண்டியதென்றும், உனக்கு அவன் செய்த நன்றியின்மேலும் அதிகமாயளவின்றி, உனக்கு ஆண்டவர் நன்மைசெய்தாரென்றும், ஆண்டவருக்கு நன்றியறிந்தவனாய் அவர் கட்டளையிட்டபடி செய்தாலே போதுமென்றும் தேறி, மற்றவருதவிக்காசைப்படாமலும், பகைக்கஞ்சாமலும், நிறைவிடாதிருப்பதே கருமம். இந்தப்படியே சிநேகத்தைப்பற்றியாகிலும், பொருளைப்பற்றியென்கிலும் பல உபதேசிகள் தங்கள் தொழிலினிறையைவிட்டுப் பலர்க்குக் கேடாகத் தாங்களே நரகத்துக்குச் செவ்வேபோகிறார்களென்று மிகவும் அஞ்சியிருக்கிறோம். முன் சொன்னபடி லௌகீகப் பொருள்களே மிகுந்த எச்சரிக்கையில்லாதாயின் எவரையும் மயக்குவிக்க வல்லதாமே. மோசே முதலாகமத்தின் முப்பத்தோராம் அதிகாரத்தில் எழுதினபடி, யாக்கோபின் ஸ்திரீயாகிய இராகேலென்பவள் வேதத்திலே துதிக்கப்பட்டவளாயினும், அவள் தகப்பன் வணங்கின பொய்யான தேவர்களைப் பசாசென்று வெறுத்திருந்தாள். ஆயினும் அந்

த்த் தேவ சுரூபங்கள் போன்னாலும், வெள்ளி
யினாலும் செய்யப்பட்டனவாகையில், அவை
களையொளித்து, வழித்துணையாகக் கொண்டு
போனாளென்றறிவோம். * இதோ பொரு
ளாசை தன் மனமறிய இகழ்ந்த பசாசைமுத
லாய் நல்லதென்று கைக்கொண்டநுசரிக்கச்
செய்வது கண்டோம். சிநேகமும் அத்தன்
மையால் கண்ணை மயக்குவித்துக் கறுப்பையு
ம், வெள்ளையாகத் தோற்றுவிக்கும். அப்படி
வேதத்தில் சாலமோன் எழுதின மூன்றுமாக
மம், முதலாம் அதிகாரத்தில் ஒருத்தி தன்னை
மிகவும் புகழ்ந்து நானே கறுப்பியாயினும்
அழகிதானேயென்றாள். அதன்பின்பு அவள்
மேல் பட்சம்வைத்த ஒருவன் பிளந்த மாத
ளம் பழத்தின் தன்மையால், அவள் முகம்
வெள்ளையும் சிவப்பும் கலந்ததாகிச் சிறந்த
தென்றான். இதோ சிநேகிதன் கண்ணுக்
குக் கறுப்புத்தானே, வெள்ளையும் சிவப்பு
மாகத் தோன்றினதிதிலே கண்டோம். ஆ
கையால் சிநேகத்தின் மயக்கத்தால் பிறர்
குற்றமே புண்ணியமென்றெண்ணுமலும்,
பொருளாசையால் அறிந்த பிறர் குற்றத்தை
ஒளித்தனுசரியாமலும், உபதேசிகள் மிகவு
மெச்சரிக்கையோடிருக்கக்கடவர்கள். இற்

* இராகேலென்பவள் சொல்லப்பட்ட விக்கிரகங்
களை இன்னகாரணத்திற்காக அபகரித்துக்கொண்டா
ளென்பதை வேதங்காட்டவில்லலையே. வீரமாமுனி
வர் இவ்விடத்தில் குறித்த வேதப்பொருளைப்பார்.

றையவரைக்கும் சொன்னதை ஆராய்ந்து உற்றுப்பார்க்கில், இந்தத் தேவ தொழிலிலே உபதேசிகள் தங்களுக்கு வேண்டியல்லாதே புறத்தியாருக்கு வேண்டியும், எச்சரிக்கையாய் நடந்து வழுவாதபடிக்குத் தங்களைக்காக்கவேண்டியதாகக் காணப்படுமே. நீயே இடறி வழுவினவளவில்,வழுவினோரைத் தாங்குவாயோ? உளுத்த கொம்பு முட்டுக்காலாகுமோ? வற்றின குளம் வயலுக்குத் தண்ணீர் தந்து செந்நெல்லை விளைவிக்கத்தகுமோ? நெய்யும் திரியுமின்றி அவிந்த தீபம் புறத்தோளி தந்து விளக்காகத்தகுமோ? ஆகையால் தான் கரையேறுதற்கன்றியும், புறத்தியாருக்குதவத் தன்னைக்காத்தல் வேண்டுவதேன்பது நிச்சயந்தானே. இதற்குக் குறையில்லாமல் பிரயாசப்பட்டீர்களாகில், உங்கள் உதவியால் மற்றவர்கள்செய்யும் புண்ணியங்களில், உங்களுக்கும் பங்குண்டாம். ஆயினும் இந்தப்படியே நீங்கள் அசட்டையாய்க்கிடந்து திரியாமலும், விசாரியாமலும், ஒத்த முறையோடுதவாமலும் செய்த குறைவினால், மற்றவர்கள் செய்யும் பாவங்களிலும் உங்களுக்குப் பங்குண்டாமென்பதற்குச் சந்தேகமில்லை. தன்னைப்பற்றிப் பாவஞ்செய்யாமலும், தன் குறைவினால் புறத்தியார் செய்யும் பாவங்களினால் நரகத்திலே விழுவது நிர்ப்பாக்கியமல்லவோ? ஆயினும் உபதேசிகளும், தாய்தகப்பனும், பலரை ஆண்ட யாவரும் அப்படியே

தங்கள் பாவங்களுக்கல்லாதே தங்களாலாகு மேன்றிருக்கையில், விலகாமல் வந்த புறத் தியார் பாவங்களுக்கும் கணக்குச் சோல்லக் கடவர்களேன்பது நிச்சயந்தானே. ஆகை யால் புறத்தியாருக்கு உதவிசெய்வது வேண் டித் தன்னைக்காப்பது நல்லது போலத்தானே கேடாமல், சுறுசுறுப்போடேல்லாரையும் க ரையேற்ற உதவ வருந்துவது நியாயமாமே. மீளவும் இதிலே உபதேசிகளுக்கு விசேஷ மாய்ச் சோன்னதேல்லாம் போதுப்பட மற்ற யாவரும் தங்களுக்குச் சோன்னதாகவும், கைக்கோள்ளக்கடவர்கள். சோன்ன மூவ கை மயக்கமும் எவர்க்குமுண்டாம். எவ ரும் அவைகளில் அகப்படாமல் போருள், புகழ், இன்பம் என்றிவை தேட மனிதரைச் சிநேகித்து ஆண்டவரைப்பகைத்து, தம் ஆத்து மத்துக்குக்கேடாக வழுவாததற்கு எவரும் எச் சரிக்கையாயிருக்கவேண்டியதுள்ளதுதானே.

---

௬. அதிகாரம்.

CARE FOR OTHERS ESSENTIAL TO PERSONAL PIETY.

தன்னைக் காக்கப் புறத்தியாரை மறவாதிருத்தல்.

போன அதிகாரத்தில் சோன்னதைப்பார்த் துச் சிலரே மிகவும் அஞ்சி, இந்தத் தோழி

லில் வழுவி விழும்படிக்கத்தனை இடறவண்டாகையில் இதை நாம் செய்வதென்ன? புறத்தியாரைக் கரையேற்றுவது உத்தம புண்ணியந்தானேயாயினும், மற்றவர்கள் கறையேற வருந்தி, நாமே கெட்டு நரகத்தில் விழ இடஞ்செய்வதைப்பார்க்க இந்தத் தொழிலைவிட்டுத் தனியே நாங்கரையேறச் சஞ்சலமின்றிப் பிரயாசப்படுவது நல்லதென்று நினைப்பார்கள். ஆயினும் ஆண்டவர் விசேஷமான தயையோடு உங்களைத்தெரிந்து தாமே மனிதனாய்ச் செய்த தொழிலை உங்களுக்குத்தந்து, நீங்களும் சம்மதித்ததைக் கைக்கொண்டபின்பு மனதில் அஞ்சி இடையில் பின்வாங்கினால் நல்லதோ? இதை நன்றாய்ப்பார்க்கில், பாவத்துக்கச்சமல்ல, படவேண்டிய பிரயாசத்துக்கஞ்சி, சோம்பலினாலே நினைத்த தப்பிதமென்று தோன்றப்படுமே. அப்படியாகில், நீங்கள் நினைவில் அஞ்சின தீமையிலும் இதனால் அதிக கேடு விளையுமென்றிருக்கிறோம். அதெப்படியென்றால்; மத்தேயு, லூக்கா என்பவர்கள் எழுதினபடி துரை ஒருவன் மூன்று பேர்களைத் தெரிந்து தன் கைப்பொருளில் ஒருவற்கையாயிரம், ஒருவற்கீராயிரம், மற்றொருவற்கோராயிரம் பொன் தந்து வியாபாரம் செய்யச்சொல்லிப் பிரயாணம்போனான். முன்சொன்ன இருவர் அப்படியே வாங்கிக்கொண்டு திரவியம் ஆதாயமாக வளரச் செய்து மற்றொருவன் வியாபாரத் தொழிலே கள்ளர் முதற்

பல விக்கினங்களினால் கேடுவந்தாலும் வரு மென்றஞ்சி வாங்கின பணங்களைப் பதன மாய்ப் புதைத்து வைத்தான். நெடுநோட் போனபின்பு துரையும் வந்து மூவரையும் அ ழைப்பித்துச் செய்தியைக் கேட்க ஒருவன் நின்று நீர் தந்த ஐயாயிரம் பொன் முதலாக வைத்து மற்றையாயிரம் ஆதாயமாகக் கண்ட தேன்றான். அவனைத் துரை புகழ்ந்து வெ குமானமுஞ் செய்து தம்மோடே வாழவரச் சொன்னார். அப்படியே வேறொருவன் நீர் தந்த ஈராயிரம் பொன் நாலாயிரமாக வியாபா ரத்தில் வர்த்தித்ததேன்று வைத்தவிடத்தில் அவனும் ஒத்த வரிசைபெற்று மகிழா நின் றான். மற்றொருவனோவெனில் முதலிலே கேடுவருமென்று சந்தேகப்பட்டு, கேடுவந்தால் நீர் தரும் ஆக்கினைக்கஞ்சி உமது பணங்களைப் பத்திரமாகப் புதைத்துவைத்தேன். இதோ குறையாமல் கொண்டுவந்தேனென்று தொழு து முன்வைத்தான். அதற்குத் துரை அவனை மிகவும் கோபித்து, நமக்கு ஆதாயங்காண உ னக்குத் தந்தபொருளைக் கைக்கொண்டபின்பு வீண் அச்சத்தால் மெய்யான சோம்பலைமூடிப் பயனொன்றின்றி அதனை வெறுமையாய் வை த்ததேதென்று நெறுநெறெனப் பல்லைக்கடித் துக் கோவென்றலறி அழுவாரோசை முழங் குங்கொடிய சிறையிற்போடுவித்தான்.

இந்தக்கதையை இயேசுநாதர்சொல்லி இத் தன்மைத்தாகும் மோட்ச வியாபாரமென்றார்.

அர்ச்செயசிஷ்ட அகுஸ்தீனேவெனில், இந்தக் கதையே சோம்பலினுலும், வீண் அச்சத்தாலும் தந்தொழிலைச் செய்யாமற்கிடக்கும் உபதேசிகளைக்குறித்துக் காட்டுமென்ற பின்பு சொன்னதாவது; வேறொரு குற்றமின்றி வாங்கினபொருளை அழியவிடாமலும், தான் தின்னுமலும், சம்மதித்துக் கைக்கொண்ட பொருளால் வியாபாரஞ்செய்யாமல், ஆண்டவனுக்காதாயங்காட்டாத சோம்பலினுல் மாத்திரம் அவனுக்கு வந்த ஆக்கினையைக்கண்டு மற்றவர்கள் நடுங்கக்கடவர்களேன்ருர். அப்படியே நீயும் ஆண்டவர் தந்த நினைவினுல் உபதேசியாகத் திருச்சபைக்கூழியஞ்செய்து மற்றவர்களையும் மோட்சகரையிலேற்ற இந்தத்தொழிலைக் கைக்கொண்டபின்னர், சஞ்சலத்துக்கஞ்சிச் சோம்பலாக மூலையில் கிடக்கவேண்டுமேன்றல், ஆண்டவர் விடுவாரோவென்ன, ஆண்டவர் தேடும் திரவியமாக ஆத்துமங்களை அவருக்குச் சேர்க்க உனக்குத் தந்த புத்தியும், அறிவும், மற்றுண்டாகிய நன்மையுதவியும் பாவத்துக்குதவ நீ செய்யாதேபோனுலும், அதுகளைப் புதைத்தாற்போல உன்னுலாகுமளவும் புறத்தியாரையும் ஆண்டவர் பாதத்திற் கொண்டுவந்து செலுத்தாதேபோனுல், இதனுலேமாத்திரம் அவர்கள் ஆக்கினைக்குள்ளாவதற்குச் சந்தேகமில்லை. அர்ச்செயசிஷ்ட பிருஞ்சீஸ்கு சபையிலுட்பட்ட சந்நியாசியொருவர் அஞ்ஞானிகளுக்குச் சத்தியவேதத்தைப்

போதிக்க நெடுநாள் பிரயாசப்பட்டபின்பு சஞ்சலமின்றித் தம் ஆத்துமத்தை விசாரித்து நல்ல மரணத்துக்காயத்தஞ்செய்ய வேண்டுமென்று கருதித் தாம் அந்தத் தொழிலைவிட்டு, வேறொரு மடத்திலிருந்து புறத்தியாரை நினையாமல் தாமே நிறையப் புண்ணியபலன்களை அடைய அருந்தவஞ் செய்யத் தொடங்கினார். அப்படியிருக்கையில். அவருக்கு இயேசுநாதர் சிலுவையின்மேல் அறையுண்டவராகத் தோன்றிச் சஞ்சலமில்லாமல் உன் கருமம் சுகமேயாயினும், நீ பார்த்திருக்க என்னை இந்தச் சிலுவையின்மேல் விட்டாயோவென்றார். அதற்கவர் நொந்து, நாணிப் புறத்தியாருக்கு மோட்சவழியைக் காட்டிக்கொண்டு முன் செய்திருந்த தேவ தொழிலை விட்டதனால் அதை ஆண்டவர்சொன்னதென்றறிந்து மீண்டு போய்த் தம்மாலானமட்டும் எல்லாரையும் கரையேற்ற மரணபரியந்தம் பிரயாசப்பட்டுத் திரிந்தார். அப்படியே மற்றொருவன் தன் ஆத்துமத்துக்குக் கேடுவருமென்றஞ்சி உபதேசித் தொழிலைவிட்டுத் தனித்திருந்தவத்தைச் செய்ய நினைத்தான்.

ஒருநாள் அவன் இயேசுநாதர் பாடுபட்ட வர்த்தமானத்தைத் தியானித்திருக்கையில், யூதர்கள் வந்து கர்த்தரைப் பிடித்தபோது, கூடநின்ற சீஷர்களெல்லாரும் ஓடிப்போனதை வாசித்துப் பகைவர்கையில் தனி நின்ற இயேசுநாதர்மேல் இரக்கமும், சமயத்துக்குத் தங்

குருவானவரைக் கைவிட்ட சீஷர்மேல் கோ
பமுமிக்கதாகி அழுதுகொண்டிருந்தான். அப்
போது இயேசுநாதர் அவன் மனதிலே சொன்
னதாவது; அந்தச்சீஷர்களை நீ கோபித்ததேன்
ன? அப்படியே நீயும் செய்தாயல்லோ?
என்மேல் உனக்கு இரக்கமானல், அஞ்ஞா
னிகள் கையில் என்னை ஒப்புக்கொடுத்து ஓ
டிப்போனற்போல, நீ உபதேசித்தொழிலை
விட்டு வருவாயோவென்றார். அவனும் இ
தைக்கேட்டு உள்ளத்துருகி, நரணித் தான்
நினைத்த புண்ணியம் அபத்தமென்று கண்டு,
மீளவும் உபதேசஞ்சொல்லிக்கொண்டு பகை
வர்கையில் அகப்பட்ட கர்த்தரை மீட்டாற்
போல், அஞ்ஞானத்தழுந்திய ஆத்துமங்களைத்
திருப்பி, மோட்சவழியிலே நிறுத்தப் பிரயாசப்
பட்டுக்கொண்டிருந்தான். இதெல்லாம் வா
சித்தபின்பு நீங்களும் கர்த்தருக்குப் பிரியமுள்
ள இந்தத் தேவதொழிலைக் கைவிடாதியன்ற
மாத்திரம் உத்தமமுறையால் முடிப்பத்துணி
வதுந்தவிர அதனல் வந்த அச்சமும் தெளியு
மென்றிருக்கிறோம். அதெப்படியெனில்;
ஆண்டவருக்குவேண்டி அவர் இறந்து இரட்
சித்த ஆத்துமங்களைப் பசாசடிமையினின்று
மீட்க அவரே ஏவினபடியே நீங்கள் திரியும்
போது வரும் பல விக்கினங்களில் உங்களுக்
கு மோசம் வராமல் அவரே காப்பாரென்று
சற்றுமஞ்சாமல் நம்பியிருப்பது நியாயமல்
லோ? இதனல் இயேசுநாதர் அப்போஸ்தல

ரை உபதேசஞ்சொல்ல அனுப்பினபோது திரு
வுளம்பற்றினதாவது, "பூவுலகமுடியுந்தனை
யும் நாமே உங்களோடேகூட நிற்போமாகை
யில், எங்கும்போய் எல்லாருக்கும் உபதே
சஞ்சொல்லுங்களென்றார்." இதனைப்பற்றி
அர்ச்சேயசிஷ்ட இஞ்ஞாசியார் எவரும் அதி
சயப்பட ஒரு வசனஞ்சொன்னதாக அவர்
சரித்திரத்தில் எழுதியிருக்கக்காண்போம். அ
தேதேனில்; பல சந்நியாசிகள் கூடவிருக்கை
யில், ஒருநாள் அவர்களில் ஒருவரைநோக்கி,
இஞ்ஞாசியார் கேட்டதாவது; சர்வேஸ்வரன்
தஞ்சித்தம் வெளியாக்கி நீ வேண்டுமென்றால்
உடனே செத்து மோட்சத்தையடைவாய்.
அல்லதின்னம் சிலநாளிங்கேயிருந்தாயாகில்,
அநேகம்பேர்களைக் கரையேற்றுவாயாகிலும்
அப்போது மோட்சமடைவாயென்று இப்போ
து நிச்சயமில்லையென்றும், நீ சாவுமளவிலிருந்
ததற்குத்தக்கதாய்த் தீர்வையிடுவோமென்றும்,
திருவுளம்பற்றவந்தால் இவ்விரண்டில் எது
நீ உனக்குத் தெரிந்துகொள்வாயென்று கேட்
டார். அதற்கந்தச் சந்நியாசி சற்றும் ஆலோ
சனைசெய்யாமல் இங்கே ஆத்துமத்துக்குள்ள
விக்கினங்களைத் தப்பி உடனே மோட்சத்தை
யடைவது நல்லதென்பேனென்றார். இஞ்ஞா
சியாரோவெனில்; நான் அப்படியல்ல, இன்
னம் சிலநாள் உயிரோடிருந்து ஆண்டவருக்கு
த்தோத்திரமாக அநேகம்பேர்களைக் கரையேற்
றலாமென்று நிச்சயமாக அறிந்தேனாகில், அ

தன்பிறகு மோட்சமடைவேனே இல்லையோ வென்று சற்றும்பாராமல், ஆண்டவரை நம்பி அவருக்கு ஊழியஞ்செய்து பலரைக் கரையே ற்ற இன்னமுமிங்கேயிருக்க மன்றுடுவேனே ன்றார். இதற்கு நியாயமேதெனில், ஒருவன் தனக்கிருந்த மோட்ச நிச்சயத்தை ஆண்டவ ருக்குத் தோத்திரமாகக் கைவிட்டபின்பு, அ வன் மோசம்போக அளவில்லாத தயையுள்ள சுவாமி பார்த்துக்கொண்டிருப்பாரோ? முன் சொன்ன நிச்சயத்திலும் பின்பவன் மோட் சத்தையடைவது நிச்சயமாகுமே. இங்கே தானே ஒரு இராசா உனக்குச் சீமை விடவே ண்டுமென்றிருக்கையில், அதற்கு முன்னே இராசாவுக்குப் பிரியவூழியத்தைச் செய்வது வேண்டி உன் ஆதாயத்தைப் பாராமல், அந் தச் சீமையை நீ கைக்கொள்ளாதேபோனல், சொன்ன ஊழியத்தை முடித்தபிற்பாடு அதை த்தருவானே இல்லையோவென்று சந்தேகப் படக் கணக்குண்டோ? அதையும் அதிலே பெரிய சீமையும், பெரிய வரிசைகளும் உன் பட்சத்தைக்கண்டு தருவாரேன்பது நிச்சயந் தானே.

அப்படியே ஆண்டவர் உங்களுக்குத் தந்த தொழிலில் ஆத்துமத்துக்கு விக்கினம் வந்தா லும் எச்சரிக்கையோடிருக்க வேண்டியதொ ழியக் கேடுவருமென்றஞ்சி மயங்கவேண்டா ம். புறத்தியார் சரீரத்துக்கு உதவிசெய்வார்க் கு ஆண்டவர்தாமே உதவியாக நிற்பாரென்ற

துந்தவிர, நடுத்தீர்க்கும் நாளிலே மற்றத் தரு மங்களைவிட நோந்தார்க்கு ஆறுதலும், பசிப் பார்க்கு உணவும், இல்லார்க்கு உடையும் தந்ததற்கு அவரே மோட்சத்தைத் தருவாரே ன்று இயேசுநாதர் திருவுளம்பற்றினதல்லோ. * இனிப் புழுத்தழியும் சரீரத்துக்கு உதவி செய்ததினால், இத்தனை வரிசையும், நன்மை யும் வருமேனில், என்றும் அழிவில்லாத ஆத் துமத்துக்கு உதவிசெய்து, புறத்தியாரையும் கரையேற்றப் பிரயாசப்பட்டதற்கு ஆண்ட வர் என்னசெய்யார்? இராசா மகனுக்கு மு லைப்பால் கோடுப்பவளுக்கு, இராசா தனக்கு ஏற்றபோசனங்குறைவில்லாமல் தந்து பேணு வதுபோல, ஆண்டவர் பிள்ளைகளாகிய மனித ரேல்லாருக்கும் ஞானப்பாலாகிய வேதவுணர் ச்சிகளையூட்டி, நீ பிரயாசப்பட்டுக்கோண்டு திரிகையில், ஆண்டவரும் தமக்கேற்ற தேவ போசனமாகிய தேவ வரப்பிரசாதங்களை உ னக்கு நிறையத்தருவார். நீ புறத்தியாருக்கு நல்ல உணர்ச்சிகளை விளைவிக்க வருந்துவதள வாக உனக்கும் நல்ல உணர்வுகள் விளையும். நீ புறத்தியாரை நல்லவராக்க வருந்துவதள

* கடைசிநாளிலே குறிக்கப்பட்ட நன்மைகளைச் செய்தவர்கள் யாவரும் மோட்சஞ்சேருவார்களென்றல் ல, வேதத்திற்கிணங்கிப் பூரணசற்குணத்தை யுடைய வர்களாய்ப் பிறருக்கு நன்மைகளைச் செய்தவர்களே கரையேறுவார்களென்று காட்டும்பொருட்டாய் அப்ப டிச்சோன்னாரென்பது மத்தேயு எழுதிய சுவிசேஷத் தின் இருபத்தைந்தாம் அதிகாரத்தால் விளங்கும்.

வாக நீயே நல்லவனாவாய். உறையிற்கிடந்து கறைபட்டுக் கெடுங்கத்தி வெட்டவெட்ட ஒளிபெறுமல்லோ. பொற்பொருள்களை நெருப்புச் சுடச்சுடத் தானே வளர்ந்து சுடரேறுமல்லோ. கிணற்றுத்தண்ணீரிறைக்க இறைக்க நீர் தெளிந்தூறுமல்லோ. நானே புறத்தியார் கோபத்தையாற்றச்சொன்ன நியாயங்களினால் என்கோபமுமாறாதோ! பேரின்பத்தை இழந்துபோவதற்குக் காரணமாகிய சிற்றின்பத்தாசையால்வரும் கேடுகளை நான் புறத்தியாருக்குக் காட்டினவிடத்தில் நானும் அஞ்சாதிருப்பேனோ? புறத்தியார் ஆசைப்பட அழியாத மோட்சசெல்வங்களை விரித்துக்காட்டின தன்மையில், எனக்கும் அதன்மேல் ஆசை விளையாதிருக்குமோ! செங்நெல்விளையத் தண்ணீர்கொண்டு விடும் வாய்க்காலும் நனையாதோ? ஆயினும், இன்னம் அதிகமாயிதிலே நீங்கள் தேறும்படிக்கும், வேறே பல விசேஷங்களுக்கும் உதவியாக ஒரு நியாயத்தை அறியக்கடவீர்கள்.

ஆண்டவர் பரமநீதிபரனாகையில், ஒருவர்க்கொரு தொழிலைக் கட்டளையிடும்போது அதற்குரிய உதவியும், வல்லமையுந்தருவார். இல்லாவிட்டால், நம்மாலொன்றுமாகாதென்று தாம் அறிந்திருக்கவேண்டிய உதவி அவர் செய்யாமல் நம்மை ஏவினாராகில், அவருக்கு நீதியாகுமோ? நமக்குக் கருமமுகியுமோ! ஆகையால், வெவ்வேறே தொழிலுக்கு வெவ்

வேறே உதவி அதற்கதற்குரிய முறையால் ஆண்டவர் செய்வது நிச்சயந்தானே. இந்த விசேஷ உதவியைத் தொழில் வரமென்பார். சந்நியாசிகள் தங்கள் விரதங்காக்கத் துறவுவரமும், இராசாக்கள் தங்கள் இராச்சியங்களை ஆளச் செங்கோல்வரமும், சமுசாரிகள் தங்கள் மனையை நெறிவழாமல் நடத்தி வாழ இல்லறவரமும் பெறுவார்கள். இத்தொகை முதலிய தொழில்களுக்கெல்லாம் ஒவ்வொன்றிற்கோரு விசேஷித்த வரமே ஆண்டவரால் ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே உபதேசஞ்சொல்ல ஆண்டவர் ஒருவனைத் தெரிந்தபோது, அவனுக்கு உபதேசி வரமே கொடுப்பார். இந்த வரமேதெனில், உபதேசித்தொழில் செய்யவேண்டிய யாவையும் தனக்குப் பழுது வராமல், புறத்தியாருக்கும் உதவிவரும்படிக்கு ஒத்த முறையோடு முடிக்க விசேஷ வல்லமை தரும் வரம் அதுவேயாகையில், உன் தொழில் நிமித்தமாக வேறொருவனுக்குப் பாவத்துக்கேதுவாயிருக்கு மிடத்திற்போனாலும், நீ கண் மூடவேண்டுமென்றாலும், பாவத்தில் விழாதபடிக்கு விசேஷ ஒத்தாசை உன் தொழில் வரத்தினால் உனக்குண்டாமே. அவனவன் தன்னிடத்தில் அநுதினம் சம்பவிக்கும் தன்மையைப்பார்க்கில் தான் வினையாடப்பேசினவிடத்தில் தனக்குத் தீயநினைவு சோதனைவந்தாலும் தன் உபதேசித்தொழிலைச்

செய்ய அவ்விடத்தில்தானே பேசினுலும் அத் தச்சோதனை வரவுமில்லை. வந்தாலும் அதை எளிதாய் மறுத்துத் தன் ஆத்துமத்துக்கு இத ஞல் பழுதுவரவுமில்லையென்று காண்பான். இதிப்படியாகையில், இந்தத்தொழிலை நன் ருய் முடிப்பதரிதேன்றும், இதிலே தப்பிவிழு வதேளிதேன்றும் அஞ்சிப் பின்வாங்க நியாய முண்டோ? நீயே முழுமனதோடு துணிந்து கர்த்தர் உனக்குச் செய்யும் விசேஷ உதவி யால் பலரைக் கூட்டிக்கொண்டு, மோட்சத் திற்சென்று சதாநித்தியகால முடியாவரிசை பெற்று வாழ்ந்திருப்பாயேன்பது நிச்சயந்தா னே.

எ. அதிகாரம்.

PERSONAL PIETY THE FIRST MEANS FOR THE SALVATION OF OTHERS.

பிறரையீடேற்றத் தன் நல்லொழுக்கமே முதல்வழி.

இந்தத் தேவதொழிலின் இயல்பும் மாட்சி யுங்காட்டி இதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களுக்குப் போதுப்படத்துணிவும் ஆயத்த முமாகச் சில உறுதிகளைச்சொன்னபின்பு கர்த் தர் அவர்களுக்குத்தந்த இந்த அரியதொழிலை ந ன்ருய்முடிக்க உதவுஞ் சிலவழிகளைக்காட்டத் தொடங்கினேம். அவற்றின் முதல் வழி

தன் நல்லொழுக்கந்தானே. நீயே நடந்து தருமமாத்திரை பிறர்க்குக்காட்டினால், பின்பு நீ படிப்பித்துக்காட்டும் தரும வழியில் அவர்களுமெளிதாய் நடப்பார்கள். செவ்வழி இன்னதென்று ஒருவன் நின்றபடியே சொல்லிக்காட்டினால் நல்லதாயினும், அதனைவிட என்னைப் பின்சென்று வாவென்று முன்னடந்து வழியைக் காட்டினால், அவனைத் தொடர்ந்து போவது சிறியோர்க்கும் எளிதல்லோ. இதனால் அப்போஸ்தலர் முயற்சி ஆகமத்தின் முதல் வசனமாக எழுதப்பட்டபடியே இயேசுநாதர் முன் புண்ணியத்தைச் செய்து பின்பு அதைச் சொல்லிக்காட்டினதறிவோம். மீளவும் மூன்று வருஷம் நிறையாமல் புண்ணிய வழியைப் படிப்பித்த இயேசுநாதர் அதற்கு முன்னே முப்பதுவருஷம் குறையாமல் நடந்து புண்ணியமாதிரியைக் காட்டினார். இதற்கெல்லாம் முதல் நியாயமேதெனில், கண்ணால் கண்டதற்குமுன்னே காதால் கேட்டது நில்லாதென்பார். ஒரு வகைக் கனியைக் கசக்கும் விஷமென்று நீ சத்தியமாகச்சொன்னாலும், பின்பதை நீயே ஆசையோடெளித்துக்கொண்டு தின்னக்கண்டால், முன் சொன்னது மெய்யாகக் கொள்வார்களோ? இதனால் எந்தத் தொழிலையாகிலும் பலவிதிகளைச் சொல்லிப் படிப்பிக்கிறது போதாமல் அவ்வவன் அதைத்தானே செய்து காட்டிப் படிப்பிப்பான்.

அர்ச்சேயசிஷ்ட ஸ்நான அருளப்பர் தவத்தைப் படிப்பிக்க வனத்திலிருந்து பிரசங்குசெய்தாரென்று சுவிசேஷத்தில் எழுதப்பட்டதல்லோ. ஆயினும் எவரையும் படிப்பிக்க வனத்திலிராமல் நடு நாட்டில் வந்து திரிவது நல்லதல்லவென்று அர்ச்சேயசிஷ்ட எரோனிமுவென்பவர் சொல்லி, அதற்குத் தாமே மாறுத்தரமாகக் காட்டின நியாயமாவது; சொல்வினையும் செய்வினையும் வேறுபடாமலோத்ததாயின் அதுவே உயிருள்ள பிரசங்கமாகுமென்று அருளப்பர் நாட்டில் வாராதங்கே பிரசங்குசெய்துகொண்டிருந்தார். வனத்திலிருந்து போதிக்கிறவர் செய்யும் அரிய தவதைக்கண்ட யாவரும் அவரே சொல்லும்படிக்குத் தாங்களுமெளிதாய்த் தவத்தைச் செய்யத் துணிவார்களென்றார். அப்படி நீயும் சொன்னதை எவரும் கேட்கவேண்டுமாகில் சொல்லுதற்கு முன்னே நீயே அதைச் செய்து காட்டுவாய். நீ போனவிடத்தில் அநுதினம் தனியே ஒதுங்கிச் சேபம்பண்ணக் கண்டால், மற்றவரும் நீ சொல்லாமலும் சேபம்பண்ணத் துணிவார்கள். உனக்கொரு கேடு, நிந்தை வந்தவிடத்தில், நீயே தாழ்மையும், பொறுமையும் காட்டிச் சந்தோஷமாயிருக்கக்கண்டால், நீயும் மற்றவர்களுக்குப் பொறுமை, தாழ்மை படிப்பிக்கும்போது சொன்னதெல்லாம் மெய்யென்றேற்றுக்கொண்டெளிதாய்க் கேட்பார்கள். உயிர் தந்தா

ளும் தவவேண்டுமோழியத் தன் நெஞ்சறியப் பொய் சோல்வது அக்கிரமமேன்று நீ பல நியாயங்களையும் சோல்லி, பல உதாரணங்களையும் காட்டி, விரிவாய்ப் பிரசங்கஞ்செய்தவிடத்தில், நீயே அறிந்து ஓரிரண்டு போய் சோல்லக் கண்டால் போய்யை வெறுக்கச் சோன்ன படிப்பினை தகுமோ? ஒருவன் இரந்தோரு வீட்டில் வந்து பசியாதபடிக்கரியதோரு மருந்து தருவேன் இப்போது நீர் என் பசிக்குக்கஞ்சிவாரும் அம்மாவென்றான். அதற்கவள் பசியாதபடிக்கு மருந்துனக்குள்ளதாகில் பசிக்குக் கஞ்சி என்னைக் கேட்பதேன்ன போவேன்றாள். நீ சிற்றின்பத்தின்மேலாசை காட்டித்திரிந்து, பேரின்பமோழிய மனிதர் விரும்பத்தகும் வேறின்பமில்லையேன்றால், மற்றவரெளிதாய்க் கேட்பார்களோ? சோன்னதும் செய்ததும் ஒவ்வாதாகில், ஒரு கையாலேற்றிவைத்த கல்லை மற்றொரு கையால் தள்ளினாற்போலாகிக் குறித்த கோபுர முகியுமோவேன்ன. இதனாலல்லோ பல நூல் கற்றவன் புண்ணியத்துணையில்லாதேனில் அமிர்த வசனங்கோண்டு உலகெல்லாம் அதிசயப்படப் பேசினும் பயனில்லை. அந்தக்கல்வி மேன்மையும், அந்த வசன நளினமுமில்லாதோருவன் தாழ்ச்சி, போறுமை, பத்தி மற்றச் சுகிர்த புண்ணியங்கள்யாவையும், தன்னிடத்தில் காட்டினதினால், அவனிலும் மிக்கபலனைக்கோள்வான். அவனை முககப்

புகழ்வர். இவனை நெஞ்சிலே வணங்கி எத் துவர். அவனைப் பள்ளிக்கூடம் வைத்தே வரையும் படிப்பிக்கத்தகும் உபாத்தியாரேன் பர். இவனையெல்லாரையும் மோட்சத்தில் சேர்க்க உரிய துணையேன்பர். கல்வி சாஸ் திரம் நல்லதாயினும் அஃதேல்லாம் லௌகீக ஆயத்தமாகக்கோள்ள லௌகீகப்பலனைமாத் திரம் விளைவிக்கும். புண்ணியமோவேனில்; ஒரு தேவாயத்தமாகி இந்தத்தோழிலிலே தே டும் தேவ பலனைத் தருதற்குரியதாமேயாகை யில், ஓரோரிடத்து வாய் பேசாதேபோனு லும், உத்தம புண்ணிய நடக்கை காட்டித் திரிந்தாயாகில், நீயே நல் உபதேசியேன்னப் படுவாய். கண்ணுல் கேட்டுக் கையால் பே சும் ஊமையேன்பர். ஆயினும் மற்றவ னும் கையால் பேசினுற்போல நடந்து காட் டும் கிரியையினுல் புறத்தியாரைப் படிப்பிக் கிறது உறுதிதானே. அப்படிப் புறத்தியா ரும் கண்ணுல் கேட்டாற்போலக்கண்டு, பேற் ற உணர்வினுல்அதிகமாய்த்தேறி அதற்கோத்த தாய் நடக்கத்துணிவார்கள்.

இதற்கு உபவேதத்தில் ஒருத்தம வர்த்த மானமுண்டாம். மக்கபேயர் முதலாகமத் தின் பதினுரும் அதிகாரத்தில் எழுதினபடி யே யூதர் கையில் சீமோனேன்பவன் இரு பதினுயிரம்பேரைக் கூட்டி நினைத்திராத ப கைவரை வேட்டப்போகையில் பேய்த ம ழையால் பேருகின ஆற்றிலிறங்கப் பயந்தேல்

லாரும் நிற்கக்கண்டான். அதற்கவனேன்றும் சொல்லாமல் முன்னேபோய் ஆற்றிலிறங்கினன். தளகர்த்தன் இறங்கினதைக் கண்டவுடனே எவருமிறங்கி அவன் முன்னே இருபதினயிரரும், பின்னே ஆறுகடந்து பகைவர்மேல் விழுந்து செயங்கொண்டார்கள். ஆயினும் அவன் இப்படிச் செய்யாமல் இக்கரையில் நின்று சேவகருக்கு நெடும் பிரசங்கஞ்செய்தாலுமெல்லாரும் இந்தத் தன்மையிலெளிதாய்த் துணிவார்களோ? தான் முன்னடந்து வழியைக் காட்டினதினல் பேசாமலும், எல்லாரையும் பின்செல்லச் செய்தான். அப்படி அர்ச்செயசிஷ்ட பிராஞ்சீஸ்கு என்பவர் ஒருநாள் மற்றெருரு சந்நியாசியை அழைத்துகொண்டு பட்டணத்தில் பிரசங்கஞ் செய்யப் போவோமென்று புறப்பட்டார். அப்படி இருவரும் பட்டணத்துத் தெருவெல்லாம் திரிந்து மடத்துக்குப்போகத் திரும்பினர்கள். அப்போது கூடப்போன சந்நியாசி அவரை நோக்கிப் பிரசங்கஞ்செய்யப்புறப்பட்டோமல்லோ. அதைச்செய்யாமல் திரும்புவதென்ன சுவாமி என்றார். அதற்கவர் நானே நியமித்த பிரசங்கமுடிந்ததே. நாம் உலகத்தை வெறுத்த தன்மையும், முகத்தில்காட்டின தாழ்ச்சியும்,தெருவில் திரிந்த ஒடுக்கமும் இத்தொகைப்பட்ட புண்ணிய நடக்கையே எவர்க்கும் கண்ணுக்குச் சொன்ன பிரசங்கமல்லோவென்றார். அப்படியே

முன் ஆளாநின்ற சீமையும் விட்டுத் திரளாய்க் கொண்டிருந்த செல்வ வாழ்வுகளை வெறுத்து நீக்கி, இஞ்ஞாசியார் சபையில் சந்நியாசஞ்செய்த அர்ச்சேயசிஷ்ட யோர்சியவென்பவர் நெடும்வழி கடந்து, மற்றொரு இராச்சியத்தில் சென்றவுடனே, அவ்விடத்தாள்பவன் கூடியிருந்த சபைக்கு அவரொரு பிரசங்கஞ் செய்யச் சொன்னான். நெடுவழி நடந்த இளைப்பின் மிகுதியால் கூடாதென்றவர் மறுத்ததற்கவன் சொன்னதாவது; நீரொரு வார்த்தையாகிலும் சொல்லத்தேவையில்லை. வந்து உமது முகத்தைக் காட்டினால் போதும். ஆண்டவரைப்பற்றி எல்லாச் செல்வங்களையும் வெறுத்த உம்மைக்கூடின சபை கண்டால் அதுவே உத்தம பிரசங்கமாகுமென்றார்.

இதெல்லாம் இப்படியாகக்கொள்ள நீ காதுக்குச் சொல்லும் பிரசங்கங்களைவிட்டுக் கண்ணுக்கநுதினமும் நீயே சொல்லும் பிரசங்கம் எதென்றாராயக்கடவாய். வாயினால் நீ சொல்லும் இருபத்தெட்டுப் பிரசங்கம் உன் சுய பிரசங்கமல்லவே. பெரியோர் முன்சேர்த்துத் தந்ததை உண்டு கக்கினாற்போல அவைகளைப் படித்துச் சொல்வாயாக்கும். இரவலாக வந்த இவையெல்லாம் விட்டு உன் சுய பிரசங்கமாகிய உன் நடக்கை எத்தன்மையோவென்று பார்ப்பாயாக. உன்னைக் கண்ட யாவரும் ஆண்டவரை அறிந்து தோத்திரஞ்செய்யவும் சத்திய வேதத்தின் மேன்மை கண்டு

கைக்கொள்ளவும் புண்ணியத்தைப் படிப்பித்து விரும்பவும் உன்னிடத்தில் காரணம் காண்பார்களோ? ஆண்டவருக்கும் அவர் வேதத்துக்கும் தூஷணமாகப் பாவமாதிரியைக் காண்பார்களோ! நீ செய்யும் சரசம், நீ பாடும் பாட்டு, நீ தேடும் பொருள், நீ பேசும் புறணி, நீ காட்டும் கோபம், நீ செய்யும் ஆங்காரம், இத்தொகைப்பட்ட பாவ நடக்கைப் போதகம் சத்தியவேதத்தின் உபதேசிக்குத் தகுமோ? நடந்து காட்டின மாதிரியினுல் பாவத்தைப் படிப்பித்த பின்பு சொல்லிக்காட்டின நியாயங்களால் புண்ணியத்தைப் படிப்பித்தாலுமாவதென்ன? ஆகிலும், அவனவன் செய்த தன்வினைக்களவாகப் பலனைக்கொள்வானென்றதனுல், நான் செய்ததைப் பாராமல், நாம் சொல்லிக்காட்டும் தரும வழியில் எவரும் நடக்கப் படிப்பித்துக்கொண்டு வருவேனென்று யாதொருவன் சொன்னதாக அறிவோம். ஆகையால், நாடகசாலை உபதேசியாவது உனக்குப் போதுமல்லோ? இராசவேஷத்தைப் போர்த்து நாடகமாடினவன் காட்டும் புறக்கோலமும் சொல்லுமுள்ளோவ்வாத வசனமுமெண்ணி, அவன் நீச்சனுயினும் வறியோனுயினும் பாரார்களென்றதுபோல, நீயும் பாவியாயினும் புறத்துக்காட்டும் உபதேசி வேஷமும், புறத்துச்சொல்லும் வேத உணர்ச்சிகளுமாத்திரம் பார்க்கச்சொல்வாய். ஆயினும், நாடகசாலை இராசன் கற்பித்ததை

எண்ணிக் கேட்பாரில்லையென்றதுபோல உன்னோடேயொவ்வாமல்,நீயும் சொல்லும் உணர்ச்சிகளை அநுசரிப்பாருண்டோ? ஓர் இருவர் அநுசரித்தாலும் உனக்கொரு பலனுமுண்டோ? புதிதாய்ப்பிறந்த கர்த்தரைத்தேடி மூவிராசாக்கள் எருசலேமிடத்தில் சென்றபோது, பெத்தலேமென்னும் ஊரில் கர்த்தர் பிறப்பார் அங்கே போங்களென்று பல சாஸ்திரிகள் அவர்களை அனுப்பினதொழிய, தாங்கள் கூட ஆண்டவரைக் கண்டு வணங்கப்போனார்களோ? இல்லை. அப்படியே பல உபதேசிகள் எவர்க்கும் செப தவமொருசந்தி தானமற்றப் புண்ணியங்களைப் படிப்பித்த ஆண்டவர் பாதத்தில் சேரும்வழியைக்காட்டி அவர்களை அனுப்பினதொழிய, தாங்களே வேறே வழிபோய் மோட்சத்திலேசேர ஆசையில்லாதவர்களைப் போலத் திரிகிறார்கள்.

இதற்கு அர்ச்செயசிஷ்டசின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் இரண்டாம் அதிகாரம் இருபதாம் வசனந்துவக்கிச் சொன்னதை எவருங்கேட்கக்கடவீர்கள். அதாவது; கல்லாதவர்களைப் படிப்பிக்கிறவன் நானே. சிறியோரை நடத்துகிறவன் நானே. வேதத்தின் உண்மையையும், ஞானபாதையையும் கைக்கொண்டவன் நானே யென்றும் மனதில் எண்ணிக்கொள்வாயல்லோ. ஆயினும், மற்றவர்களைப் படிப்பிக்கிறவனாகி, உன்னை நீ படிப்பியாதிருப்பதென்ன? திருடாதையுங்க

ளென்றபின்பு நீயே திருடுவானேன்? புறக் காமமாகாதேன்றபின்பு நீயே அதில் விழுவா னேன்? பொய்யான தேவர்களை வெறுத்த பின்பு, நீயே அந்தத் தேவர்களுக்கேற்ற வித மாய் நடப்பானேன்! சத்தியவேதத்தைக் கைக்கொண்டாயென்று உன்னைப் புகழ்ந்து கொண்டபின்பு, நீயே வேதகற்பனைகளை மீறி ஆண்டவருக்கு இகழ்ச்சி விளைவிப்பானேன்? உன்னாலல்லோ அஞ்ஞானிகள் ஆண்டவர்திரு நாமத்தைத் தூஷணிக்கிறார்களென்றார். அ வனவன் இந்த வசனம் அர்ச்செயசிஷ்ட சின் னப்பர் தனக்கு எழுதினதாக எண்ணிச் சத் தியவேதத்தின் மேன்மையைக்காட்ட உப தேசியாய்த்தானே ஆண்டவரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கத் தன்னால் இந்தச் சுகிர்தவேதத் துக்கு இகழ்ச்சி, தூஷணம் வந்தால் தனக்கு வரும் ஆக்கினை எவ்வளவென்று தன்னுலாகு மானுல் தூக்கிப்பார்க்கக்கடவன்.

இயேசுநாதர் மத்தேயுசுவிசேஷம் அஞ்சாம் அதிகாரம் பத்தோன்பதாம் வசனத்தில் திரு வுளம்பற்றினபடியே தேவகற்பனை மீருமல் நல்லொழுக்கத்தோடுதானே நடந்து, மற்றவர் களையும் அப்படி நடக்கப் படிப்பித்தவன் மோட்ச இராச்சியத்தில் பெரியோனென்னப் படுவன். அவனவன் நடந்து காட்டின தரு மமாதிரிகை மற்றவரிடத்திலும் எளிதாய்த் தருமம் விளைதற்கு உத்தமமுறைமையாகு மேன்றிதில் சொன்னதைக்கொண்டு காணப்

படுமே. ஆகிலும் வேறொரு நியாயத்தைப் பற்றியும் தன் நல்லொழுக்கம் புறத்தியாரைக் கரையேற்ற நல்வழியென்று சொல்லக்கட வோம். அதேதெனில்; பலமுறை இதிலே சொன்னபடி இந்தத் தேவ தொழிலில் தேடும் பலனே மோட்சகரையில் ஏற்றலாமென்று வும், ஆண்டவராலொழிய மனிதர் பெலத்தா லடையத்தகும் பலனல்ல. ஆனல், ஆண் டவர்தாமே முடிக்கத்தக்க கருமமிதென்றுவு ம், தமதளவில்லாத தயையினல் அதைத் தா மாக முடிக்காமல், அதற்கு உதவியெத்தினங் களைப்போல உங்களைத் தெரிந்துகொள்ளத் திருவுளமானர். ஆயினும், தொழில்களுக் கெல்லாம் எத்தினமும் உதவாதல்லோ. ஒவ் வொரு தொழில் நியமித்த கருமத்துக்குரியதா கில், அதற்கு அதுவே உதவுமொழிய மற்றப் படி வேறல்ல. அப்படி மண்ணை வெட்டிப் பயிரிட உதவும் எத்தினம் பகைவரை வெட் டிச் செயங்கொள்ள உதவுமோவென்ன? நில த்தில் பயணத்துக்குதவும் குதிரை கடலைக் கடக்கவாகுமோவென்ன? நிலத்தைக் கீறி யுழும் கொழு ஓலை கீறி எழுதுமோவென்ன? இதிப்படியாகில், உபதேசித்தொழில் நியமித் த கருமம் புண்ணியமொன்றேயாகக்கொள்ள அதற்குதவும் எத்தினந்தானும் புண்ணியசம் பந்தமாகவேண்டுமல்லோ? தெளிந்த தண் ணீரொழியச் சேற்று நீர் அழுக்குவாங்கத் தகா மையால், பலவகைப் பாவத்தால் உன் மன

மே அழுக்குப்பட்டிருக்க மற்றவர்களைக் கழு விச் சுத்தராக்குவையோ? சுடு நெருப்பு உனக் குள்ள சூட்டையாற்றவல்லதல்லாமையால், பல தீயவாசையால் உன் மனமே சுட்டு வேந் திருக்க, மற்றவராசையாற்றிக் குளிர்ப்பிக்கத் தகுவையோ? ஆண்டவர் புதுமைசெய்யச் சித்தமானால்,கடலே நிலைபெறவும், நஞ்சே உ யிர்தரவும், நெருப்பே குளிரிடவுஞ்செய்ய வல் லவர்தானே. ஆயினும், தாமே ஸ்தாபித்த மு றைமை தப்பாமல்,எல்லாவற்றையும்நடத்திக் கொண்டு வரும் மரியாதையைப்பார்க்கில், நீயே பாவியானால் புதுமையின்றி உன்னைக் கொண்டு புண்ணியவான்களாக்கவுமாட்டார். நீயே நரகத்துக்குரியனாக நடந்தால், உன் னைக்கொண்டு புறத்தியாரை மோட்சத்தில் சேர்க்கவுமாட்டார். உன் பாவமே உனக்குக் கேடாவதும் தவிர மற்றவர்க்கும் கேடாம். உன் புண்ணியமே உனக்குப் பலனைத்தரு வதுந்தவிரப் பிறர்க்கும் பலனாமே. அப்ப டியல்லோ கொம்புகளை நீட்டி வளர்ந்த மர மே தழைத்துத் தருங்குளிர் நிழலும் கீழ்வே ரற்று விழுந்து பட்ட கேடும், இவ்விரண்டும் தனக்கல்லாதே தன்மேல படர்ந்த கொடிக ளுக்கும் உண்டாம். ஆகையால் புறத்தியா ரைக் கரையிலேற்ற உன் நல்லொழுக்கமே உத்தம வழியென்பதற்குச் சந்தேகமில்லை.

பின்னையும் மற்றவர்களைக் கரையிலேற்ற வரிய தேவ மாட்சியுள்ள கருமமென்று முன்

னே காட்டினோம். இப்படிப்பட்ட பெரு
மை மாட்சியையுடைய ஆண்டவர் தமக்
கு உகந்தவர்களுக்கல்லோ விசேஷமாய் உத
விசெய்வார். நீ அவருக்கு ஆகாதவனாய் நடந்
து, உபதேசிப்பெயரடைந்தாலும், உபதேசித்
தொழிலுக்கேற்ற வரிசையும், பெருமையும்,
இங்கே முதலாயடையமாட்டாய். அவன
வன் தன்னையேய்க்கவேண்டாம். எவ்வள
வதிகம் புண்ணியத்தில் ஆண்டவரையண்டி
அவர் திருப்பாதம் அடுத்திருப்பீர்களோ அவ்
வளவதிகம் உங்கள் தொழிலினால் புறத்தியா
ரையும், அவர் பாதத்தில் சேர்க்கவுரியராவீர்
களேன்பது சத்தியந்தானே. இதுவே தெளி
ய மனதிலெண்ணித் தேறி உங்கள் ஆத்துமத்
தின் மேலும், பிறர் ஆத்துமத்தின் மேலும்,
இரங்கி நீங்கள் மோட்சக்கரை ஏறவேண்டி
ய நல்லொழுக்கமே அவர்களையும் கரையி
லேற்ற வழியென்றறிந்து, புறத்தியாருக்கும்
உங்களுக்கும் நிட்டூரமாக வந்தொழியாதகேடு
வருவியாதபடிக்கு உபதேசித் தொழிலுக்கொ
வ்வாத ஒழுக்கத்தை விட்டு, மற்றவர்களி
னும் விசேஷமாய் உத்தமமுறையால் நாளுக்
கு நாள் அதிகமே புண்ணியங்களில் வளர்ந்து
நடக்கப்பிரயாசப்படக்கடவீர்கள்.

அ. அதிகாரம்.

THE IMPORTANCE OF PRAYER IN PROMOTING THE SALVATION OF MEN.

பிறரையீடேற்ற ஆண்டவரை மன்றாடுவது இரண்டாம் வழி.

நிறைந்த குளத்துத் தண்ணீர் பாய்ந்து செந்நெல் விளைவதிலும், வயல் தாழ்ந்து ஒப்புரவாக வேண்டுமேன்பதுபோலப் போன அதிகாரத்தில் சொன்னபடி நாமும் கரையேறிப் பிறரையும் கரையிலேற்ற நாமே உதவும்படிக்கு, தாழ்மை முதல் பல புண்ணியங்களால் ஒப்புரவாக்கும் நல்லொழுக்கமே வேண்டுமல்லோ? ஆயினும் சொன்னதன்மைப்பட்ட வயலிலே தண்ணீர் பாயக் குளத்தங்கரையிலுள்ள மடைகளைத் திறக்கவும் வேண்டுமேன்பதுபோலத்தானும் பிறரும் கரையேற வேண்டிய தேவ வரப்பிரசாதங்களை அடையத் திறக்கத்தகுமடையேதேனில், ஆண்டவரை மன்றாடும் வேண்டுதல்தானே. இதுவே கடலுமோவ்வாத தேவ தயையாகிய தடாகத்தில் நின்று நமக்கு விசேஷ சகாயங்கள் பாய்ந்து வரும் வழியாமே. வேண்டியவரங்களை வேண்டுமாகில், பிதாவை மன்றாடிக் கேளுங்களேன்றும், அப்படிக் கேட்பவன் கேட்டதை அடைவானேன்றும், இயேசுநாதர் தாமே பலமுறை திருவுளம்பற்றினார்.

இதனைப்பற்றி அர்ச்சேயசிஷ்ட தமசேனும், அகுஸ்தீனும், பசிலீயும், கிறிசோஸ்துமும், கிறிகோறியுமேன்றிவர்களோடே அர்ச்சேய சிஷ்ட தோமாசேன்பவர் இந்த விஷயத்தி லெழுதினதாவது; நம்மைக் கரையேற்ற உல கந்துவக்குமுன்னே ஆண்டவர் நமக்குத் தரக் குறித்த வரங்களை வேண்டுதல் வழியாகச் சமயத்துக்குத்தரச் சித்தமானுர். ஆகையால் நெல்முதல் பலவும் விளையவுழுது விரைக்க வும், கல்விசாஸ்திரமறியக் கேட்டுப் படிக்க வும், உடல் பிழைத்திருக்க உண்டுறங்கவும், ஆண்டவர் இப்படி ஸ்தாபித்ததினல் வேண் டியதேன்பதுபோல, நாமும் உயிர் பிழைத் து, ஆனந்த மோட்சத்தையடைய ஆண்டவர் ஸ்தாபித்த முறையோன்ருகக்கோள்ள அவ ரை வேண்டிக்கோள்ள வேண்டுமேன்பது நிச்சயந்தானே. ஆகையால் புதுமையின்றி, உண்ணுமல் பிழைப்பாரில்லையேன்றதுபோ ல, போதுப்படு முறையைப்பார்க்கில் வேண் டிக்கோண்டு ஆண்டவருதவியை அடிக்கடி கேளாமல் மோட்ச கரை ஏறுவாருமில்லை யேன்று ஸ்தாபித்தேழுதிவைத்தார். இதிப் படியாகக்கோள்ளத் தம்மோடே பலரையும், மோட்சத்திற்சேர்க்கப் பிரயாசப்படுவதே உப தேசிகள் தோழிலேன்றமையால் அதற்கேந் நேரமும் ஆண்டவரை மன்ருடுவது உத்தம வழியாமல்லோ? ஆகையால் நீ ஒரு பாவி யைத்திருப்பவும், ஓர் அஞ்ஞானியைச் சத்

தியவேதத்தில் கொண்டுவிடவும், பல நியா யங்களை அறிந்தமாத்திரம் சொல்லுவது நல்ல தாயினும் அதிலேயும் தப்பாமல் உதவுமுபாய மாக அவர்களுக்கிரங்கி அழுது மிகவும் ஆண்ட வரை மன்றாடக்கடவாய். இதற்கு மோசே யின் இரண்டாம் ஆகமத்தின் பதினேழாம் அதிகாரத்தில் எழுதப்பட்ட வர்த்தமானம் உத் தமந்தானே.

அதாவது; கடலோடோப்பத்திரண்டு மோ ய்த்து அமலேக்கரென்ற பகைவர் யூதர்மேல் கொடும் போர்செய்யச் சினந்து சீறிவருகையி ல், யோசுவன் மற்றொரு படையோடெதிர்த்து யுத்தஞ்செய்யும்போது, மோசே அடுத்ததொரு மலையிலேறிக் கையெடுத்து ஆண்டவரைச் சே யந்தர மன்றாடினான். அப்படி இவன் கை யெடுக்க, யோசுவன் படைக்குச் செயமாம். அவனும் இளைப்பினால் கையைத்தளரவிடி ன் யூதரும் தோற்றுமுறிவார்கள். அதைக்க ண்டு இரண்டுபேர்கள் வந்து, மோசேயின் கை யைத் தூக்கிக்கொண்டு அன்று அஸ்தமிப்பதள வும் அவன் ஆண்டவரை வேண்டிக்கொண் டிருக்க, யூதர் படையும் பகைவரைவெட்டி, முழுதும் செயங்கொண்டதாமே. அதன்பின் பு ஆண்டவர் மோசேயை நோக்கிக் கற்பித்த தாவது; இனிவரும் காலத்தேவரும் அறிய இந்த வர்த்தமானத்தை எழுதென்றார். இதோ பகைத்த மனிதரை வெட்டிச் செயங்கொள்வ தற்கு முதலாய் எதிர்படைவீரர் எய்த அம்பும்,

ஏகின ஈட்டியும், எறிந்த வேலும், வீசின வா
ளும்,சுழற்றின மழுவும் உதவினதைப்பார்க்க
மோசேயின் வேண்டுதலே உதவினதேன்று
வேதசத்தியமாகக் கண்டோம்.

இதன்பின் பரியஞானப்போரில் பகைத்த
பசாசை வென்று தேவசெயங்கோண்டு ஆத்
தும மோட்ச இராச்சியத்தை அடைய நாம்
சோல்லும் நியாயங்களினும் நினைக்கும் உபா
யங்களினும் வேண்டுதலே அதிகமாயுதவுமெ
ன்ருல் இதற்குச் சந்தேகப்படக் கணக்குண்
டோ? ஆண்டவர்தாமே தயைக்குச் சாய்ந்த
இரக்கமுள்ளவராகக்கோள்ளத் தம்மை மறுத்
தாலோழியத் தம்மை ஆசையோடண்டி மன்
ருடினவர்களை மறுக்கவுமாட்டார். இடை
விடாதாசையோடும், தாழ்மையோடும் மிக அ
ழுதோருவன் செய்தவேண்டுதலைச் சர்வத்துக்
கும் வல்லவராகிய சுவாமி மறுக்கவல்லவரல்
லவென்ருற்போல பல வேதவர்த்தமானங்க
ளில் கண்டிருக்கிரேம்.

அப்படியே மோசேயின் இரண்டாம் ஆக
மத்தின் முப்பத்திரண்டாம் அதிகாரத்திலே எ
கிப்துத் தேசத்தினின்று கானகவழியிலே யூதர்
வருகையில் ஆண்டவரைக் கைவிட்டுப்போய்
யான தேவர்களை வணங்கத் துவக்கினதை
ஆண்டவர் கண்டு மிகவும் நீதியோடேழும்பி
ன சினத்தால் அவர்களேல்லாரையும் கேடுக்க
வேண்டுமேன்றிருக்கையில், மோசே அவர்க
ளுக்காகவிடாமல் வேண்டிக்கோண்டமையா

ல் ஆண்டவர் இவனை நோக்கித் திருவுளம்பற்றினதாவது; "இவர்கள்மேலே பொங்கின என் கோபத்தைச் செலுத்தத் தடைசெய்யாதே. இவர்களை நாமே முழுதும் கெடுக்கட்டுமென்ருர்." மோசேயோவெனில், தயைக்குச் சாய்ந்த கர்த்தாவின் அமிர்த குணத்தை அறிந்து பொறுக்கச்சொல்லி வேண்டிக்கொள்ளவிடாமையால், ஆண்டவர் கோபமுகமாறி நியமித்த ஆக்கினையிடாமல் அந்தக்குற்றத்தைப் பொறுத்தார். இதோ, ஆண்டவர் நீதிகோபத்துக்கு மோசேயின் வேண்டுதல் தடையைச்செய்தாற்போல நினைத்த ஆக்கினையிடாதபடிக்கு அதை ஆற்றினதேன்று கண்டோம். அப்படியே யோபு ஆகமத்தின் நாற்பத்திரண்டாம் அதிகாரம் எட்டாம் வசனத்தில், யோபென்பவருடைய சிநேகிதர் செய்த குற்றத்தினுல் ஆண்டவர் அவர்களைக் கோபித்தபின்னர் "யோபென்பவன் உங்களுக்காக நம்மை வேண்டிக்கொண்டால் அவன் முகத்தைப்பார்த்து, நீங்கள் மதிகேடாகச் செய்த குற்றத்தைப் பாராமல் பொறுப்போமென்ருர்." அப்படியே. மோசேயின் முதலாகமத்தின் இருபதாம் அதிகாரம் ஏழாம் வசனத்தில் சேருர் நாட்டரசனுகிய அபிமேலேக்கேன்பவன் ஆபிரகாம் பெண்சாதியைப் பறித்ததற்கு அவனைக் கோபித்து, ஸ்திரீயைத் தன் புருஷனுக்கு உடனேவிடச சொன்னபின்னர் "ஆபிரகாம் உனக்காக வேண்டிக்கொள்வான். நாமும் அவனைப்பற்றி

உன் பாவத்தைப் பொறுத்து நீயே பிழைப்பா யென்ருர்.''

இத்தொகைப்பட்ட வர்த்தமானங்கள் மட்டின்றி, வேதத்தில் எழுதியிருக்க இடைவிடா தாசையும், தாழ்மையுங்கூடின வேண்டுதல் ஆண்டவர் சந்நிதியில் சர்வத்துக்கும்வல்லதென்று கண்டிருக்கிறோம். இதிலேயும் விசேஷமாய் மனிதர் ஈடேற்றத்துக்குவேண்டி நாமே மன்ருடுகிறபோது தள்ளுண்டுபோகாமல் கேட்டதைத் தப்பாதடைவோம். அந்த ஆத்துமங்களைக் கரையிலேற்ற நமக்குண்டாகிய ஆசையின்மேலும் அளவொன்றின்றி ஆண்டவருக்கு ஆசையுண்டல்லோ, இதுவும் நியாயந்தானே. அவரே அந்த ஆத்துமங்களைப்படைத்தவர். அவரே அதுகளைத் தமது இரத்தத்தினுல் இரட்சித்தவர். வேண்டுதல் வழியாக அவர்களை மோட்சகரையேற்றச் சித்தமானுரென்றமையால், நாம் எப்போது அவர்களுக்காக மன்ருடுவோமோவென்று ஆசையோடே காத்துக்கொண்டிருக்கிருர். அதனுலல்லோ தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலிடத்தில் ஆண்டவர் முறைப்பட்டுத் திருவுளம்பற்றினதாவது; நாமே இந்நாட்டைக் கெடாதபடிக்குத் தடைசெய்ய நமக்கெதிராக மன்ருடி நிற்பவனைத் தேடினேம். தேடினவிடத்தும் கிடைக்கவில்லையென்ருர். ஆகையால், புறத்தியாரை உணர்த்தி மோட்சவழியில் கூட்டிக்கொண்டுபோகக் கடன்கொண்டிருக்கிற உபதேசி

கள் அதைக் குறையின்றித் தீர்க்கவேண்டு வதின்மேலுபாயமில்லை.

அப்படியே சகல தரும முறைக்கும் மாதிரிகை காட்டவந்த இயேசுநாதர் உபதேசஞ் சொல்லிக்கொண்டு திரியும்போது, தாம் பலமுறை இராவெல்லாம் பிதாவை மன்றுடிக்கொண்டு செலவழித்தபின்னர் பகலிலே சகலரையும் உணர்த்திக்கொண்டு திரிவார். இயேசுநாதர் காட்டினபடியே பல அர்ச்சேயசிஷ்டர்களும் செய்துகொண்டமையால், மட்டில்லாத சனங்களைக் கரையேற்றினதேன்று அவர்கள் சரித்திரங்களில் வாசிக்கப்படுமே. இராவிலே ஆண்டவரோடே நியமித்த கருமமுடித்தபின்னர் பகலிலே மனிதரோடே முடிப்பதரிதோ? நீயோவெனில், சோம்பலுமின்றித் திரிந்து, குறையுமின்றி நியாயங்களைச் சொல்லி, எல்லாரையும் கரையிலேற்ற வருந்துவது எவர்க்கும் நல்லதுதானேயாகிலும், நீயே பொருந்தப்பேசவும், மற்றவர் பொருந்திக் கேட்கவும், கேட்டபடியே நடந்து பலன் கைக்கொள்ளவும், எப்போதாகிலும் ஆண்டவரை வேண்டிக்கொள்ள நினைத்தையோ! ஆத்துமங்களைக் கரையிலேற்ற உன் வல்லமையாலாகும் கருமமேன்றேண்ணினையோ! ஆண்டவரால் வரத்தகும் சகாயமாயினும், நீ அதற்கு அவரை வேண்டாமலென்ன, உத்தமமுறையோடு உபதேசிக் கடனைத்தீர்க்க ஆசையுள்ளவன் யாதொரு கிராமத்துக்குப் போகை

யில், யாதோருவனுக்கு உறுதிகளைச் சோல்ல வேண்டியிருக்கையில், தன் தோழிற்கேற்ற மற்றயாவையும் முடிக்கச்சமயம் வந்தவள வில் முன்னே தான் முழங்காலிலாயினும், அது கூடாமல், மனதிலாயினும் ஆண்டவரை மிகுந்த தாழ்மையோடே வேண்டிக்கோள்ளக் கடவன். பேறேன்றின்றி என்னைத் தேரிந் த தயாபர சுவாமி தேவரீர் ஏவின தன்மை யால், உமது மனிதனுக மற்றவரையும் கரை யிலேற்றப் பிரயாசப்படப்போகிறேன். நா னே காதுக்கோப்பப் பேசுவேனேழியக் கா திற்பட்ட நியாயங்களுள்ளே நுழைந்திறங்கிப் பலன் தரும்படிக்கு மனதில் பேசத்தகுந்தவர் தேவரீரல்லோ, நான் பிரயாசப்பட்டுச்சோல் லும் நியாயங்கள் வீணுய்ப்போனுலும் பார மல்ல. தேவரீர் இந்த ஆத்துமங்களை இரட் சிக்கச் சிந்தின திவ்விய இரத்தத்தின் பலனே வீணுய்ப்போகாதபடிக்குத் தயைபுரிந்து உத விசேய்தற்போருட்டு, திருவுளமிறங்க மன்றாடு கிறேன். மலையுமாடக் கல்லுமுருக நேருப் பும் குளிர்சேய்வது உமக்கேளிதல்லோ, மோ சேயின் கையில் தந்த ஒரு பிரம்பினைக்கோண் டு எகிப்து இராச்சியத்தை யோடுக்கி, பேருங் கடலடியேகாணப்பிளந்து நீக்கிக் கடலினும் பேரிதோர் படைகளைச்சங்கரித்தோருங்குடன் உருட்டி மட்டில்லாதவரிய அற்புதங்களைக் காட்டினவர் தேவரீராகக்கோள்ள நானே பா வியாயினும், நானே முறையோன்றறியேனு

யினும், இந்த நீச எத்தினத்தைக்கொண்டு பல ரை மோட்சத்திற்சேர்க்க வல்லமை உமக் குண்டென்று முழுதும் நம்பியிருக்கிறேன். அப்படியே அதற்கடியேன் பாத்திரனல்லேனாயினும், இந்தச் சனங்களுக்கிரங்கி நான் சொல்லப்போகிற வார்த்தைக்கு உயிரும் வல் லமையும் தரவேண்டுமென்று மன்றாடுகி றேன் சுவாமியென்று நாடோறும் இவையும் பலவையும் இரவும் பகலுமாகத் தன் எளி மையும் ஆண்டவர் தயையும் அறிந்தவனாய்த் தாழ்மையும், நம்பிக்கையுமிக்கதாகி விடாமல் வேண்டிக்கொள்ளக்கடவன். இதுவுந்தவி ரக் குறைதாழ்வின்றித் தன் தொழிலை முடிக்க ஆசையுள்ள உபதேசியானவன் இப்படித்தா ன் இடைவிடாமல் ஆண்டவரை வேண்டிக் கொள்வது போதாதென்று மற்றச் சனங்களை யும் அதற்கு மன்றாடச்சொல்லி வேண்டிக் கொள்ளக்கடவன். அர்ச்செயசிஷ்ட சின் னப்பர்தாமே கொலோசியருக்கு எழுதின நா லாம் அதிகாரம் மூன்றாம் வசனத்தில் சொன் னதாவது; "செபத்தைவிடாமல் கிறிஸ்துவின் பரம இரகசியத்து உபதேச வாயிலை நமக்கு ஆண்டவர் திறக்கும்படி நமக்காகவும், அவ ரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்." அப் படியே தெசலோனிக்கேயருக்கு இரண்டாம் நிருபத்தின் மூன்றாம் அதிகாரம் முதல்வசனத் தில் எழுதினதாவது; "தேவ உபதேசம் வழங் கும்படிக்கு நமக்காக வேண்டிக்கொள்ளுங்க

ளென்றார்.” திருச்சபைக்கெல்லாம் ஒரு தூ ணாகி நின்ற அப்போஸ்தலராகிய சின்னப்பர் புறத்தியார் நுழையத் தம்மால் உபதேசவாயி லைத் திறக்கவும், தம்மால் எங்கும் சத்திய உப தேசம் வழங்கச்செய்யவும் நம்பாமல், அதற் குத் தமக்காக மற்றத் திருச்சபை வேண்டிக் கொள்ள அவர் தாமே எழுதி மன்றாடின பின் னர், நாமும் அந்தப்படியே செய்யக் கூசுவதே ன்ன? தன்னோடே பலரைக் கரையிலேற்ற ஆசையுள்ளவன் இதெல்லாம் பாராமல், இதற் குத் தானாகவும் பிறரைக்கொண்டுவிடாமல், ஆண்டவரை மன்றாட என்றும் சலிக்கமாட் டான். ஒருநாள் அப்போஸ்தலர் வந்து, ஒரு வனைப்பிடித்த பசாசை எப்போதும்போலே தாங்கள் ஓட்டமாட்டாதிருந்ததென்னவென் று இயேசுநாதரைக் கேட்டதற்கு அவர் திரு வுளம்பற்றினதாவது; “ஒருசந்தியாலும், செப வேண்டுதலினாலுமொழிய இவ்வகைப் பசாசு வோட்டப்படாதென்றார். ஆயினும், ஒருவன் மனமே பொருந்திச் செய்த பாவமும், இரு ளே மூடிக்கொண்ட அஞ்ஞானமும், அவ்வ கைப் பசாசை ஓட்டுவதிலும் அரிதாம். ஓட் டத் துணிந்தவன் தவ நல்லொழுக்கமுமன்றி விடாமல், ஆண்டவரை வேண்டிக்கொண்டா லொழிய மற்றவர்கள் அஞ்ஞானத்தையும், பா வத்தையும் விட்டுச் சத்தியவேத நெறியில் வ ழுவாதொழுகி மோட்சகரையிலேறச் செய்யவு மாட்டான்.

௯. அதிகாரம்.

DESIRE FOR THE SALVATION OF OTHERS IMPORTANT IN ITS PROMOTION.

பிறர் ஈடேற்றத்துக்காசை அதற்கு மூன்றும் வழி.

மனிதர் அனைவரும் பரமகதியிற்சென்று அளவின்றி வாழ நாமே உதவும் வழிகளாக இற்றைவரைக்கும் சொன்னதெல்லாம் நல்லதாயினும், அதிலேயும் உத்தம வழியை இங்கே காட்டத் துணிந்தோம். இதுவே பிறர் ஈடேற்றத்துக்கு ஆசைதானே. இதொன்று மாத்திரமுள்ளதாகில், மற்ற உபாயமெல்லாம் தாமே விளையக்காண்போம். இதொன்றே இல்லாதாகில், மற்றெல்லாஞ்செய்யத் துணிந்தாலும் கட்டாயமாகுமொழிய உயிருள்ள எத்தினங்களாகப் பலனைத் தரவுமாட்டாதே. இந்தத் தேவ நற்கருத்தாசையில்லாத உபதேசிகள், குருக்கள், தெண்டிப்புக்கஞ்சிச் சுற்றித் திரிந்தாலும், தம்மைத்தாமே காத்துக்கொண்டு பிறரையும் உணர்த்தினாலும், சூத்திரக் கயிற்றினால் ஆட்டப்பட்ட பொம்மையைப்போலாகுவாரொழிய, உயிர்பெற்ற ஆண்டவன் ஊழியஞ்செய்பவரல்ல. ஆயினும், புறச்சூத்திரத்தால் ஆட்டின பொம்மை மற்றவர் பொழுது போக்கிச் சிரிக்க உதவுமொழிய, ஒரு பலன் தராதென்பதுபோலக் குருக்களால் ஆட்டப்பட்ட பொம்மை உபதேசி செய்யும் கருமமெல்லாம் நாட்பட நிற்கவும், பலன்பட உத

வவும் மாட்டாதே. ஆகையால், சொன்ன ஆசையே உபதேசித்தொழிற்கு உயிராக நிற்கு மென்றமையால், இதிலே விசேஷமாய் நாம் பிரயாசப்பட்டுப் பொருந்தப்பேசவும் நீங்கள் இதைக்கேட்டு உயிர்பெற்றுதவும் பலனைக் கைக்கொள்ளவும், இந்தத் தேவ கருத்தின் ஆசை இப்பூவுலகில் பயிற்றுவிக்க மனிதனு ய்ப்பிறந்த இயேசுநாதர் உதவிசெய்ய மிகவும் மன்றுடுகிறோம். பின்னையும் மிகவும் வேண் டிய நன்மை இதாகையில்,இதிலே சொல்லத் தகும் நியாயங்களை ஒழுங்குபடவும் வகுத்துத் தெளிவுபடவும் விரித்துக் காட்டல்வேண்டி மூந்திப் புறத்தியாரையும் கரையேற்ற இந்த ஆ சையே உதவும்படியேயும், அவனவன் இந்த ஆசையுடையவனே இல்லையோவென்பதற்கு அடையாளங்களையும், இந்த முதல் அதிகாரத் தில் காட்டின பின்னர், அந்த ஞானவாசைக் கருத்தில்லாதவர்க்கு அதை விளைவிக்கவும், உள்ளவர்க்கு அதை அதிகமாய் வளர்ப்பிக்க வும், சில நியாயங்களை வரும் அதிகாரத்தில் தருவோம். ஆகையால் மனிதர் ஈடேற்றத் தின்மேல் வைக்கத்தக்க ஞானக்கருத்தின ஆ சை வேத வசனங்களால் பரலோகத்தில் நின் று வந்த தேவ தீயென்னப்படுமாம்.

அப்படி நம்மை இரட்சிக்க அவதரித்திங் கே பிறந்த இயேசுநாதர் பாடுபட்டு உயிர்தந்து எவரும் கரையேற வழியும், பலனும் தந்தவ ராகி நன்மையில்லாமல் நமக்கு மோட்சத்

தைத் தரமாட்டாமல், அவனவன் கரையேற ஆசை வைத்துப் பிரயாசப்படவேண்டுமென்று சித்தமானூர். ஆயினும், இந்த ஈடேற்றத்தின் ஆசை ஒருவருக்கும் இல்லாமையால், அதைத் தாம் இங்கே விளைவிக்க வந்தாரென்பதற்கு உவமையாகத் திருவுளம்பற்றினதாவது; "நாமே இப்பூவுலகில் தீயைப் பற்றுவிக்கவந்தோம். இந்தத் தேவ தீ எங்கும் பற்றியெரியக் காண்பதாசையொழிய நமக்கு வேறுசையில்லையென்றூர்." இதோ, மனிதர் ஈடேற்றத்தைப்பற்றிவந்த கர்த்தர் எவரும் இதன்மேல் ஆசைவைத்துப் பிரயாசப்படுவதே தாமே கொண்டுவந்த தேவ தீயெங்கும் பற்றி எரிவதென்றூர். அப்படியே பசாசின் அடிமை நீக்கி நம்மை இயேசுநாதர் இரட்சிக்கும் பாவனை முன்னே காட்ட எகிப்தாரிடத்தில் அடிமைபோல வருந்திகின்ற யூதசனங்களை மீட்டு இரட்சிக்க ஆண்டவர் மோசேயை ஏவினபோது, தாம் தீப்பற்றி அவியாதெரியும் சோலையிடத்திலே தோன்றினூர். அப்படியே அப்போஸ்தலரை உபதேசஞ்சொல்வதற்குரியராக அவர்கள்மேல் இறங்கின இஸ்பிரித்துசாந்துவாகிய சர்வேஸ்வரன் அக்கினிநாக்குருபமாக அவர்கள் தலைமேல் நின்றது அறிவோமல்லவோ. இப்படியாகக்கோள்ள, தானும் பிறரும் கரையேறப் பாவங்கள் யாவையும் சுட்டெரித்தழிப்பதற்கு இந்தத் தேவ தீயே மற்ற நெருப்புக்குள்ள குணங்களுடையதென்று

காண்போம். நெருப்புக்குணங்கள் ஏதே னில்; நிலையின்மை, இளைப்பின்மை, தோர் வையின்மை, இம்மூன்றும் பற்றின நெருப் புக் குணங்களாகி உயிர் ஈடேற்றத்தின்மேல் வைத்த ஆசையிடத்திலும் அவைகளைக்காட் டக்கடவோம்.

ஆகையால் பற்றின நெருப்பு ஒருகணமே யாகிலும் நிலைகொள்ளாமல் ஆடிக்கொண்டு தனக்கிட்டதை எரிப்பவும், இடாததைத் தானே எழும்பித் தேடவும், அதனை மூடி அடக்கவருந்தினும், விசையோடேல்லாவற் றையும் பிளந்து புறப்பட்டேறவும், உணர்ந் ததை எரிப்பவும், ஈரமுள்ளதை உலர்த்தித் தன்வசமாக்கவும் செய்வது கண்டு, நெருப் பின் முதற்குணம் நிலையின்மையென்றோம். இன்னபடியே சொன்ன தேவ தீ யாதொரு வனிடத்தில் பற்றியெரிந்தால் ஒருகணம் நில் லாமல் பாவமென்னப்பட்டதேல்லாவற்றை யும் சுட்டெரித்தழிப்ப வருந்தித் திரிவான். அதற்குத்தானே மனிதர் செய்யும் பாவங்க ளை நினைத்து மனம் நோந்தழுவான். ஆண் டவர் பாதத்தில விழுந்து விம்மி வேண்டுவா ன். பாவிகளை வருந்தி உணர்த்துவான். சி னந்துவெருட்டுவான். தாயைப்போல அணு கிப்பேணுவான். அடிமைபோலத்தோடர்ந் து பின்செல்லுவான். கண்ட சமயத்தை வி டான். காணுதைத்தேடுவான். இத்தன் மை தோய்வுமின்றி நிலையுமின்றித் தன்னல்

கூடுமாகில் பாவங்கள் யாவையும் முழுதெரித்தொழித்துப் பூவுலகிட்த்தில் பாவமொன்றில்லாததற்காசைப்படுவான். தன்னுல் இதற்காகாமையில் பலர் செய்த பாவங்களைக் கண்டறிந்து தீயிற்போட்ட மெழுகு பாவைபோலுள்ளுருகி நொந்தழுதேங்கி மெலியாநிற்பான். அப்படியே தீர்க்கதரிசியாகிய ஏரேமியாசென்பவர் வேதத்திலெழுதினதாவது; “உலகம் நடுங்கிக்கூசப்பலர்செய்த அக்கிரமப் பாவங்களைக் கேட்டளவில் என்னெஞ்சிடத்தில் தீயேபற்றி என்னெலும்பெல்லாம் புகுந்தெரித்தழுந்திய வருத்தத்தைப் பொறுக்கலாற்ருதுருகி ஏங்கிக் கிடந்தேனென்ருர்.” அப்படியே தீர்க்கதரிசிகளாகிய எலியாவும் தாவீதும் தேவகற்பனைமீறி ஆண்டவரைப் பகைத்த பாவிகளைக்கண்டு, தாங்களே வருந்தின தன்மையிலாற்ருமல் உள்ளே வெந்திடிந்து விழும் கோபுரத்தைப்போல உள்ளுடைந்து உயிர்மெலிய வருந்தினதென்ருர்கள். அப்படியே அடக்கின நெருப்புக்கட்டேல்லாமறுத்தெழும்பிறைற்போல அர்ச்செய சிஷ்ட சின்னப்பர் முதல் பலவேதசாட்சிகள் சிறைப்பட்டபோதங்கே தங்களாசைச் சிறைப்படாமல் பலர்க்குச் சத்தியவேதத்தை உணர்த்தித் தங்களோடே மோட்சகரையில் ஏற்றின தறிவோம். பஞ்சபூதங்களில் சோம்பலில்லாமல் சுறுசுறுப்புள்ளது நெருப்புத்தானே. மனிதரிடத்திலும் ஆசை மிகுதியாகில் மிகவும் சுறுக்குக்காட்டி எக்காலத்தும் சோம்

பலோடிருக்க அறியாதே. ஆகையில் சித்தி ரக்கோலால் கண்ணை ஏய்க்கப் படத்தின்மே லெழுதப்பட்ட நெருப்பேயொழிய வளர்ந்தெரி யாமல் நிற்கும் மெய்யான நெருப்பு இங்கில் லை. அப்படியே சித்திரச்சொல்லால் மனித ரை ஏய்க்க உன் முகத்தின்மேல் அவர்கள் ஈடேற்றத்தினசை நீயேத்தனை காட்டினலும் அர்ச்செயசிஷ்ட கிறிகோறி சொன்னபடி பா வத்தை விலக்கப் புண்ணியத்தை விளைவிக்க எல்லாரையும் கரையேற்ற ஓயாமல் வருந்தித் திரிந்தாலொழிய அதற்குப் பிரயாசைப்படா மல் நிற்குமாசை மெய்யான ஆசையல்ல. இதிப்படியாகக்கொள்ளப் பலநாளும் பலமா தமும் ஒன்றும் செய்யாமல் மூலையிற்கிடந்த வன் முதலாய்த்தானே தனக்குப் பொய்சொல் லித் தானுமிந்த ஆசையுடையவனென்று நி னைப்பானேவென்ன.

இதுவுந்தவிர நெருப்புக்கிரண்டாம் குணம் இளைப்பின்மையல்லோ, மலைமேல் உணர்ந்த மூங்கிற்காட்டிற்பற்றின தீயைப்பார்க்கில் எரி யவெரிய வளர்ந்தோங்கி வேவதற்குரிய பொ ருளைக்காணுமளவும் தான் மெலியாமல் பள் ளத்திலிறங்கவும் கல்லில் நுழையவும் உச்சி யிலேறவும் காண்போம். பாவங்களை ஒழித்து மனிதரைக் கரையிலேற்ற ஆசையுள்ளவனும் எத்தனை பிரயாசப்பட்டாலும் அவனுக்கதிலே வருத்தமில்லை. புறக்கட்டாயத்தினல் செய் தவேலையே வருத்தந்தருவதொழிய மனம்வை

த்தாசைபோருந்தி ஒருவன்தானே எடுத்த தோ ழிலிலேபடும் பிரயாசமெல்லாம் எளிதாய்ச்ச கிப்பான். இதனலல்லோ பகலெல்லாம் தி ரிந்து வெய்யிலும் மழையும்பாராமல் மண் ணுமெடுத்துக் கல்லுமுருட்டிச் சந்தோஷமாய் விளையாடின சிறுவர்க்கோரற்பவேலையிட்டவு டனே தள்ளாதேன்றழக்காண்போம். அப் படி நாமும் புண்ணியத்தில் சிறுவராகையில் மனதின்படியே வருத்தங்காணமல் பகலுமிர வுமாகத்திரிந்து போருந்தியெடுத்த தோழில்கள் பலவற்றையு முகிப்பவராயினும் ஆண்டவர் ஊழியம் வந்தவுடனே மனமுமுடலும் தளர்ந் து மேலிவுகாட்டி நோவும் மூப்பும் இளைப் பும் பலவீனமும் போக்காகக்கோண்டு நாம் அதற்காசையில்லாமையால் தப்பிப்போகவழி பார்ப்போம். ஆண்டவருக்குத் தோத்திரமா கவும் மனிதருக்கீடேற்றங்கிடைக்கவும் ஆ சையுட்பற்றி எரிந்த மகாத்துமாக்களோவே னில், இப்படி நடந்தவர்களல்ல. அர்ச்சேய சிஷ்ட சவரியார் பாவிகளைத் தேடிக்கோண்டு திரிகையில் பகலிராவேறுபடவேண்ணமலும் உணவுதுயில் தேடாமலும் தன்னுடல் மேலி வு குறைவுகாணமலும் உடலைக்கடிந்த வா னேர்களில் ஒருவனைப்போல முள்ளுந்தைத் துக் கல்லுமோதிப்பிளந்து கீறின இரண்டு பா தமிரத்தமோடே அவருக்குத் தோன்றுதிருக்கு மாம். நம்முடைய கர்த்தராகிய இயேசுநா தர்தாமே நமக்கு வேண்டிய ஒரு கண்ணீரை

யாகிலும் ஓரிரத்தத்துளியையாகிலும் சிந்தின தன்மையில் நம்மைக் குறையில்லாமல் இரட்சிக்கலாமென்றிருக்கையில் எண்ணுமளவுங்கடந்த கொடியவருத்தங்களைக்கொண்டு நம்மை இரட்சித்ததென்ன? அவர் பாவத்தின் மேல் வைத்த பகையும் மனிதர்மேல் வைத்தபட்சமும் அளவில்லாமையால் நம்மை இரட்சிக்க அளவில்லாத ஆசையும் அவர் இருதயத்தில் பற்றியெரிந்ததினாலல்லோ, சொல்லும் நினைவு கடந்த அகோர துன்பங்களே தமக்குத் தோற்றுததுபோல மனமேபொருந்தி அவை யெல்லாவற்றையும் வலியக் கொண்டார். ஆயிரம்பொன் விலைபெற்ற மணியின் மேல் இராஜா வைத்த ஆசை மிகுதியால் அதற்கீராயிரமும் மூவாயிரமும்பாராமல் சந்தோஷமாய்க் கொடுத்தாற்போல, இயேசுநாதர் நம்மை இரட்சிக்க வேண்டினதின்மேல் அளவெல்லாங்கடந்து பாடுபட்டிறந்துதந்த விலையின் மிகுதியைக் கண்டு மனிதர் ஈடேற்றத்தின் மேல் அவர்கொண்டிருந்த ஆசையின் மிகுதியும் எவ்வளவாகிலும் காணப்படுமே. ஆயினும் அர்ச்செயசிஷ்ட இராயப்பர் முதனிருபத்திரண்டாம் அதிகாரத்திருபத்தேராம் வசனத்தில் சொன்னபடியே நம்மை இரட்சிக்க அத்தனை பாடுபட்ட கிறிஸ்துவானவர் தாம் முன்னடந்தபடியே நீங்கள் பின்சென்றுபோக இந்தமாதிரிகை உங்களுக்குக் காட்டித்தந்தார். இந்தத் தேவமாதிரிகை கண்டபின்பு வந்த பா

வத்தை நீக்கவராமுன்னே விலக மனிதர் அ
திலே விழுந்தபின்பு தூக்கவிழாமுன்னே தாங்
க எவரையும் கரையிலேற்ற ஆசையுள்ளவன்
என்னசெய்யானோ? ஆயினும் இவ்விடம்
ஆரோக்கியமல்லவென்றும், அவ்விடம் சங்கை
யல்லவென்றும், இங்கே பகை மிக அங்கே
துயரமிகுமேன்றும், இதிலே பழக்கம் அதில்
ஆதரவில்லையென்றும், ஆயிரம்போக்குத் தேடி
த்தன் சுகிசுகத்தையொழியக் கர்த்தரைச்சிநே
கித்துக் கர்த்தர் தோத்திரமும் மனிதர் ஈடேற்
றமுமேண்ணுமல், அதிலே முதலாய்ச் சற்
றுங்கூசாமல், உபதேசித் தொழிற்கு உயிராகி
ய இந்த ஆசையுள்ளவன்தானேயென்று நி
னைப்பானோ என்ன.

நெருப்புக்குள்ள மூன்றும் குணம் தோர்
வையின்மை என்றோம். பெரு நெருப்புக்
கீரமில்லையேன்பாரல்லோ, அதுவே அடிபட
எழும்பும், சிறைபடப்பலக்கும், மறிபடவள
ரும். அதுவே இரும்புமுருக, கல்லும்பிளக்
க, எவையும் நீருக அடைத்தவிடத்தில் நு
ழைந்து, மேலுயர்ந்தவிடத்தில் பாய்ந்து, முன்
னேதிர்த்தயாவையும் சாய்த்து, விக்கினமேல்
லாம் கடந்தேப்பொழுதும், தோர்வையின்றிச்
சேயங்கோள்ளக்காணப்படுமே. உலகிற்குக்
கேடாக நெருப்புக்காட்டும் வீரமே எவர்க்கும்
நன்ருக உபதேசிகளிடத்தில் காணவேண்டி
யதல்லோ, ஆயினும் நன்மை விளைவிக்கத்
தீயோடோத்த குணங்களையுடைய இந்தத்

திவ்விய ஆசையிருந்தால் அந்த வீரமுமுண்
டாம். இங்கே பாவங்களொழியவும், ஆண்
டவர் திருநாமம் வழங்கவும், மனிதர் மோட்
சத்தையடையவும், தானே உதவிசெய்வதற்
காசையுள்ளிறங்கி நிறைந்ததாகில், அவனுக்
குத் தடைசெய்யவல்லதோன்றுண்டோ? பு
கைத்தவிடத்தில் இரவில் நுழைவான். தன்
வாய்மொழி செல்லாதவிடத்தில் உறுதியோலை
செலுத்துவான். உபதேசியாக நுழையப்படா
த விடத்தில் வைத்தியனாகப் புகுவான். தா
னொருவனே பலவற்றையுமொருங்குடன் செ
ய்யப்படாதவிடத்தில், அதற்குத் தான் முன்
உரியராக்கினவர்களை விடுவான். அப்படி
யே தீமுகத்திணங்காததில்லையென்பதுபோல்,
ஆசை முகத்திலாகாததும் ஆவதற்கரியதுமில்
லை. இந்த ஆசையுண்டானால், அதனைச் செ
லுத்த உபாயங்களைப் படிப்பிப்பார் தேவை
யில்லை. வயிறுவளர்த்து வாழக் குருவி மிரு
கங்கள் முதலாய் அதிசயமாக எடுத்த உபா
யங்களெல்லாவற்றையும் தம்முயிர்மேல் வை
த்த ஆசையேயொழிய, வேறாராகிலும் சொல்
லிக்கொடுத்ததுண்டோ? நீங்கள் தாமே யா
தொரு கருமத்தின்மேல் மெய்யான கருத்து
வைத்தவுடனே அதனை முடிக்கப் பலவழி
உபாயங்கள் நினைவிலோடுமல்லோ மீளவும்
ஆசை மிகுதியானால் உபாயங்களைக்காட்டுவ
தல்லாதே அதற்குவல்லமைமுதலாய்த்தருமே.

கிரேசனென்னும் இராசா ஆயுதமின்றித்

தனித்திருக்கும்போது, அவனை ஒருவன் வெ ட்டக் கையை ஓங்கினவிடத்தில், அந்நாள் மட்டும் ஊமையாயிருந்த இராசாவின் குமா ரன் அதைக்கண்டு தகப்பன்மேல் வைத்த பட்சமே பேச வல்லமை தந்து, தான் அற்புத மாக நாக்கின் விக்கினஞ்சேயித்துப்பேசி நில் லடாவெட்டாதே என்றான். நீங்களும் ஆண் டவர்மேல் பத்தியும், புறத்தியார்மேல் இரக் கமும் உடையீராகில், ஆண்டவரையும் மனி தர் ஆத்துமத்தையும், ஒருப்பட வெட்ட வந் தாற்போல ஆண்டவருக்கு விரோதமும், ஆத் துமத்திற்குக் கேடுமாகவரும், பாவத்தைக் கண்டவளவில் உங்களுக்கு இதை அதைக் கேடாக நன்றாய்க் கூசாமல்பேசுகிற நீங்களே அதற்குமாத்திரம் ஊமையாயிருப்பீர்களோ? வந்தவிக்கினமெல்லாம் செயித்துப் பாவங்க ளை விலக்க, ஆத்துமங்களைக் கரையிலேற்ற உங்கள் ஆசையளவாக உங்களுக்கு வல்ல மையுண்டாம். "அஞ்சுவதஞ்சாமை பே தைமை அஞ்சுவதஞ்சலறிவார் தொழில்" என் பதுநிச்சயந்தானே. ஆயினும் நரகத்தின்மேல் அஞ்சத்தகும் தீமையில்லாமையால், ஒருவன் நரகத்தில் போகாதபடிக்கு உன்னால் உதவி யாமென்றிருந்தால், நீ ஆண்டவர் செய்யும் துணையை நம்பாமல், மனிதர்க்கு அஞ்சி, அவனுக்கு உதவாதிருப்பது பேதைமை மாத் திரமல்ல, அவனையும் உன்னையும் பகைத் து நரகத்தில் தள்ளும் கொடிய நிட்டூரந்தா

னே. இதெல்லாம் வாசித்தபின்பு உபதே சிகள் இதிலே சற்றுத் தாமதமாகநின்று, பிற கே நோக்கித் தாங்களே தங்களுக்குப் போய் சொல்லாமல், காட்டின மெய்யான ஆசை யின் குணங்களைப் பொன்னுரைக் கல்லாகக் கொண்டு,தாங்கள் அப்புறத்துத் திரியும்படியும் உளத்து நினைக்கும்படியும், இதிலே உரைத் துப்பார்க்கில், தங்களுக்கு இவ்வகை ஆசை யுண்டோ இல்லையோவென்றாராயக்கடவர் கள்.

முந்திப் புறத்தியார்செய்யும் புண்ணியத்தி னால் சந்தோஷமும், அவர்கள் செய்யும் பா வத்தினால் துக்கமும், உனக்கு மெய்யாகவே உண்டோ வில்லையோ? நீயே ஒருவனைத் திருப்பினவளவில், உன் மனம் பூரித்து அவ னை ஆரவாரத்தோடே கோயிலுக்குக் கூட் டிக்கொண்டு வரக்கண்டேன். ஆயினும் ப சாசின் கையில் தப்பி, அந்த ஆத்துமம் மோட் சவழியில் வந்ததினால் உனக்கு இந்த மகிழ்ச் சியானால், மற்றொருவன் பலரைத் திருப்பிக் கொண்டுவந்ததைக்கண்டு உனக்கிந்த மகிழ்ச் சியில்லாமலென்ன?

இரண்டாவது, ஆயத்தமாயினும், உபதே சமாயினும் சொல்லுமிடத்திலும், விசேஷமா ய்ச்சாகிறவர்களுக்கு உறுதிசொல்லி, உதவி செய்யுமிடத்திலும் அவர்களை உணர்த்தவும், பாவ விமோசனமாகி மோட்ச கரையிலேற்ற வும், அதெல்லாம் செய்வாயாகில், சொன்ன

நியாயங்கள் அவர்கள் மனதில் நுழையவும், நுழைந்த தன்மையில் மனமிளகி உருகவும் நீயும் உள்ளுருகி ஆனமுறையோடே பேசாமல் பள்ளிப்பாடம் ஒப்புவித்தாற்போலப்பேசி, உன் கடன்பாரம் இறக்கினுற்போதுமேன்று அவர்களைக் கரையேற்ற ஆசை சற்றுங்காட்டாமலென்ன?

மூன்றுவது, சுறுக்கோடிளைப்பும், வெய்யிலும் பாராமல் போகிறதைக்கண்டு, உன்னை நிறுத்தி இந்தச் சுறுக்கேதேன்றுகேட்க, இன்னுன் சேத்ததற்கின்று மோட்சவிளக்கேன்றதனுல், அந்த ஆத்துமத்துக்கு உதவிசெய்ய ஆசையோடே போகிறேனேன்றுய். சேத்தவர்களுக்கு ஆறுதலாக வருந்துவது உத்தமந்தானே. ஆயினும் பத்துநாளுக்கு முன்னே அவன் அவஸ்தைக்குன்னை அழைத்தபோது, இந்தச் சுறுக்கில்லாமல் போக்குச்சோல்லித் தாமதஞ்சேய்ததேன்ன! அன்றுசேய்ததைப் பார்க்கில், இன்று வரும் போருளாசையாலோழியப் பிறரீடேற்றத்தினுசையால், இந்தச்சுறுக்கு வந்ததல்லவேன்பது நியாயமல்லோ.

நான்காவது, அப்படித்தானே மற்றேரு உபதேசிக்கு விக்கினமிருக்கையில், அவன் திரியும் சீமையில் கலியாணம் முடிக்கத் தூரமாயினும் சந்தோஷமாய்ப்போகிறவன் அவ்விடத்தில்தானே முன்னே அவஸ்தைக்கழைக்கப்பட்டபோது, எனக்குக் கடனில்லையேன்பான். என்பாவங்களை விலக்கவும், ஆத்து

மங்களைக் கரையில் ஏற்றவும் உனக்கு மெய்யான ஆசையுண்டானால், அதற்குச் சமயங் கண்டபொழுதெல்லாம், ஒத்தமுறையாய் நடக்கத் தேவையில்லையோ?

ஐந்தாவது, ஆத்துமங்களை மாத்திரம் தேடுகிறாய். ஆயினும் சனங்கள் அவசரத்தைப் பற்றி வேண்டியவிடத்தில், அதிகமாய்த் திரியாமலும், தாமதம் செய்யாமலும், உனக்கு ஆதரவு கிடைக்குமிடத்தில்மாத்திரம் அடிக்கடிபோகவும், நாட்பட இருக்கவும், நியாயமென்ன? இதுவுமிக விரியுமென்றஞ்சிப் பலவற்றையும் விட்டுச்சொன்னது போதுமென்றிருக்கிறோம். நீங்களும் இந்தமுறையோடு உங்கள் இருதயத்தைச் சோதித்து உங்களை ஏய்க்கமாட்டீர்களாகில், சனங்களை இரட்சிக்க உங்களுக்கு மெய்யான ஆசையுண்டோ இல்லையோவென்று கண்டுபிடிப்பதரியதல்ல.

௰. அதிகாரம்.

MOTIVES TO PRODUCE A DESIRE FOR THE SALVATION OF OTHERS.

சொன்ன ஆசையைப்பற்றுவிக்கும் நியாயங்கள்.

உபதேசித்தொழிற்கு உயிராக இந்தத் திவ்விய ஆசை மிகவும் வேண்டியதென்று காட்டின பின்பு, மீளவும் அதனை அடைய வழி

யையும் காட்டாதேபோனல், கோம்புத் தேனை முடவனுக்குக் காட்டின கதையைப்போலவாகுமே. ஆகையால் இங்கே சொன்ன ஆசையை அவனவனிடத்திலே பற்றுவிக்கத் தகும் சிலநியாயங்களை வெளிப்படுத்தித்தருவோம். ஆயினும் தெளிவாய் நடக்கும்படிக்கு முந்தி அறியவேண்டியதாவது, சொன்ன ஆசைதானே பாவத்தின்மேல் பகையும் மனிதர் ஈடேற்றத்தின்மேல் பட்சமுமொழிய வேறல்ல. பின்னையும் பாவமும் மனிதர் கரையேற்றமும் இருமுகமாக ஆண்டவரைப் பற்றியாயினும் மனிதரைப்பற்றியாயினும் மதித்துப்பார்க்கலாம். ஆண்டவரைப்பற்றிப் பாவமானது அவருக்கு நிந்தையாகவும் அவர் அதை மிகவும் வெறுத்த அக்கிரமமாகவும் கண்டு நாமும் அதனைப் பகைத்தால் பாவத்தின்மேல் வைத்த பகையே ஆண்டவர்மேல் வைத்த தேவபத்தியாமே. அப்படியே அவரைப்பற்றி மனிதர் ஈடேற்றம்பார்க்கில் அவருக்கு இது மிகவும் பிரியமும் தோத்திரமுமாகக் கண்டு நாம் அதற்கு ஆசையோடே பிரயாசப்படுவது உத்தமதேவபத்திதானே. மனிதரைப்பற்றியோவெனில், பாவமே எல்லாத்தீமைகளினும் நமக்குத் தீமையாகவும் மோட்சமே எல்லா நன்மைகளினும் நன்மையாகவும் கண்டு நாமே பிறர்க்கும் பாவத்தீமை விலக்கவும் மோட்ச நன்மை விளைவிக்கவும் பிரயாசப்படுவதே புறத்தியார்மேல் வைத்த

உத்தம பட்சமாமே. ஆகையால் வேதத்தின் பத்துக்கற்பனைகள் இரண்டிலே அடங்கி எல்லாத்திலும் ஆண்டவரைச் சிநேகிப்பதும் தன்னைப்போலே மற்றேரையும் சிநேகிப்பதும் என்பதிரண்டும் இந்தத் திவ்விய ஆசையொன்றிலே நன்ருய் அடங்கினதென்றறியக்கடவோம். இப்படியாகக்கொள்ள இதுவே இந்த ஆசையைப்பற்றுவிக்கப்போதுமல்லோ, இந்த ஆசை ஒன்றைக்கொண்டு வேதகற்பனையெல்லாம் ஒருப்பட நிறைவேற்றலாமென்று கண்டபின்பு, அதை அடையப் பிரயாசப்படத்துணியும்படிக்கு வேறே நியாயம்வேண்டுமோ? ஆயினும் இப்போது ஸ்தாபித்த சத்தியத்திலூன்றி இந்தத் திவ்விய ஆசை உங்களிடத்திலே பற்றுவிக்க வேறே நான்கு நியாயங்களைக் காட்டித் தருவோம். அவைகளில்,

முதலாவது; இந்த ஆசையில்லாதவன் தேவபத்தியில்லாதவனுந்தானே. நம்மைப் படைத்து இரட்சித்த சுவாமிக்குப் பாவமொழிய வேறே பகையுமில்லையென்றும் புண்ணியவான்களால் இங்கேயும் மோட்சத்திலேயும் அவருக்கு வருந்தோத்திரமே ஒழியப் புறத்துநின்றவருக்கு வரத்தகும் வேறே நன்மையுமில்லையென்று சத்தியமாக அறிந்த நாமே நம்மாலாகுமட்டும் அவருக்கு அந்தப் பகையும் ஒழிய அந்த நன்மையும் விளையப் பிரயாசப்படத் துணியமாட்டோமாகில் எல்லாத்திலும்

அவரைச் சிநேகிப்போமென்பதேன்ன? சி நேகமுள்ள உன் பிதாவை நிந்தைப்படுத்தக் கண்டால் உன் மனதிலே நோகாதோவென்ன, உன்னுலாகுமட்டும் அந்த நிந்தை விலகப்பிர யாசமெல்லாம் படாயோவென்ன, வழிப்போ கிற பரதேசியையுமுதலாயொருவன் அநியாய மாய் நிந்தித்து அடிக்கக் கண்டால் அவனுக்கு இரங்கி விலக்கப்போவாயல்லோ, பராபரன் மாத்திரம் உனக்குப் பரதேசியைப்பார்க்கப் புறத்திப்பட்டவராகி அவரை அநுதினமும் பாவிகள் நிந்தித்தாலும் அவருக்கு அவமான மும் விரோதமாய்ப் பாவங்களை எண்ணுமல் செய்தாலும் இதனுல் உனக்கு ஒரு விசாரமும் துக்கமுமில்லாமல் அதை விலக்கி ஆண்டவ ருக்குச் சங்கையும் தோத்திரமுமாக ஓராசை யுமில்லாமல் கிடந்தாயாகில் இன்னம் அவர் உன் ஆண்டவரேன்றும்,அவர்மேல் உனக்குப் பத்தியுண்டேன்றும் வெட்கமில்லாமல் சோல் வாயோ? பாவஞ்செய்கிறவன் உனக்குப் பு றத்தியானுகில் அந்தப் பாவத்தால் நிந்தைப் பட்ட ஆண்டவரும் உனக்குப் புறத்தியாரோ? உன்னைப் படைத்தவர் உன்னை இரட்சித்த வர் அவரேயாகில் அநுதினமும் நீயறிந்த ஆவி யும் கண்ட ஒளியும் இருந்த இடமும் உண்ட உணவும் உடுத்த உடையுமுடைய மற்றயா வும் அவரால் உனக்கு வந்திருக்க இன்னம் உனக்கு அவர் புறத்தியாரோ? இன்னம் அ வருக்கு வந்த நிந்தை அவமானமும் கண்டு

உன் மனதிலே நோகாதோ! இன்னஞ் சற்று நன்றியறிந்தவனாய் அவருக்குப் பகையாகிய பாவம் விலகவும் அவருக்குத் தோத்திரமாகிய புண்ணியம் விளையவும் உனக்கு இயன்றமாத்திரம் துணியமாட்டாயோ? தேவபத்தி எவ்வளவாகிலுமிருந்தால் எங்கும் திருப்புகழ் விளங்கத் தேவ நாமமே வழங்க ஆசைப்பட்டுத் தன்னால் அதுவாகாமையில் மனதில் வருந்தி ஆண்டவரை ஓயாமல் வேண்டிக்கொண்டு சுவாமி உம்முடைய நர்மம் அர்ச்சிக்கப்படுவதாகவேன்றும், அவர் அருளிச்செய்த சத்தியவேதமே எங்கும் பரம்பி உலகமெல்லாம் அவர் செங்கோலிற்படிந்து அவர் குடைக்கீழடங்கி அவரே எங்கும் ஆள ஆசைப்பட்டுச் சுவாமி உம்முடைய இராச்சியம் வரவேன்றும் எவரும் அவர் கற்பித்ததை மீறாமல் நடந்து மோட்சமோப்பப் பூவுலகும் அவருக்குச் சந்தோஷமாக நடக்க ஆசைப்பட்டுச் சுவாமி உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போல பூமியிலேயும் செய்யப்படுவதாக்வேன்றும் அழுதுகொண்டு தன்னாலானதை அதற்குச் செய்து தன்னாலாகாத தன்மையில் வருந்தி நொந்து திரிவனல்லோ, இப்படி நடந்தவனுக்கும் தேவபத்தி யுள்ளவனேன்னப்படுவன். ஆயினும் ஆண்டவர் நிந்தைவிலகப் புறத்துப் பாவங்களை மறுக்கப்பாராமலும் அவருக்குத் தோத்திரமாகப் புறத்தியாரையும் கரையிலேற்ற வருந்தாமலுந்தானே நரகத்துக்

குப் போக முகிவொன்றின்றிப் பாவத்தைச் செய்வதுந்தவிர புறத்தியாரையும் நரகத்திலே தள்ள அவர்களிடத்திலும் பாவம் விளையத் தானே காரணமாகில் இவனே தேவபத்தியுள்ளவன். இவனே இயேசுநாதருக்கு உபதேசி. சத்தியவேதத்தை அநுசரித்த கிறிஸ்தவன். இதில் சிலபேர் சொல்ல நாமே கேட்ட வசனம் அழுகையின்றி நினைக்கத்தக்கதல்ல. அதேதெனில் பொய்யான தேவர்களுக்கு நடக்கும் திருநாளும் ஆரவாரமும் பார்க்கப்போன சிலரைக் கண்டித்தவிடத்தில் அதை ஆசரித்துப் போனேமோ இல்லையே. விளையாட்டுக்கு வேடிக்கைபார்க்கப்போனேமென்பார்கள். ஐயோ! இந்தப்படியே ஆண்டவருக்கு நிந்தையாகப் பசாசுக்குச் செய்யப்பட்டவணக்கம் ஆரவாரம் உங்களுக்குப் பொறுக்கப்படாத துக்கமாகாமல் விளையாட்டும் வேடிக்கையுமாச்சோ? ஒருவனும் தன்னை எய்க்கத் தேவையில்லை. பாவமெல்லாம் நீங்கவும் புண்ணியம் எங்கும் வளரவும் ஆசையில்லாதால் தேவபத்தியுமில்லையென்பது சத்தியந்தானே. அர்ச்செயசிஷ்ட கத்திரினம்மாளோவெனில்; ஒரு நாள் பசாசைக்கண்டு நீ ஆரென்றாள்? அதற்குப் பசாசு மிகுந்த துக்கத்தோடே பெருமூச்சுவிட்டுத் தேவபத்தியில்லாத நிர்ப்பாக்கியன் நானே என்றதாம். இந்தப்படி யாதொருவன் தேவபத்தியில்லாத நிர்ப்பாக்கியனானால் அவனை ஆண்டவருக்கேற்ற

உபதேசி என்பீர்களோ? பசாசுக்கேற்ற துரோ கியென்பீர்களோ? மீளவும்,

இரண்டாம் நியாயமாகச்சொன்ன ஆசை யில்லாதவன் விசேஷமாய் இயேசுநாதர்மேல் பத்தியில்லாதவனுந்தானே. சர்வத்துக்கும் வல்ல சுவாமி தாமே மனிதனுகத் திருவுளமா கி வீடுமின்றி உதவியுமின்றி ஒரு குகையில் பிறந்து, துன்பத்தில் வளர்ந்து, தெருவிலிரந்து, நிந்தை மிகத் துன்பமிக அரிதாய் முப்பது வரு ஷமும் போனபின்பு, தாமே எங்கும் திரிந்து மட்டில்லாத புதுமைகளைக்காட்டி எவரையும் படிப்பித்தபிறகு தம்மைத்தாமே சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுத்துச் சொல்லும் கருத் தும் கடந்த நிந்தைப் பாடுபட்டு உயர்ந்த சிலு வையில் அறையுண்டு இறந்தாரல்லோ, இத னைச் செய்யவும் படவும் இயேசுநாதர் இதில் நினைத்த பலனென்ன? தீர்க்கதரிசியாகிய எசா யாவென்பவர் கர்த்தர்பிறவாமுன் எழுதிவைத் ததாவது; "இயேசுநாதர் பிறந்து பாடுபட்டு இறந்ததனுல், நினைத்த பலனெல்லாம் பாவ நிவாரணம் ஒன்றேயென்றார்." இந்தப் பல னைப்பற்றியல்லோ ஒரு திருச்சபையும் உண் டாக்கி அதிலே தேவத்திரவியாநுமானங்களும் நித்திய தேவபூசையும், மந்திரமும், முறை யும், பலவற்றையும் கற்பித்துத் தலைவரும், குருக்களும் ஸ்தாபித்து, உங்களையும் உபதே சிகளாக வைத்தார். இதன்பின்பு அஞ்ஞான முதல் பலபாவங்கள் உலகெல்லாம் பகைசே

ய்து முழுதும் அதையொழிப்ப,இயன்றமாத்திரம் பிரயாசப்படஆசையில்லாத உபதேசி இயேசுநாதருக்கு உகந்தவனென்பார்களோ, அவர்மேல் பத்தியுள்ளவனென்பார்களோ? ஆண்டவர் தாமே இங்கே வந்து பட்ட நிந்தையும், பாடும் பாராமல், அத்தனைக் கருத்தாவலோடே தமக்குத் தனிப்பகையாகிய பாவத்தைச் சங்கரிக்கப் பெரும்படையாகத் திருச்சபை கூட்டினவிடத்தில் உங்களுக்கோரு சேவை தந்தார். அதன்பின்பு உங்கள் திவ்விய இராசாபகைவனோடே பழகித்திரிந்தாற்போலப் பாவம் கண்டவிடத்திலே வாயினாலே வேட்டியொழிக்கப் பிரயாசப்படாமல் திரிந்தால் கர்த்த துரோகிகள் நீங்களாவீர்களல்லவோ? பின்னையும் இயேசுநாதர் தந்திருச்சபையை ஒரு மந்தையாகவும்,திருச்சபையில் உட்பட்ட யாவரையும் ஆடுகளாகவும் அவர்களைப் படிப்பித்து நடத்தும்படிக்கு வைக்கப்பட்ட அர்ச்செயசிஷ்ட*பாப்புமுதல் பல மேற்றிராணியாரையும்,குருக்களையுமிடையராகவும்ஸ்தாபித்தாரல்லவோ? ஆயினும், இதிலே மிகவும் அறியத்தக்க விசேஷமுண்டாம். மற்ற யாவர்க்கும் மாதிரியாக முதல் போதுத்தலைவரென்றும், முதல் இடையரென்றும் இராயப்பரை ஸ்தாபிக்கும்போது

* கிறிஸ்துவானவர் தந் திருச்சபையிலே பாப்பு என்பவரைப்போல ஓர் அதிகாரியை நியமித்திருக்கிறரென்பதற்கான திருஷ்டாந்தம் வேதத்துள்ளதோ,அங்கில்லவோ?

இயேசுநாதர் மும்முறை அவரைநோக்கி மற்ற
வர்களுக்குள்ளே அதிகமாக என்மேல் பட்ச
மாயிருக்கிறாயோவென்றார். இதோ, மற்றவர்
களையும் கரையேற்றித் திருச்சபையை விசாரிக்
கத்தக்கவன் இயேசுநாதரை விசேஷ பட்சத்
தோடே சிநேகிப்பவனாகக்கடவன். பின்னை
யும் இயேசுநாதர் கேட்டதற்கு இராயப்பர்
ஆமென்றார். அதற்கு அவர் மீளவும் திரு
வுளம்பற்றினதாவது; என் ஆடுகளை மேய்ப்பா
யாகவென்றார். இதோ இயேசுநாதர்மேல்
வைத்த விசேஷபட்சத்துக்கு அடையாளம்
அவர் மந்தை ஆடுகளை மேய்ப்பதும், சனங்க
ளைப் படிப்பித்துக் கரையேற்ற வருந்துவ
துந்தானே. பேருத்தியோகமும், வீண்பெரு
மையும் மாத்திரம் அவர் தரச்சித்தமானால்
என் சபைக்கு இராசாவும் தலையுமாயும் என்
மந்தைக்கு இடையனும் மூப்பனுமாயும் இ
ருப்பாயாகவென்றார். அப்படியல்ல, பிரயாச
ப்படவும், எல்லாரையும் பாவத்தில் விழாமல்
காக்கவும் புண்ணியவழியில் நடத்தவும், மோ
ட்சத்தில் கூட்டிக்கொண்டுபோகவும் இராயப்
பர் முதற்கொண்டு மற்ற யாவரையும் திருச்
சபையை விசாரிக்க வைத்தாரென்றமையால்,
உத்தியோகப் பேரைச்சொல்லாமல் பிரயாச
முயற்சியின் பேரைச்சொல்லி, என் ஆடுகளை
மேய்ப்பாயாகவென்றார். இந்தப்படி இயேசு
நாதர் உங்களை உபதேசிகளாக ஸ்தாபித்தபோ
து, ஒவ்வொருவனுக்கும் திருவுளம்பற்றினதா

வது; "என்மேல் பட்சமானால் என் ஆடுகளை மேய்ப்பாயாகவென்றார்." உங்களுக்கு இங்கே பெருமையும், ஆதாயமுமாக இந்தத் தொழிலைத் தந்தவரல்ல. ஆடுகளை மேய்க்கச் சனங்களைப் படிப்பிக்கப் புலி ஓநாயாகிய பாவம் விலகப் புண்ணியத்தில் வளர்ந்து எல்லாரும் கரையேறுவதற்கு உதவ உங்களை உபதேசிகளாக வைத்தார். அவர்மேல் விசேஷ பட்சம் உங்களுக்குண்டாகில் அப்படி நடந்து பிரயாசப்படவும் ஆசையுண்டாம். இதைச் செய்யாமலும், இதின்மேல் ஆசையில்லாமலும் திரிகிறவன் இயேசுநாதர்மேல் பட்சமில்லாதவனாவதன்றி, அவர் மந்தை ஆடுகளை மேய்க்கும் இடையனுமல்ல. ஆடுகளை விழுங்க வந்த ஓநாய்தானே. அவனே இயேசுநாதருக்கு உபதேசியல்ல, துரோகிதானே.

சொன்னது போதாதாகில், இன்னம் மூன்றும் நியாயமாக ஆத்துமத்தின் மாட்சியை அறிந்ததின்மேல் எவ்வளவாகிலும் பட்சமுண்டானாலதற்குச் சகல தீமைகளினுமதிக தீமையாகிய பாவமும் நரகமும் விலக அதற்குச் சகல நன்மைகளினுமதிக நன்மையாகிய புண்ணியமும் மோட்சமும் விளைவிக்க ஆசையுமுண்டாம். ஆயினும் ஆண்டவர் சாயலாக உண்டாக்கப்பட்ட ஆத்துமத்தின்மாட்சியை அறியவும் அதின்மேல் பட்சம் வைக்கவும் இயேசுநாதர் செய்ததைப் பார்ப்பது போதுமல்லவோ? பசாசுக்கு அடிமைப்பட்டிருந்த ஆத்துமத்தை

மீட்க அவரே மனிதனுய்ப்பிறந்து அளவில்லாதமுழுப் பலனுள்ளதாகிய தாம் பட்ட நிந்தையும், பாடுமெல்லாம் அதற்கு விலையாகத் தந்தார். மயக்கமின்றி இருளுமின்றித் தெளிந்தகாட்சி ஞானமுடையராகி இந்தப்படி ஆத்துமத்தை ஆண்டவர் மதித்தபின்பு, நாம் அதின் மாட்சியைக்காட்ட வேறேரு நியாயம் தேட வேண்டுமோ? ஆயினும் அளவில்லாத பலனுள்ள பாடுகளை ஓர் ஆத்துமத்துக்கு விலையாக ஆண்டவர் வலியக் கொடுத்திருக்க நாம் அதை எண்ணுவது எம்மாத்திரம்? ஓர்ஆத்துமத்தை இரட்சிக்க நாம் ஒரு நாள் சுக நித்திரையை விடவும், சிலநேரம் பசியைப் பொறுக்கவும், அற்ப பிரயாசப்படவும், சற்று வழி நடக்கவும், ஒரு வார்த்தை செலவழிக்கவும், பல முறை துணியமாட்டாமை என்ன! தேவனும் மனிதனும் ஒன்ருகிய இயேசுநாதர் திவ்விய இரத்தமே விலையேறப்பெற்ற ஆத்துமம் நம்மால் ஒரு மாடம்மாத்திரம் மதிக்கப்படவுமில்லையே. நீ ஒரு மாட்டை வைத்திருக்கவும், அதனை மேய்க்கவும், பேணவும், காணுதேபோனல் எங்கும் வருந்தித் தேடவும் சலியாமல் திரிவாய். உன் கையில் ஆண்டவர் ஒப்புக்கொடுத்த ஆத்துமத்தையோவெனில், படிப்பிக்கவும் காக்கவும் பசாசுக்கு அடிமைப்படாமல் அதை மீட்பதற்குத் தேடவும் ஆசை முதலாயில்லாமல் திரிவதென்ன! ஆத்துமத்தின் மாட்சி உள்ளபடி அறியாமலோ

இயேசுநாதர் அதைக் கைக்கொள்ளத் தம் உயிரைத் தந்தார். ஆயினும் இயேசுநாதர் செய்ததைப் பாராமல், பசாசுமுதலாய் ஓர் ஆத்துமத்தைத் தன் வசமாக்கப் பகலும் இரவுமாகச் சலிப்பின்றி ஓய்வின்றிப் பலவகைத் தந்திர வலைகளை விரித்துத் தன் பிரயாசத்தைப் பாராமல் சோதனையிடவும், தன் ஆங்காரத்தைப் பாராமல் மனிதர்க்கூழியஞ்செய்யவும், தன் வெட்கத்தைப் பாராமல் தள்ளுண்டும் பின்வாங்காதிருக்கவும் திரிவதைப்பார்த்தாலும் ஆத்துமத்தின் மாட்சி எவ்வளவாகிலும் காணப்படுமே. பசாசு ஆத்துமங்களை எண்ணினபடியாகிலும் உபதேசி அவைகளை எண்ணத் தேவையில்லையோ? ஆத்துமங்களைக் கெடுக்கப் பசாசு சலியாமற்படும்பாடு அம்மாத்திரம் அவைகளைக் கரையேற்ற நீ பிரயாசப்படமாட்டாயாகில், நீ ஆத்துமங்களை இரட்சிக்க இயேசுநாதரால் அனுப்பப்பட்ட உபதேசி என்னப்படுவது நியாயமோ? மீளவும் ஆத்துமங்கெட்டு மோட்சபாக்கியத்தை இழந்துபோய் அவியாதெரியும் தீ நரகத்தில் விழுந்தால் அங்கே படத்தகும் வருத்த வேதனைகளை எவ்வளவாகிலும் நினைத்தால், புலிப்பாலுண்ட கொடிய நெஞ்சர்களிலாயினும் உருகி இரங்காதிருப்பாருண்டோ? சகலநன்மைச்சொரூபியான ஆண்டவரை முகமுகமாகத்தரிசித்து ஒப்புமளவும் முடிவுமின்றிச் சகல பேரின்பமுமுள்ளமோட்சத்திலாண்டு வாழ்வுண்டாக்கப்பட்ட

ஆத்துமமானது பசாசுக்கு அடிமைப்பட்டு எந்நாளும் அவியாதெரியும் தீயில் வேகாமல் வேந்து கோவென்றலறிப் பின்பு ஒரு மாட்சியும் காணுமல் பதறி ஓயாமலும், குறையாமலும், மாருமலும் சகல துன்ப துரித நிர்ப்பாக்கியங்களை என்றென்றைக்கும் அநுபவிக்கப்போகிறதைக் கண்டும், சற்றும் இரங்காமல் அந்தத்தீயில் ஆத்துமம் விழாததற்குத் தன்னுலானதைச் செய்யாமலுமிருந்தவனை மனிதனென்பார்களோ? ஓர் நாய் வருந்தக்கண்டாலும் இரக்கம் வருமே. ஆண்டவர் சாயலாக உண்டாக்கப்பட்ட ஆத்துமம் ஆண்டவர் திரு இரத்தத்தினுல் இரட்சிக்கப்பட்ட ஆத்துமம் அத்தனை பாடுபடுவதை அறிந்தால் இரக்கம் வாராதோ? இந்த விஷயத்திலே அர்ச்செயசிஷ்ட அகுஸ்தீன் என்பவர் எழுதினதாவது; சபிக்கப்பட்டவர்களே, அவியாதெரியும் நித்திய தீநரகத்துக்குப் போங்களென்றபோது, ஆண்டவர் நடுத்தீர்வையில் சொல்லத்தகும் வார்த்தையை நினைத்துநாமேஉருகியழுது இரங்காதிருப்பதற்கு நமக்கு அசையாத கல்நெஞ்சோ? உருகாதவச்சிர மனமோ என்ருர். சிலபேரோவெனில், அநுதினம் எண்ணப்படாத ஆத்துமங்கள் அந்த நித்தியத்தீயில் அமிழ்ந்திக்கெடுவதை அறிந்து தங்களாலான தன்மைக்கு அநேக ஆத்துமங்களை இரட்சிக்க ஆசையில்லாமலும், தங்களாலாகாத தன்மைக்கு இரங்கி அழுது வருந்தாமலும் திரிவதைக்கண்டு, நாமே திரளாய்க் கண்

ணீர்விட்டழாமல் அடக்கக்கூடுமோ? இன்றைவரைக்கும் சொன்னபடி ஆண்டவர்மேல் பத்தியும், இயேசுநாதர் காட்டின மாதிரியும் ஆத்துமங்களுக்காக இரக்கமும், உங்களிடத்தில் மனிதர் ஈடேற்றத்தின்மேல் ஆசையும் பற்றுவியாதேபோனலும்,

நாலாம் நியாயமாக அவனவன் தன்மேல் வைக்கத்தகும் பட்சமே இதற்குப் போதுமென்று ஒப்புவிக்கக்கடவோம். ஆண்டவர் நமக்குச் செய்த நன்மையும், அவருக்கு நாம் செய்தகுறையுமாகிய இவ்விரண்டும் நமக்குண்டாகிய இருவகைக் கடன்தானே. சாகிறகாலத்திலே அவரே நம்மை இதற்குக் கணக்குக் கேட்டுத் தாம் செய்திருந்த நன்மைக்குக் கைமாருக நாம்செயத புண்ணியமேதென்றும் நாமேசெய்திருந்த பாவக்கடனைத் தீர்க்கப் பின்பு செய்த தவமேதென்றும் கேட்டுத் தீர்வையிடுவாரல்லவோ? அந்தக்கணக்கு ஒப்புவியாமல் ஆக்கினைக்குட்படாதபடிக்குத் தன்மேல் மெய்யான பட்சமுள்ளவன்சொன்ன இருவகைக் கடன்களை இப்போது தீர்க்க ஆசை வைக்கக் கடவன். ஆயினும் இவ்விருவகைக் கடன்களைக் குறையின்றி ஆண்டவருக்குப் பிரியமுள்ள முறையோடே தீர்ப்பதற்குப் பிறரையும் கரையேற்றப் பிரயாசப்படுவதே உத்தம வழியாம். அதேப்படியென்றல்; பராபரன் தமக்கியல்பாகச் சகல நன்மையுள்ளவராகையில் புறத்திலே தயையால் ஒரு சகாயம்

செய்யும்போது, தமக்குக் கைமாறு வருமென்று செய்பவரல்ல. ஆயினும் நாம் கைக்கொண்டு நன்றியறிந்து சுவாமிக்குச் செய்யவேண்டிய கைமாறு அவருக்கு வேண்டாமையால், அவர் படைத்த பிரசைக்கு நாமே செய்ய வேண்டுமென்று சித்தமானர். இதனல் இயேசுநாதர் ஏழைச் சனங்களைக்குறித்து இவர்களுக்குச் செய்தது தமக்குச் செய்ததாகுமென்ருர். அப்படி ஒருவன் சமயத்துக்கு உனக்குத் திரளாய்ப் பொருளைத் தந்து இனிமேல் இதிலே எனக்கொன்றும் உத்தரியாமல் என்னைச்சேர்ந்த் சனங்களுக்கு உத்தரிப்பாயென்ருல், நீ அவர்களுக்கு அதைக் கொடுக்கக்கடனுமுண்டு. கோடாதேபோனல், அவன் உன்னைக் கணக்குக்கேட்க நியாயமுமுண்டாமல்லவோ, இதிப்படியாயிருக்க, அவனவன் தனக்கு ஆண்டவர் செய்த நன்மையைக் கூடுமாகில் எண்ணிப் பார்ப்பான். எண்ணப்படாத நன்மைக்கு எவ்வளவாகக் கைமாறு வேண்டியதென்று நினைக்கக்கடவன். மீளவும் உனக்கு அவர்செய்த நன்மையெல்லாம் உன் ஆத்துமமே எளிதாய்க் கரையேறவல்லவோ செய்தார். ஆகையால் இதற்குக் கைமாருக அவர் படைத்து இரட்சித்த பிறர் ஆத்துமங்களையும் கரையேற்ற நீயும் பிரயாசப்பட்டாலொழிய உனக்கு அவர் செய்த நன்மைக்கு நீ செய்யத்தகும் மற்றக் கைமாறேத்ததல்ல. பொன்னை வாங்கினவன் செம்

யை உத்தரித்தால் ஒக்குமோ? ஆகையால், இரப்போர்க்கு எந்தப் பிச்சை தருதலும், நொந்தார்க்கு எந்த ஆறுதல் செய்தலும், மெலிந்தார்க்கு எந்தப்படி உதவுதலுமாகிய இவையெல்லாம் நல்லவையாயினும் ஆண்டவர் உங்களுக்குச்செய்த நன்மைக்கொத்த கைமாறல்ல. எவரும் பாவத்தை ஒழித்து மோட்சத்தை அடைய உதவிசெய்தால், நீங்கள் கரையேற ஆண்டவர் கையில் வாங்கின சகாயங்களுக்கொத்ததாமே. இதினால் அர்ச்சேயசிஷ்ட தியோனிசென்பவர் உபதேசித்தொழிலைத் தெய்வத்தொழிலென்றார். அர்ச்சேயசிஷ்ட கிறிசோஸ்துமோவெனில்; எண்ணப்படாத திரவியங்களை இரப்போர்க்கீவதைப்பார்க்கிலும் ஓர் ஆத்துமத்தைக் கரையேற்றுவது அதிக உத்தமமென்றும், அதற்குமேல் ஆண்டவருக்குப் பிரியமுள்ளதொன்றுமில்லையென்றும் எழுதி வைத்தார். இதோ இந்த முதல்வகைக்கடன் தீர்ப்பதற்கு எல்லாரையும் கரையேற்ற வருந்துவது உத்தம வழியே. பின்னையும் தன் பாவக்கடனையெல்லாம் எளிதாய்த்தீர்க்கப் பிறர் பாவமொழிப்பதற்குப் பிரயாசப்படுவதே உத்தமமென்று ஒப்புவிக்க அர்ச்சேயசிஷ்ட யாகப்பர் வேதசத்தியமாக எழுதினதை வெளிப்படுத்தினால் போதுமே. அதேதெனில்; அவர் எழுதின நிருபத்தைந்தாம் அதிகாரத்திருபதாம் வசனமாவது, "தப்பிப்போகிற பாவியைத் திருப்பினவன் சாகாதபடிக்கு அவன்

ஆத்துமத்தைக் காப்பதுந்தவிரத் தன் பாவத்திரளுங்காணுதபடிக்குமறைப்பானென்றார்."
இதோ வேத சத்தியமாக உன் பாவக் கடனெல்லாம் துடைத்துக் கர்த்தர் சந்நிதியில் சுத்தனுய்த்தோன்றப் பிறர் பாவ வழியை விட்டு, புண்ணிய நெறியில் ஒழுகப் பிரயாசப்படுவது உபாயமாமே. இதெல்லாம் இப்படியிருக்க ஆண்டவருக்குப் பிரியமாகவும், சகல ஆத்துமங்களுக்கும் உதவியாகவும், உனக்கே சகல நன்மையாகவும், எல்லாரையும் கரையேற்றுவதற்குப் பிரயாசப்பட ஆசையில்லாதேபோனல், இன்னம் உனக்குக் கரையேற்றம் உண்டென்றிருக்கிருயோ? இந்த ஆசையில்லாததினல் தேவபத்தியில்லாமலும், இயேசுநாதரின் மேல் சிநேகமில்லாமலும், ஆத்துமங்கள்மேல் இரக்கமில்லாமலும், தன்மேல் முதலாய்ப் பட்சமில்லாமலும் திரிகிறவன் உயிரில்லாத பிணமென்று எண்ணப்படுவது நியாயந்தானே. அர்ச்செயசிஷ்ட அருளப்பர் கண்ட காட்சியாகமத்தின் மூன்ரும் அதிகாரத்தில் ஆண்டவரேவலால் சாரதியென்னும் பட்டினத்துத் திருச்சபை விசாரிக்கிறவனுக்கெழுதினதாவது;

உயிரோடிருக்கிருயென்பாராயினும் செத்தவன் நீயே. அதேதெனில், நீ செய்ததெல்லாம் ஆண்டவர் சந்நிதியில் நிறைந்ததல்லவென்ருர். இந்த ஆசையில்லாத உபதேசி சுற்றித்திரிந்தாலும், நியாயங்களைச் சொன்னு

லும், எவ்வளவாகிலும், பிரயாசப்பட்டாலும், செய்வதெல்லாம் புறத்துக்கூடாகத்தோன்று வதன்றி, உள்ளே நிறைந்ததல்ல. அவன் உயிருள்ளவனுமல்ல. புறத்துப் பெருமைகாட்டிக்கல்வி சாஸ்திரங்களைக் கக்கிப் பரமஞானத்தைப் போதித்துத் திரியும் உபதேசி இந்த மெய்யான ஆசையில்லாதவனாகில், புறத்துப் புகழப்படுவோனாகுமாயினும், உள்ளபடி சொல்லவேண்டுமாகில்; அவனே சுவர்மேல் அழகுபெறப் பல நிறத்தாலெழுதப்பட்ட சித்திர உபதேசிதானே.

௰க. அதிகாரம்.

ON RENOUNCING SELF, AND PLACING ENTIRE CONFIDENCE IN GOD.

தன்னை நம்பாமல் ஆண்டவரை முழுதும் நம்புதல்.

போன அதிகாரத்தில் சொன்ன நியாயங்களை ஆராய்ந்தெல்லாரையும் கரையேற்றப் பிரயாசப்பட உங்களிடத்திலும் எவ்வளவாகிலும் ஆசைபற்றினதாகுமென்றிருக்கிறோம். இந்த மெய்யான ஆசையும் பற்றினதாகில், நம்மோடெல்லாரையும் மோட்சத்தில் சேர்க்க உபாயமுறைகளை நாமே சொல்லிக்காட்டவுந்தேவையில்லை. ஒருவரும் நினைக்க அரிய உபாயங்களை அந்த ஆசைதானே சமயத்

துக்குச் சொல்லிக்காட்டுமே. ஆயினும் இதிலே நாம்குறைவைத்தோமென்னுதைபடிக்கு, நீங்கள் உபதேசித்தொழிலில் எவர்க்கும் பலனுக நடக்கவேண்டிய சிலமுறைகளைச் சொல்லித்தருவோம். அவைகளில் அவனவன் தன் திறத்தை எண்ணுமல் ஆண்டவர் உதவியை முழுதும் நம்புவது உத்தம முறையாமே. இதில் நாம் பலவிடத்தில் சொன்னபடியே ஓராத்துமத்தைப் பாவத்தில் நின்று திருப்புவது எல்லாப் புதுமைகளினும் அரிய புதுமையல்லவோ. புதுமைகளெல்லாம் ஆண்டவர் விசேஷ உதவியாலாகுமொழிய, தன் சுபாவ பெலத்தைக்கொண்டு மற்றொருவனுல் செய்யலாகுமோ? ஆகையால் ஒருவன் தான் கற்ற நூல் வல்லமையினுலும், தான் தந்த மருந்து பெலத்தினுலும், செத்தவனை எழுப்பத்தானே வல்லவனென்று நினைப்பது ஆங்காரமாயினும் அதிலேயும் பாவிகளைத் திருப்புவது அரிய புதுமையாகையால், இது தன் வல்லமையினுலாகுமென்று நினைத்தவன் முன் சொல்லப்பட்டவனைப்பார்க்கிலும் முழுமதிகெட்ட ஆங்காரனென்னப்படுவது நியாயமாமே. அர்ச் செயசிஷ்ட சின்னப்பர் கொருந்தியருக்கெழுதிவைத்ததாவது; “நம்முடைய வல்லமையெல்லாம் ஆண்டவராலாகுமொழிய நாமே நம்மால் நல்லதென்று நினைக்கவும் கூடாது. இதை அறிந்து ஆண்டவர்மேல் முழு நம்பிக்கை வைத்தவர்களே சுவிசேஷத்தைப் போ

திக்க உரிய உபதேசிகளென்றார்.” சத்திய வேதம் வழங்கச்செய்வதற்கு இவர்களே உரியவர்கள். தங்களை நம்பின்யாவரும் தங்கள் ஆங்காரத்தால் அதற்குத் தடைசெய்வார்கள். தான் படித்த கல்வியும், தான் எடுத்த உபாயமும், எண்ணிக் கருமஞ்செய்யத் துணிந்தவன் அதை நன்றாய் முடித்தானாகில், அதனால்வரும் கீர்த்தி சங்கையெல்லாம் தனக்கென்றெண்ணுவானல்லவோ? ஆண்டவரோவெனில் அந்த அகங்காரத்தை மிகவும் வெறுத்து, தமக்கு வரத்தகும் சங்கையை மற்றொருவற்கும் கொடுக்கமாட்டாராகையால், தம்மையல்லாமல் வேறொன்றை நம்பினவனைக் கொண்டு கருமமாகச் செய்யவுமாட்டார்.

அப்படி வேதத்தில் எழுதினபடியே ஆசனென்கிற இராசாவை ஆண்டவர் கோபித்து, நீ சூரிய இராசாவை நம்பினதொழிய ஆண்டவரை நம்பாததினால் சூரிய இராசாவின்படை உனக்குதவியானதுமல்ல. இப்படி மதிகேடாகச் செய்ததினால் இன்று முதல் உன்மேல் பல படை எங்குமெதிர்த்து வரவும் காண்பாயென்றார். அதன் பின்பு அவன் தானே கால் வலியாய்க் கிடந்தவிடத்தில் ஆண்டவர் உதவியைத் தேடாமல், வைத்தியரைமாத்திரம் நம்பினதினால் உடனே செத்தான். பகைவரை வெல்ல உதவிப்படையை நம்புவதும், வியாதி தீர மருந்தின் உதவியை நம்புவதும் நியாயமென்று தோன்றுமே. அப்ப

டியாயினும் அந்தப்புற உதவிக்குமேல் ஆண்டவர் உதவியைமாத்திரம் நம்பித் தேடாததினால் அவனுக்கு வந்தகேடு கேட்டீர்களே. நாமோவெனில், அரிய புதுமையாகிய பிறர் பாவ நிவாரணமும், அவர்கள் ஈடேற்றமும், நம்முடைய உபாய உதவியினாலாகுமென்று நம்பினோமாகில், அதுவாகாமல் நமக்கு வரத்தகும் ஆக்கினையோ சொல்லும் தன்மையல்ல. மிகவும் ஆண்டவருக்கு உகந்த மோசேக்குச் சம்பவித்ததைக்கண்டு அஞ்சத் தேவையில்லையோ! அதேதெனில், வனத்து வழியில் யூதர்கள் வருகையில், உண்ணும் தண்ணீரில்லாமல் பட்ட அவதியைத் தீர்க்க அங்கே கிடந்த கல்லையடித்தால், உண்ணீர் ஊறுமென்று ஆண்டவர் சொன்னதற்கு ஆரோனும், மோசேயும் சற்றஞ்சினதினால், அவர்களை மிகவும் சினந்து நம்மை முழுதும் நம்பாததினால், உங்களுக்குக்குறித்த செல்வநாட்டிற்குச் சேரமாட்டீர்களென்று சபித்தார். அப்படி நாற்பது வருஷப் பிரயாணமாக மிகுந்த பிரயாசத்தோடே தேடின நாடு கிட்டினதின் பின்பு அதை ஒரு மலையின் உச்சிமேல் நின்று மோசேக்கு ஆண்டவர் காட்டி, அதோ தேனும் பாலுமோடி எல்லாச்செல்வமும் நிறைந்தநாடு அதுவேயாயினும், நீ அங்கேசேராயென்றார். மோசேயும் அங்கே அடி வையாமுன்னே செத்தார். மீள்வும் தம்மை நம்பினவர்களுக்குமுதலாய் நம்பின தன்மையில்மாத்திரம் ஆண்டவர் உத

வியுஞ்செய்தார். மத்தேயு என்பவர் எழுதின படியே ஒருவன் வந்து இயேசுநாதரை வணங்கி இப்பொழுது என் மகள் உயிர்பட்டிறந்தாள். தேவரீர் அவள்மேல் கையை வைத்தெழுப்ப வாருமென்றான். அந்தப்படியே கர்த்தரும் போய் அவள்மேல் கையை வைத்தெழுப்பினார். அதிலேதானே வேறொருத்தி பன்னிருவருஷமாகத் தீராத பெரும்பாடு இயேசுநாதர் வஸ்திர விளிம்பைத் தீண்டவே தீருமென்று நம்பிப்பேசாமற்போய்த் தொட்டாள். அந்தப்படியே ஆரோக்கியத்தையும் அடைந்தாள். அந்தச் சுவிசேஷத்திலேதானே மற்றொருவன் வந்து சுவாமி என் வீட்டில் ஒருவன் காலும் கையும் வராமல் கிடக்கிறான். ஆயினும் தேவரீர் அங்கே வரவும் தேவையில்லை. அவனும் இங்கே வந்து உம்முடைய வஸ்திரத்தைத் தொடவும் தேவையில்லை. தேவரீர் இங்கேதானே நின்றொரு வார்த்தை திருவுளம்பற்றவே அவனுக்கு அங்கே ஆரோக்கியமாகுமென்றான். அந்த நம்பிக்கை கண்டு இயேசுநாதர் அதிசயப்பட்டுத் தோத்திரமுஞ்சொல்லி, நீ நம்பினபடிக்கு உனக்காகக்கடவதென்றார். என்றவுடனே அந்த நோயாளியும் ஆரோக்கியத்தை அடைந்தான். இத்தொகைப்பட்ட வர்த்தமானங்கள் பலவும் வேதத்திலெழுதப்பட்டமையால் ஆண்டவர் அளவில்லாத வல்லமையும் தயையும் உள்ளவராயினும் இரண்டை

யும் நம்முடைய நம்பிக்கையளவாகமாத்திரம் செலுத்தி, எப்படி அவரை நம்பினேமோ, அப்படி அவரும் உதவிசெய்யச் சித்தமானரென்பது நிச்சயந்தானே. இதனலல்லவோ ஆண்டவர் நமக்கு நன்மை செய்யத் தந்தயையே காரணமாயினும் அதற்கு நம்முடைய நம்பிக்கையே முகாந்தரமாகச் சாட்டி, தாவீதின் தொண்ணூரும்சங்கீதம் பதினலாம் வசனத்தில் "என் திரு நாம வல்லமை அறிந்தவனுகை என்னை நம்பினதினல் அவனை இரட்சித்துக் காப்பேனென்று கர்த்தர் திருவுளம்பற்றினர்." இதனலல்லவோ கர்த்தரை நம்பினவர்களுக்கு அவர் உதவியும் நிச்சயமாக வேதத்தில் மனிதர் என்னப்பட்டயாவரையும் நோக்கி நீங்களெல்லாரும் ஆராய்ந்துபார்த்துக் கர்த்தரை நம்பினவர்களுக்குள் ஒருவனும் மோசம்போனதில்லையென்று அறிவீர்களாகவென்றெழுதப்பட்டதறிவோம். இதெல்லாம் பார்க்கையால் நாம் எதிலேயாயினும் விசேஷமாய் நம்மோடே மற்றவர்களையும் கரையேற்றப் பிரயாசப்படும் தொழிலில் சாலோமோன் சொன்ன முறையை விடாதிருக்கக்கடவோம். அதேதெனில், "நீ உன் உபாயங்களில் ஊன்றிநில்லாமல் முழு மனதோடு ஆண்டவரை நம்புவாயாக. எவ்வழி போகத்துணிந்தாலும் அவரையே எண்ணக்கடவாய். அப்போது அவரும் உன்னடி வழுவாதபடி நடத்துவாரென்றார்." இதை நாம் மனதிலே நிச்சயித்துத் தேறியிருக்

தோமேயாகில் முந்தி நம்முடைய தொழிலுக்கு எந்த விக்கினம் வந்தாலும் அளவில்லாத வல்லமையுள்ள கர்த்தராலாகும் கருமம் அஃதென்று மனம் தளர்வின்றித் துணிவுவிடாதிருப்போம். என் திறத்தைக்கொண்டு அதை முடிக்கவேண்டியதாகில், அஞ்சிக் கவலைப்படுவது நியாயமாமே. மிக்காரும், ஒப்பாருமில்லாத சுவாமியோவெனில்; சர்வத்துக்கும் வல்லவராகித் தாம் நினைத்ததற்கு எல்லா மனிதரும் பசாசுகளும் ஒருங்குடன்கூடித்திரண்டு பகைசெய்தாலும், அதைத்தாமுடிக்க வல்லவரல்லவோ? ஆகையால், ஆண்டவர் ஊழியத்துக்கடுத்த தொழிலில் எந்த நம்பிக்கைக்குறையினால் அவரை நம்பினவனும் சர்வத்துக்கும் வல்லவனென்னப்படுவான்? இயேசுநாதரை நம்பினவளவில் இராயப்பர் கடந்த கடலும் பாறைக்கோத்ததாகி, அதன்மேல் நடந்தார். அடித்த காற்றுக்கு அஞ்சி நம்பிக்கை தளர்ந்தவுடனே அமிழ்ந்தவும் தொடங்கினார். இதுவுந்தவிர ஒன்றினைமுடிக்க நினைத்தபோதும், நினைத்ததற்கு அரிய விக்கினம் கண்டபோதும்,அதற்கு நம்மால் எடுக்கவேண்டிய உபாயங்களைத் தேடாமுன்னே ஆண்டவர்மேலே பாரமெல்லாம்போட்டு, தளராத விசுவாச நம்பிக்கையோடே அவரை மன்றுடின பின்பு, நாம் அவர் உதவியால் காரியத்தை நடத்தும் முறையை ஆராயக்கடவோம். சிலபேரோவெனில், அவர்களாலும, அவர்க

ளை ஆதரித்த மனிதராலும் ஆனதெல்லாம் செய்து பயன்காணாதேபோனால் ஆண்டவரை நினைப்பார்கள். அதனாலல்லவோ எடுத்த உபாயம் உதவாமலும், பட்ட பிரயாசம் பலியாமலும், தொடுத்த காரியம் நிறைவேறாமலும் வீணாய்ப்போகக்காண்கிறோம். ஆண்டவர் உதவியை முந்தித்தேடாமல் தேடின மற்ற உதவியெல்லாம் சேவகர் கையில் கத்தியில்லாத உறைபோலவும், உழாத நிலத்தில் ஈரமில்லாத விரைப்புப்போலவும், கடலில் விட்ட சுக்கானில்லாக் கப்பல்போலவுமாகிப் பலனொன்றில்லாததாமே. அப்படி வாராதபடிக்கு வேதத்தில் புகழப்பட்ட யோசப்பாத்தென்னும் இராசா சொன்னபடியே, நாமும் கர்த்தரைநோக்கிச் சுவாமி நாங்கள் நடக்கும் முறையை அறியோம். உம்மை அண்ணாந்து பார்த்து நம்புவதொன்றே எங்களுக்கு உறுதியென்று எந்நேரமும் சொல்லிக்கொண்டு தேவ நம்பிக்கையில் தளராதிருக்கக்கடவோம்.

௰உ. அதிகாரம்.

IMPARTIAL SOLICITUDE FOR THE GOOD OF ALL CONDITIONS OF MEN.

பிறருயிர் ஒன்றையேயன்றிப் புறக்கோலத்தைப் பாராதிருத்தல்.

ஆண்டவரைப்பற்றிச் சொன்னபடியே உபதேசிகள் தங்கள் திறத்தை நம்பாமல் கர்த்த

ரை முழுதும் நம்பி நடக்கவேண்டியதொழிய, மனிதரைப்பற்றித் தங்கள் தொழிலை நன்ருய் முடிக்கும் பல முறைகளின் முதலேதென்னில்; மனிதர் புறத்துக்காட்டும் சாதிவேற்றுமையும், செல்வவேற்றுமையும் பாராமல், அவர்கள் ஆத்துமம் ஒன்றையே பார்த்து நடக்கக்கடவர்கள். ஒரு காரணத்தால் ஒரு வயிற்றில் ஒருப்பட மனிதர் சரீரம் சனித்தாலும், தலை, நெஞ்சு, கால், கை, வயிறுமற்ற உறுப்பு வகை வேறுபட உண்டாவதுபோல, மனுக்குலத்திலும் ஒரு தாய் தகப்பன்வழியாக எல்லாரும் பிறந்தாராயினும், லௌகீக உதவியைப்பற்றிப் பல குலவகுப்பு மனிதர் பிறந்ததல்லாதே, ஆண்டவர்தாமே செல்வவகையில் வேறுபடப் பிறப்பிப்பாரென்று காண்போம். ஆயினும், இந்த வேற்றுமையெல்லாம் சரீரத்தையும் லௌகீகத்தையும் பற்றினதொழிய, ஆத்துமத்துக்கும் ஞானத்துக்கும் அடுத்ததல்ல. ஆத்துமத்துக்குச் சாதியுமில்லை, வேற்றுமையுமில்லை. எல்லா ஆத்துமங்களையும் ஆண்டவர் ஒருவர் தாமாக உண்டாக்கிப் புண்ணிய வழியில் தம்மைச்சேர்ந்து மோட்சத்தில் என்றேன்றைக்கும் வாழ்விக்கச் சித்தமானுர். ஆத்துமத்துக்குப் புண்ணியமேயொழிய வேறே செல்வமும் நன்மையுமில்லை. பாவமேயொழிய வேறே தரித்திரமும் கேடுமில்லை. ஆகையால்; இனிதாயுண்டு, வெகுமானமாயுடுத்து, செல்வத்திருந்து, செங்கோலேந்தி ஆள்

பவன் முதலாய், புறக்கோலத்தைப்பற்றிச் செல்வனேன்னப்பட்டாலும், சொன்ன ஆத்தும வகையைப்பற்றி, அவன் பாவியானால் கீழ்க்குலத்தில் பிறந்து தெருவில் இரந்து திரியும் புண்ணியமுடையவற்கு, அவனே நீசனும் வறியனுமென்பது நியாயந்தானே. இந்த நியாயத்தைப்பற்றி நாமெல்லாரும் உபதேசிகள் விசேஷமாய்ப் பிறர் உயிரொன்றையேயன்றிப் புறக்கோலத்தைப் பாராதிருப்பது நல்லதென்றேம். ஆத்துமங்களைக் கரையேற்றப் பிரயாசப்படுவது உபதேசித் தொழிலாகையில், ஆத்துமத்தையொழியப் புறக்கோலத்தைப்பற்றி நடப்பது அக்கிரமம். ஏழைச் சனங்களின் ஆத்துமம் வேறல்ல. அவைகளை உண்டாக்கின சுவாமியும் வேறல்ல. இதிலே வேற்றுமையுள்ளதாகில, அவருக்கு ஏழைச் சனங்களின் ஆத்துமத்தின்மேல் அதிக பிரியமுண்டென்று சொல்லத்தகுமே.

அப்படியே ஸ்நான அருளப்பர் அனுப்பின சீஷர்கள் இயேசுநாதரண்டையில் வந்து, நீர் எல்லாரையும் இரட்சிக்கவந்தவரோ? அதற்கு வேறொருவர் இனிவரத்தகுவரோ என்று கேட்டதற்கு அவரே உலகத்தை இரட்சிக்க வந்த நாதர்தாமேயென்று ஒப்புவிக்கக்குன்றுத அடையாளமாகத் தாம் ஓதுவித்த வேதத்தைத் தரித்திரர்கேட்பது காட்டினார். இதோ எளிதாய்த் தரித்திரர் சத்தியத்தை அநுசரித்து மோட்சவழியில்சேர்வது, ஆண்டவர் தமக்

டொரு விருதாகக்கொண்டார். பூவுலகத்தில் புகழப்பட்ட செல்வர் தம்மைச் சேர்ந்தாலும், சேராதேபோனலும் பாரமல்லவென்றற்போல, இங்கே நீசராக இகழப்பட்ட ஏழைச் சனங்களே அவருக்குப் பிரிய சீஷர்தாமே. குன்றாத சத்தியசோரூபியான கர்த்தர்காட்டின வழி இதுவாகில்,அவரால் அனுப்பப்பட்ட உபதேசிகள் ஏழைச்சனங்களை எண்ணமல், குலத்தில் உயர்ந்து செல்வத்தில் விளங்கின மனிதரைத்தேடுவது நல்லதென்பார்களோ? அர்ச்சேயசிஷ்ட யாகப்பர் இதிலெழுதினதாவது; வேறுபட மனிதருக்குள்ளே மனிதரைப்பிரிக்கும் விசுவாசம் வேண்டாம். அதெப்படியென்றல், உங்களண்டைக்குத் தூய வெண்கலையுடுத்துப் பொன்னழிமுதற்பல அணிகலன்பூண்ட செல்வனும், அழுக்கடைந்த துணியைச்சுற்றின தரித்திரனும் வந்தால், இவனை இகழ்ச்சிசொல்லித் துரத்தி அவனைச் சங்கித்து அணைத்தீர்களாகில், அவர்களுக்குள்ளே வேறுபட இவனும் அவன் நல்லவனென்று தீர்வையிட்டதற்குச் சரியாமல்லவோ? ஆயினும் புண்ணியத்தினல் செல்வராகி மோட்ச இராச்சியத்துக்கு உரியவராகத் தரித்திரரை ஆண்டவர் தெரிந்துகொண்டாரல்லவோ? நீங்களோவெனில்; தரித்திரரை அநுமானமாய் வெறுத்தீர்களென்றர். இதெல்லாம் அர்ச்சேயசிஷ்ட யாகப்பர் சொன்னபோதில் அவனவன் சாதியும் உத்தியோகமும் பாராமல், வேறுபட ஒவ்

வொருவருக்கும் லௌகீகமுறையின்படியே
சங்கிக்கவேண்டாமென்பார்களோ? அல்ல,
அவனவனைத் தன் தன் அந்தஸ்துக்களவாகச்
சங்கிப்பது வேதத்தில் கற்பித்த முறைதானே.
ஆயினும் மனிதர் புறக்கோலத்தைப்பற்றிக்
காட்டும் வேற்றுமையல்லாமல் லௌகீகத்தி
லூன்றியதாகையில், நாமும் லௌகீகமுறை
யில்மாத்திரம் அவர்களை வேறுபடவெண்ணி,
நடக்கவேண்டுமொழிய அர்ச்சேயசிஷ்ட யா
கப்பர் சொன்னபடியே விசுவாசமுதல் ஆத்து
மத்துக்கடுத்த விஷயங்களிலே மனிதருக்குள்
ளே வேற்றுமைசெய்யலாகாது. இப்படியா
கையில் சில உபதேசிகள் எளியவருடைய அ
வஸ்தைக்குப்போனாலும், மேலெழுந்தவாரியா
ய் நாலுவார்த்தைசொல்லி, அவர்களுக்கு உறுதி
யாக ஒருபொழுதும் நில்லாமற்போய்ப்பின்னர்
செல்வத்தில் உயர்ந்தோர்க்கு அற்ப வியாதி
வந்து கேட்டவுடனே ஓடிப்போய்ப் பலநாள்
நீங்காமல் அங்கே காத்திருப்பதென்ன? தரித்
திரரிருக்கும் ஊரில் வருஷத்துக்கொருதரம்
போவதரிதேயாகிப் பொருளின்மேலோர் அக
ன்ற மூலையிற்கிடந்தாலும், அடிக்கடி அவர்க
ளை விசாரிக்கப்போவதென்ன? ஆத்துமங்க
ளைத்தேடினாலோ இருவர் ஆத்துமங்களும் வே
ற்றுமையில்லாததினால் அவர்களைவேறுபடுத்தா
மல் தானும் விசாரிப்பான். இங்கே தனக்கு
ஆதாயம் தேடித்திரியும் உபதேசிக்கும் புறக்
கோலத்தளவாக வேற்றுமைசெய்து தனக்குப்

பிரயோசனம் நம்பினவிடத்தில் வருமென்று அடிக்கடி போய்க் காத்திருப்பான். ஆயினும், இப்படி நடப்பவன் இவ்வுலகத்துக்கு ஊழியஞ்செய்பவனேயொழிய ஆத்துமங்களைத் தேடவந்த இயேசுநாதருக்கு ஊழியமுடிப்பவனல்ல. ஆகையால் இங்கேதான் தேடின அழிவுள்ள பொருளின் பிரயோசனம் கைக்கொண்டாலும், இயேசுநாதர் நல்ல உபதேசிகளுக்கு இனித் தந்தருளும் பலனை இழந்து போவானேனென்பதற்குச் சந்தேகமில்லை.

௰௩. அதிகாரம்.

ON COMPASSION.

அன்புகாட்டல்.

பிறரையும் மோட்சக்கரையிலேற்ற ஆசையுள்ளவன் அவர்களுக்கு உறுதிகளைச்சொல்லுமிடத்தில் அன்பினைக்காட்டுவது அவசியமாய் மிகவும் வேண்டிய உத்தமமுறையாமே. கேட்டவர்களிடத்திலன்பில்லாததாயில் சொன்ன உணர்ச்சிகளும் பலனில்லாததாம். இதிலே பெரியோர் முன் சொன்னதாவது; அன்பில்லாத மனதிற்குரைத்த ஞானம் ஈரமில்லாத நிலத்தில் விதைத்த விதையாமென்றார். ஆகையால் ஈரமில்லாத நிலத்திலிட்ட விரை முளையாததுபோல, அவன் ஈரமில்லாரிடத்தில்

விரிவாய்ச் சொன்ன வேத உணர்ச்சிகளும் வேரிட்டினிதாய் முளைத்துப் பலனுகமாட்டா தல்லவோ? மனதிற்கொண்ட அருவருப்பு அ ரோசிகம் அடைத்த காதிலே விரிவாய்ச் சொன்ன ஞானம் நுழையமாட்டாது. இது இப்படியாகையில் சொன்னதைக் கேட்டவ ரிடத்தில் அன்புண்டாகச் சொன்னவர்தாமே அன்பினைக் காட்டவேண்டும். அன்பு தான் ஒரு வித்தாகி நீ பிறருக்குக் காட்டின அன் புக்களவாக உனக்குப் பிறர் அன்பினைக் கைக்கொள்வாயே. நீ அன்போடே சொன் னதை மற்றவரும் அன்போடே கேட்பார். நீயே வேறே நோக்கமின்றி அவன் ஆத்து மப் பிரயோசனம் ஒன்றினையேபற்றிப் பேசு கிறுயேன்று கண்டால், கொடியனுயினும் பொருந்திக் கேட்பான். நீயே உருகி அவன் செய்த பாவத்தின் கொடுமை காட்டினுல் அவனுங்கேட்டு உள்ளுருகி அழுவான். நீயே அவனுக்குப் பாவத்தினுல் வரும் கேட்டுக் கு அஞ்சினுற்போலப் பேசினுல் அவனும் அதற்குப் பயந்து நடக்கத்துணிவான். அன் பின் ஈரமில்லாதவனேவெனில்; எந்தப்புத்தி சொன்னுலும் பெய்யாமலிடிக்கும் மேகம் போல ஒரு பலனுமின்றி வீண்பிரயாசப்படு வான். எந்தச் சமயத்திலும் பிறர்மேல் அன் பினைக் காட்டி அவர்களுக்கு உறுதிநியாயங் களைச் சொல்வது நல்லதாயினும் விசேஷமாய் அவர்களைக் கோபிக்கவேண்டியவிடத்தில் சி

னத்தோடு அன்புகாட்டல் உத்தம முறையா மே. சிலபேர் அழுக்குப்பட்ட ஸ்படிகபாத் திரத்தை விளக்கக் கல்லாலே தேய்த்து உ டைப்பதுபோல, பாவத்தால் அழுக்குப்பட் டவனைக் கோடிய முறையோடு கல்லால் எ றிந்தாற்போல வெடிப்பாகப்பேசி நிந்தையான வார்த்தைகொண்டு கலந்த தயை ஒன்றும் காட் டாமல் மிகவும் சினந்ததினால் அவன் மனந்தி ரும்பாமல் முறிந்துபோய் ஆங்காரித்து முழு தும் கெடுவது கண்டிருப்போம். ஆக்கினை யாக ஒருவனுக்குக் கால் கை வாங்கவேண் டியவிடத்தில் அதற்குக் காலமும் இடமும் முறையும் ஒன்றும்பாராமல் நிஷ்டூரமாய் வாங் குவனல்லவோ? நீயும் இந்தப்படியே பிறர் செய்த பாவங்களை அறுக்கவேண்டுமோ? ஆ ருத புண்ணால் அழிந்த கையை அறுத்து வியா திஸ்தனைப் பிழைப்பிக்க ஆசையுள்ள வைத் தியன் அதை அறுக்கு முன்னே மெதுவாய்த் தடவி இனிதாய்ப் பேசி அதற்கானகாலமும் முறையுந்தெரிந்து தனக்கு நொந்தாற்போலக் கோடிய தொழிலை அன்போடே முடிப்பது காண்போம். வியாதிஸ்தனும் மிக நொந்தா லும் தன்னைப் பிழைப்பிக்கச் செய்வானெ ன்றறிந்து தான் அவனைக் கோபியாமலும் வரு த்தத்துக்குப் பின்வாங்காமலும் பொருந்தியத னால் நோயும் குறைந்து தன்னுயிரும் பிழைத் து இன்னம் நெடுநாள் இருப்பான். இப் படி நாமும் பாவங்களைப் பகைத்தறுக்கவேண்

டிய முறையிதாமே. இந்த முறையில் வழு வாததற்கு நாமே பாவிகளிடத்தில் அவர்கள் ஆத்துமத்தையும் அவர்கள் செய்த பாவத்தை யும் வேருகப்பிரித்து இவ்விரண்டையும் ஒ ருப்படப்பாராமல், பாவிகள் ஆத்துமத்தைஒரு கண்ணுகவும், அவர்கள் பாவத்தை ஒரு கண் ணுகவும் பார்த்து, பாவங்களைப் பகைப்ப தோழியப் பாவிகளைச் சிநேகிக்கப் பிரயாசப் படக்கடவோம். அதெப்படியென்ருல்; உ யிர்பெறத் தீட்டின சித்திரமாகத் தேவமாதா சுரூபத்தை எழுதின பின்னர் திருமுகத்தில் அ ழுக்குப்பட மைசிதறினதைக்கண்டால் தேவ மாதாவைக் காட்டும் சாயலைக்கண்டு, நாமதை வணங்கிமாசுபடச் சிந்தின மையை வெறுத்து அதை ஒழிக்கப் பிரயாசப்படுவோமல்லவோ? அத்தன்மையே மனிதரெல்லாரும் பாவிகளா யினும் ஆண்டவரைக் காட்டும் சாயலாக உண் டாக்கப்பட்டவர்களென்று நாம் அவர்களைச் சிநேகித்து, அந்தத் திவ்விய சாயலைக் கெடுக்க வந்த பாவத்தைமாத்திரம் பகைத்து, அதை முழுதும் துடைக்க வருந்தக்கடவோம். அப் படித்தானல்லவோ ஆண்டவரும் பாவத்துக்கு ஆக்கினையாக நரகத்தை உண்டாக்கின பின்பு, பாவிகள் அதிலே விழாதபடிக்குத் தாம் பாடு பட்டுக் கொடிய மரணத்தை அடையச்சித்த மானுர். அப்படி நாமும் பாவத்தின் கொடு மை காட்டி அதனை நிந்தையாகப் பகைத்துத் துடைக்கப் பிரயாசப்படுகையில், அந்தப் பா

வத்தைச் செய்தவன்மேல் இரக்கம் காட்டி மிகுந்த அன்போடு அவனை ஈடேற்ற ஆசை காண்பிக்கக்கடவோம். சிலபேரோவெனில், பாவிகளைக் கண்டால் அவர்களை உயிரோடே சுடவும் கூட்டோடே விழுங்கவும் வந்தாற் போல இருகண் சிவப்பநோக்கி வாயுதடாடச் சீறி இடிபோல வெடிக்கப் பேசி, பெரியவர் களைக் கோபிக்கவும் அடிக்கவும் செய்வார் கள். இது வழிதப்பினவர்களை அப்பாலே துரத்து முறையே ஒழிய, அவர்களை நெறியில் அழைத்துச் சேர்க்க உதவும் தன்மையல்ல. தயைமிக்க மனிதனாகிய நீதியை மறைத் தாற்போலக் கிருபைவிளக்கும் இஷ்ட வே தத்தைத் தாம் சிந்தின இரத்தத்தினால் எழு தித்தந்த இயேசுநாதர் நினைவுக்கோத்த முறை யிதாமோ?

சமாரியர்கள் இயேசுநாதருக்கிடம் கோடா மையினால் யாகப்பரும் அருளப்பரும் மிகவும் கோபித்து வானத்தில் நின்று அக்கினி மழை யைப் பெய்வித்து இவர்களைச் சுட்டெரிப்போ மோ? ஐயா, என்று கர்த்தரைக் கேட்டார் கள். அதற்கு அவர் எந்தக் கருத்தோடே தெ ரிந்துகொள்ளப்பட்டீர்களென்றறியீர்கள். ம னுமகனுகப்பிறந்து நாம் ஒருவரையும் கெடுக் கவாராமல் எல்லாரையும் இரட்சிக்கவந்தோ மே என்றார். இதற்கிணையாக இயேசுநாதர் தாமே தந்தயையைக் காட்டத் திருவுளம்பற் றினதாவது; "தப்பிக்காணாத ஆட்டை இ

டையன் எங்கும் தேடி அதைக் கண்டவிடத்தில் அடியாமல் தோளிற்சுமந்து மந்தையில் சேர்ப்பதுபோல, நாமும் பாவிகளைத் தேடி இரட்சிக்க வந்தோமென்றார்." அப்படியே என் மந்தை ஆடுகளை மேய்ப்பாயாகவென்றல்லவோ இராயப்பரைத் தொட்டுக் குருக்களையும் உபதேசிகளையும் இயேசுநாதர் திருச்சபையை விசாரிக்க அனுப்பினார். ஆடுகளை மேய்ப்பதும் ஓரோரிடத்தில் மயிரை அறுப்பதும் இடையன் தொழிலாமொழிய, அதுகளை உரிப்பது இடையனுக்குரியதோ? குருடன் வழிதப்பித்தவறக் கண்டால் அவனைக் கோபித்து அடிப்பாருண்டோ? அவனை அடியாமலும் கையைப்பிடித்து உறுதி சொல்லி வழியிற்சேர்ப்பாரென்றதுபோலப்புத்தி மயங்கி உயிர்க்குருடராகிய பாவிகளுக்கு அன்புகாட்டி மோட்சவழியில் தயையோடு அவர்களையும் கூட்டிக்கொண்டு போகவருந்துவதே நியாயம்.

இங்கே சொல்லப்பட்டதை ஒப்புவிக்க அர்ச்செயசிஷ்ட காற்பென்பவர் கண்ட காட்சி மிகவும் உத்தமமாமே. அஞ்ஞானத்தை விட்டுப் புதிதாய்ச்சத்தியவேதத்தைக் கேட்ட ஒருவன் மற்றொரு அஞ்ஞானி சொன்ன துர்ப்புத்தியால் மயங்கிச் சத்தியத்தை மறுத்துப்போயிருந்தான். அர்ச்செயசிஷ்ட காற்பென்பவர் இதை அறிந்து மிகுந்த கஸ்தியும் கோபமுங்கொண்டு அளவின்றி வருந்தாநின்றார். அன்றிராத்

திரி முறையோடேழுந்து தியானத்திலிருக்கும் போது சொன்ன இரண்டு பேர்களுக்கு ஆக்கி னைவரவேண்டுமென்று கர்த்தரை மன்றுடி எந் நாள்மட்டும் பாவிகள் அஞ்சாமல் வாழ்ந்து திரி வார்கள். எவரும் அஞ்ச உமது நீதியைக் காட் டலாகாதோ! அக்கினி மழைபெய்து இவர் களை எரிக்கலாகாதோவென்று சொல்லிக்கோ ண்டிருக்கையில், அவரிருந்த வீடு நடுங்கிப் பூமிபிளந்து புகை எழும்பி நரகக்குழியைத் திறந்ததாகக்கண்டார். புகையெழ இருளே மண்டித்திறந்த நரகக்குழி வாய் ஓரத்தில் ம யங்கினவனும் மயக்குவித்தவனும் சேர்ந்தி ருக்கவும் குழியினின்று பேய்களே புறப்பட் டு அவர்களை இழுக்கவும் கண்டு, காற்பென் பவர் இதோ விழுவார்களேன்றிருக்கையில் சந்தோஷப்படவே இன்னம் விழாமையில் உள்ளே வருந்தித் தாமே போய் அவர்களை நரகத்தில் தள்ளவேண்டுமென்றுற்போல நின் றுராம். அந்தக் கோபத்தில் அண்ணுந்து பார்த்து வானுலகமும் திறந்து தயாபரரான இ யேசுநாதர் அவ்விருவர்மேல் இரங்கி எழுந்தரு ளிச் சம்மனசுக்கள் திரளாய்ச் சூழ்ந்துவரத் தாமே போய் அவர்களைத் தூக்கிப் பயமில்லாத விடத்தில் சம்மனசுக்களோடே வைத்தார். வைத்தபின்பு காற்பென்பவர் கிட்டவந்து, இப்போது உன் கோபத்தை ஆற்றவேண்டுமா கில் என்னை அடி. இன்னம் பாவிகளுக்காக அடியும், மரணமும் பட ஆசையாயிருக்கிறே

னென்றார். என்றவுடனே கண்டகாட்சியும் மறைந்ததாம். இந்த வர்த்தமானத்தைக்கேட்டுப் பாவிகளாகிய நாம் எல்லாரும் நம்பின மனதில் தேறி, இந்த அதிசயமான தயை எம்மேல் வைத்திருக்கும் கருணைக்கடலோடோத்த சுவாமிக்கு இனி மனம்நோவச் செய்யாதபடிக்கு வருந்துவது நியாயமாமே. இதுவுமன்றியே பாவிகள்மேல் கோபமும், கண்டிப்பும் ஆகாதென்று கண்டுகோள்ளக்கடவோம். இயேசுநாதர்தாமே பாவிகளுக்கு வேண்டிப் பட்டபாடுகள் பற்றாமல் இன்னம் அவர்களுக்காகப்பட ஆசையாயிருப்பதுங்கண்டு நாமும் பாவிகளை இரட்சிப்பதுவேண்டி நிந்தைக்கும், பிரயாசத்துக்கும் பின்வாங்காமல் துணிவது நியாயமல்லவோ? அவர்களுக்கு அன்புகாட்டினதும் போதாமல், அவர்களால் நிந்தைப்பட்டாலும் பித்துமிஞ்சிமயங்கின மகன் கையில் அடிபட்ட தாயைப்போல, மனதில் குறைகாணாமல் அதிகமாயிரங்கி அவர்கள் மயக்கத்தைத் தீர்க்கப் பிரயாசமெல்லாம் படவேகடவோம். இந்தப்படியாகச் செய்யப்படும் கருமம் சினத்தின் முறையால் முடியமாட்டாதே. பாரைக்கூடாடாத பாறை பச்சைமரத்தின் வேருக்கூடாடிவிடும் என்பாரல்லவோ? இருப்புப் பாரையால் அசையாத கற்பாறையில் பச்சைமரத்தின் வேரே நுழைவதுபோல, இடித்து வெகுண்ட சினத்தோடாகாமையில் அழுவாரோடு அழுது, நொந்தாரோடே நொந்து

காட்டின அன்பினுல் பிறர்மனமே கல்லாயி னும் இளகிச்சோன்ன ஞான உணர்ச்சிகளுக் கு இடம் தந்து உருகித்திரும்பச்செய்வது எளி தாம். ஒரு மகாத்துமாவானவர் யாவனொரு வன் கனபாவத்தைச்சேய்ததறிந்தால் உடனே அவனைத் தேடி நீ செய்ததேன்ன? இந்த ஆங் காரம் உனக்குவந்ததேது? சுவாமி ஆக்கினைக் கு அஞ்சத் தேவையில்லையோ! என்று தாம் அவனைக் கண்டித்துச் சினத்தைக் காட்டா மல், தாம் அவனுக்கிரங்கி ஐயோ! எப்படி உனக்கு இந்தக் கேடு வந்தது! சுவாமிக்கு உகந்தவனுய் நடந்த நீ அவருக்கு ஆகாதேபோ னுயோ? முடியாத பேரின்ப மோட்சத்தை அடையச் சத்தியவேதத்தைக் கைக்கோண்ட நீ, இந்த அற்பமுகாந்தரமாக அவியாத தீயேரி நரகத்தில் விழுந்து வேவவிருக்கிருயோ! புண் ணியவானேன்று திருச்சபையில் புகழப்பட்ட நீ,இந்த நிந்தைப்படக் காரணமேதேன்று மிகு ந்த அன்போடு இதையும் பலவற்றையும் அழு து சோல்லுவார். அவைகளைக் கேட்ட பாவி களுங்கூட அழுது தாமதமின்றிப் பாவத்தை விட்டுத் திரும்பவும் காண்பார். அப்படி யே நாமும் பாவத்தின்மேலே பகையும், கோபமும், பாவிகள்மேல் பட்சமும், இரக் கமும் காண்பித்தால் அவர்களைத் திருப்புவது எளிதாம்.

மோசே என்பவர் நாற்பதுநாள் மலைமே ல் உப்வாசமாயிருந்து கர்த்தர்கையில் எழு

தப்பட்ட வேதக்கற்பலகையை வாங்கி இறங்கும்போது கீழிருந்த சனங்கள் விக்கிரகத்தை உண்டாக்கிப் பொய்யான தேவனை வணங்குவதைக்கண்டு பட்ட கஸ்தியைப் பொறுக்க மாட்டாமல் கையிலேந்திய இரு கற்பலகையை உடைத்தார். இதோ அவர்கள் செய்த அக்கிரமத்தின்மேல் அவருக்கு வந்த கோபமும், பகையும் அதிகரிக்க அந்தப் பாவிகளைச் சபித்து இழிவுபடக் கண்டித்துக் கோபித்தாரென்று இருக்கிறீர்களாக்கும். ஆயினும், இது நாம் நடக்குமுறையாமொழியத் தேவ ஞானத்தில் தெளிந்த தீர்க்கதரிசியாகிய மோசே செய்த தன்மையல்ல. அவர்கள் பசாசு ஆராதனையால் கட்டிக்கொண்ட பாவத்தின்மேல் பகையும், கோபமுமல்லாதே அந்தச் சனங்களுக்கு இரங்கி உடனே அவர்களுக்கு வேண்டி, ஆண்டவரை மிகுந்த ஆசையோடே பிரார்த்தித்து, சுவாமி என்னைக் கைவிட்டாலும் அவர்களைக் கைவிடவேண்டாமென்று அழுது மன்றாடி, கர்த்தர் அவர்களுக்கு அந்தப் பாவத்தைப் பொறுக்கச் செய்தார். இதுவே மெய்யான ஞானம். இதுவே மனிதரைக் கரையேற்ற மெய்யான ஆசை. ஆயினும், ஒரோரிடத்துச் சனங்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டியதுதானே. பழம்புண் சுட்டாலொழிய ஆறாது. கலப்புள்ள பொன் உலையிலொழியக் கல்மசம் விடாது. அப்படி நெடுநாள் பாவத்தில் பழகினவர்களை

யும் அன்புகாட்டினதினுல்பாவக்கல்மசங்களை விடாதவர்களையும் சினந்து கண்டிப்பது நியாயந்தானே. ஆயினும், அவர்களைச் சினந்து சுட்டாலும் அவர்களைப்பிழைப்பிக்கும் ஆசையால் செய்வதென்று காட்டுவதொழிய வேறுவிதமாய் அவர்கள்மேலே அரோசிகமும்,பகையும் காட்டாதிருக்கக்கடவோம். ஈரமிகுதியால் பயிர்கள் வெளுத்துக்கெடுவதுபோலப்பாவிகள்மேல் இரக்கமிஞ்சி அவர்கள்செய்த பாவம் பாரமல்லவென்று இராமல், எப்பொழுதும் பாவத்தின்மேல் பகையும், துவேஷமும் தோன்றச் செய்வோம். இதுவுமிஞ்சிப்போய்க் கொடுங் கோடையில் பயிர் கெட்டுக் காய்வதுபோலப் பாவத்தை ஒழியப் பாவிகளை வெறுத்ததாகக் காட்டவேண்டாம். இதில் எப்படியாகிலும் இரக்கம் மிஞ்சினுலும் கோபம்மிஞ்சலாகாது.

அர்ச்செயசிஷ்ட சின்னப்பர் மேற்றிராணியாயிருந்த தீமோத்தேயருக்கு எழுதினதாவது; "உனக்கு வயதில் மூத்தவனைக் கண்டிக்க வேண்டாம். பிதாவைப்போல அவனை மன்ருடின தன்மையில்புத்திசோல்வாயென்ருர்." அவருக்கு மீளவும் சின்னப்பர் வேருரிடத்தில் "சத்தியத்துக்கு விரோதஞ்செய்கிறவர்களை முதலாய்த் தாழ்ச்சி அடக்கத்தோடே கண்டிப்பாயென்ருர்." இந்த வணக்கமும், இந்தப் பட்சமும் உபதேசிகளிடத்தில் சனங்களுக்குப் புத்திசோல்லும்போதிருந்தால் இவர்களும் தந்தொழிற்குறையின்றி நிறைவேற்றுவார்

கள். மற்றவர்களும் சொன்னதைப் பொருந்திக்கேட்டுக் கூடக் கரையேறுவார்கள்.

௰௪. அதிகாரம்.

ON DISINTERESTEDNESS.

பிறர் பொருளாசை காட்டாதிருத்தல்.

உபதேசிகள் செய்யும் தேவதொழிலில் பலனைத்தரும்படிக்கு எவ்வளவாகச்சொன்னதன்மையிலுதவுங்காட்டின அன்பு அவ்வளவாக விக்கினமாகுங்காட்டின பொருளாசைதானே. தம்மை வெறுத்துச் சொன்னதைக்கேளாதவர்கள் தங்கைப்பொருளைப்பறிக்கச்சொன்னதைக்கேட்பார்களோ? அவர்கள் கரையேற்றத்தைப்பற்றிப் பேசுகிறாயென்று காட்டவல்லவோ அவர்களுக்குஅன்புகாட்டவேண்டியதென்றோம். ஆயினும் அவர்கள்கைப்பொருளாசை காட்டினாயாகில், என்ன சொன்னாலும், என்ன பட்சத்தைக் காட்டினாலும், உன் பிழைப்பொன்றைத் தேடுகிறாயென்றிருக்குமொழிய, தங்களைப்பற்றிப் பிரயாசப்படுகிறாயென்று, நினைப்பார்களோ? ஆகையால் பொருளாசை காட்டினவன் மெய்யான அன்பு காட்டவும் மாட்டான். இதுவுமன்றியே நீ பொருளாசையைக் காட்டின மாத்திரத்தில் உன்னை ஒருவருமெண்ணமாட்டான். வயி

று பிழைக்கவல்லவோ திரிகிருயேன்பார். இவன் ஞானமேல்லாம் வயிறுதானேயேன்பார். உன்னைக்கண்டவுடனே ஏதாகிலும் கேட்க வந்தானேன்று முகமும் காதும் சேவ்வேகோடுக்கமாட்டார்கள். கோடும்புலித் தோலைப் போர்த்து, புல்லை மேய்ந்த கழுதைபோல, நீயும் காரணக்குருவாய்ப் பரம ஞானங்களைச் சோல்லிக்காட்டின காரியத்தை முடிக்க ஆசைகாட்டினையாகில், உன்னை யேண்ணவும், உன் வார்த்தை கேட்கவுமாட்டாமல், உனக்கு நிந்தை விளைவது நிச்சயம். அர்ச்சேயசிஷ்ட சவேரியார் உபதேசம் சோல்லிக்கோண்டு திரியும்போதில், ஒரு இராச்சியத்திற்சேன்று, இராசா முன்பாகச் சத்திய வேதத்தை ஒப்புவிக்கப் புல நியாயங்களைத் தேளிவாய்ச்சோன்னபின்னர்; அந்த இராசா தன் காரியக் குருக்களைப்போலச் சவேரியாரையும் எண்ணி, தனக்கு ஏதாகிலும் வேண்டுமேன்றல்லவோ, இதேல்லாம் இங்கே சோல்லவந்தாரேன்று திரளாய் அவருக்குத் திரவியங்களைக்கோடுத்தனுப்பினன். அதற்கு சவேரியார் நானே உங்களுக்கு அழியாத பாக்கியங்களை விளைவித்து, ஆத்துமங்களைக்கரையேற்ற வந்தேனேழிய அழியும் உங்கள் சேல்வங்களைத் தேடவந்தேனேவேன்று, வந்ததேல்லாவற்றையும் மறுத்தார். அதைக் கண்டு இராசா மிகவும அதிசயித்து அதுவே மேய்யான வேதமேன்று தேறித்தேளிந்தான். இதோ நேடும் பிரசங்கம் அடை

யாத பலனைப் பொருள் வெறுப்பு அடைந்தது கண்டோம். இப்படிப்பட்டவனை அனைவரும் எண்ணிக்கேட்பார்கள். இதுவும் தவிர லௌகீகப் பிரயோசனத்தின்மேல ஆசையுண்டாகில், நீதான் வேண்டிய முறையோடேவர்க்கும் ஆன புத்திகளைச் சொல்லவுமாட்டாயே. ஏழைச் சனங்களை மறந்து பிரயோசனம் கிடைக்குமிடத்துமாத்திரம் அடிக்கடி போவாய். இவர்களுக்கு முதலாய் முகத்துக்கேற்கப் பேசுகிறதொழிய உன் தொழிற்கடனைச் செலுத்தமாட்டாய். இவன் உனக்கு உதவிஞனென்று நினைக்கவும், அவனினி உதவுவானென்று நம்பவும், அவர்கள் மனமே முறியாததற்குக் கண்ட குற்றத்தை மறைத்துக் கண்டியாமல், முகநகப் பேசிக் கூட நரகத்தில் அவர்களை இழுத்துக்கொண்டு போவாயென்பது எனக்கு அச்சந்தானே.

அரசர் முதலாகமத்தின் பன்னிரண்டாம் அதிகாரத்தில் இஸரவேல் சனங்களைத் தலைவனாக நடத்திக்கொண்டுவந்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலென்பவர் எல்லாச் சனங்களையும் கூட்டி, சிறுவயது துவக்கி இந்நாள்வரைக்கும் உங்களை நடத்திக்கொண்டுவந்த நானல்லவோ, இதிலும் அற்பமாகிலும், ஒருவன் கைப்பொருளாசைப்பட்டேனோவென்றார். இல்லையென்று எல்லாரும் சொன்னதின்மேல் இதற்கு ஆண்டவர் சாட்சியோவென்றார். சாட்சிதானென்று ஒருங்குடன் அனைவரும்

கூப்பிட்டார்கள். இது இப்படியானல் ஆ ண்டவர் வார்த்தையாக நான் சொன்னதைக் கேளுங்களென்று சர்வேஸ்வரன் அவர்களுக் குச் செய்தருளின சகாயங்களையும், அதற்கு அவர்கள் செய்த குற்றங்களையும் கண்டிப் பாய்க்காட்டி, அதனல் அனைவரும் அஞ்சி, மனம் நொந்தழுது, தங்கள் குற்றத்தை ஆண் டவர் பொறுக்கும்படிக்கு வேண்டிக்கொள் ளச்சொல்லி மன்றாடினார்கள். இதுவுந் தவி ர அவர்கள் ஆண்டவருக்கும், சாமுவேலென் பவருக்கும் அஞ்சா நின்றார்களென்றெழுதின தாமே. இதோ பிறர்பொருளுக்கு ஆசைப்ப டாதவன் தானும் கூசாமல் பேசுவான். மற் றவர்களும் அவன் சொன்னதைப் பலன க்கொள்வது மன்றி, அவனுக்கு அஞ்சி வ ணங்குவார்களென்றும் கண்டோம். அந்தப் படியே நீ பொருளாசை காட்டாதேபோனல், மற்றவரும் உன் அவசரத்தைக்கண்டு உனக் கு அதிகமாய் உதவ இரங்கித் துணிவார்கள். மோட்சத்தின் மேலான திரவியங்களைத் தே டச்சொல்லி, அவைகளை அடைய வழிகாட் டிக்கொண்டு திரிகிறவன் இப்பூவுலகின் நீசப்பொருள்களை ஆவலோடே தனக்குத் தே டுவது ஈனமென்று மற்றவர் அப்படிப்பட்ட வனை வெறுத்து, அவன் காட்டின இன்மைக் கிரங்கமாட்டார்கள். உன் அவசரத்தை எண் ணமல், அவர்கள் ஆத்துமங்களைக் கரையேற் றக் கருத்துமாத்திரம் காட்டினையாகில், கோடி

E

யராயினும் இப்படிப்பட்ட புண்ணியத்தை எண்ணுமலும் தங்களுக்கு வேண்டித் தம் பிழைப்பைப் பேணுதவர்க்கு இரங்காமலும் இருக்கமாட்டார்கள். ஆகிலும், மனிதரெல்லாம் பாராதேபோனுலும்,ஆண்டவர்தாமே இரக்கமாய்ப்பார்த்து,தமது ஊழியத்தை நன்ருய் நிறைவேற்ற உலக நன்மைகளைத் தேடாதவனுக்கு நினையாதவழியால் செல்வங்களை விளையச் செய்வார். பரலோக இராச்சியத்தைமாத்திரமே தேடுங்கள். அதின் பின்னர் மற்றதெல்லாந்தானே வருமென்று இயேசுநாதர் திருவுளம்பற்றின வாக்கியம் தப்புமோ? சாலமோனென்பவருக்கு ஒருநாள் ஆண்டவர் காண்பித்து உனக்கு வேண்டுவதைக் கேளென்ருர். அதற்கு அவர் உம்முடைய பிரசைகளை நடத்த ஞானமே வேண்டுமென்று கேட்டார். அப்பொழுது ஆண்டவர் மிகவும் சந்தோஷப்பட்டு, நீ உலகச் செல்வங்களைக் கேளாமல் ஞானமே கேட்டதினுல், உயர்ந்த ஞானத்தைத்தந்து நிகரில்லாத பொருட் செல்வங்களையும் தருவேனென்ருர். இப்படி நாமும் தேவதொழிலிலே நிந்தைப்படக் கீழே தாழ்த்தி, நீசப்பொருளை ஆசைப்படாமல் ஆண்டவர் தோத்திரமும், மனிதரீடேற்றமும், ஒன்றைத்தேடித் திரிந்தோமாகில், இதை அடைந்து நமக்கு மோட்சத்தில் பெரும் பலனைக் கைக்கோள்விப்பதுமன்றி இவ்வுலக நன்மையிலும், குறையில்லாதபடிக்குச் சர்

வேஸ்வரன் தயை செய்வார். உபதேசிகள் செய்யுந்தொழிலோ தேவ தொழிலாகையில், அதனைக்கொண்டு தேவபலனைத் தேடவேண்டுமொழிய மற்றெல்லாம் அதற்கு ஒவ்வாததென்று வெறுத்து எண்ணுதிருக்கக்கடவோம். சொன்னதன்மையால் உபதேசிகள்பிறர்பொருளாசை காட்டாதிருப்பது மிகவும் வேண்டிய முறையாம். ஆயினும் மற்றவர்கள் தங்களுக்குப் புத்திசொல்ல,உபதேசிகள் வந்தவிடத்தில் அவர்களைக்குறையில்லாமல் இயன்றமாத்திரம் வணக்கத்தோடேயும், ஆசையோடேயும்பராமரிக்கக்கடவர்கள். உங்கள்வீட்டு மாட்டுக்கு மருந்துகொடுக்க வந்தவனும், உறவின் முறையாருடைய ஓலைகொண்டு வந்த பறையனும்,இவ்வகையாயின்னுமுள்ள பலரும் உங்களிடத்தில்வந்து பட்டினியாய்ப்போகப் பார்ப்பீர்களோ? உங்களுக்கு மோட்சவழியைக்காட்டவும், உங்கள் பாவநோய்க்கு மருந்திடவும் உங்கள் ஆத்துமங்களைக் கரையேற்றவும் வந்த உபதேசியைமாத்திரம் விசாரியாததென்ன? உபதேசி வயதில் உங்களுக்கு இளையவனென்றும், குலத்தில் உங்களுக்கு அற்பனென்றும், செல்வத்தில் உங்களுக்கு எளியவனென்றும் பார்க்கவேண்டாம். உபதேசியாவதற்கு முன்னே அவனிருந்த தன்மையை நினையாமல், இயேசுநாதர் அவனைத் தெரிந்திட்ட உத்தியோகத்தினால் அவன் மனிதனாகவும் உங்கள் ஆத்துமங்களைக் கரையே

ற்ற அனுப்பப்பட்ட மேற்றுணையாகவும் உங்களுக்கு ஒரு பிதா ஒரு குருவாகவும் உபதேசியையெண்ணிச் செய்முறையோடே வணங்கி அவருக்குக் கீழ்ப்படியவும் உங்கள் ஊரில் வந்தால் ஒருவனொருவனோடு இசைவுகொண்டு தன் தன் வீட்டில் அழைத்து இயேசுநாதர் அனுப்பின மனிதனென்று இயன்றமாத்திரம் பூச்சியத்தோடேயும் ஆசையோடேயும் பராமரிக்கவும் கடவீர்கள். இதிலே நமக்கென்னவென்று அசட்டையாய்க்கிடந்துவந்த உபதேசியை எண்ணுதவனைக் கண்டேனுகில், நானும் அவன் விசுவாசத்தை எண்ணுதிருப்பது நியாயமாமே. இயேசுநாதர் அப்போஸ்தலரை அனுப்புமிடத்தில் திருவுளம் பற்றினதாவது; ஓரூரில் சென்றவளவில் வீட்டுக்குவீடு இரக்கும்படி திரியவேண்டாம். அழைத்தவனிடத்திலிருந்து வைத்ததை உண்பீர்களாக. ஆயினும் இதிலே ஒருவரும் உங்களைக்கைக்கொள்ளாதேபோனுல், உடனே புறப்பட்டு அந்த ஊர்த்தூள் முதலாய் ஆகாதென்று உங்கள் பாதரட்சையை உதறிப்போட்டுப் போவீர்களென்றார். இப்படி உபதேசிகள் செய்தால்தான் அவர்கள் தேவதொழிலின் மகிமையைக் காப்பார்களொழியப் பிறர் பொருளாசைகாட்டி அங்கங்கே நுழைந்து தங்கள் எளிமையைச்சொல்லிப் பலவற்றையுங்கேட்டுக்கொண்டு திரிந்தால், தங்களையும் தங்கள் தொழிலையும் கீழ்ப்படுத்தி மனிதராலும் ஆண்

டவராலும் நிந்திக்கப்படுவார்களென்பது நிச்சயந்தானே.

௰௫. அதிகாரம்.

ON THE CHOICE OF A PROPER PLACE AND CONVENIENT SEASON.

இடமும் காலமும் தெரிதல்.

இப்போது இதிற்சொல்லிப்போகிற முறையில் தப்பினால் இன்றைவரைக்கும் சொன்னதெல்லாம் நினைத்தபடிக்கு உதவமாட்டாது. எந்தத்தொழிலைச் செய்தாலும் அதற்கதற்குரிய இடமும் காலமும் தெரிந்துகொள்ளவேண்டியதாமே. கரைமேல் தாமரையும் நடுக்குளத்தில் சண்பகமும் நட்டால் இரண்டும் வளர்ந்து மலர் காணப்படுமோ? அப்படியே காலம் தப்பியிட்ட பயிர் நன்றாய் விளையாதல்லவோ? ஆகையால் உபதேசித்தொழில் அரிய தேவதொழிலாயிருக்குதலால் அதைப்பலனாக முடிக்கும்படிக்கு நன்றாயிடமும் காலமும் தெரிந்து நடக்கவேண்டிய சிறித்து முறைகளை இதிலே வெளிப்படுத்துவோம். ஆகையால் முந்தமுந்த எல்லா இடமும் ஒன்றாய்ப்பாராமல் சிலர்க்கு நயமும் சிலர்க்குப்பயமும் காட்டவேண்டியதென்றறியக்கடவீர்கள். சூரியன் கதிர்பட்டுறைக்கத் தாமரை மலரும். இடிமழைமுகத்து முல்லை மலரும். ஆகையால்

அவனவன் குணத்தை அறிந்து பேசவேண்டியது. இரும்பு காய்ந்த பருவத்தில் அதைக் கொல்லன் அடிப்பான், காய்ந்த வெள்ளியைத் தட்டான் ஆறவிட்டடிப்பானல்லவோ? முன் சொன்னபடி எல்லாரையும் கரையேற்ற மெய்யான ஆசை நமக்கு உண்டாகில் அவனவன் குணத்தை ஆராய்ந்து அதற்கதற்குரிய முறையால் சாய்ந்துபோய் ஒருவனைத்துதித்து மற்றொருவனைக் கண்டிக்கவே, இவனைத்தாழ்த்தி அவனை உயர்த்தவே எல்லாரையும் கரையேற்ற வருந்துவோம். இந்த முறையைப் பாராமல் எல்லாரையும் ஒருசீராய் நடத்தினோமாகில் இவனை இரட்சித்தவழியால் அவனை முழுதும் கெடுத்துப் பாவத்தில் அதிகமாய் அமிழ்ந்தச்செய்வோம். பாவிகளைக்கண்டிப்பது உங்களுக்குக் கடனோ? அல்ல பாவிகளைத் திருப்ப வருந்துவதே கடன். கோபத்தைக்காட்டின இடத்தில் அவன் முழுதும் அழிந்து கெடுவானென்று கண்டால் பட்சத்தைக்காட்டித் திரும்பும் வழியைக் காட்டக்கடவீர்கள். பச்சைமரத்தின் பட்டை கீறப் பாலுசமென்னும் தயிலம் ஒழுகுமாயினும், மரத்தால் செய்த கத்தியைக் கொண்டு கீறவேண்டியதாம். இருப்புக்கத்தியால் கீறினல் தயிலம் ஒழுகாது. மரமும் உடனே பட்டுப்போம் என்பார்கள். இதை அறிந்தும் ஒருவன் இருப்புகத்தியால் மரத்தைக் கீறினது கண்டோமாகில், அவன்

தன் தொழிலை நன்ருய்ச் செய்தானென்றும், தன் கடனைத் தீர்த்தானென்றும் சொல்லுவோமோ! பின்னையும் இயேசுநாதர் தாமே ஒருவன்செய்த குற்றத்தினுல் அவனுக்கு உறுதிசொல்லத்தேடவேண்டிய இடம்இன்னதென்று குறித்தார். அதெப்படியெனில்; நீயும் அவனுமாகத் தனித்திருந்து அவனுக்குப் புத்திசொல்வாயாகவென்ருர். இந்தக்கற்பனைக்கு எதிராய்ச் சிலபேர் உபதேசிகள் முதலாய் ஒருவனுக்கு உறுதிசொல்லுமுன்னே அவன் குற்றத்தை ஊரெங்கும் தூற்றிக்கொண்டு திரிவார்கள். சிலரோவெனில் நாலுபேர் கூடியிருக்கையில் அவனுக்கு நிந்தையும் வெட்கமுமாகுமென்று பாராமல் அவனைக் கண்டிப்பார்கள். அப்படிப்பிறர்பாவத்தைத்தீர்க்கத் தாங்களே பாவங்களைக் கட்டிக்கொள்வதொழியப் பிறர் பாவங்களை நீக்குவதற்கு வழி இதுவாமோ? பிறருக்குப் புத்தி சொல்லக் கடனுண்டானுல், அவர்களுக்கு அவகீர்த்தியும் நிந்தையும் விளைவிக்க ஆருக்காகிலும் உத்தாரமுண்டோ! எல்லாரும் அறிந்த குற்றமாயினும் முந்தி இயேசுநாதர் கற்பித்தபடியே தனியேயிருந்தவனுக்குப் புத்திசொல்லியவன் தான் சபையில்வந்த ஆவலாதியே பரிகரிக்கச்செய்வது முறையே. அதற்கு அவன் இணங்காதேபோனுல், ஒருவர் இருவர் முன்பாகக்கண்டிக்கலாம். இதுவும் உதவாதகாலத்தவன் குற்றத்தைச் சபையில்வைத்துத்

தெண்டிப்பது நல்லதென்று இயேசுநாதர் படி ப்பித்தார். இதிலே மிகவும் எச்சரிக்கையா யிருக்கக்கடவோம். இல்லாவிட்டால் பிற ருக்கு உதவாமல் நாமே பல பாவங்களைக் கட்டிக்கொள்வோமென்பது நிச்சயந்தானே. இடத்தைத் தெரிந்துகொள்வதுபோல அதற் குரிய காலமும் இன்னதென்றறிந்து காரியத் தை நடத்தக்கடவோம். சிலபேர் செய்கிற தைப்பார்க்கில் பற்றின பாவநெருப்பை அவி க்கப்போகாமல், அதை வளர்க்கத் துருத்தியா ல் ஊதினாற்போலாகுமே. இவர்க்கு ஆங்கா ரம் அவர்க்குக் கோபம் பொங்கி எரியும்போ து நீ போய்க்கண்டித்தால் கோபத்தாலும் ஆங் காரத்தாலும் மயங்கிக்கிடக்கிறவன், நீ சொல் லும் நியாயங்களைக் காண்பானோ? இல்லை யே. அந்நேரத்திலே உன் கண்டிப்புப்பொ றுக்கமாட்டாமல் அதிகமாய்க்குதித்து முழு தும் கெடுவானேயொழிய, தன் குற்றத்தைக்கண் டு திரும்பமாட்டான். அந்தச்சமயத்தில் அ வனுக்கு ஏற்றதைப் பேசிப்போங்கின ஆங் காரமும், கோபமும் தணிந்தபின்பு, அவன் செய்த குற்றத்தைக் காட்டினால் அவனும் அதைக்கண்டு நாணிச்சொன்னபடியெல்லாம் கேட்பானல்லவோ. இப்பூவுலகத்தில் வந்த முதற்பாவத்தைக் கண்டித்த ஆண்டவர் தா மே அதிலே நாமும் இத்தொகைப்பட்ட சம யங்களில் நடக்கவேண்டிய முறையைக் கா ட்டினார். அதெப்படியென்றால்;

ஆதித்தகப்பன் பாவத்தைச் செய்தபோது, கூடநின்ற ஆண்டவர் உடனே காண்பியாமலும், கண்டியாமலும், அவன் தான்செய்த பாவத்தைக் காணவும், நிருவாணத்தோடிருக்கிறதைக் கண்டு நாணவும் பொறுத்து, பின்பு தாமே காண்பித்து அவனைக்கண்டித்துத் தண்டித்தார். இதோ பிறருக்கு நன்மையாக நடக்கவேண்டுமானால், நாமும் அவர்களுக்குப் புத்திசொல்லத் தெரிந்துகொள்ளவேண்டிய காலமிதுவே. மீளவும், எந்த விஷயத்திலாயினும் சமயத்தில் செய்த உதவி பெரியதென்பாரல்லவோ. நோய்வந்த ஆரம்பத்தில் ஓர் அற்பமருந்தினால் தீரத்தகுவதானாலும் அந்தச் சமயந்தப்பி நோய்முற்றி விஷங்கொண்டதாகில், எவராலும் தீர்ப்பதற்கு அரிதாம். வந்த வெள்ளம் அணையை அறுக்கத் துவக்கும்போது சற்று மண்போட்டு அதைத் தாங்குவது எளிதாம். அந்தச் சமயம் தப்பி ஒரு சாண் வழியால் புகுந்த தண்ணீர் அணையை முழுதும் கரைத்து இடித்தபின்பு, அதைப் பழையபடி கட்டுவது எவராலும் அரிதல்லவோ? அப்படி ஒருவன் விசுவாசத்தில் தளர்ந்த நினைவுகொண்டதை அறிந்தவுடனே அவனைக் கரையேற்ற ஆசையுள்ள உபதேசி மற்றதெல்லாவற்றையும் விட்டு அவனண்டைக்குப்போய் நாலுவார்த்தை உறுதியாகத்தேற்றிச் சொன்னால் அவனும் எளிதாய் நிற்பான். அந்தச் சமயத்தில் இந்த உதவியில்லாவிட்டால்

ஆண்டவுரைக் கைவிட்டுச் சத்தியவேதத்தை மறுத்து முழுதும் கெடுவான். அதின்பின்பு அவனைத் திருப்புவதெளிதோ? அப்படி ஒருத்தி தன் கற்பு மாசுபெற நிறையில்லாத சிநேகத்தைப் பிடிக்கும்போது உபதேசியுடனேபோய்த் தாங்கினாற்போலாவாள். நியாயங்களைச் சொன்னாலவளும் வழுவாமல் நிற்பதரிதல்ல. ஆயினும் தன்கற்புக்குக்காவலாய்நின்ற நாணத்தைப்போக்கி முழுதும் காமத்தில் அழுந்தின பின்னர்,என்னசொன்னாலும்,அந்தப் பழக்கத்தை விடுவதரிதாம். எல்லாரையும் மோட்சக்கரையேற்ற மெய்யான ஆசையுண்டானால், இப்படிப்பட்ட சமயங்களைநாடித் தாமதமின்றி எவர்க்கும் உதவப் பிரயாசப்படுவோமல்லவோ? இதற்கு நாம் துணியும்படிக்குப் பழைய வேதத்தில் ஆண்டவர் கற்பித்ததைச் சொல்லிக் காட்டுவோம். அதேதெனில்; உயர்ந்த கோபுரத்தின்மேல் முறைமுறையாய் ஒருவன் ஓயாமல் சுற்றிப்பார்த்துக் காத்திருக்க, இவன் சத்துருக்கள் மொய்த்துவருவதைக் கண்டால், குதித்ததோரடையாளத்தைச் செய்ய அதைக் கண்டு, அங்கங்கே பிரிந்து, காட்டில் வேலை செய்திருந்த யாவருடனேயும் கோட்டையில் நுழைந்து தப்பிவர அவன் அடையாளத்தைச் செய்தாலும் தம் வேலையைவிடமாட்டாத சிலர்அகப்பட்டுப்பகைவரால்பட்டிறந்தால்,அது அவர்கள் குற்றந்தானேயாகிலும் காவலாய்நின்றவன் அடையாளம் செய்யாமையால் யாவ

ஞெருவன் வெட்டுண்டுபோனல் அந்தக் காவ
ற்காரன்தானே இவன் சேத்த பழிகோடுப்பா
னேன்று கர்த்தர் கட்டளேயிட்டார். இப்படி
த்தமது திருச்சபையில் இயேசுநாதர் உபதேசி
களேத் தூங்காத காவலாக நிற்கவைத்தார்.
ஆத்துமங்களேக் கெடுக்கத்திரியும் பசாசுக்கள்
சோதனேகோண்டுவருவதை ஆராய்ந்துபார்த்து
உடனே அடையாளம் தந்தாற்போலச் சனங்
களுக்கான உறுதிகளேச் சோல்லக்கடவர்கள்.
சோன்னதைக் கேட்கமாட்டாதவன் தானே
கெடுவான். உபதேசிகள்தாமே ஆனசமயத்
தில் புத்திசோல்லாததினுல் யாதோரு ஆத்து
மா மோசம்போனுல், உபதேசிகளிடத்திலல்
லவோ ஆண்டவர் பழிவாங்குவார். அப்
போது பிறர் செய்யும் பாவங்களுக்கு உப
தேசிகளுங்கூடக் கணக்குச்சோல்ல இருக்கி
ருர்கள். அப்படி ஆத்துமாக்களே விசாரிக்
கக் கடனுள்ள யாவர்க்கும் எசேக்கியேலே
ன்ற தீர்க்கதரிசி வாயினுல் ஆண்டவர் திரு
வுளம்பற்றினதாவது; என் திருச்சபையில்
உன்னேக் காவலாக வைத்தேன். எவர்க்கும்
என் வசனங்களே அறிவிக்கக்கடவாய். பாவி
சேத்துக் கெடுவானேன்று நான் சோல்லவே,
அவன் பாவத்தைவிட்டுத் தப்பும்படிக்கு நீ
அவனுக்கு அதை அறிவியாததினுல் அவன்
திரும்பாமல் சேத்தால், அவன் ஆத்துமப் பழி
யை உன்னிடத்தில் வாங்குவேனேன்ருர்.
இதேல்லாம் இப்படியிருக்க, தன் கையில்

ஒப்புக்கொடுத்த சனங்கள் பசாசின் தந்திரத்
தால் கெடுவதைக்கண்டு எனக்கென்னவென்
றிருக்கும் உபதேசிகள் தந்தொழிற்கடனை அறி
யாதவர்களும், ஆண்டவர் ஆக்கினைக்குச்சற்
றும் அஞ்சாதவர்களுமாகவேண்டுமல்லவோ.

௰கூ. அதிகாரம்.

ON BECOMING ALL THINGS TO ALL MEN.

வழிதப்பினவரோடே நுழைந்து தம்மோடிழுத்தல்.

இதிலே சொல்லப்போகிற உபாயம் ஆத்து மங்களை ஈடேற்ற மிகுந்த ஆசைதேடி எடுத்த தேவ சூட்சிதானே. இந்த உபாயம் விசேஷமாய் அஞ்ஞானிகளைப்பற்றி வேண்டியதாமே. அர்ச்சேயசிஷ்ட சின்னப்பரெழுதின படியே சிலர்க்கெல்லாரையும் கரையேற்ற ஆசையுண்டாமாகிலும், நியாயந்தப்பின ஆசை ஆதலால் அது நல்லதல்லவென்றார். அப்படியே சிலர் அஞ்ஞானிகளைத் திருப்பவேண்டுமென்று அவர்களைக் கண்டவுடனே, அவர்கள் வணங்கும் தேவர்களைத் தூஷணித்து நடக்கும் வழியைப் பழித்து உங்களுக்கு நரகமே கதியென்று தீர்வையிடுகிறதுபோலே பேசுவார்கள். அதைக் கேட்டவர்கள் உடனே மனதிற்கொண்ட பகையால் இருகாதுமடைத்துச் சொன்ன நியாயங்களில் ஒன்றும் கேளார்கள்.

ஆகையால் இப்படிப்பட்ட உபதேசிகளுக்கு மனிதர் ஈடேற்றத்தின்மேல் ஆசையுண்டேன்றுலும், நியாயந்தப்பின ஆசையேன்னப்படுமே. முன் சோன்னபடி பிறர் காதையும், மனதையும் திறக்குங்கோல் அன்பு தானுயிருக்க, நம்மேல் அவர்கள் அன்புவைக்க அவர்களோடே நுழைந்தவனைப்போல, அவனவன் தோழில்களுக்கேற்ற விசேஷங்களைப் பேசத்துவக்கி மேள்ளமேள்ளத் தம்மோடிழுத்தாற்போலப் புண்ணியத்தின்மேலும், பாவத்தின்மேலும் பேச்சுச்சாயக்கோண்டு பூவுலகின் வாழ்வினிலையாமையும், சாவினிச்சயமும் காட்டிச் சாவோடழியாத ஆத்துமத்தைப் புண்ணியமும், பாவமுமோழிய மற்றேன்றும் பின் சேல்லாமையால் புண்ணியமல்லது தேடத்தகும் மேய்யான நன்மை வேறில்லையேன்றும், பாவமல்லது அஞ்சத்தகும் மேய்யான தீமை வேறில்லையேன்றும் போருந்தச் சோன்னுல், கேட்ட யாவர்க்கும் சந்தோஷமாகும். முடவன் முதலாய் நன்றுயாடின கூத்தைக் கண்டால் சந்தோஷப்படானே? இந்தப்படியே பிறன் மனதில் உபாயமாய் நுழைந்த பின்பு கடவுள் இயற்கை இன்னதேன்று தானும் காட்ட, அவனும் கேட்க எளிதாம். மேய்யான சுவாமியை அறிந்தாராய்ந்து ஆராதனை சேய்வது எல்லாப் புண்ணியங்களிலும் புண்ணியமேன்பாய். அதில்லாத மற்றப் புண்ணியங்கள் உயிரில்லாப் பிணமேயாகி, அவை

களால் பலனொன்றில்லையென்பாய். இராசா வுக்குச் செலுத்தவேண்டிய பகுதியைத் தரும மென்று இரப்போர்க்கீந்தால் இராசா விடுவா னோவென்பாய். நம்மைப் படைத்து, இரட் சித்த நாதர் இன்னாரென்றறிந்து, அவருக்குச் செலுத்தவேண்டிய வழிபாடுகளை நிறைவேற் றி, மற்றத் தருமங்களைச்செய்தால், அவருக்குப் பிரியமும், நமக்கு லாபமுமாகுமென்பாய். இந்த நியாயங்களை அறியாதவன் என்ன படித் திருந்தாலும் ஒன்றுமறியானெனன்பாய்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ னற்றாடொழா அரெனின்" இந்தப்படியே மெய்க்கடவுளையறிய ஆசை கிளம்பின பின்பு மெய்யான தேவலட்சணமின்னதென்று சொல்லி, அதில்லாதார் தேவரல்லவென்று காட்டி அவன் மனம் நோவாமலும், அவன் வணங் கின வஸ்துக்களைத் தேவரல்லவென்றும், வ ணங்கத்தகும் மெய்க்கடவுள் ஒருவரென் றும், எளிதாயோப்புவித்து அஞ்ஞான இருளை நீக்கிச் சத்தியவேதத்தின் திருவிளக்கேறிப்பச் செய்வாய். இதுவே வழி தப்பினவரோடே நுழைந்து தம்மோடிழுத்தலென்றோம். மகா த்துமாக்களெல்லாரும் இந்தத் தேவ சூட்சி யால், மட்டில்லாத மனிதரைக் கரையேற்றி னதறிவோம். அப்படியே அர்ச்செயசிஷ்ட சின்னப்பர் அழுவாரோடழுது, மகிழ்வாரோடு மகிழ்ந்து, எல்லாரையும் கரையேற்ற எல்லா ருக்கும் எல்லாமானேனென்றார். அப்படி

யே அப்போஸ்தலரோடோப்பாக உலகேல்லாம் இயேசுநாதருக்கடிமையாகத் தேரிந்து கோள்ளப்பட்ட அர்ச்சேயசிஷ்ட இஞ்ஞாசியாரும், சந்நியாசம் பண்ணுமுன்னே சேல்வத்தில் பேரியவனொருவனைக் கரையேற்ற அவன் சூதாடினவிடத்திற்போய்த் தாமும் சூதாடச்சம்மதித்தார். *இதுதான்வழிதப்பினவனோடே நுழைந்தவகை. இனித்தம்மோடிழுத்த படியைச் சோல்வோம். அதேப்படியேனில்; எனக்குப் பணம் காசில்லையாகிலும் நான் தோற்றேனாகில், ஒரு மாதம் உனக்கு அடிமைத்தோழில்சேய்வேன். நீர் தோற்றாலோ நீர் ஒரு மாதமாக நான்சோன்ன கருமத்தை முடிக்கக்கடவீரேன்று இஞ்ஞாசியார் கேட்க, அவனும் சம்மதிக்க விளையாடினவிடத்தில் இஞ்ஞாசியாருக்கு வேற்றியாயிற்று. அப்போது ஒரு மாதமாக நான் சோல்லிக்கோடுக்கும் தியானங்களைச் சேய்வீராகவேன்று சோல்ல, அவனும் சோன்னபடி கேட்க அந்தத் தியானம் முடியாமுன்னே வேறே மனிதனாகிப் பாவவழியை விட்டு, மற்றேவர்க்கும் புண்ணிய விளக்காக மரணபரியந்தம் நின்றானேன்று இஞ்ஞாசியார் சரித்திரத்தில் எழுதினதறிவோ

* இவர் செய்தது வேதத்துக்கிணங்குமோ? இணங்காதே. நன்மை வரும்படிக்குத்தீமைசெய்வது தவறென்று உரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதின நிருபம் மூன்றும் அதிகாரம் எட்டாம் வசனத்தை வாசித்தால் விளங்கும்.

ம். ஆயினும் சொன்னபடியே வழி தப்பி னவர்களோடே நுழைவதொழிய அவர்களோ டே தானும் வழித்தப்பிப்போவது நல்லதல் ல. ஆகையால் அவர்கள் தன்னைப் பிறகே இழுக்கவொட்டாமல் தானே நுழைந்த பின்பு அவர்களைத் தன்னோடிழுத்து, நன்னெறியிலே கொண்டுவந்து விடுவதே காரியம். விழுந்தவ னைத்தூக்குவது தானும் விழவோ. அவனைத் தூக்கத் தானே குனிந்து சாயவேண்டியதாகி லும், தான் குனியும்போது கூட விழாதபடிக் கு, காலை நன்றாயூன்றி அவனைத் தூக்குவானல் லவோ? அப்படியே நாமும் பிறராசைக் களவாகப் பொருளின் மேலாகிலும், பெரு மையின் மேலாகிலும், குனிகிறவனைப்போ லப் பேசத்துவக்கினாலும், நமக்கு அதின்மே லாசைபிறந்து கூட விழாதபடிக்கு இரு காலா க விசுவாசமும், நம்பிக்கையும் சத்தியவேதத் தில் நன்றாயூன்றிப் புண்ணியத்தால் வரும் செல்வத்தின்மேலும், மோட்சத்தால் வரும் பெருமையின் மேலும், பேச்சுக்கொண்டுவிட் டு லௌகீகவாசையில் விழுந்தவர்களைத் தூக் கித் தம்மோடு அறநெறியில் இழுத்துக்கொண் டுபோவதே கருமம். ஆகையால் கூடச்சிற் றின்பத்தைப் பாடுவானும், லீலைக் கதைக ளைச் சொல்பவனும், சரசஞ் செய்பவனும், விழுந்தவனைத்தூக்கக் குனிகிறவனோடொப்ப வோ? அல்ல, கூட அவனோடே கஷ்டக் குழியிலே விழுகிறவனென்பது ஞாயம். உல

கேல்லாம் கரையேற்ற வேண்டுமேன்றுணு லும், ஓரற்பப் போய்யாவது சோல்லத்தக் கதல்ல. பாவமின்றிப் பிறருக்குச் சந்தோஷ மாகி அவர்கள் போருந்திச் சோல்லப்போகிற நியாயங்களைக் கேட்க நிறை தப்பாமல் அவர் களோடே நுழைந்தபின்பு, தம்மோடவர்களை அறநேறியிலிழுக்க வருந்துவதே மனிதரைக் கரையேற்றமேய்யான ஆசையுள்ளவர்கள் சேய்யும் தேவ சூட்சிதானே.

௰எ. அதிகாரம்.

ON PERSEVERANCE.

பலனைக்காணுமலும் துணிவுவிடாதிருத்தல்.

சிலர் தாம் வருந்திச் சோல்லும் நியாயங்களைக் கேட்டோழுகுவாரில்லையேன்று மிகவும் நோந்து, மனந்தளர்ந்து இனிப் பிரயாசப்படுவதேதேன்று துணிவு விட்டு மயங்கிக்கிடக்கிருர்கள். நான் சோல்லும் சத்தியத்தைக் கேட்டு, எல்லாரும் கரையேறிணுல் உத்தமந் தானே. ஆகிலும் சிலர் கேளாததிணுல் நான் துணிவுவிடுவது நல்லதல்ல. இது எல்லாரையும் கரையேற்ற ஆசையேன்று தோன்றிணும் நம்முடைய சோம்பல் தேடும்போக்குத் தானே. ஆகையால் நாம்படும் பிரயாசத்திணுல் பயனைக்காணுமலும், துணிவுவிடாத

படிக்கு இதில் சில உறுதிகளைச் சொல்லிக் காட்டுவோம். நான் சொல்லும் நியாயங்களை எவரும் கேட்கவும், அதின்படியே நடக்கவும், ஆசைப்படுவதும், அதற்குத்தக்கதாய் உபாயங்களைத் தேடித்திரிவதும் நியாயந்தானே. நான் என் கடனைத்தீர்த்தால் போதும் மற்றவர்கள் கேட்பினும், கேளாமற்போயினும் எனக்கென்னவென்று திரிவது சுவாமிக்குப்பொருந்தாத அசட்டையும், பிறருக்கு இரங்காத நிஷ்டுரமுமாமே. ஆகிலும், பிறர் கேளாததினுல் அவர்களுக்கு நியாயங்களைச் சொல்லிக் காட்டாதிருப்பதும் அக்கிரமந்தானே. இன்று நியாயத்துக்கிணங்காதவன் நாளை இணங்குவானுக்கும். அம்புதைத்த புலி உடனே விழாமல் காட்டிலே நுழைந்துபோய்ப்பட்டுக்கிடக்கும். ஆத்துமங்களைக்கெடுக்கப் பசாசுவிடும் சோதனைக்கு மகாத்துமாக்கள் இடங்கொடாமையால், அவர்கள் சாந்தனையும் பசாசு சோதியாமல் விடுமோவென்ன? இயேசுநாதரை முதலாய் மூன்றுவிசை பசாசு சோதித்ததறிவோமே. முன்னம் வரவிட்ட சோதனைப் பலனைக்கண்டோ பின்பு அது சோதிக்கத்துணிந்ததேன்போம். ஆயிரம்விசை தள்ளுண்டுபோனுலும் பின்வாங்காமல் மனிதரைக்கெடுக்கப் பசாசுக்குண்டான துணிவுநிலை எல்லாரையும் கரையேற்ற இயேசுநாதர் உபதேசிகளுக்கில்லாததேன்ன? எறும்பு நடக்க நடக்கக் கல்லும்

குழியாமேன்பதுபோலக் கல்லாகநின்ற மனி
தர் மனமும் நாள்வட்டத்திலே இளகி இண
ங்கும். இதை அறிந்த பசாசு தினம் தள்ளு
ண்டுபோனாலும் மரணபரியந்தம் பாவம் வி
ளைவிக்கும் நினைவுகளை நமக்குக்கொண்டுவந்
து விடச் சலியாதேதிரியுமே. அப்படியே நா
மும் ஓரிரண்டுவிசை பலனைக்காணாதிருந்தாலு
மினியாகிலும் காண்போமோவென்று ஆசை
யைத்தூண்டிச் சலிப்பில்லாமல் பிரயாசப்ப
டக்கடவோம். பின்னையும் இதிலே யோசி
க்கத்தக்க வேறொரு நியாயமுண்டாம். மனி
தர் மனதைத்திருப்புவது நம்மாலாகும் கரும
மல்ல, பராபரன்தாமே நம்முடைய வார்த்தை
யைக்கோண்டு முடிக்கத்தகும் தோழிலாமே.
ஆகையால் அவர் தயைக்கு நாளும்மட்
டும் குறித்தாற்போல இன்று சேய்யாத தயை
க்கு நாளையும் சேய்யாரேன்றாற்போல இன்று
நம்முடைய வார்த்தையை மறுத்துத் திரும்ப
மாட்டாதவர்கள் இனியும் திரும்பார்களேன்
பதும், அதினால் இனி அவர்களுக்கு உறுதி
சோல்லாதிருப்பதும் நியாயமல்ல. யாவனொ
ருவன் நியாயமோன்றும் கேளாமல் எத்தனை
பாவியாயிருந்தாலும் திரும்பாத நரகத்தில் வி
ழுந்தாலோழிய எப்போதாகிலும் ஒருநாள் தே
ளிந்து புண்ணியவானாவானேன்கிற நம்பிக்
கை விடவும் தேவையில்லை. அவனுக்கா
ன சமயத்தைக்கண்டு புத்திசோல்லாதிருக்க
வும் தேவையில்லை. மரணம்வந்தாலோழிய

வியாதிக்காரனுக்கு மருந்துகொடாமல் விடு வார்களோ? நீ சொன்னதைப் பிறர் கேட்டு நல்லவர்களாய் நடக்க உன்னுலாகாமையால் அவர்கள் உன் வார்த்தையை மறுத்தபோது மனதிரங்கி அவர்களுக்கு ஆண்டவர் தயை செய்து உள்ளேபேசி மனதைத்திருப்ப மன் ருடி மீளவும் புத்திசொல்லப்போவாய். உன் னை நம்பிப்பேசினதினுலாக்கும் பலனைக்கா ணுதேபோனுய். அப்படியே இன்று உன் வார்த்தையைக்கேட்டுப் பாவத்தைவிட்டெழு ந்தவன் நாளைக்கக்கினதை விழுங்கிவிழுந்தா லும் அதிலே பலனுன்றில்லையென்று துணி வுவிடவும் வேண்டாம். மீளவும் அழுக்குப் படியுமென்று அடிக்கடி கையைக்கழுவாதிரு ப்பாயோ? ஒடுகிற கப்பலிலே தண்ணீர்கசிந் து வருவதைக்கண்டால் இன்னமும் அப்படி வருமாகையால் வந்ததை இறைப்பது வீ ணென்றிறையாமல் விடுவார்களோ? அர்ச் சேயசிஷ்ட இஞ்ஞாசியார் மிகுந்த பிரயாசத் தோடே திரிந்து தன்னுணத்தைவிட்டுத் தன் னுடலைப் போதுப்போருளாகப்பேணி, பாவக் கடையைத்திறந்த இலச்சைகெட்ட ஸ்திரீக ளைத் திருப்பிக் கற்புநிலைநிற்க வருந்திச்செய் வார். இதைக்கண்ட சிலர் இவ்வகைமகளிர் நிறைகாவார்களென்றும் கக்கினதை விழுங்கா திருந்தாலும் அதைக்குனிந்து நக்குவார்களென் றும் அவருக்குச்சொல்லி வீண் பிரயாசப்பட வேண்டாமென்பார்கள். அதற்கு அவரோ

வேனில், நான் சாந்தனையும் படத்தகும் பிர யாசத்தைக்கொண்டொரு பாவத்தைமாத்திரம் விலகினாலும் நான்பட்ட பிரயாசத்துக்கெல்லா ம் நிறைபலன் வந்ததென்றிருப்பேனென்றார். நாமும் வருந்திச்சொல்லும் நியாயங்களினால் பாவங்கள் முழுதும் முடியக்காணோமாயினும் குறையக்காண்போம். பாவிகள் குற்றங்களை ச்செய்யாதிருக்கக் காணோமாயினும் அவைக ளை அஞ்சிச்செய்யக்காண்போம். தீயோர் நல் லோராகக்காணோமாயினும் அதற்காசைப்பட வேகாண்போம். கண்டால் இது நாம்பட்ட பி ரயாசத்துக்கு நிறைந்தபலனைக்கண்டோமென் பது நியாயம். மீளவும் இந்தப்புத்தகத்திலே பலமுறை சொன்னபடியே நீ எல்லாரையும் மோட்சக்கரையேற்ற உனக்குக் கடனுமில் லை. உன் வார்த்தை கேளாமல் சிலர் மோ சம்போனாலும் உனக்குக் குறையுமில்லை. எல்லாரையும் கரையேற்ற உன்னாலானமட் டும் பிரயாசப்பட்டால் உனக்குப்பலன் கு றையாது. ஆனமருந்தைக்கொடுப்பதே வை த்தியன்கடன். ஆரோக்கியத்தைக்கொடுப்பது கடனல்ல. அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் எழு தினபடியே அவனவன் வருந்தினதற்களவாக ப் பலனைக்கைக்கொள்வான். சொன்னபடி அவனடந்தால் அவனுக்கே பலன்வரும். சுவி சேஷத்தில் எழுதினபடியே இராசா சோடித்த விருந்துக்கழைக்கப்பட்டவர்கள் வராமையா ல் அவர்களை இராசா கோபித்ததொழிய, அவர்

களை அழைக்கப்போன சேவகனைக் கோபித்தானே? எல்லாரும் கேட்டு நடந்தால் உத்தமந்தானே. ஆகிலும் சிலர் கேளாதிருந்தாலும் ஆண்டவர் கட்டளையிட்ட ஊழியத்தை நாம் நிறைவேற்றி, அவர்கள் கேட்டு நடக்க நம்மாலானமட்டும் பிரயாசப்பட்டால் நம்முடைய கடன் தீர்ந்ததுதானே.

இந்த நியாயங்களெல்லாவற்றையும் பற்றி இயேசுநாதர் வந்ததைப்போல் .வருவதை அறிந்தவராயிருக்கும்போதே, தாம் போதித்த நியாயங்களைச் சிலர் கேளாமல் பகைப்பார்களென்று திட்டமாய் அறிந்தும் அவர்களுக்கும் அவைகளைச்சொல்லிக் காட்டாமல் இருந்தவரல்ல. பிறரிடத்தில் பலனில்லாதாயினும் ஆண்டவருக்கு ஊழியம் செய்தாலே போதும். அவர் தயையும் அவர் நீதியும் விளங்கப் பிரயாசப்படக்கடவோம். சோலைகளும் வயல்களும் நிறைந்து தண்ணீர் மிஞ்சியோடுவது நாட்டின் செல்வமல்லவோ, கேட்டு நடக்கத்தகும். மனிதர்க்கன்றிக் கேட்கமாட்டாதவர்களுக்கும் கரையேறவேண்டிய வழியைக் காட்டுவதே, அவர் தயையின் மாட்சியல்லவோ! மீளவும் பாவிகளுக்கு ஆண்டவர் ஆக்கினையிடும்போது அவர்களுக்கு நாம் உறுதிசொல்லப்பட்ட பிரயாசமே அவர் நீதியின் நியாயத்தைக் காட்டுமே. இவர்களைக் கொண்டு அத்தனைமுறை உங்களுக்குக்காட்டின நெறியில் நடவாததென்ன! என்னை

வெறுத்துப்போகையில் இவர்களைக்கொண்டு உங்களைத்தேடி எத்தனைமுறை தயையோடு அழைத்தோம். இவர்கள் வாயினால் நான் சொன்னதை மிதித்து மறுக்க மீளவும் மெய் வழியைக் காட்டுவித்தோமல்லவோ! இந்தப் படி என் தயையை மறுத்த நீங்கள் இப்போ தேன் நீதி நியாயத்தால் ஆக்கினை என்றென் றைக்கும் படுவீர்களென்று தமது நீதிமுறை யை ஒப்புவித்து, பாவிகளை நரகத்திலே தள் ளுவார். சபிக்கப்பட்ட பாவிகள் முதலாய் மு றைப்படமாட்டாமல் ஆண்டவர் நீதியைக்கா ணவும் வணங்கவும் செய்வது நாம் படும்பிர யாசத்துக்குப் பலனாகப்பற்றாதோ? ஆகை யால் நம்மோடெல்லாரும் ஆண்டவர் பாதத் தில்சேர்ந்து என்றென்றைக்கும் வாழ ஆசை யோடே துணிவு தளராமல் பிரயாசப்படக்கட வோம். எல்லாரும் அதின்பலனைக் கைக்கொ ள்வது சந்தோஷந்தானே. இல்லாவிட்டால் நாமே அவர்களுக்கிரங்கி அழுவது நல்லது. ஆயினும், நம்முடைய பிரயாசத்துக்குரிய பலனைக் குறையாமல் அடைந்து முடியாத மோட்சத்தில் வாழ்ந்திருப்போம்.

ூஅ. அதிகாரம்.

ON UNITY AND CHARITY.

தம்மோடொருப்படல்.

இயேசுநாதர் இப்பூவுலகில் வந்து சகல ஆத்துமாக்களையும், மீட்டிரட்சிக்க அவைகளை அடிமையாகவைத்திருந்த பேய்க்கும், பாவத்துக்கும் பகைசெய்து வென்றழிக்கத் தோன்றினாரல்லவோ? அதற்குச் சிலுவையைக் கொடியாக ஏந்திப்பலப்புண்ணியங்களையும் பலவகை ஆயுதமாகக்கொண்டு, நினைத்த தேவ போரில் எல்லாரையும் அழைப்பித்து, சேவகமெழுதுவது உள்ளதுதானே. ஆகிலும் இந்த ஞானப்போர்முகத்து விசேஷமாய்க் குருக்களையும், உபதேசிகளையும், முதலணியாகத் தெரிந்துகொண்டார். அப்படியே பாவத்தைப் பகைத்து நிர்மூலமாக்கிப் பசாசை வென்று, முன்னதற்கு அடிமையாய்நின்ற ஆத்துமங்களை மீட்டு, ஆண்டவர் வசமாகச்செய்து, மோட்ச இராச்சியத்தில் சேர்க்கவருந்துவதே நான் செய்யும் தொழிலாமல்லவோ? போர்முகத்தினிலோவேனிலிட்ட யூகமுறியாமலும், கூடினவணிகள் பிரியாமலும், ஒருப்படநிற்பது மிகவும் வேண்டியதாமே. அதினாலல்லவோ போராடினவர் கருத்தெல்லாம் பகைவர் பிரிந்து முறியச்செய்வது, பிரிந்தபடை போர்முகத்தினில்லாமல் கெடுவது நிச்சயம். இதினால்

இயேசுநாதர்தாமே பசாசின் கொடுங்கோன் மைமுதலாய்த் தம்முட்பிரிந்தால் நில்லாதென் ருர். இதினுல் அவர் தாம் தம்மைப்போல மற்றேரையும் சிநேகிப்பது தம் கற்பனை யென்ருர். இதினுல் அர்ச்சேயசிஷ்ட அரு ளப்பர் இதோன்றைக்குறையின்றி, நிறை வேற்றினுல் மற்றக்கற்பனை நிறைவேற்றின தாமென்ருர். இதை அறிந்த பசாசு தன்னை வெல்லாதபடிக்கு நமக்குள்ளே ஒருமையில் லாமல், விகற்பமும் பிரிவுமுண்டாக உபாய மெல்லாஞ் செய்துகொண்டுவருமே. அதற்கு அதுசெய்யும் தந்திரம் பலமுறையும் வீணுய்ப் போகாமல், உபதேசிகள் தம்மோடொருமை யின்றி, விகற்பமாய்நிற்பது கண்டோம். ஒரு மையில்லாததினுலல்லவோ மற்றேருவனுக் குக் கட்டளையிட்ட இடமும் உத்தியோகமும் உயர்ந்ததென்றும், அவனுக்குவந்த வெகுமா னமும், ஆதாயமும், பெரியதென்றும் சிலரே காய்மகாரப்பட்டு மனதில் நொந்து திரிவார் கள். ஒருமையுண்டானுல் நீயும் அவனும் வேருகாமல், அவனுக்கு வந்த நன்மை உனக் கு வந்ததாகச் சந்தோஷப்படத் தேவையில்லை யோ? அவன் தனக்குக் கீர்த்தியாக அநே கம்பெயர்களைத் திருப்பி, திருச்சபையிற்சேர்த் த செய்தியைக்கேட்டு, நீ மன மெலிந்து நோ வதென்ன? நானும் இந்தப்படி எப்போது ஆண்டவருக்கு ஊழியஞ்செய்வேனேவென் று நோவதல்லாதே, நான் என் குறையினுல்

செய்யாத நன்மை அவன் செய்தானல்லவா வென்று மகிழ்ந்தாலே உங்களுக்குள்ளே ஒருமையும், ஆண்டவர் மேலே பத்தியுமுண்டென்று காணப்படும். ஆண்டவர் திருநாமம் விளங்கவும், திருச்சபை மகிமை வளரவும், ஆத்துமங்கள் கரையேறவும் மெய்யான ஆசையுண்டானல் ஆராகிலும் அந்த நன்மையைக் கண்டால் மெய்யான சந்தோஷப்படத் தேவையில்லையோ? அந்த நன்மையைத் தேடாமல் உனக்கு ஆதாயமும் கீர்த்தியுமாத்திரம் தேடினலல்லவோ, சோன்ன நன்மை வந்தது கண்டாலும், உன்னல் வாராமையால் மகிழ்ச்சிப் படாமலிருக்கிறுய். கூட்டு வியாபாரம் செய்பவருள் ஒருவன் தன்னல் ஆதாயம் வந்தாலும் தன்னேடே கூட்டாயிருக்கும் மற்றேருவனல் வந்தாலும் தனக்கு அதிலே பங்குண்டென்று சந்தோஷப்படுவானல்லவோ? அப்படி நீங்களும் ஒருப்படநின்ருல் மற்றவர் செய்யும் நன்மையில் உனக்கும் பங்குண்டென்று நினைக்கவேண்டாமோ? ஒருவன் செய்த பாவத்தைக்கண்டு நான் சந்தோஷப்பட்டால் ஆண்டவர் சந்நிதியில் எனக்குப் பாவமுண்டாமே. அவன் செய்த நன்மையைக்கண்டு சந்தோஷப்பட்டால் எனக்கு நன்மையாகாததென்ன? இந்தப்படியே ஒருவற்கிட்டதோழிலும் குறித்தவிடமும் பெரிதென்றமையால் அவனுக்குப் பெருமையாமோ? இட்டதோழிலே நன்ருய் முடிப்பதே பெரு

மை. நாடகசாலையில் இராச கோலத்தைக் காட்டுவது பெருமையல்ல. அந்தக் கோலத்தைக் காட்டினவனைப்பார்க்கிலும் வெட்டியான் வேஷத்தைப்போர்த்தவன் நன்றாய்த் தன் தொழிலை முடித்தால் இவனுக்கே அதிகமாய்க் கீர்த்தியும் வரிசையும் வருமல்லவோ? பெருமை அதேதென்று எல்லாரும் இராச வேஷம் தமக்கு வேணுமென்றால் நாடகமாகுமோ! இந்தப்படியே நீ இருக்கிற விடத்தில் ஓரவசரத்தைப்பற்றி மற்றொருவனை அனுப்பினாற்கூடத் தேவ ஊழியத்தை முடிக்கப்பாராமல் நானிருக்க இவனை அனுப்பினதேன்ன? எனக்கிவன் மிக மிஞ்சினவனோ? இது எனக்கு நிந்தையல்லவோவென்று நாமே கேட்டபடி முறைப்பாடு கேட்கப்படுவது நியாயமோ தம்பிமாரே! ஆண்டவர் திருநாமம் விளங்கவும் மனிதர் கரையேறவும் உங்களுக்கு மெய்யான ஆசையுண்டானால், இதெல்லாம் பார்ப்பீர்களோ? உங்கள் சுகத்தையும் பெருமையையும் பற்றினதினால் திருச்சபைக்குக் குறைவந்தால் ஆண்டவருக்கு எந்தக்கணக்குச் சொல்வீர்களோ தெரியாது. நமக்குப் பலவுறுப்புகள் உண்டாயினும் எல்லாம் ஒருடலாகச் சேர்க்கப்பட்டமையால் காலில் முள்ளுத்தைத்தவுடனே வாயும் அய்யோவெனக் கண்ணும் உற்றுப்பார்க்கக் கையும் வருந்தித்தேட உடலெல்லாம் கீழேகுனிந்து இரங்கக்காண்போமல்லவோ! நாமும் அர்ச்சே

யசிஷ்ட சின்னப்பர் சோன்னபடியே இயேசு நாதரிடத்தில் ஒருடல் உறுப்புகளாக ஒருப்பட நின்ருல் ஒருவர்க்கோரு குறைவந்தவிடத்தில் அதை நீக்கி வருந்தித் திரிவோமோழிய, சந்தோஷப்பட்டாற்போல மற்ரேருவன் செய்த குறை எங்கும் தூற்றிப் பேருங் குறட்டின்மேல் எவர்க்குமேழுந்து தோன்றச்சேய்த விக்கிரகத்தை வைத்தாற்போல, நாமும் பலவற்றையும் கூட்டிப் பிறர் குற்றத்தைத் தேருவிலே வைக்க நினைப்போமோ? ஒரு கையிற்பட்ட அழுக்கை மற்ரேரு கையால் துடைத்துக் கழுவுவோம் அல்லவோ? இந்தத்தன்மையில் ஒருமையில்லாத உபதேசிகள் போர்முகத்தில் பகைவரை வெட்டாமல் தம்மைவேட்டிக்கோள்ளும் சேவகரோடு ஒப்பாக நிற்பவர்கள்தாமே, இப்படிப்பட்டவர்களோவேனில் இயேசுநாதருக்குப் பகைவராவாரோழிய அவரைச் சேவித்தவர்களல்ல. யூதரானவர்கள்பல நூருயிரம்பேராய்க் கூடிப் படைக்குப்போனலும் ஒருவனைப்போலப் புறப்படுவார்களேன்று வேதத்தில் தோத்திரமாக எழுதப்பட்டதறிவோம். இந்த நாட்டிலுள்ள நூறு உபதேசிகளும் ஒரு மனதும் எல்லாரையும் கரையேற்ற ஓர் ஆசையுங்கோண்டு ஒரு உபதேசியாகத் திரிந்தால், அஞ்ஞானமுதல் பாவங்களேல்லாவற்றையும் சங்கரித்துப் பகைத்த பசாசை வேன்று சகல ஆத்துமங்களையும் மீட்டு இரட்சிக்கக் காண்பது எளிதாமல்லவோ? தம்முள் ஒருப்படா

ததிஞலோவெனில்; தீர்க்கதரிசியாகிய ஓசே யாவென்பவர் வாயிஞல் ஆண்டவர் திருவுளம் பற்றினபடியே தம்முட் பிரிந்தவர்களோ தாமேகெடுவார்களென்று சொன்னபடியே மற்றவர் கரையேற உதவாமல் தாங்களே நரகத்தில் விழுவார்கள். இன்றைவரைக்கும் சொன்ன ஒருமை உறுப்புகளைத் தம்மோடேயும், தலையோடேயும் ஒருப்படச்சேர்க்குமேன்றதிஞல் சொன்ன நன்மைக்கெல்லாம் காரணமாமே. இதல்லாதே உறுப்புகளைத் தம்முட்சேர்த்து இத்தலையினின்று பிரிக்கச்செய்யும் ஒருமை வேறுண்டு. ஆகிலும், இது பகையினும் கேடென்று சொல்லத்தகுமே. திருச்சபையாகிற உடல்க்கு இயேசுநாதரும் அவரிடமாக இருக்கும் குருக்களும் தலையாகநிற்பார்களல்லவோ? குருக்கள் வார்த்தையை மீறி எதிர்த்துப்பிரிந்த உபதேசிகள் தம்முள் இதிலே கூடிஞல் தலையினின்று பிரிந்த உறுப்புக்கள் ஒருமையாமே. ஆஞல், இப்படித்தலையைவிட்டுப்பிரிந்த அவயவங்கள் தம்மோடு எப்படியேனும் ஒருப்படக்கூடினும் நாறும் பிணந்தானே. ஆண்டவர்க்கோவ்வாததை ஒருவன் நினைக்கவும், குருக்களை மறுத்தாகிலும், பகைத்தாகிலும் ஒன்றை நியமிக்கவும் அவஞேடே கூடுவது தலையைவிட்டுப்பிரிதலென்று சேர்ந்தோருப்படவேண்டாம். தளகர்த்தனுக்குக் கீழ்ப்படிந்து கூடின சேவகர் புகழப்படுவதுபோல அவனை எதிர்த்துக்கூடிஞல் துரோகிகளென்னப்படு

வார்களல்லவோ? இதிலே வெகு விரிவாகப் பல நியாயங்களைச் சொல்லிக்காட்டுவது எளிதாமே. ஆயினும், இது தானகே வெறுக்கத் தோன்றும் அபத்தமாகவும், உபதேசிகள் ஒருக்காலும் நினைக்கமாட்டாத கொடிய அக்கிரமமாகவும் இங்கே சொல்லிக்காட்டினது போதுமென்றிருக்கிறோம். அஞ்சித் தீண்டாதபடிக்கு நஞ்சிதென்றால், அறிவுடையோர்க்கும் போதாதோ என்ன? சொன்ன அக்கிரமத்துக்குக் காரணமாகிய ஒருமையல்லாதே மற்றோராகாத ஒருமையுண்டாம். இது நம்மைத் தலையினின்று பிரியாமையால் முன் சொன்னதைப் போல அத்தனை கேடுள்ளதல்லவாயினும் சில உறுப்புகளைத் தம்முட்சேர்த்துச் சிலவற்றைப் பிரித்ததினால் இதுவும் நல்லதல்லவென்றிதையும் விலக்கக்கடவோம். சிலரே மற்ற உபதேசிகளைப் பகையாதேபோனாலும் பிறராக வெண்ணித் தம்முட்பிரிந்த ஒரு கூட்டமாக விசேஷ சிநேகத்தோடொருப்படத் திரிவார்கள். இந்த வேற்றுமையும் பிரிவுஞ்செய்யாமல், ஒரு தாய் பிள்ளைகளைப்போல எல்லா உபதேசிகளும் ஒரு பிறப்பாகத்திரிந்தால் உத்தமந்தானே. ஆகிலும், வேறுபடச்சிலரை நீக்கிச் சிலரை வேண்டியதின்மேலும் ஒருப்படக்கூடிவந்த இவ்வகை விசேஷபட்சம் நம்பலாகாதேன்பார்கள். அதேதேனில்; நீ உன்னைப் பார்க்கிலும் அவனை நேசித்தாயாகில், அபத்தந்தானே. ஆண்டவரைமாத்திரம் தன்னைப்பா

ர்க்கிலும் சிநேகிப்பது நியாயம். அல்லதுகட்டளையிட்டபடியே உன்னைப்போலமாத்திரம் அவனைச் சிநேகித்தாயென்றால், மற்றோரையும் தன்னைப்போலச் சிநேகிப்பது வேதகற்பனையாகையில், எல்லாரையும் இப்படிச் சிநேகியாமல் இவன் அவன்மேலே விசேஷபட்சம் வைத்ததேன்ன? அதினாலல்லவோ அர்ச்சேயசிஷ்ட பசிலீயென்றவர் எவ்வளவாக நீ சிலரை அதிகமாய்ச் சிநேகித்தாயோ அவ்வளவாக மற்றவர்களைக் குறையச் சிநேகித்ததேன்று காட்டினாயென்றார். இதுவுந்தவிர இந்த விசேஷ சிநேகத்தின் வேரைத்தோண்டி முளைத்த வழியைப்பார்க்கில் இது தேவசிநேகமல்லவென்று காணப்படுமே. சிலர் ஓர் ஊரில் பிறந்தமையாலும், ஒரு பள்ளித்தோழரென்றமையாலும், ஒரு முகச்சாயல், ஒரு குணச்சார்புண்டாவதினாலும், தம்முள் விசேஷபட்சம் பிடித்துத்திரிவார்கள். ஆகிலும், அர்ச்சேயசிஷ்ட அகுஸ்தீனேன்பவர் மிருகங்களுக்குமுள்ள பட்சத்தின் ஒருமை இதுவேயென்றார். அதேதேனில்; அவர் தாம் காட்டின உவமையின்படியே ஒரு நாளாயினும் ஒரு பந்தியில் கட்டியிருந்த இரு குதிரைகளில் ஒன்றை அவிழ்த்துப் பிரிக்கப்பார்க்கையில், இது பிரிந்தப்பால் போகாததற்குப் பின்வாங்க அதுகூட வருவதற்குதைத்துக் கயிற்றையிழுக்க இரண்டும் சொற்படிகேளாமல் முறைப்பாடாக அனுமானித்துநிற்கவே காண்போமல்லவோ? அப்

படி மிருகத்துக்கேற்ற இந்தநீசபட்சம் ஒருமையுள்ளவர்களும் ஓர் ஊரிலிருக்க ஒரு விசாரிப்பிலே திரிய ஓரிடத்திலே அவர்களுக்குள்ளே ஒருவனைக் குருக்கள் பிரித்துத் தூரத்திலனுப்ப நினைத்தால் உடனே இருவரும் முறைப்பாடாகக்கூப்பிடவும், ஆங்காரமாகக் குதிக்கவும் இவனால் அவனால் இது வந்ததென்றெண்ணி, அவன்மேல் தூறியுதைக்கவும், சொற்படி கேளாமல் அனுப்பப்பட்டவன் தாமதமாய் நிற்கவும், பிரிந்து நின்றவன் ஒரு நிலையாக நிற்கமாட்டாமல் அங்கங்கே பேசவும், புறணிதூற்றவும் எவர்க்கும் மனநோகச் செய்யவும் காணப்படுமே. இப்படி இவ்வகை ஒருமை பாவமல்லவாயினும் அநேகம் பாவங்களுக்குத் தான் வழியாமே. ஆகையால் இது அறிவில்லா மிருகபட்சமாகையால் ஆத்துமத்துக்கொரு பலன் தராதென்றமையால் அதை வெறுக்க இதுவே போதுமல்லவோ! ஆகிலும், பலனில்லாத பட்சமிதுவென்பது பாரமுமல்ல, அதினால் வரும் கேடுகளைப் பார்க்குமிடத்தில், அது அற்பக்குறைதானே. முந்தி இந்தப் பட்சத்தினால் மோட்சத்தையடைய ஆண்டவர் உங்களுக்குத் தந்த காலத்தை வீணாய்ப்போக்குவீர்கள். எந்த அவசரமிருந்தாலும் சிநேகிதனைப் பிரிந்துபோகமாட்டாமல் வீண்பேச்சுப் பேசிக்கொண்டிருப்பீர்கள். நல்லதொன்றை வாசிக்கப் பிறர்க்கொரு நல்லபுத்திசொல்ல, ஆண்டவரை வேண்டிக்கொள்ள

வந்தகாலம் சேலவழித்தாலும் உங்களுக்கும் பிறர்க்கும் உதவியாகுமல்லவோ? பின்னையும் உங்களுக்குள்ளே பிடித்த ஒருமை பிரியுமே ன்றஞ்சி மெள்ள மெள்ள அவனையன்றி அவன் குற்றங்களையும் சிநேகிக்கக் கூசாதே போவாய். அவன்சேய்த குறைகளை அனை வரும் கண்டிகழ உனக்குமாத்திரம் தோன்று திருக்கும். தோன்றினும் குறையதல்லவே ன்று புறத்துக்காட்ட வருந்துவாய். அதற்கு ஆயிரம் போய்யும், போக்கும் சோல்லத் துணி வாய். அவன் காட்டின ஆங்காரத்தை அஞ் சாமல்நற்றுணிவேன்பாய். அவன் பிறர் குற் றத்தை வெளியாக்கிச்சோல்லும் புறணியைப் பாவம் சகிக்கமாட்டாத ஞானமேன்பாய். அ வன் பிறர்மேல் காட்டும் சந்தேகத்தைக் குறிப் புக்கண்டு உண்மையறியும் கூர்ந்த சாட்சியே ன்பாய். அவன் பிறரோடு படித்த தீப்பழக் கத்தை அவர்களுக்குக் காட்டும் தயையேன் பாய். குருக்கள்மேல் அவனிடும் முறைப் பாடுகளை அநியாயங்களைப்பேறுத நீதியேன் பாய். இப்படியே அவன் முகத்தை முறிக்க மாட்டாமல் அவன்தோடுத்த கருமமாகாதேன் று தோன்றினும் நீயும் கூட அதனை முடிக்கத் துணிவாய். அவன் பகைத்தவனைப் பகைப் பாய். அவன் விழுந்த குழியில் வலிய விழு வாய். அவன் சோல்லும் புறணியை நீயே போருந்திக்கேட்பாய். அவனுக்குப் போருந் தவே கூடச்சோல்வாய். இதுக்குள்ளாக உன்

மயக்கமில்லாத பெரியோரும், குருக்களும் அவன் செய்ததை மறுத்து நீதியின்படியே அவனைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் ஏற்பட்டால் நீயும் அவர்கள்மேலே பலமுறை முறையிடவும், பலகுறைசொல்லவும் நினைப்பாய். இப்படி இவ்வகை விசேஷ ஒருமை வளர வளர மற்றவர்மேல் வைக்கவேண்டிய பட்சமே குறைவதல்லாதே மெள்ளமெள்ள முன்சொன்னபடியே, தலையில் நின்று பிரிதற்குக் காரணமாகுமே. இன்னபடியே இவ்வகைக்கூட்டமும், இவ்வகை நீசபட்சமும், தன் ஆத்துமத்தைக்கெடுத்து எந்நாளும் அவியாதெரியும் நரகத்துக்கு வழியாம். சவுலென்பவன் வலியச் செத்ததைக் கண்டு அவன் தோழனும் தன்னைக்கொன்று கூட நரகத்துக்கு விழுந்தானென்று வேதத்தில் எழுதினதாமே. இதனைப் பட்சமென்றால், இதற்குமேல் பகையினால் ஆத்துமத்துக்குக் கேடுவருமோ? இதெல்லாம் உன்னிடத்தில் இன்னம் காணாதே போனாலும் நம்பவேண்டாம். பிறக்கும்போது பாம்புக்கு நஞ்சில்லாதாயினும், புலிக்கு நகமில்லாதாயினும், வளர வளர வளர்ந்துகொல்லுமல்லவோ? உபதேசிகளுக்குள்ளே விசேஷக்கூட்டமும், விசேஷபட்ச ஒருமையுமென்னப்பட்டதெல்லாம் கேடென்றெண்ணி வேறே போக்குக்கிடங்கொடாமல் உடனே முழுதும் விலக்கக்கடவாய்.

௰௬. அதிகாரம்.

CATECHIST'S HELP TO THE PERFORMANCE OF HIS DUTIES.

*வேதியர் தொழிற்குத் துணை.**

இதிற்சொன்னதெல்லாம் தூக்கிப்பார்க்குமிடத்தில் உபதேசித்தொழிலைக் குறையின்றி நிறைவேற்றினால் அவர்களுக்கும் பிறர்க்கும் வரும் நன்மை அளவில்லாததென்பது நிச்சயந்தானே. ஆயினும் அதைக் குறையில்லாமல் முடிப்பது எவர்க்கும் அரிதாம். இந்தத் தேவ தொழிலின் மாட்சியளவாக இதற்கருமையுண்

* என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கான சத்தியாவியாகிய வேறுதேற்றுகிறவரைப் பிதாவானவர் உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் அவரை வேண்டிக்கொண்டேன் என்று கிறிஸ்துநாதர் சொல்லுவதினாலும், அந்தத் திவ்வியசுதனானவர் தாம் ஏற்படுத்தின அப்போஸ்தலரைநோக்கி, நீங்கள் உலகமெங்கும்போய்ச் சிருஷ்டிக்கப்பட்ட யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரஸ்தாபம் பண்ணவேண்டுமென்கிற கட்டளையை விதைத்தவேளையில், பரமண்டலத்திற்கும், பூமண்டலத்திற்கும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கின்றதுமன்றி, அப்போஸ்தலரைத் திடப்படுத்தும்பொருட்டாக இம்மையின் முடிவுவரைக்கும் நான் எப்பொழுதும் உங்களுடனே கூட இருக்கிறேனென்பதினாலும், வேறொரு பிரதான துணையைப்பற்றி ஏதேனும் சொல்லாமலிருப்பதினாலும இவ்வதிகாரத்தில் குறித்திருக்கும் அநேக சம்பிரதாயங்கள் வேதத்திற்கிணங்காதகற்பிதங்களாயிருக்கிறதென்று தள்ளுப்படவேண்டியதாயிருக்குமே.

டென்று நாமும் ஒத்துக்கொள்வோம். இந்த அருமையைப்பற்றி உபதேசிகளுக்கு உத்தமத்துணையைத் தேடி இங்கே காட்ட இருக்கிறோம். ஆகிலும், நாம் இதிலே கொடுக்க இருக்கும் துணை உங்களுக்குத் துணையாவதல்லது உத்தம தருமமாதிரியுமாகுமே. இந்தத் துணையாரோவெனில்; காவலாயிருக்கிற சம்மனசானவர்தாமே. எவரும் பிறந்த நாள் தொடங்கி மோட்சவழித்துணையாக ஒவ்வொருவருக்கு ஆண்டவர் ஒரு சம்மனசு கட்டளையிட்டது உள்ளதுதானே. ஆகிலும், தன்னோடே பிறரும் கரையேறப் பிரயாசப்பட்டுக்கொண்டு திரிகிறவனுக்கு அந்தச் சம்மனசு துணையும் மாதிரியுமாமே. இந்தத் தொழிலே சம்மனசுக்கள் செய்யும் தொழிலுக்கொத்ததாகையில் நன்றாய் இதை நிறைவேற்ற விசேஷ உதவிசெய்வார்கள். நீ பல நியாயங்களைச்சொல்லி ஒருவன் அஞ்ஞானத்தைவிட்டுச் சத்தியவேதத்தையறியவும், பாவத்தைவிட்டுப் புண்ணிய நெறியில் நடக்கவும் செய்யுமிடத்தில், அவனைக்காத்த சம்மனசானவர் படும் சந்தோஷமும், உன்மேல் வைக்கும் பட்சமும் சொல்லும் தன்மையல்ல. ஆகையால், உபதேசிகளெல்லாரும் தம் தொழிற்கடுத்ததொன்றை முடிக்கப்போகையில், தன் காவலாயிருக்கிற சம்மனசையும், தான் பேசப்போகிற மனிதரைக் காத்த சம்மனசுக்களையும் துணையாய் நின்று தான் நன்றாய்ப் பேசவும், மற்றவர் பொருந்திக்

கேட்கவும் உதவிசெய்ய ஆசையோடே மன்ருடக்கடவர்கள். நீங்களும் சம்மனசுக்களும் செய்யத்தகும் தொழிலொன்றே. நீங்களும் அவர்களும் ஒருப்படத்தேடும் தன்மை மனிதர் ஈடேற்றமல்லவோ? நீங்கள் காதிலேபேசச் சம்மனசுக்கள்மனதில் உறுதிசொல்லக்கூட ஒரு கையால் பிரயாசப்பட்டால், நரகத்தில் அநுதினம் விழுகிறவர்களில் எத்தனை பேர் விழாமல், அங்கே முடியாதகாலத்து வேகாமல் வெந்து ஆண்டவரைத் தூஷணியாமல் மோட்சத்தில்சேர்ந்து, மாருத ஸ்துதிகளைக்கொண்டு கர்த்தரைவாழ்த்தி வாழாநிற்பார்கள். சம்மனசுக்கள் அரூபிகளாகையில், கண்ணிலே தோன்றக் காதிலே பேசத் தங்களுக்குக்கூடாமையால், உங்கள் உதவியை ஆசையோடே தேடுகிருர்கள். நீங்களும் உங்கள் தொழிலை நிறைவேற்ற உங்களுக்கிருக்கும் கடனைத் தீர்க்க மோட்ச பிரபுக்களாகிய சம்மனசுக்கள் உதவி தேடாமலிருப்பதென்ன? இப்படிச் சம்மனசுக்களுக்கு உதவிசெய்வதல்லாதே அவர்கள் திரியும் முறையைப்பார்க்கில், அதிலே உங்கள் தொழிலுக்கு உத்தமமாதிரி காணப்படுமே. மோசேயின் வாயினுல் ஆண்டவர் திருவுளம்பற்றினதாவது; நானே உன் சம்மனசானவனை உன்னண்டைக்கு அனுப்புவேன். அவன் முன் நடந்த வழியில் உன்னைக் காத்து நாம் உனக்குக்குறித்த ஸ்தலத்திற்சேர்ப்பான். நீயோவென்னில்,அவன் நடக்

குமுறையை நன்றுய் ஆராய்ந்துபார்த்துச் சொ ன்னபடியே கேட்பாயேன்றூர். எவர்க்கும் சொன்னதை விசேஷமாய் உபதேசிகளுக் குச் சொன்னதாயேண்ணி உங்களை ஈடேற்றச் சம்மனசுக்கள் செய்வதைத் தியானித்து ஆரா ய்ந்து உங்களைப்பற்றி அவர்கள் நடக்குமுறை யே உங்களுக்குக் கற்பனையாகக் கொண்டு சொன்னபடியே கேட்டு, நீங்களும் மற்றவர் களை ஈடேற்ற அப்படி நடக்கக்கடவீர்கள் என் போம். இந்தத் தேவமாத்திரை தெளிவாய் அறியவும், எளிதாய்ப் பின்செல்லவும், சம் மனசுக்கள் நம்மைக்காத்த முறையில் எழு விசேஷங்களை இதிலே சொல்லிக்காட்டுவோ ம். அவைகளில்;

முதலாவது,—முகாந்தரம். ஆண்டவரை முகமுகமாகத் தரிசித்துக் குறையொன்றின் றி, மோட்சப்பிரபுக்களாக வாழாநிற்கும் சம் மனசுக்கள் நீச மனிதரண்டையில், காத்துக் கொண்டு சேவகரைப்போலத் திரிவதேன்ன? எங்கள் சரீரத்தையும், எங்கள் ஆத்துமத்தை யும்பேணி, தாவீதென்பவர் தொண்ணூறுங் கீதத்தில் சொன்னபடியே எங்களைக் கையி லேந்தி, மோட்சக் கரையிலேற்ற அத்தனையா சை அவர்களுக்கு வந்த முகாந்தரமேன்ன? அதிலே அந்தத் தீர்க்கதரிசிதாமே அதற்கு மு காந்தரமேதேன்று காட்டிச் சொன்னதாவது; உன்னைக்காக்கச்சொல்லி, ஆண்டவர் கட்ட ளையிட்டபடியினுல், உன்னைக் கையிலேந்திச்

சம்மனசானவர் திரிவாரேன்றார். ஆண்டவரிட்ட கட்டளையொன்றே சம்மனசு செய்வதற்கெல்லா முகாந்தரமாமே. நீ உபதேசித்தொழிலைச்செய்வதற்கு முகாந்தரமென்ன? ஆண்டவர் கட்டளையும் இதினல் அவருக்கு வந்த ஸ்தோத்திரமும், உனக்குமுகாந்தரமென்றால், அதின்பின்பு இதிலே ஆதாயமில்லையென்றும், பட்ட பிரயாசத்தையறிந்து நடப்பாரில்லையென்றும், நீ முறையிடுவானேன்? ஆண்டவர் முகாந்தரமானல் செல்வரை விசாரித்தாற்போல, எளியரையும் விசாரியாமலேனிவர்களையும் சரியாய்ப் பராமரிக்கச்சொல்லி ஆண்டவர் கட்டளையிட்டதில்லையோ? இப்படி ஆராய்ந்துபார்க்கில், உலகவேகுமானமும், பொருளாதாயமும், உங்களுக்கு இந்தத் தொழிலைச்செய்ய முகாந்தரமாகக்கொள்ள உங்களிடத்தில் அத்தனை குறை காணப்படுமே.

இரண்டாவது,—வகை. ஆண்டவர் கட்டளையிட்ட தொழிலைச் சம்மனசுக்கள் முடிக்கும் வகையைப்பார்க்கில், அவர்கள் தாவீது சொன்னபடி நம்மைக் கையிலேந்தி மிகுந்த பட்சத்தோடே நடத்திக் கரையேற்றப் பிரயாசப்படுவார்கள். இப்படி நம்மைப் பேணித்திரிகையிலே தங்களை மறப்பார்களோ? ஆண்டவரை மறப்பார்களோ? இயேசுநாதர் தாமே மத்தேயு சுவிசேஷத்தில் சொன்னபடியே அவர்கள் எங்களைக் காத்துக்கொண்டுவருகையில் ஆண்டவர் திருமுகத்தை மறவாது ஓய்வி

ன்றித் தரிசித்துக்கொண்டிருப்பார்கள். நாமோவெனில்,சனங்களைக்கையிலேந்தி மோட்சத்தில் செலுத்தினற்போல அன்புகாட்டிப்பபடிப்பிக்கிறேமோ? அவர்களே நம்மை எந்தச்சொல்லி, ஏறின குதிரையை அடித்து நடத்தினற்போல எல்லாரையும் கோபத்தோடே சீறி வழியைக்காட்டிக்கொண்டுதிரிகிறேமோ? பின்னையும் நாம்இதிலே ஐந்தாமதிகாரத்தில் விரிவாய்ச் சொன்னபடியே தன்னைக் காவாதவன் மற்றவர்களைக் காப்பானே? ஆண்டவரை மறந்தவன் மற்றவர்களை அவர் திருப்பாதத்தில் சேர்ப்பானே? தான் நரகத்திற்போக நடக்கிறவன் மற்றவர்களை மோட்சத்திற்செல்ல நடத்துவானே? முந்தித்தான் கரையேற வருந்தியல்லவோ பிறரையும் கரையேற்றப்பிரயாசப்படவேண்டுமே. நாமோவெனில், இதில் நடக்கும் வகையை ஆராயக்கடவோம்.

மூன்றுவது,—குறிப்பு. சொன்ன உத்தம வகையோடேம்மைக் காத்ததினல் சம்மனசுக்கள் அடையத்தக்கதாகக் குறித்த பலனேன்ன? தாங்கள் மோட்சத்தை உடையராகையில், அதை இனி அடையவும, அதிலே தங்களுக்குப் பலனை வளரச்செய்யவும் முதலாயாசைப்படமாட்டார்கள். அவர்கள் கருத்தெல்லாம் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமும் மனிதருக்கீடேற்றமுமுண்டாக்கி, எல்லாரும் அவரையறிந்து இங்கேயும், மோட்சத்திலேயும், என்றேன்றைக்கும் துதிக்கச் செய்வது

தானே. நீங்களோவெனில், இந்தத் தொழிலைக் கைக்கொண்டபோது நினைத்த கருத்தென்ன? வயிறு வளர்க்கும் வழி வேறில்லாமல் பிரயாசமில்லாத நல்ல பிழைப்பிதென்று தெரிந்துகொண்டீர்களோ? ஆண்டவர் திருநாமம் விளங்க அவரை எல்லாருக்கும் அறிவித்து, இராச்சியமெல்லாம் சத்தியவிராச்சியமாக்கி, பாவங்களை நீக்கி, ஒருவரும் நரகத்தில் விழாமல், உங்களோடனைவரும் மோட்சத்தையடையப் பிரயாசப்படுவது நல்லதென்று துணிந்தீர்களோ? இந்த உத்தமக் கருத்தை நினைத்தீர்களாயில், பிறர் ஆத்துமத்தையொழிய அவர்கள் கைப்பொருளுக்கு ஆசைப்படுவதேன்ன? ஒருவன். உபதேசிச் சேவகத்தில் தன்னை நிறுத்தச்சொல்லி மன்ருடுகிற போது, நாமே கேட்கச் சொன்னதாவது; நானும் என் சனங்களும் இனிப் பிழைக்கத்தேவையில்லையா? இது அல்லாதே எனக்கு வேறு பிழைப்பில்லையென்ருன். இப்படிப் பட்டவன் உபதேசியாயிருக்கும்போது, இந்தத்தேவதொழிலினல் அடையக்குறித்த பலன் இன்னதென்றுதானே காணப்பட்டதே.

நான்காவது,—சலியாமை. பலனைக் காணுமலும் துணிவுவிடாதிருப்பது மிகவும் உபதேசிகளுக்கு வேண்டியதென்ருேமல்லவோ? இதற்கும் சம்மனசானவரிடத்தில் உத்தம மாதிரிகாணப்படுமே. அவர் உங்கள் மனதில் சொல்லிக்காட்டும் நியாயங்களை

மறுத்து எத்தனை முறை கேளாதே போகிறீர்கள். எத்தனை பேர்களிடத்தில் ஒரு புண்ணியமாகிலும் செய்விக்கமாட்டாதிருக்கிறீர்கள். அவர்கள் வார்த்தையை மறுத்து நாம் செய்யும் பாவங்களைக்கண்டு கர்த்தருக்கு இகழ்ச்சியும் நமக்குக் கேடுமாகையில் சம்மனசானவர் அதினால் மிகவும் நொந்து துன்பப்படுவாரென்பது நிச்சயந்தானே. ஆகிலும் மோசேயின் வாயினால் ஆண்டவர் திருவுளம் பற்றினபடியே நீ பாவத்தைச் செய்தாலும், சம்மனசு உன் காவலை விடமாட்டார். மரணபரியந்தம் அவர் வார்த்தையை மறுத்துப் பாவியாய் நடந்தாலும், அவரும் மரணபரியந்தம் சலியாமல், உன் ஈடேற்றதுக்கான உறுதிகளைச் சொல்லிக்கொண்டிருப்பார். இறந்தாலொழிய உன்னைக் கரையேற்றும் நம்பிக்கையும் விடார். அதற்கு உபாயங்களைத் தேடும பிரயாசமும்விடார். இதோ மனிதரைக் கரையேற்ற மெய்யான ஆசையும் தயையுமுள்ள யாவர்க்கும் உத்தம மாதிரி, சனங்கள் உங்கள் வார்த்தையைக் கேளாதேபோனாலும், கக்கினதை விழுங்கித் திரும்பிப் பழையபடியே பாவிகளாய் நடந்தாலும், அவர்களுக்குத் தயையோடே மீளவும் புத்திசொல்லச் சலிக்கவேண்டாம். அர்ச்சேயசிஷ்ட அம்புறோசியென்பவர் வேறொன்றும் கேளாமல் பாவிகள்பேரில் தயையும் இரக்கமுமாத்திரம் தமக்குத் தரச்சொல்லி, ஓயாமல் ஆண்ட

வரை மன்றுடுவாராம். தயையில்லாத உப தேசி பாலில்லாத் பிளைத்தாய்ச்சிதானே.

ஐந்தாவது,—கைம்மாறின்மை. பிறந்தநாள்முதற்கொண்டு சாந்தனையும் தங்களண்டையில் காவலாக ஒரு சம்மனசு நிற்கிறுரேன்று மட்டில்லாதபேர்கள் அறியவில்லை, அறிந்தவர்களுக்குள்ளே இந்த நன்றிக்களவாக நடந்து தங்கள் திவ்விய காவலை ஸ்துதிக்கிறவர்களை எண்ணுவதேளிதே. ஒருவரிருவரல்லாதே இந்தத் தேவசகாயத்தை நினைப்பாரில்லை. ஒரோரிடத்தில் நினைத்தாலும் ஒருகைமாறிடுவாரில்லை. அவர் நமக்குச்செய்யும் நன்மைக்கெதிராய்த்தீமையாக அவர் திருமுகத்திலே மிகவும் வெறுக்கத்தக்க அசுத்தங்களை நினைக்கவும் முடிக்கவும் கூசாதேபோகிறேும். நம்மைக் காக்கும் சம்மனசோவெனில்; இதினுல் அன்பு சற்றும் குறையாமல் வியாதியினுல் மதி மயங்கின மகனுல் அடிபட்ட தாயைப்போல் அதிகமாய்த் தயைபுரிந்து எம்மைக் கரையேற்றப் பிரயாசப்படுவது நிச்சயந்தானே. உபதேசித்தொழிலைச்செய்யத் துணிந்தவர்களுக்கெல்லாம் இப்படி நன்றியறியாதவர்கள் எங்குங்கிடைக்குமே. நீ அவனைக் கரையேற்றப் பிரயாசப்படவே அவன் உன்னைக் கெடுக்கப் பகைகொள்வான். அர்ச்செயசிஷ்ட சின்னப்பர் சொன்னபடியே நீ இவனை ஸ்துதிக்கவே அவன் உன்னைத் தூஷணிப்பான். நீ அன்புகாட்டவே அவன் பகைகாட்டி, ஆவ

லாதியாகத் தூறுவான் நிந்தையாக அடிப்பான். சகல கேடாக வறுமிப்பான். ஆகிலும் சொன்ன தேவமாதிரி பின்சென்றதுக்கெல்லாம் அஞ்சத்தேவையில்லை. பகைத்து நன்றியறியாதவர்களைக் கரையேற்றும நினைவையும் உபாயங்களையும் கைவிடத்தேவையில்லை. பிறர்செய்யும் வகைக்களவாக அதிகமாய் அவர்களுக்கிரங்கித் தயைகாட்டி, அவர்களை விசேஷமாய்க் கரையேற்றப் பிரயாசப்படக்கடவோம். நீ செய்ததற்குப்பலனை ஆண்டவர் ஒருவரே தருவாரேன்றெண்ணி, பிறரால் கைமாறுனக்கு உண்டாமேன்று பிரயாசப்படவும் வேண்டாம். அவர்கள் நன்றியறியவில்லையேன்று பின்வாங்கவும் வேண்டாம். இந்தத்தன்மையால் வேதத்திலே தாவீதென்பவருக்குச் சொல்லப்பட்டபடியே ஆண்டவர் சம்மனசைப்போல நீயும் தோத்திரங்களாலும், தூஷணங்களாலும் அசையமாட்டாதிருந்தாயாகில் ஆண்டவர் உன்னிடத்திலிருப்பாரேன்பது நிச்சயந்தானே.

ஆறுவது,—வேறுபாடின்மை. நாம் குறையுள்ள மனிதராகையில் சரீரக்கண்ணுல் மாத்திரம் பார்த்து, பிறர் ஆத்துமம் ஒன்றைப் பாராமல் புறத்துத்தோன்றும் கோலத்தைப் பற்றி நடக்கிறதினுல் செல்வரை விசாரித்த பட்சத்தால், ஏழைச் சனங்களைப் பராமரியாதே திரிகிறோம். சம்மனசானவரோவேனில், ஆத்துமத்தையோழிய மற்றேல்லாவற்றையும்

எண்ணுமையால், எல்லாமனிதர் ஆத்துமங்களும் ஆண்டவர் தேவசாயலேன்றும், எல்லாம் இயேசுநாதர் இரத்தத்தினுல் இரட்சிக்கப்பட்டதேன்றும், ஆள்வேற்றுமையின்றி எல்லாரையும் சந்தோஷமாய்க் காத்துக்கோண்டு கரையேற்றப் பிரயாசப்படுகிருர்கள். இராசாவைக் காத்தவரும், கல்விச்சேல்வம் பொருட்சேல்வமுடையவரைக் காத்தவரும், அடிமை பேதை தரித்திரர் இவர்களைக் காத்தவரும், ஒரு வேற்றுமையுமின்றி எல்லாரையும் ஒரு கண்ணுல் பார்த்து எல்லாரையும் கரையேற்ற முழுமனதோடே உபாயம் சேய்துகோண்டு திரிவார்கள். மீளவும் நாமோருசீராய் நிற்கமாட்டாமல் ஒருநாள் சுறுக்கு, ஒருநாள் மந்தங்காட்டித்திரிவோம். சம்மனசானவரோவேனில்; எப்போதும் ஒருகண்டசீராயிருந்து நாள் வேற்றுமையுமின்றி, எக்காலமும் சுறுசுறுப்போடே மனிதரீடேற்றத்தைத் தேடி எந்தச்சமயத்திலும் நமக்குதவியாக நிற்பார்கள். பின்னையும் நாம் நம்முடைய சுகத்தைப்பற்றித் தேடினதினுல், இந்தச் சீர்மையில் உபதேசம் சோல்லிக்கோண்டு இருக்கையில் அதைவிட்டு மற்ருரிடத்தில் போகவேண்டியிருந்தாலும், அதிலே நாம் நினைத்த சுகமில்லாமையால் போகமாட்டோம் என்போம். இந்த இடவேற்றுமையும் சம்மனசுக்கள் பாராமல் எவ்விடத்திலும் ஆண்டவர் இருக்கிருரேன்றும், எவ்விடத்திலும் அவரிட்

ட ஊழியத்தை நிறைவேற்றி மனிதரைக் கரையேற்றலாமென்றும் அறிந்து தங்களுக்கிதுவே போதுமென்று எங்கும் சந்தோஷமாய்ப்போவார்கள். கடைசியில் நாம் ஆண்டவருக்குமாத்திரம் ஊழியம் செய்வோமென்று எண்ணுமையால், மனிதரையும் நோக்கி நாம் சொன்னபடி கேட்டவர்களுக்கும், நன்றியறிந்து நடந்தவர்களுக்கும் காட்டின அன்புதயை மற்றவர்களுக்குக் காட்டாமல், பிறர் முறைவேற்றுமைக்களவாக நாமும் வேற்றுமைசெய்துகொண்டு திரிவோம். சம்மனசுக்களோவெனில், இந்த முறைவேற்றுமையுமின்றி, முன் சொன்னபடியே பலனைக்காணுமலும் கைமாறில்லாமலும் மனிதர் நடக்கும் முறை பாராமல் அவர்களைக்காத்து இரட்சிக்கக் கட்டளையிட்டவர் ஆண்டவரென்றுமாத்திரம் எண்ணி மனந்தேறி எவர்க்கும் வேற்றுமையின்றி அன்புகாட்டி நடப்பார்கள். ஆளும் நாளும் இடமும் முறையும் என்று நால்வகை வேறுபாடின்றி நடந்தாலொழிய ஆண்டவருக்கூழியஞ்செய்யவும் மனிதரை ஈடேற்றவும் உபதேசிகளாகத் திரிவீர்களென்று வாயினுல் சொன்னுலும் உள்ளத்தைப்பார்க்கில் அது போய்தானே.

ஏழாவது,—தாழ்ச்சி. சம்மனசானவர் அறிவு பெலன் மட்டில்லாத மற்ற வரங்களைப் பெற்றுச் செல்வ மோட்சப் பிரபுக்களாக வாழாநின்றவராயினும், ஒப்பில்லாத தாழ்ச்சி

யோடே நீசமனிதரிடத்தில் வாங்காதிருக்க வும் அடிமைகளைப்போலே அவர்கள் பிறகே திரியவும் சந்தோஷமாய்ச் சம்மதிக்கிறூர்கள். இதுவுமன்றியே சில சமயங்களில் காணப் படும் உருவத்தைக்காட்டித் தாழ்ந்த தொழில் எல்லாவற்றையும் செய்யக் கூசாதேபோனூர் கள். அப்படி அர்ச்செயசிஷ்ட அவுரேவி யேன்பவர்க்கு ஊழியக்காரராகவும் பெரிய அந்தோனியாருக்கு அஞ்சற்காரராகவும், மீசி தோரேன்பவருக்குப் பண்ணைக்காரராகவும், மேவுபேற்றேன்பவருக்குச் சுயம்பாகியாகவும் மற்றொருமுனிவருக்கு வந்தவியாதியில் எல் லா நீசவூழியங்களையும் செய்பவராகவும் சம்ம னசுக்கள் திரிந்தார்களேன்றறிவோமே. நாம் இந்தத் தாழ்ச்சி மாத்திரைகண்டு மனிதரைக் கரையேற்ற எந்தத்தொழில் ஈனமேன்றுசெய் யக் கூசாநிற்போம். ஒரோரிடத்தில் நுழைய வும் ஒரோர் சமயத்தில் தாழவும் நம்முடைய ஆங்காரம் கூசினபோதுகூடச் சம்மனசான வர்கள் நிற்பார்களேன்று நாணித் துணியக்கட வோம். இப்படியே நம்மைக் கரையேற் றச் சம்மனசுக்கள் பிரயாசப்படுமுகாந்தரம், வகை, குறிப்பு, சலியாமை, கைமாறின்மை, வேறுபாடின்மை, தாழ்ச்சி என்று இவ்வேழு உத்தம குணங்களைப் பார்க்கில் இதில் சொல் லிக் காட்டின மாதிரி தேவநிறையும் தயையும் காட்டும் கண்ணுடியேன்று எண்ணிவிடாமல், அதை ஆராய்ந்துபார்க்கக்கடவீர்கள். நாம்

ஏழுபிரிவாக வகுத்துச் சுருக்கமாய்ச் சொன்ன தை நீங்கள் விரிவாய்த்தியானிக்க ஒவ்வொரு கிழமைக்கொரு பிரிவெடுத்துப்பார்த்து, தெளிந்த கண்ணாடியிலே தன் முகத்தழுக்குக் கண்டு துடைத்தாற்போலச் சம்மனசுக்கள் தந்த மாதிரியை ஆராய்ந்ததிலே நீங்கள் செய்யும் குறைகளைக்கண்டு தீர்க்கப் பிரயாசப்படக் கடவீர்கள். சம்மனசுக்கள் நம்மைக் காத்துக் கொண்டிருப்பதும் நாம் உபதேசியாகத்திரிவதும் எல்லாமனிதரையும் கரையேற்றவல்லவோ? தொழிலும் கருத்தும் ஒன்றுமே. ஆயினும் இதற்குச் சம்மனசுக்கள் திரியுமுறையிதாகில், நாம் நடக்கும் தன்மையென்ன? மனிதரை மோட்சத்தில் கூட்டிக்கொண்டு போகச் சம்மனசுக்கள் இப்படி இந்த வழி நடக்கவே நான் அதைவிட்டுப் போகையில் இன்னம் மனிதரைக் கரையேற்றத்திரியும் உபதேசி என்னப்படுவேனே? சேரும்படிக்குக் குறித்தவிடம் ஒன்றாகையில், நடக்கும் வழியும் ஒன்றானலல்லவோ; நானும் சேருவேனென்று நம்புவது நியாயம். என்னைக் கரையேற்றத் தயைவைத்து எனக்குக் காவலாக நிற்கும் சம்மனசானவரே நீர் செய்யும் தொழிலை நானும் கைக்கொண்டதைக் கண்டேனக்கதிலே மோசம் வராமல், உம்மைப் போல அதைக்குறையின்றி முடித்துப் பிறரையும் கரையேற்றி, நானும் கரையேற ஒத்தாசை செய்வீரென்று மன்றாடக்கடவோம்.

சம்மனசைப்போல நல்லவன் நீயேயென்று வேதத்தில் மூன்றுவிசை தாவீதென்பவருக்கு மாத்திரம் தோத்திரமாக எழுதப்பட்டதறிவோம். இந்தத்தோத்திரம் உங்களுக்கும் சொல்லும்படிக்குச் சம்மனசுத் தொழிலைச் செய்தாற்போல அவரிடத்தில் கண்டமாதிரியோப்பப் பிரயாசமும்பட்டுச் சம்மனசுக்களைப்போலே நல்லவராகத் துணிவீர்கள். கடைசியில் காவலாயிருக்கிற சம்மனசுக்களை உங்கள் தொழிற்குத்துணைகளாகத் தேடாதேபோனாலும், மாதிரியாகப் பின்செல்ல நினையாதேபோனாலும், நீங்கள் செய்வினைக்கெல்லாம் சாட்சிகளாக விடாமல் நிற்பார்களென்று மறக்கவேண்டாம். எங்கேபோனாலும், எவ்விருளந்தரத்திருந்தாலும் உங்களைக்காத்த சம்மனசுக்களும் கூடநின்றவர்களைக்காத்த சம்மனசுக்களுக்கு மறைவொன்றின்றிப் பார்த்துக்கொண்டிருப்பார்களென்று விசுவாசத்தின் கண்ணாற்கண்டு சந்தேகமறத்தேறி நிச்சயித்தால், அப்படிப்பட்ட மோட்ச பிரபுக்களுக்குரிய வணக்கமும் உங்களுக்கு வராதிருக்குமோ? அர்ச்சேயசிஷ்ட அமுதநாதர் இந்த விசேஷத்தில் எழுதினதாவது; மறவாமல் எந்நேரமும் உங்களண்டையில் காத்திருக்கும் சம்மனசுக்களைக் கண்டாற்போல நினைப்பீர்களாக. எங்கே இருந்தாலும் கூடநிற்கும் சம்மனசுகளை ஒடுக்கத்தோடே வணங்கவும், மறவாமல் என் முன்பாகக் கூசி எண்ணத்தைச்செய்யவும், சொல்லவும்

துணியமாட்டீர்களோ? அதெல்லாம் அவர்கள் முன்பாக முடிக்கத் துணியவேண்டாமென்றார். அப்புடிப் பத்து இருபது ஐம்பது நூறுபேர்கள் கூடினவிடத்தில், அத்தனை வானுலகரசர் கூடியிருக்கிறார்களென்று திறமாய் நினைத்தால், எந்தப் பாவியாகிலும் நடுங்கிக் கூசி அக்கிரமங்களை நினைக்கமாட்டானே. ஆரைக்கண்டாலும் லௌகீக ஆசாரத்துக்கல்லாதே மனதில் எண்ணுமல், அவனண்டையில்நிற்கும் சம்மனசானவரைநோக்கி வணங்கப் பழகினீர்களாகில், அர்ச்சேயசிஷ்ட சின்னப்பரேழுதினபடியே இவ்வுலகிலிருந்தாலும் மோட்சத்தில் சஞ்சரித்தவர்களாய் நிற்பீர்களே. இதோன்றிலேமாத்திரம் பழகினல், கொஞ்ச நாளிலே வேறே மனிதராகி முன்சொன்னபடியே சம்மனசுகளுக்கோத்த தொழிலைச்செய்வதுபோல, நீங்களும் சம்மனசுகளுக்கொப்ப நல்லவர்களாவீர்களென்பதற்குச் சந்தேகமில்லை. துக்கத்திலே இதற்குப் பிரயாசமே தோன்றுமாகிலும், சிறிதுநாள் துணிவோடே பழகினபின்பு, வானோர்களோடே சஞ்சரிப்பதே ஒப்பில்லாத இன்பமாகி எக்காலத்தும் அதைக்கைவிடமாட்டீர்கள். இப்படியே சம்மனசுகளைத்துணையாகவும்,மாதிரியாகவும்,சாட்சியாகவும் மறவாமல் எண்ணின பல உபதேசிகளிருந்தால், எங்கும் சத்தியவேதம் பரம்பி எண்ணப்படாத மனிதர் சம்மனசுகளோடே மோட்சத்தில் வாழாநிற்பார்களென்பது நிச்சயம்.

௨௰. அதிகாரம்.

PERSUASIVES TO THE CATECHIST'S OFFICE.

வேதியரொழுக்கத்துக்குறுதி.

நாம் உங்களுக்குக் குருவாக இயேசுநாதரால் அனுப்பப்பட்டமையால், நமக்கிருக்கிற கடனைத்தீர்க்க இதெல்லாம் உபதேசம் சொல்லிக்கொண்டு திரியும் உங்களுக்கு அறிவிக்கப் பிரயாசப்பட்டோம். இதுவுமன்றியே, மனிதர் மோட்சத்தை அடையவும், நரகத்திலே விழவும், நீங்கள் உபதேசித்தொழிலே முடிக்கும் தன்மையால் ஆகுமேன்றமையால், நாம் எவர்க்கும் இரங்கி இயேசுநாதர் அடி மிதிபட்டிறந்து, மீட்டு இரட்சித்த ஆத்துமங்கள் என்றென்றைக்கும் பசாசுக்கு அடிமையாகாமலும், நரகத்தில் விழுந்து ஓயாமல் வேந்து நோந்து, தங்களைப்படைத்த சுவாமியைத் தூஷணியாமலும், முடிவில்லாத பாக்கியங்களை மோட்சத்தில் பெற்று வாழ்விக்கவேண்டுமேன்ற ஆசையால், நீங்கள் குறையின்றி, உங்கள் தேவதொழிலே முடிக்கும் தன்மையைக்காட்டி வேதியரொழுக்கமென்றிப்பயனை எழுதித் தந்தோம். இனி நாம் எழுதினதை நீங்கள் அடிக்கடி வாசித்து உங்கள்மேல் நிற்கும் கடனைத் தீர்க்கவும், எல்லாரையும் ஆண்டவர் திருப்பாதத்தில் சேர்க்க ஆசைவைத்து உங்களால் இதற்குக் குறை வராதபடிக்கு நடக்க

வும், அச்ச நடுக்கத்தோடே பிரயாசப்படக்கட வீர்கள். திருச்சபையென்னும் மந்தைக்குப் பிரதான தேவ கோவலனாகிய இயேசுநாதர் ஆத்துமங்களை இரட்சிக்கத் தமது திவ்விய இரத்தமெல்லாவற்றையும் தந்தார். அதின் பின்பு தமது மந்தைஆடுகளைமேய்க்க அவரால் வைக்கப்பட்ட உபதேசிகள் அந்த ஆத்துமங் களைக் கரையேற்ற நாலு வார்த்தைமுதலாய்ச் செலவழிக்கமாட்டார்களே. இப்படிப்பட்ட உபதேசிகள் எத்தனைபேர் உண்டென்று கேட் டால், மந்திரமறியாத பிள்ளைகளும், திருநாள் முதற்கொண்டு செய்கடனறியாத சனங்களும், உபதேசி முகத்தையறியாத ஊர்களுந்தானே சொல்லத் தெரியவருமே. உன் கையில் ஒப் புக்கொடுத்த சனங்கள் அறியவேண்டிய சத்தி யங்களையும், நடக்கவேண்டிய வேதமுறை களையும், அவரவர்க்கொத்தபடி படிப்பிக்கிறது உங்கள்மேலே கடனல்லவோ? இதனால் முன்னும் சொன்னபடியே இயேசுநாதர் தமது திருச்சபைச் சனங்களை இராயப்பர் கையில் ஒப்புக்கொடுக்கும்போது, நீ என் திருச்சபை யில் தலைவனாய் நிற்பாயென்றுமலும், என் மந்தை ஆடுகளுக்கு நீ முதல் இடையனாய் நிற்பாயென்றுமலும், என் ஆடுகளை மேய்ப் பாயாகவென்றார். அப்படியே அவர் மோட்ச இராச்சியத்துக்கு எழுந்தருளிப்போனபோது, மற்ற அப்போஸ்தலரையும் நோக்கி எல்லாச் சனங்களையும் படிப்பியுங்களென்றார். அப்

படி அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் தீமோத்திய ருக்கெழுதி ஆண்டவர் சாட்சியாகவும், எவர்க் கும் தீர்வையிட வரத்தக்க இயேசுநாதர் சாட் சியாகவும், நானே சத்தியமாய்ச் சொல்லுகிற தாவது; படிப்புவிடாதே சமயங்கண்டும், கா ணுமலும், எவர்க்கும் உறுதிகளைச்சொல்லவு ம், மன்றுடவும், கண்டிக்கவும் செய்வாயெ ன்றுர். அப்படிப் பல சமயங்களிற்கூடின திருச்சபை வேதபாரகரெல்லாரும் இந்தக்கட னுண்டென்று ஒரு மொழியாக ஸ்தாபித்தார் கள். இந்தக்கடன் குருக்களுக்கு முந்தியுள் ளதென்பது சரியே. அதனுல் சனங்களைப் படிப்பிக்கத் தங்களால் கூடாதேபோனுல், தங்களிடமாக வேறே மனிதரை வைத்துக் கொள்ள அவர்களுக்குக் கடன்தானே. இ தைப்பற்றி இந்த இராச்சியத்தில் குருக்கள் எங்கும் திரியமாட்டாமையில், ஒவ்வொருக் குப்போய் ஒவ்வொருத்தனை விசாரித்துப் படி ப்பிக்க, அத்தனை உபதேசிகளை நடத்திக்கொ ண்டு வருகிறுர்கள். நீங்களும் குருக்களுக் கிருந்த கடனை மேற்போட்டுக்கொண்டபின்பு சனங்கள் அறியவேண்டியதையும் செய்யவே ண்டியதையும் அடிக்கடி படிப்பியாதேபோ னுல், வேதபாரகரெல்லாரும் சொன்னபடி உங்களுக்குச் சாவான பாவமாகுமென்றதற் குச் சந்தேகமில்லை. உபதேசியானவன் அநு தினம் ஒரு சந்திபிடித்தாலும், பிச்சைதந்தா லும், செபதபமுடித்தாலும், சனங்களைப் படி

ப்பித்தாலொழியக் கரையேறமாட்டான். வாயிருக்கப் பேசாத கல்லுபதேசிக்கு வேறே பாவமில்லாவிட்டாலும், இதனுல்மாத்திரம் நரகத்துக்குள் விழுவானேன்பது நிச்சயமாமே. அர்ச்சேயுசிஷ்ட சின்னப்பரும் தவஞ்சேய்திருக்க, வேதத்துக்காக அடியும், நிந்தையும் பட்டிருக்க, தமது சரீரத்தையடக்கி ஞானத்துக்கு அதைக் கீழ்ப்படுத்தியிருக்க, மற்றச் சகல புண்ணியங்களில் நெடுநாட் பழகியிருக்க, இதேல்லாம் நம்பாமல், கோரிந்தியருக்கெழுதின முதல் நிருபத்திலே சனங்களுக்கு ஓயாமல் புத்திசோல்லாமல் போனேனுகில், எனக்கே கேடேன்ருர். இதேல்லாவற்றையும் கேட்ட சிலர் உள்ளஞ்சி இதேல்லாம் மேய்யானுல், உபதேசிகளுட் கரையேறுவாருண்டோ? நான் என்னுத்துமத்தைக் கரையேற்றினுல் போதாதோ? இனிப் பிறரை விசாரிக்கக் கடனும் வேண்டாம், உபதேசித்தோழிலும் வேண்டாமேன்பார்கள். உபதேசிகள் கரையேறுவதரிதேன்பது உள்ளதுதானே. அதினுல் அத்தனை எச்சரிக்கையும், அத்தனை உபாயமும், இதிலே சோல்லிக்காட்டினேம். ஆகிலும், இதினுல் எனக்கு உபதேசித்தோழில் வேண்டாமேன்பது பசாசினுல், வந்த மயக்கந்தானே. வழிதப்பிப்போனுயேன்று சேவ்வழியைக் காட்டினுல், பயணம் தவிர்ந்து திரும்புவாரோ! தப்பின வழியைவிட்டுக் காட்டின சேவ்வழியில் சுறுக்

காய் நடந்து நியமித்தவிடத்துக்குச் சேரப் பிர யாசப்படுவாயே. நீயும் உபதேசித்தொழிலை நன்றாய்ச்செய்யாமல் வழிதப்பினது கண்டதி னால், அதை விட்டுப் பின்வாங்குவது நல்ல தல்ல. இதிலே காட்டின செவ்வழியில் ஆ ண்டவர் உதவியால் சுறுசுறுப்போடே நடக்க வும், இனி வழிதப்பாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கவும் துணிவதே கருமம். மற்றப் படி உன்னாத்துமம் கெடுமென்றஞ்சியல்ல வோ, இந்தத் தேவதொழிலைக் கைவிடவேண் டுமென்றால் நல்லதுதானே. ஆகிலும், மற்ற வர்க்கும் கரையேற ஆசையிருக்கையில், இந் த அச்சமுமுண்டாகி எல்லாரும் பின்வாங்கி னால், பழைய உபதேசி செய்ததைக்கண்டு இனி யாவரும் உபதேசியாகச் சம்மதிக்க மாட்டார்கள். அப்போது விசாரிப்பில்லா மல் சனங்கள் கெட்டு மோசம்போனால், இந் தக் கணக்கு ஆண்டவர் உங்களையொழிய ஆ ரைக்கேட்பார்? உங்கள் வீண் அச்சத்தினால் மற்றவர்கள் நரகத்துக்குப்போக நீங்கள்மாத் திரம் மோட்சத்தை அடைவீர்களென்றிருக் கிறீர்களோ! இதற்கு நாம் இதில் எழுதித் தந்த ஆறும் அதிகாரம் பார்க்கக்கடவீர்கள். நாம் இதிலெழுதினதை வாசித்தஞ்சுவது நல் லதாயினும்,அச்சத்தால் பின்வாங்காமல் ஆண் டவர் உதவியைக்கொண்டு, இனிச் சாகிறகா லத்தில் அஞ்சாதபடிக்கு நடக்கத்துணிவது நியாயம். அச்சத்துக்குமாத்திரம் இடங்கொ

டாமல் இந்தத்தொழிலே நன்ருக முடித்தால், உங்களுக்கு வரும் மட்டில்லாத வரிசைப் பாக்கியங்களையெண்ணி, ஆசையால் மனமலர்ந்து உறுதியாய்த்துணியத் தேவையில்லையோ? பின்னையும் ஆண்டவர்சாயலாக உண்டாக்கப்பட்ட ஆத்துமங்கள், இயேசுநாதர் இரத்தத்திஞல் கழுவப்பட்ட ஆத்துமங்கள் பசாசுக்கு அடிமைப்பட்டு முடியாத காலத்து வேகாமல் வெந்து, சாகாமற்செத்து மீட்சியின்றி, ஆறுதலின்றி, எரி தீநரகத்தில் பாடுபடவிழுவதைக் கண்டு சற்ருகிலும் இரக்கம் வராதோ? அநுதினமும் காற்றுமுகத்தில் இலைகள் விழுவது போல, எண்ணப்படாத ஆத்துமங்கள் அவியாத நரகத்தீயில் வேவ விழுவதைக் கண்டு நாம் சுகமாய் வீட்டிலேயிருக்க மனம்பொறுக்குமோ? ஐயோ! உபதேசிகள் செய்யவேண்டியதைக் குறையின்றிச்செய்தால், நரகத்தில் வெந்து பராபரனைத் தூஷணித்துக்கொண்டிருக்கிற ஆத்துமங்களில் எத்தனை அங்கே விழாமல் என்றென்றைக்கும் மோட்சத்தில் ஆண்டவரைத் துதிக்க வாழாநிற்குமே. உங்களை உண்டாக்கினவர் உங்களுக்குள்ளதெல்லாவற்றையும் தந்தவர், உங்களை இரட்சித்தவர், உங்களுக்குவேண்டிய அடியும், மிதியும்பட்டிறந்தவர், உங்களுக்கநுதினம் மட்டில்லாத சகாயங்களைச்செய்பவர், இப்படிப்பட்ட சுவாமி நரகத்தில் தூஷணிக்கப்படவோ? இது அறிந்து உங்களால் இயன்றமாத்திரம் அவருக்

கிந்தத் தூஷணம் வராமல், எவராலும் மோட்சத்தில் துதிக்கப்படும்படிக்குப் பிரயாசப்படத் தேவையில்லையோ? அவர் உங்களைக் கரையேற்றப்பட்டதற்கு நீங்கள் இத்தொழிலினால் படவேண்டியதெத்தனை? இம்மாத்திரம் உங்களுக்குவேண்டிச் சிலுவையில் அறையுண்டிறந்த சுவாமிக்குக் கைமாருசச் செய்யவேண்டாமோ தம்பிமாரே? அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் சொன்னபடியே நான் இதைக் கண்ணீர்விட்டழுது எழுதுகிறேன். உபதேசித்தொழிலின் மாட்சியை ஒரு கண்ணால் பார்த்து, மற்றொரு கண்ணால் உங்கள் நடக்கையைப்பார்க்கில், நொந்தழாதிருக்க வல்லவருண்டோ? உபதேசிகள் எவரெனில், இயேசுநாதரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலர்தாமே. மனிதரைக் கரையேற்ற அவர் தமக்கு உதவியாகத் தெரிந்த துணைவர்தாமே. இயேசுநாதர் சிந்தின திவ்விய இரத்தத்தை உங்கள் கையில் வைத்து உங்களால் அநுதினமும் பலனைக்கொள்ளவிருக்கிறார். உங்களால் எங்கும் தமது தேவ நாமம் விளங்கி வணங்கப்படவும், உங்களால் பகையெல்லாம் தீர்ந்து தமது இராச்சியம் வந்து வழங்கவும், உங்களால் பரமண்டலத்தைப்போலப் பூமியிலேயும் தமது சித்தத்தை மறுப்பாரின்றி, அதற்கெல்லாரும் கீழ்ப்படிந்து நடக்கவும், உங்களாலல்லவோ இதெல்லாம் ஆகுமென்றிருக்கிறார். நீங்களல்லவோ சுவிசேஷத்தில்

சொன்னபடி ஆண்டவர் மோட்சத்தில் சோடித்த முடியாத பேரின்ப விருந்துக்கு எல்லாரையும் கொண்டுபோய் விட அனுப்பப்பட்டவர்கள் நீங்களல்லவோ; அதிலே சொன்னபடி ஆண்டவர் பொக்கிஷத்தைக் கைக்கொண்டுபோய், அதை வர்த்திக்க அனுப்பப்பட்டவர்கள் நீங்களல்லவோ! ஏசேக்கியேல் சொன்னபடி ஆண்டவர் வீட்டுச் சனங்களுக்கு நீங்கள தூங்காத காவலாக வைக்கப்பட்டவர்கள், இயேசுநாதருக்கோரு கற்புடையாளாகத் தெரிந்துகொள்ளப்பட்ட திருச்சபை மிகவன்புள்ள ஒரு தாயாய் உங்களைப் பெற்று வளர்த்துப் பேரும் பெருமையுமுடையவர்களாகச் செய்தபின்பு, தமது பகையாகிய அஞ்ஞானத்தை வென்றேழித்து, தாம் எங்கும் பரம்பி விளங்கவும் தமக்கு அநுதினமும் புதிதாய்ப் பிள்ளைகள் அளவின்றி உண்டாகி எங்கும் புகழப்படவும், தமது செங்கோன்மையை உலகிலெங்கும் நீட்டி, தாம் பகையின்றி ஆளவும் இவையெல்லாம் உங்களால் ஆகவேண்டுமென்று உங்களை உபதேசிகளாக ஸ்தாபித்ததல்லவோ? ஒவ்வோருவற்குக் காவலாக நிற்கும் சம்மனசுக்கள் தாங்கள் பிரயாசப்பட்டுக் காக்கும் ஆத்துமங்களெல்லாம் உங்களால் கரையேறவேண்டுமென்று பார்த்திருக்கிறார்களல்லவோ! மோட்சவாசிகளெல்லாரும் உங்களால் மோட்சம் நிறைந்து தங்களுக்கு அங்கே துணைகள் மிகு

தியாகப் பேரின்பமுமிகுமேன்று நம்பி இருக்கிருர்களல்லவோ? நீங்களோவேனில், உங்கள் சுகத்தைப்பற்றிச் சோம்பலே விடமாட்டாமல், இவையெல்லாம் வீணுகச்செய்து இயேசுநாதர் ஆசையும் திருச்சபைக்கருத்தும் சம்மனசுக்கள் நினைவு மோட்சவாசிகள் நம்பிக்கையும் மறுத்து நீங்களும் நரகத்துக்குப் போகக் கூசாமல் இருக்கிறதேன்ன? உங்கள் சோம்பலினுல் எண்ணப்படாத ஆத்துமங்கள் நரகத்தில் விழுந்து வேக இயேசுநாதர் சிந்தின இரத்தம் தெருவிலெங்கும் நிந்தையாக மிதிபட அவர் பட்ட பாடெல்லாம் பலனில்லாமலிருக்கத் திருச்சபை நாள்தோறும் ஓங்கி மெலியச் சம்மனசுக்கள் ஆறுமல் மனதில் நொந்தழ உங்களுக்கு நல்லதேன்ரு, சுறுசுறுப்போடு உங்கள் தேவதொழிலே முடிக்கத் துணியமாட்டீர்கள். எல்லாருக்கும் நடுத்தீர்க்க இயேசுநாதர் எழுந்தருளி உலகெல்லாமறிய அவனவன் கணக்கெல்லாம் வகுப்பறுத்தரிதில் கடினமில்லாமல் கேட்குமிடத்தில் நரகத்தில் விழுந்த பலரே சீறி இவர்கள் உபதேசிகளாயிருந்து எங்களுக்கான சமயத்தில் உறுதிசொல்லாமையால், கெட்டோமென்று பழியைக்கேட்கச் சம்மனசுக்கள் வந்து, தங்களுக்கொப்புக்கொடுத்திருந்த பல ஆத்துமங்கள் இவர்கள்சோம்பலினுல் நரகத்துக்குள் விழுந்ததேதேன்று பழியைக்கேட்கத் திருச்சபையெல்லாம் இவர்களால் நிந்தைப்பட்டோ

மேன்று பழியைக்கேட்க, இயேசுநாதர் திவ்விய இரத்தந்தானே இவர்களால் பலனில்லாதது ஏனேனேன்று பழியைக்கேட்க, சோம்பலாய்க்கிடந்த உபுதேசிகள் அவை இவற்றிற்கெல்லாம் சோல்லத்தகும் மறுமோழியுண்டோ? ஐயோ! தங்களால் நரகத்தில் விழுந்த பேர்களோடே தாங்களும் விழுந்து முடியாத காலத்து அவர்களால் கடி அடி உதை நிந்தைப்பட்டுப் படும் ஆக்கினை சோல்லும் தன்மையல்ல,அன்று பயமின்றிப் பிரதாபமடையத்தக்கவர்கள் தந்தோழிலைக் குறைவின்றி நிறைவேற்றின உபதேசிகளல்லவோ? அவர்களே தங்கள் வார்த்தையைக்கேட்கமாட்டாத பாவிகள் மேலே சாட்சியாகநிற்பார்கள். நாங்களே பகலும் இரவுமாகத்திரிந்து அவர்கள் அறியவேண்டியதையும் செய்யவேண்டியதையும் தேளியக்காட்டினோம். அவர்கள் பாவத்தில் விழாமுன்னே நாங்களே நயபயஞ்சோல்லி விழுவாரைத்தாங்கிப் பிரயாசப்பட்டோம்.— தாங்கின கையை உதறி விழுந்தபின்னும் போய் விழுந்தாரைத்தூக்க உறுதிகளைச்சோன்னோம். தூக்கினவனை உதைத்தாற்போலச் சோன்ன நியாயங்களை மறுத்து அவர்கள் எங்களைத் தள்ளத்தள்ளச் சலியாமற்போய்க் கண்டித்தலும் மன்றாடலுஞ்சேய்தோம். தாங்களே தங்களால் வலியக் கேட்டார்களேன்று நல்ல உபதேசிகள் அன்று தீயோர்கள்மேலே சாட்சிசோல்வார்கள். உங்கள்வார்த்தையைக்கே

ட்டு நடந்த நல்லவரோவென்றால், கூட் மோ ட்சத்திற்சேர்ந்து நீங்கள் சொன்ன உறுதிகளா லும் பட்ட பிரயாசத்தாலும் இதோ, நாங்க ளும் முடியாத பேரின்பத்தை முடிவின்றி அநுபவிக்கச் சேர்ந்தோமென்று அவர்கள் நல்ல உபதேசிகளை வணங்கிச் சூழ்ந்துவரச் சமம் னசுக்கள் புகழ்ந்துபாடி முன்னம் மோட்ச ராச்சியத்திற்புகுந்து இயேசுநாதரால் பெறும் விசேஷ வரிசைத்தொகுதியோ நினைக்கும் தன் மையல்ல? சொன்ன கொடிய நாள் வரா முன்னே அந்த ஆக்கினைக்கஞ்சி இந்த வரி சைக்காசைப்பட்டுக் காட்டின ஒழுக்கத்தின் படியே நாலுநாள் வருந்தி நடக்கத் துணியா திருப்பீர்களோ? ஆகையால், உங்களுக்கெ ல்லாம் அர்ச்செயசிஷ்டராயப்பர் முன்னிருபத் தைந்தாம் அதிகாரத்திரண்டாம் வசனந்துவக் கி எழுதினதைக்காட்டி இங்கே நான் சொன் ன உறுதிகளை முடிப்போம். அதாவது, உங் கள் கையில் ஒப்புக்கொடுத்த ஆண்டவர் மந் தையாடுகளை மேய்க்கக்கடவீர்கள். இதுவும் புறக்க்ட்டாயத்தினால் செய்யாமல் ஆண்டவர் திருமுகத்தைப்பார்த்து மனம்பொருந்திச் செய் வீர்கள். பிறர் பொருளாசையில்லாமலும், பி றர்மேலே ஆளவேண்டுமென்கிற அகங்காரமில் லாமலும் அறநெறியில் முன்பு நீங்கள்போய் நீங்களே முன் நடந்துகாட்டின மோட்சவழி யைப் பின்பு வாயினால் காட்டி மற்ற யாவர்க் கும் தரும மாதிரியாக நிற்பீர்கள். அப்போ

து இவ்வகை ஞானவிடையர்க்கெல்லாம் பிரதான தேவகோவலனாகிய இயேசுநாதர் நடுத்தீர்க்கத்தோன்றுமளவில் நீங்களே அழியாத மோட்சபாக்கிய முடியைப்பெற்றுப் போவீர்களென்றார்.

இப்படியே ஆகும்படிக்கு நமக்கு இதை எழுதத்துணிவும் உதவியும் தந்தவரும் உங்களை உபதேசிகளாக ஸ்தாபித்தவரும் உங்கள் தொழிலைச்செய்ய இப்பூவுலகில் மனிதனாகப் பிறந்தவரும் எல்லாரையும் கரையேற்ற அடிமிதிபட்டுச் சிலுவையில் அறையுண்டு இறந்த பரம கர்த்தருமாகிய இயேசுநாதர் திருப்பாதத்தில் விழுந்து மன்றாடி வணங்காநிற்போம்.

BESCHI'S INSTRUCTIONS.

(APPENDIX.)

வேதியரோழுக்கச் சோதனே.

உபதேசிகள் நடக்கவேண்டிய முறைக ளேக்காட்டி நாம் பட்ட பிரயாசத்துக்கு நினேத் த பலனுண்டாகத் தந்த வேதியரோழுக்கமோ ராணிக் கோவையாகக்கோண்டு, அவனவன் நடக்கும் தன்மையைப் போன்னுரைகல்லில் உரைத்தாற்போல ஆராய்ந்து சோன்னவோ ழுக்கத்துக்கேற்றதோவில்லேயோவேன்று சோ திக்கக்கடவன். இதனுல் வேதியரோழுக் கம் முடிந்தபின்பு, இந்தச்சோதனே சேய்யும் வகையைப் பிரித்துத் தருவோம். ஒவ்வோ ன்றுக்கோரு நாளாகச் சற்றுநேரத்துக்குத் தனி யே நின்று தன்னேக் கணக்குக்கேட்டாற்போ ல, இதிலே சோன்னதை ஆராய்ந்தால் தான் சேய்த குறையை நடத்தவேண்டிய முறை யும் காணப்படுமே. தன் தோழில் கடனேத் தீர்த்து, தானும் கரையேறிப் பிறரையும் கரை யேற்ற ஆசையுள்ள உபதேசிகள் யாவரும் மாதத்துக்கு மாதம் தப்பாமல் எட்டுநாளாக இந்தவகைச் சோதனே சேய்துகோண்டு வரக் கடவர்கள்.

முதற்சோதனை.

ஆண்டவரைப்பற்றின ஒழுக்கம்.

க. நீ உபதேசியாய்த் திரிகையில் உன்னை மனிதருக்கு ஊழியஞ்செய்கிறவனாக எண்ணியிருக்கிறாயோ? ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறவனாக எண்ணியிருக்கிறாயோ? ஆண்டவருக்கென்றால் மனிதருக்குமாத்திரம் அஞ்சுவானேன்? மனிதர் காணுங்கால் சுறுக்காய் நடந்து, அவர்கள் காணாதிருக்கையில் சோம்பலாய்க்கிடப்பானேன்? ஆண்டவருக்கு ஊழியம் இதென்றிருந்தால் எங்கும் வியாபித்திருக்கும் சுவாமிக்கஞ்சி நடவாமல் மனிதருக்கோப்புவித்தாலே போதுமென்று திரிவானேன்? பின்னையும் ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறாயாகில், அவரே நிறைந்த பலன் தருவாரென்றிராமல் உன் ஆசைக்களவாக மனிதரால் உனக்காதாயம் வராமையால் முறைப்படுவானேன்?

உ. மனிதரைக்கரையேற்றுவது தேவதொழிலாய் மனிதர் வல்லமையாலாகாமல், ஆண்டவருடைய விசேஷ உதவியாலாகவேணுமென்றுநிச்சயமாய் நினைக்கிறாயோ? உனக்கிது நிச்சயமானால் உன் திறத்தை நம்புவானேன்? சிலரைத் திருப்பினவிடத்தில் நீயே நல்ல உபதேசியென்று மனதிலுமெண்ணிப் புறத்திலும் சொல்லி மகிழ்வானேன்? ஆண்டவராலுதவியும் பலனும் வரவேணுமென்றிருந்தால்,

நீயும் வரன் முறையோடே பேச மற்றவரும் பொருந்திய மனதோடே கேட்க, நீ காதிலே பேசுமிடத்தில், அவரே மனதிலே பேச, நீ விரைத்ததற்கவரே விளைவுகொடுக்க எந்நேரமும் மன்றுடாமையென்ன? அர்ச்சேயசிஷ்டசின்னப்பர் எழுதினபடியே விசேஷமாயிந்த ஞானப்பயிர்வகையிலே விரைத்தலுமிறைத்தலும் மனிதராலாகும். விளையச் செய்வது ஆண்டவரால் மாத்திரமாகும் கருமமல்லவோ? இத்தன்மையால் அநுதினம் தப்பாமல் ஆண்டவ்ரை வேண்டிக்கோள்ளாத உபதேசி பிறரைக்கரையேற்ற ஆசையில்லாத அசடனுகவும், தன் திறத்தை நம்பின ஆங்காரனுகவும் எண்ணப்படுவதே நியாயமாம்.

௬. பிறர் செய்யும் புண்ணியம் ஆண்டவருக்குத் தோத்திரமாகையில் உனக்கது சந்தோஷமும் அவர்கள் செய்யும் பாவம் அவருக்கு இகழ்ச்சியாகையில், உனக்கது கஸ்தியுமாகுமோவல்லவோ; இல்லையென்றுல் ஆண்டவர் மேலே உனக்குப்பத்தி சற்றுகிலுமில்லையென்றது நிச்சயமாமே. உனக்குப் பிதாவும் ஆண்டவருமாகிய சுவாமிக்குச்செய்யவேண்டிய ஆராதனையைப் பசாசுக்குச்செய்யவும், அவராலுண்டாக்கப்பட்டிருக்கிற பிரசைகள் அவரைத் தூஷணித்து நிந்திக்கவும் கண்டு, மன நோகாதாயின், அவருக்கு நீ பிள்ளையோ? அவரை நீ சேவித்தவனே, அவரால் நீ அனுப்பப்பட்ட உபதேசியோ?

ச. அஞ்ஞானத்தை நீக்கி, சத்தியத்தை அறியவும், பாவத்தை விட்டுப் புண்ணிய நெறியிற்சேரவும், மனிதருக்குறுதிசொல்லி நீ படும் பிரயாசத்தினுல் மனதிலெண்ணித் தேடும் பலனென்ன? ஆண்டவரால் படைப்புண்டு தமது திவ்விய இரத்தத்தினுல் இரட்சிக்கப்பட்ட ஆத்துமங்களை அவர் திருப்பாத்ததில் சேர்த்து, அவரை ஸ்தோத்திரஞ் செய்விப்பது நீ தேடும் பலனே? இதுவே உபதேசிகளெல்லாரும் குறிக்கத்தகும் நன்மையல்லவோ? இதுவே நீயும் தேடும் நன்மையானுல் செல்வத்தில் வாழ்பவரும், பெருமையிலுயர்ந்தவரும் கரையேற நீ சந்தோஷமாய்ப்படும்பிரயாசம் ஏழைச் சனங்களுக்காக் வேண்டிப் படாமையென்ன இவர்கள் ஆத்துமங்களை ஆண்டவர் படைத்ததில்லையோ? இரட்சித்ததில்லையோ? தான் தன்னை ஏய்க்கத் தேவையில்லை. புறத்திலே நடக்குமுறை தானுள்ளே காட்டும் தன்மையென்று நினைக்கப்படும்.

ரு. ஆண்டவர் வல்லமைக்கெதிரில்லையென்றும், ஆண்டவர் தயைக்களவில்லையென்றும், ஸ்திரமாயெண்ணி, அதனுல் தம் தயையைக்கொண்டெல்லாரையும் கரையேற்றத் திருவுளமானுரென்றும், தம் வல்லமையைக் கொண்டெல்லா விக்கினங்களையும் செயிக்கத் தக்கவரென்றும், அவரை முழுதும் நீ செய்யும் தொழிலிலே விசேஷமாய் நம்பியிருக்கிருயோ? அப்படி நம்புகிருயாகில் ஓரிருமுறை புத்தி

சொன்னவிடத்தில், அவர்கள் கேளாமையால் இனிப் பயனில்லையென்று பின்வாங்குவானேன்? நீயோ அவர்கள்மேல் ஆண்டவர் வைத்த தயைக்கும், அவருக்குள்ள வல்லமைக்கும் அளவு பிரமாணம் வைக்கத்தக்கவன் சொன்ன நியாயங்களை நூறுமுறை மறுத்தவர்கள் மற்றொருநாள் அவர்களை ஆண்டவர் தயையால் பார்த்தால், அன்று நீ சொன்ன ஒருவார்த்தைக்கிணங்கித் திரும்பச்செய்வது ஆண்டவர்க்கரிதோ? மீளவும் மனிதரெல்லாரும் கரையேறுகை ஆண்டவர் திருவுளமாகையில் நீ செய்யும் தொழிலுக்கவர் உதவிசெய்வாரென்று முழுதும் நம்பினால் அதற்குவரும் விக்கினங்களைக்கண்டு மயங்குவானேன்?

௯. இயேசுநாதர் திருவுளம்பற்றினபடியே ஆத்துமத்தையும், சரீரத்தையும் நரகத்தில் என்றென்றைக்கும் மாறாமல் வேகத்தள்ள வல்லவராகிய கர்த்தருடைய நீதியை மனதில் கனமாயெண்ணி அதற்குப்பயந்திருக்கிறாயோ? ஓர் ஆத்துமத்துக்கு உன் ஆத்துமத்தை நாமே வாங்குவோமென்று அவர் வேதத்தில்சொன்னபடியே அவர் உண்டாக்கி இரட்சித்த ஆத்துமங்களில் ஒன்றுமாத்திரம் உன்னால் கெட்டுப்போனால், அதின் பழியாக உன் ஆத்துமத்தைக் கெடுத்து நரகத்திலே தள்ளுவாரென்று அஞ்சாதிருக்கிறாயோ? அஞ்சினாயாகில் உன்னைத் தூண்டி உன் வீட்டில் நின்றுபோகிறதற்குக் குருக்கள் கட்டாயம் வேண்டுவானேன்?

ஆண்டவர் நீதியாக்கினைக்கு அஞ்சினையாகில் உனக்கு உதவியான மனிதர் முகத்தை முறிக்கமாட்டாததற்கு நீயுன் தொழிலிலே செய்ய வேண்டியதைச் செய்யாமலும், செய்யலாகாததைச் செய்தும், கர்த்த துரோகத்தைக் கட்டிக்கொள்ள அஞ்சாமையென்ன? ஆண்டவர் நீதிக்கு மெய்யாகவே அஞ்சினவன் மனிதர் பட்சத்தையும் பகையையுமெண்ணான். முற்றும்.

இரண்டாம் சோதனை.

தன்னைப்பற்றின ஒழுக்கம்.

க. இயேசுநாதர் திருவுளம்பற்றினபடியே உலகத்தையெல்லாம் சத்திய இராச்சியமாக்கி எல்லாரையும் ஒருவன் கரையேற்றினாலும் அதின்பின்பு தன் ஆத்துமத்துக்கு மோசம் வருவித்துக்கொண்டால் பலனேன்ன? இதை மனதில் நன்றாய் எண்ணி மற்றவர் கரையேற நீ பிரயாசப்பட்டுக்கொண்டு வருகையில்,நீயே கேட்டு நரகத்தில் விழும்படிக்குச் செய்யும் உபாயமென்ன! அதற்கு முதல் உபாயமேதெனில்; அச்சத்தோடு நடுக்கத்தோடு எந்நேரமும் ஆண்டவரை வேண்டிக்கொள்வதுதானே. நீ இப்படிச்செய்திருக்கிறாயோ? விசேஷமாய்ச் சில வழி இடங்களில் போகையில், ஆண்டவரே! தேவரீரிட்ட தொழிலை முடிக்கப்போகிறேன். அதிலே பசாசு விரித்த வலை

களில் அகப்படாமலும், அதினாலே வெகு நே ருப்பு என் மனதில் பற்றுமலும் என்னைக்காப் பது உமக்கு எளிதல்லவோ? என்னெளி மைக்கிரங்கிப் பிறரை நான் கரையேற்றப் போகையில், நானே கேடாதபடிக்குத் தயை செய்தருளுமென்று மன்றுடக்கடவாய்.

உ. தன்னைக்காப்பதற்கு இரண்டாம் உபா யமேதெனில்; ஐம்பொறிகளை அடக்கிக்காத் தல். அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் எழுதின தாவது; மற்றவரைக் கரையேற்றப் புத்திசொ ல்லிக்கொண்டு வருகையில், நானே கேடாத படிக்கு என் சரீரத்தைத் தெண்டித்தடக்கி நியாயத்துக்கதை அடிமையாகச் செய்கிறே னென்றார். அப்படிச் செய்தபின்பும் நாமே பாவங்களுக்கெல்லாம் ஐந்து வாசலையும் திறந் துவிட்டால், பாவமுட்கொள்ளாதிருக்குமோ வென்றார்.

௩. உபாயம் எச்சரிக்கைதானே. எங்கே போனாலும் தான் விழாதபடிக்கும் பார்த்த யா வர்க்கும் தூறுசொல்ல இடமில்லாதபடிக்கும் எச்சரிக்கையே மிகவும் வேண்டியது. உன் மனதை ஆண்டவர் அறிந்தது நிச்சயமாகிலும், அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் எழுதினபடியே மனிதர்முன்பாகத் தூறுக்கிடங்கொடாமல் திரி வது கடன். இதுவும் விசேஷமாய்த் தியா னத்திலே திரியும் உங்களுக்கு வேண்டியதா மே. சத்தியவேதத்தைப் பகைத்த அஞ்ஞா னிகளொன்றைக் கண்டால் எப்போதுமதைக்

கோண்டு நூறுயிரம்வேதத்தின்மேலே தூறுவார்கள். உங்கள் ஆண்டவர்திருநாமம் தூஷணிக்கப்படாதபடிக்கு நடந்துகோள்ளக்கடவீர்கள்.

௪. நாலாம் உபாயமாக எங்கே போனுலும் மகிமை நாணமிவ்விரண்டும் வேலியாக உங்களைச் சுற்றிவரச் செய்வீர்கள். எந்தப்பழக்கமிருந்தாலும், உங்கள் தோழிலின்மாட்சியை மறவாதிருக்கவும், எந்த உறவிருந்தாலும் நாணத்தின் வேலியைத் தாண்டாதிருக்கவும், விளையாட்டும், சிரிப்பும், சரசமும் உங்களுக்குத் தோஷமேன்றிருக்கவும், சில வீடுகளிலே நேரந்தப்பிப் போகாமலும், சாட்சியில்லாமல் நுழைந்து திரியாமலும், கோள்ளைக் காய்ச்சற்காரருக்குள்ளே திரிகிறவனைப்போலத் திரி. இதேல்லாம் சேய்யவேண்டியிருக்க நீ நடக்கும் தன்மையேன்னவேன்று சோதிக்கக்கடவாய். வேதத்தின் மகிமையும், ஆண்டவர் பெருமையும் உன் கையிலிருக்கிறதேன்று மறவாதோழுகவும்.

ரு. சேவ்வழியை வாயினுல் காட்டினது போதுமேன்றிருக்கிருயோ! நீயே முன் நடந்து காட்டப் பிரயாசப்படுகிருயோ! புண்ணியங்களைச்சேய்யச்சோல்லி, நீ பாவங்களைக்கட்டிக்கோள்வாயோ! இயேசுநாதர் முன் தாம் சேய்ததைப் பின்பெல்லாரும் சேய்யப் படிப்பித்தார். சோல்வினையும், சேய்வினையும், வேறுபட்டால் கண்ணுல் கண்டதைச்சேய்வார்களோழியக் காதாற்கேட்டதை எண்ணுர்

கள். நீ போனவிடத்தில் அநுதினமும் தனி யே நின்று செபம்பண்ணுவாயோ? நீ சமை யத்துக்குத் தாழ்ச்சியும், பொறுமையும், காட் டுவாயோ? அர்ச்செயசிஷ்ட இராயப்பர் சொ ன்னபடி நீ எவர்க்கும் தரும மாத்திரையாக வும், உனக்கே கடனும்.

சு. அநுதினமும் தப்பாமல் ஏதாகிலும், ஞானப்புத்தகங்களை வாசிப்பாயோ? நீ அறி யாததைக் கூசாமல் அறிந்தவரைக் கேட்கிரு யோ? வயிறு நிறைய உண்ணுத நாய்க்கு முலைப்பால் நிறையச் சுரக்குமோ? தோழி லைச்செய்யத் துணிந்தபோது மற்றவர் அறிய வேண்டியதைமாத்திரம் அறிந்தால், நீங்கள் கரையேறும்படிக்குப் போதாதே; மற்றவர்க ளைப் படிப்பிக்கவதிகமாயறிகிறது உங்களுக் குக்கடனே. முற்றும்.

மூன்ரும் சோதனை.

தன் வீட்டைப்பற்றின ஒழுக்கம்.

க. உபதேசியானவன் தன் வீட்டுச் சனங் கள் ஆண்டவருக்குப்பயந்து, பாவமென்கிற பேர்முதலாய் வெறுத்து, புண்ணிய வழியில் நடந்து மோட்சத்துக்குரியராகச்செய்யப் பிர யாசப்படுவானே?

உ. உபதேசி வீடு மற்றக் கிறிஸ்தவர் கள் வீடுகளுக்குத் தருமமாதிரியாக வேண்டு மென்று நிச்சயமாயெண்ணிக்கொண்டாயோ?

அப்படி உன் வீடு தருமத்துக்கோப்பனையாக ஆசையுண்டோ? உபதேசி மனையாள் சண்டைக்காரியென்றும், அவன் மக்கள் துஷ்டக்கசடரென்றும், புறத்தெல்லாம் தூற்றக்கேட்டால் உனக்கு வெட்கமிராதோ? உன் வீட்டிலிருக்கிற குறைகளை மற்றவர்களிடத்திலே தீர்க்க உனக்கு வாய்தான் வருமோ? உன்னைச் சேர்ந்த குற்றங்களைத் தீர்த்துப் பிறர் குற்றங்களைத் தண்டித்தாலே நன்றாயிருக்கும். "தன் குற்ற நீக்கிப்பிறர், குற்றங்காண்கிற்பின்னேன் குற்றமாகுமிறைக்கு" என்றான் திருவள்ளுவன்தானே.

௩. சொன்னபடி உன் வீடு எவர்க்கும் தருமமாதிரியாகவேண்டுமென்ற ஆசையால் உன் வீட்டுச் சனங்களுக்கு அடிக்கடி புத்திகளைச் சொல்வாயோ? எத்தனைபேர் புறத்து ஞானிகள்போல் பேசி, தன் வீட்டில் நுழைந்தவுடனே ஞானமெல்லாமறந்து புண்ணியத்துக்கடுத்த ஒரு சொல்லாகிலும் பேசாதிருக்கிறார்கள். நாமேயறிய ஒருபதேசிக்கு மகளாய் மற்றோருபதேசிக்கு மனைவியாயிருந்தவள் முந்தின மந்திரம் முதலாய் அறியாதிருந்தாள்.

௪. நீயில்லாத நாளிலும் அநுதினமும் உன் வீட்டில் எல்லாருமறிய மந்திரங்களைச் சொல்லவும் யாதோரு ஞான புஸ்தகத்தை வாசிக்கவும் செய்வாயோ? உபதேசி வீடு புண்ணியத்தைப்படிப்பிக்கும் பள்ளிக்கூடமாகவேண்டாமோ?

ரு. உன் வீட்டிலுள்ளவர்களெல்லாரும் அறியக் குற்றஞ்செய்தால், எல்லாரும் அறியத்தண்டிப்பாயோ? ஒரு இராசா தானிட்ட கற்பனையைத் தன் மகன் மீறினவுடனே அவனை எல்லாரும் காணத் தெண்டித்தானும். அதைக்கண்டேவரும் அஞ்சி அந்தக்கற்பனையை மீற நினையாதேபோனார்கள். நீயும் இப்படிச் செய்யாதிருந்தால் உன் வீட்டுச்சனங்கள் செய்த குற்றம் உனக்குச் சம்மதியென்று பிறர்க்கு ஒப்புவித்தாற்போலவாகி, வந்த ஆவலாதிக்கு உன்னையல்லவோ, ஆண்டவர் கணக்குக் கேட்பார்.

சு. உன்னண்டைக்குப் பரதேசிகளும் இரப்பவர்களும் வந்தால் நீயும் அவர்களுக்கன்புகாட்டியுன் வீட்டிலுள்ளவர்களுந் தயையோடவர்களை விசாரிக்கச்செய்வாயோ? வேறு உதவி இல்லாவிட்டாலும் குளிர்ந்த முகத்தோடு இனிய வார்த்தையாகிலும் உடற்பசிக்கோன்றில்லாதேபோனாலும் அவர்கள் ஆத்துமத்துக்கு உணவாக நல்ல புத்தியாகிலும் சொல்லத் தேவையில்லையோ? உபதேசி வீட்டிலே தயை அன்பில்லையென்னப்படுவது நன்றாயிருக்குமோ?

நான்காம் சோதனை.

குருக்களைப்பற்றின ஒழுக்கம்.

க. குருக்களிடத்திலே இயேசுநாதரை எண்ணிக்கொள்ளுகிறாயோ? உங்கள் வார்த்

தையைக் கேட்பவர் என் வார்த்தையைக் கேட்டவரென்று குருக்களுக்கெல்லாம் இயேசுநாதர் திருவுளம்பற்றினார். பின்னையும் அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் உலகத்தை ஆள்பவர்க்கும் கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படிந்தாற்போலெல்லாருக்கும் கீழ்ப்படியக் கட்டளையிட்டார். இப்படி எண்ணினையாகில் முகத்தில் மாத்திரம் வணக்கத்தைக்காட்டி மனதில் எண்ணமில்லாதிருக்கிறதென்ன? புறத்திலே வணக்கமில்லாமல் பேசுகிறதென்ன? இயேசுநாதர் மனநினைவையும் அறியாரோ? புறத்திலே சொன்னதையும் கேளாரோ?

உ. குருக்களிடத்தில் இயேசுநாதரை எண்ணி வணங்குவதன்றிக் குருக்களையும் கனமாயெண்ணக்கடவீர்கள். அவர்களிடத்தில் நிழலாக ஒன்றைக் கண்டாலும் அது மாசென்றெண்ணி, அவர்களை மனதில் இகழவேண்டாம். கடும் தவத்தைச்செய்துகொண்டிருந்த அர்ச்சேயசிஷ்ட அற்சேனி என்பவரைக் காண ஒரு குருவானவர் போகையில், மற்றொரு முனி அற்சேனியருடைய தவத்தை அறியக் கூடப்போனார். போனவிடத்திலே வியாதியாயிருந்த அற்சேனியென்பவர் ஓரிரத்தினக் கம்பளிமேல் படுத்துக்கோண்டு ஒரு தலையணைமேல் சாய்ந்திருந்ததைக்கண்டு வந்த முனி அவரை இகழ்ச்சியாக எண்ணினான். அதைக்கண்டுகோண்ட குருவானவர் அப்பால் போனபின்பு, நீ முனியாவதற்கு முன்னே உனக்

கிருந்த செல்வம் என்னவென்றார்? அதற்க வன் அப்போது நான் உழைத்தாலொழிய உண்பதற்கொன்றுமில்லாத ஏழையாயிருந்தே னென்றமையால், குருவானவர் சொன்னதாவது; இப்போது கண்ட அற்சேனி முனியாகு முன்னே இராசாவின் மகளை வளர்த்தவரா கிச் சகல செல்வத்துடனே பொன்மணிகு விந்த அரமனையிலே வாழ்ந்திருந்தவராக்கும். இப்படிப்பட்டவர் எல்லாவற்றையும் துறந்து இப்போது வியாதியாயிருக்கையில், ஒரு கம் பளியும் தலையணையும் வைத்திருக்கிறதைக் கண்டதினால், அவர் தவத்தை இகழ நினைப் பது நியாயமோவென்றார்? அதற்கம்முனியும் நாணி அற்சேனியை வேறாக எண்ணிப் போ னான். குருவை எண்ணாத சீஷன் குருக்காட் டின வித்தையையும் எண்ணமாட்டான்.

௩. ஒரோரிடத்தில் குருக்கள் தன்னைக்கண் டித்தால் தானும் மனதில் சினங்கொண்டு அகங்கரித்துக் குருக்கள் கொடியரென்றும், கோபக்காரரென்றும் புறத்திலே தூற்றி முறை ப்பட்டுத் திரிவானா? ஆகிலும் அர்ச்சேயசி ஷ்ட சின்னப்பர் எழுதினபடியே உங்கள் நடக்கைமேலும் குருக்கள் ஆண்டவருக்குக் கணக்குச்சொல்ல இருக்கிறார்களென்று அறி யீர்களோ?

௪. குருக்கள் மனிதராகையில் யாதொரு சமயத்தில் ஒரு குறைசெய்தால் நீ அதைக் கண்டு மறைய மூடாமல் வெளியில்வைத்துத்

தூற்றுவாயோ? வேதத்தில் எழுதினபடி கா மேன்பவன் நோவாவென்னும் தன் தகப்பன் நிருவாணமாய்த் தூங்குகிறதைக்கண்டு பரியா சமாகத் தன் அண்ணன்மாருக்குச் சோன்னதி ஞல் இன்னும் அவன் கோத்திரத்தாரும் தீரா த சாபம்பெற்ற செய்தியை அறியீர்களோ? ஆ கிலும் அவன் குற்றமில்லாத குறையைக் காட் டினுன். அதையும் அண்ணன்மாருக்கோழி யப் பிறருக்குக் காட்டினவனல்ல? இதைக் கண்டு நீங்கள் அஞ்சத்தேவையில்லையோ?

ரு. குருக்கள் தந்ததேபோதும். போதா தேன்பாயோ? அப்படியானுல் பொருளா சைப்பட்டு மனிதர்க்கூழியஞ்செய்கிறதோழிய மோட்சத்தில் உனக்கு இனிவரும் பலனுசை யால் ஆண்டவரைச் சேவித்தவன் நீயல்ல வேன்று தோன்றுமல்லவோ?

சூ. உன் சோம்பலை மறைக்கக் குருக்கள் முன்னே வெகுசாமர்த்தியம்பேசிச் செய்யா ததைச் செய்ததாகச்சோல்லிச் செய்ததற்குப் பலவற்றைக் கூட்டிச் சித்திரமாகவர்ணித்துப் பேசி அவர்களை ஏய்க்கப்பார்ப்பாயோ? ஆ கிலும் குருக்கள் மனிதர்களாகையால் அவர்க ளை ஏய்ப்பதரிதல்லவாயினும், எல்லாவற்றை யும் அறிந்த சுவாமியை ஏய்ப்பாயோ? அவ ருக்கலலவோ கணக்கோப்புவிக்கக்கடவாய். அவரல்லவோ நீசோன்னதற்களவாகத் தவி ராமல் செய்ததற்களவாகப் பலனைத்தருவார்.

ஐந்தாம் சோதனை.

திருச்சபையைப்பற்றின ஒழுக்கம்.

க. உனக்குவிட்ட சீமையில் சோம்பலின்றித் திரிகிறாயோ? ஒருவனேருத்தியிருக்கும் ஊருக்குப்போய் விசாரிக்கிறாயோ? மற்றவர்களைப்போல ஏழைச்சனங்களையும் பராமரிக்கிறாயோ? உபதேசங்கேட்ட தரித்திரர் இயேசுநாதருக்கு விருந்தல்லவோ? தாம் இரட்சிக்கவந்த சுவாமியென்றறிய இதோ தரித்திரர் உபதேசம் கேட்டார்களென்றார். இனித்தரித்திரரை விசாரியாத உபதேசியைக் கண்டிதமாய்க் கணக்குக்கேளாரோ?

உ. சீமை திரியும்போது நீ செய்யும் தன்மையென்ன? ஒரு ஊருக்குச் சென்றாற்போலே சிறு பிள்ளைகள் ஒவ்வொருவரையும் விடாதழைப்பித்துப் பாவவிமோசனம் செய்ததோவென்று விசாரித்துக் குறைகண்டவிடத்தில் தண்டித்து, தாய்தகப்பனை நிந்தித்து, அவர்களை அடித்து, சிறியோர் செய்த குற்றங்களில் பெரியோர்மேல் குறைகண்டால், இவர்களும் அவர்களும் ஆண்டவரது ஆக்கினைக்கஞ்சப் புத்திசொல்வாயோ? ஊரிலே நடந்து ஆவலாதியும் பிடித்த சண்டையும் வளர்ந்த பகையும் விசாரித்துக்கண்ட குறைகளைத்தீர்க்க உபாயமாய் நயமும் பயமுங்காட்டிப் பிரயாசப்படுகிறாயோ? ஊருக்கூர் திரிந்தொருநாள் பிரார்த்தனைபண்ணிப்போட்டுச் சோர்வின்றிக்

கோவிலுக்குப் போங்களேன்றமாத்திரத்திலே கடன் தீர்ந்ததென்றிருக்கிருயோ?

௩. சனங்களுக்குப் பட்சத்தைக் காட்டுகிருயோ? உபதேசி நடக்கும் மகிமைக்கும், சொல்லும் நியாயங்களுக்கும், சனங்களஞ்ச வேண்டுமல்லாமல் உன் கோபத்துக்கும் உன் நடைக்கும் அஞ்சுவது உனக்கு யோக்கியமல்ல. உலக மணியகாரருக்கிப்படி அஞ்சுகிறது சரியே. நீ காட்டும் பரம ஞானத்தைப் பற்றி, உன்னைக்கண்டவுடன் எல்லாரும் நடுங்கி, ஒடுக்கமாய் நின்ருலே உனக்கு யோக்கியமாம்.

௪. சனங்களீடேற்றமே உனக்குக் கருத்தல்லாமல் வேறில்லையென்று எல்லாருக்கும் ஒப்புவிக்கப் பிரயாசப்படுகிருயோ? அவர்களுக்கித் நிச்சயமானல் உன்மேலே பட்சமும் வணக்கமுமுண்டாம். அப்போது நீ அவர்களை எப்படியாட்டவேண்டுமாயினுமெளிதாம். கொடிய சிங்கத்தையும் பட்சத்தாலமர்த்தி ஆட்டுவாரில்லையோ? இந்தப் பட்சமுமில்லாவிட்டால் ஈரமில்லா விதைப்புப் போலாகி விளைவுகாண்பதரிதே.

௫. இது நிமித்தமாகப் பிறர் கைப்பொருளுக்காசை காட்டாதிருப்பது மிகவும்வேண்டியதாமே. எந்த ஆசைகாட்டினலும் உனக்கீனமாவதல்லது, நீ அவர்க்குப்படும் பிரயாசமெல்லாம் உனக்குவேண்டிப்படுகிருயென்று தோன்றுமே. அதினல் அவர்களுக்குன்

மேல் பட்சம்வராமல் அருவருப்புண்டாம். அர்ச்சேயசிஷ்ட சின்னப்பர் கொரிந்தியருக்கெழுதி உபதேசம் சொல்லிக்கொண்டு திரிகிறவர்கள் தங்களுக்கு வேண்டியதெல்லாம் சனங்களிடத்திலே வாங்குவதே நியாயமென்றபின்பு எழுதினதாவது; இது மெய்யாயினும், இதனுல் சத்தியவேதம் பரம்ப விக்கினமுமுண்டாமென்றமையால், நான் ஒருவன் கையிலொன்றும் வாங்காமலே திரிகிறேனென்ருர். இதோ பொருளாசை வேதம்பரம்புகிறதற்கு விக்கினமாகவந்தால் எந்த ஆக்கினைக்குப்பாத்திரமாவார்கள்.

ஆனசமயம் போகவொட்டாமல் சனங்களுக்கு உதவப்போகிருயோ! சமயத்துக்குச் சொன்ன ஒரு வார்த்தையினுல் பலவாத்துமங்களைக் கரையேற்றுவதற்கு எளிதாகிய அந்தச் சமயந்தப்பினுல் எவராலுமாகாது. ஒரு வறுமையினுலாயினும், விக்கினத்தினுலாயினும் தத்தளிக்கிற செய்தியைக்கேட்டால் ஒரு நாழிகையாயினும் நிற்கவேண்டாம். உடனே போய் ஆறுதலும் உறுதியுஞ்சொல்லி, அவனை ஸ்திரப்படுத்தப் பிரயாசப்படுவாய். அப்படி மற்ருெருவன் மயங்கினதை அறிந்தவுடனே போய் நயமும் பயமுங்காட்டி, அவனைத்திருப்ப உன்னுலானதெல்லாஞ்செய்வாய். இந்த ஆசையோடே விழுவாரைத்தாங்கி விழுந்தாரைத்தூக்கி எல்லாரையும் கரையேற்றத்தக்க சமயங்களை விடவேண்டாம்.

ஆறும் சோதனை.

அஞ்ஞானிகளைப்பற்றின ஒழுக்கம்.

க. கிறிஸ்தவர்களைமாத்திரம் விசாரிக்க உனக்குக் கடனென்றிருக்கிறாயோ? கிறிஸ்துவின் இராச்சியம் பரம்ப அஞ்ஞானிகளுக்கும் சத்தியவேதத்தை அறிவிக்கக் கடனில்லையோ? இவர்களைக்குறித்தே விசேஷமாய் உபதேசிகள் ஸ்தாபிக்கப்பட்டார்கள். கேட்டவர்கள் ஞானத்தில் உனக்குக்கூடப் பிறப்புப்போல் ஆசையால் அவர்கள் அறிந்த ஞானத்தின்படி நடக்க முந்திப் பிரயாசப்படுவது நியாயம். ஆயினும் சகல அஞ்ஞானிகளையும் படிப்பித்து, ஞான தீட்சை பெறுவிக்க வருந்தித்திரியுங்களேன்று இயேசுநாதர் கற்பித்தாரல்லவோ? ஆகையால் உன்னைத்தேடி வேதத்தைத்தேடி வந்தவர்களுக்குமாத்திரம் அதைச் சோல்லுகிறாயோ? நீயே அவர்களைத்தேடி உபாயமாய் அவர்கள் மயக்கத்தைக்காட்டி, புண்ணியத்தின்மேலும், மோட்சத்தின்மேலும் ஆசைபற்றுவித்து, அவர்கள் மனதைத்திருப்பும் வழியெல்லாம் பார்க்கிறது உன் தோழிலுக்கு இயல்பாம்.

உ. அஞ்ஞானிகளைத்திருப்ப அவர்கள் அநுசரிக்கும் அபத்தங்களை ஆராய்ந்தறியப் பிரயாசப்படுகிறாயோ? நஞ்சின்குணத்தை அறியாதவன் அதற்கான மருந்து கோடுப்பானோ?

அஞ்ஞானத்தில் வழங்கும் தப்பிதங்களை அறியாமல் மறுப்பாயோ? அவைகளைப் படிப்பதும் அதற்குரிய நியாயங்களைப் படிப்பதும் உனக்குக்கடன்தானே. விசேஷமாய் எதுக்கும் பொதுவாகச் சில நியாயங்களுண்டாம். அவைகளை விசேஷமாய் அறியக்கடவாய்.

௯. சுபாபமாய் வரும் சமயங்களைக்கொண்டு நீ அவர்களுக்குப் புத்திசொல்லப் பார்க்கிருயோ? அர்ச்சேயசிஷ்ட சூசையப்பர் இயேசுநாதருக்கு முதல் உபதேசியாக்கும். அவரே சிந்துதேசத்தில் போய்யான தேவர்கள் கோவில்களை இடித்ததைக்கொண்டு எண்ணப்படாதபேர்களுக்குச் சத்தியவேதத்தைப் போதித்தறிவோம். அப்படியே வந்த பசிபடை நோவு நழையவும் வாயிலாய்முடிக்க உபாயங்களை அறிந்தவனுகவும் இந்தக்குணங்கள் உனக்கும் உண்டோ இல்லையோவென்றும் பார்த்து இல்லாததை அடையப் பிரயாசப்படக்கடவாய்.

ஏழாம் சோதனை.

அவஸ்தைக்காரரைப்பற்றின ஒழுக்கம்.

க. ஒருவன் அவஸ்தையாய்க்கிடக்கிறதறிந்து உன்னை அழையாதேபோனுலும் உடனே போகிருயோ? என்ன அவசரமிருந்தாலும் இதற்குமேற்பட்ட அவசரமொன்றுமில்லை. இதுவே உன் உத்தியோகத்தின் முதற்கரும

மாகவும், உன் தொழிற்குள்ள முதற்கடனாகவும், உனக்கு வேண்டிய முதற்கருத்தாகவும் எண்ணக்கடவாய்.

௨. அவஸ்தைக்காரர் கிட்டப்போய்ப் படித்த ஆயத்தத்தைப் பள்ளிக்கூடப்பிள்ளைகள் பாடம் ஒப்புவித்தாற்போலக் குழறிச்சொன்னால் போதுமென்றிருக்கிறாயோ? மரணமே மோட்சத்துக்காகிலும், நரகத்துக்காகிலும் வாயிலாமே. பசாசு சோதனையில் அகப்படாமல், அந்தச்சணமே தப்பினால் இனிப்பயமில்லை. அந்தச்சணத்தில் மோசம்வந்தால், வந்தகேடென்றும் திரும்பாதே. இதையறிந்து நீ இந்த ஆத்துமத்தைக் கரையேற்ற மெய்யான ஆசையோடே அவனவனுக்குத்தக்கதாகப் புத்திசொல்லி விசுவாசம், நம்பிக்கை, பத்தி, மனஸ்தாபம் அவனுக்குண்டாகக்கூட உருகி அழுது பிரயாசப்படவேண்டாமோ?

௩. அவஸ்தையின்றி வந்த வியாதி நெடுநாள் நின்றால், அடிக்கடி அவனைக் காணப்போய்ப் பொறுமையாயிருக்கவும், நல்ல மரணத்துக்கு ஆயத்தஞ்செய்யவும் உறுதிசொல்லிக் கொண்டு வருவாயோ? எத்தனைபேர்கள் வியாதி பொறுக்கமாட்டாமல், ஆத்துமத்தையும் கொடுத்தார்கள். எத்தனைபேர்கள் சரீரத்துக்கு வந்த வியாதியால் தாழ்ச்சியடைந்து, தங்கள் பாவங்களை வெறுத்து, ஆத்துமம் பிழைக்கச் செய்தார்கள். அவர்கள் அப்படிக்கெடாமல்

இந்தத் தீமையால் வியாதியைப் பலனுகப் போறுக்க நீயே புத்திசோல்லக்கடவாய்.

ச. மரணம் கிட்டினதேன்று நீ ஆயத்தம் சோன்னவுடனே அவனை விட்டுப்போகிருயோ! அந்த ஆத்துமத்தைக் கேடுக்கவந்த பசாசு அப்படி அகன்றுபோகாமல், ஆத்துமம் பிரியுந்தனையும் கூடவேநிற்குமல்லவோ! அவனுக்கு நினைவேல்லாம் போனதேன்பாய். ஆகிலும், அடையாளம் கோடுக்கமாட்டாதே போனுலும், காதிலே சோன்னதை அநேகம் விசை கேட்கப்படுமேன்று அவஸ்தையாய்க் கிடந்து பிழைத்த பலரே சோன்னதறிவோம். மற்றப்படி வேறேன்றும் சேய்யாமல், அந்த ஆத்துமத்துக்கு உதவிசேய்ய நீயும் மற்றவர்களும் ஆண்டவரை வேண்டிக்கோள்ளக்கடவீர்கள்.

ரு. வியாதியாய்க்கிடக்கிறவர்கள் வறுமையைக்கண்டிரங்கி உன்னுல் ஆகாதேபோனுலும் உடையவர்களைக்கோண்டு தயையோடு உதவிசேய்யப் பார்க்கிருயோ? ஆரோக்கியமிருந்தால், இரந்தானுலும் பிழைப்பார்கள். தரித்திரமும் வியாதியுங்கூடினுல் பிழைக்கும் வழியில்லாமையால், அவர்களுக்கு உதவிசேய்வது மற்றவர்களுக்கு முழுக்கடன்தானே. இந்த நியாயங்களை அவர்களுக்குங்காட்டி இந்தச்சமயத்தில் உதவாமற்போனுல், பாவமேன்றுசோல்லி வியாதியாய்க்கிடக்கும் வறிய

வர்களுக்கு ஆறுதலாகவும், மற்றவர்க்குப் புண்ணியமுண்டாகவும் பிரயாசப்படுவாய்.

௲. சேத்தவர்களை மரியாதை வணக்கத்தோடேயும் பத்தியாசையோடேயுஞ்செய்யும் சடங்குகளைமுடித்துப் பூஜிதையோடு அடக்கி வருவாயோ? இது திருச்சபையிலே மிகவும் எண்ணப்பட்ட கருமம், எரிந்த பிரேதங்களை ஒளித்தெடுத்து அடக்கினதினால், அநேகம்பேர்கள் வேதசாட்சிகளாய்ப் பிராணனைத்தந்ததறிவோம். இந்தப் புண்ணியத்தினால் தோபியனென்பவர் ஆண்டவரால் அதிசயமான சகாயங்களைப் பெற்றதாக வேதத்தில் எழுதினதல்லவோ? மீளவும், சேத்தவர்கள் ஆத்துமத்துக்காகக் கூடின யாவரும் நன்றாய் வேண்டிக்கோள்ளவும், பிச்சை தருமங்களை நடத்தவும் சோல்லக்கடவாய். சேத்தவன் மனிதர் தரித்திரராகில், அந்த ஆத்துமத்துக்கு மற்றவர் விசேஷமாய் உதவிசெய்யும்படிக்குப் பிரயாசப்படக்கடவாய்.

எட்டாம் சோதனை.

விக்கினங்களைப்பற்றின ஒழுக்கம்.

க. அஞ்ஞானிகளினாலும் பசாசுகளினாலும் சத்தியவேதத்துக்கு விக்கினம் வந்தவிடத்தில் எல்லாவற்றுக்குமுன்னே ஆண்டவர் உதவியைத் தேட நினைக்கிறாயோ? சத்தியவேதம் பரம்பி வழங்குவதும், வந்த விக்கினங்களை

நீக்கி வெல்லுவதும், ஆண்டவர் காரியமும் வராமல்மாத்திரமாகும் கருமமுமல்லவோ! ஆகையால், அவர் பாரமும், நம்பிக்கையும் முழுதும் வைத்து வேண்டிக்கொள்வது நியாயம். சிலபேர் ஆபத்துவந்தபோதே எல்லாவற்றையும் நினைத்து, எல்லா உதவியையும் தேடி, ஆண்டவரைமாத்திரம் நினைப்பார்கள். அப்போதவரும் இப்படிப்பட்டவர்களுக்கு உதவிசெய்யச் சித்தமாவாரோ!

உ. வந்த விக்கினங்களைத்தீர்க்கப் புறச்சலிகை தேடுவது குறையல்ல, செய்யவேண்டிய கருமந்தானே. ஆகிலும், தேடின மனிதர் சலிகையிலூன்றி முழுதும் நம்புவது குற்றமாமே. புறச்சலிகை உதவிதேடினவிடத்திலும் அதைக்கொண்டு ஆண்டவர் கருமத்தை முடிக்க வேண்டிக்கொண்டுதான் அவரைமாத்திரம் நம்பக்கடவன். ஆண்டவரை நினையாமல் மனிதர் உதவியை நம்பினதினால், அநேகமுறை காரியமாகாமல் கேடுவது நிச்சயம். வேதத்தில் எழுதினபடியே ஆசனென்கிற இராசாவை ஆண்டவர் கோபித்து, நீ சீரியராசாவை நம்பினதொழிய ஆண்டவரை நினையாததினால், சீரியராசாவின் படை உனக்கு உதவியுமானதல்ல. இனி இன்றுமுதல் உன்மேலே பலபடை எங்குமெதிர்த்துவரவும் காண்பாயென்றார்.

௩. எழும்பின கலகத்துச் செய்தியைக் கேட்டவுடனே உனக்குவரும் முதல் நினை

வென்ன? புதிதாய் முளைத்த இளம் பயிர் அடித்த காற்று முகத்தில் சாயுமோவென்று இரங்கி அஞ்சுவாயோ! உனக்குமாத்திரம் அஞ்சி நீ தப்பும் வழியைப் பார்ப்பாயோ! நல்ல இடையன் தான் மேய்க்கும் ஆடுகளுக்காக உயிரைக் கொடுப்பானென்று இயேசுநாதர் திருவுளம்பற்றினதன்றி அப்படித்தானே செய்தார்.

ச. ஒரோரிடத்தில் விலகிப்போவது நல்லதாம். அப்படியே இயேசுநாதரும் செய்தார். விலகிப்போனாலும் மற்றச் சனங்களுக்குக் கேடுவருமோவென்று இரக்கத்தினால் அஞ்சுவதன்றி உன்னைப்பற்றி அஞ்சவேவேண்டாம். உன் தொழிலைச் செய்திருந்த அப்போஸ்தலர்கள் அடியும், நிந்தையும் பட்டதனால் சந்தோஷம் காட்டினார்களென்று வேதத்தில் எழுதப்பட்டதறிவோம். மீளவும் தங்கள் உபதேசிகாட்டின குணத்தின் தன்மையால் மற்றவர்களும் செய்வார்கள். நீ காட்டின அச்சத்தால் அவர்கள் மயங்க, நீ காட்டின தைரியமே சொன்ன மற்ற உறுதிகளைப்பார்க்கிலும் அவர்களுக்கு மனம் துணிவாக உதவுமே? படைமுகத்தில் பயந்த சேவகரை மற்றவரும் கண்டஞ்சாதபடிக்குத் தன் வீட்டுக்கனுப்பச் சொல்லி வேதத்தில் ஆண்டவர் கட்டளையிட்டிருந்தார். நீ தலைவனாகையில், அச்சத்தைக் காட்டினால் மற்றவர் அஞ்சாதுறுதியாய் நிற்பார்களோ?

ரு. வந்த விக்கினங்களுக்கு அஞ்சுவதன்றி அதினால் அதிகமாய்ச்செய்யத் துணிவுவிட்டு மயங்குகிறாயோ? அர்ச்சேயசிஷ்ட சவரியார் இந்தச் சத்தியவேதத்தைப் போதிக்கிறதற்கு எவ்வளவாக விக்கினங்கள் எழும்பக் கண்டாலும் அவ்வளவதிகமாய்ச் சந்தோஷமும் நயமும் தணிவும் காட்டுவாராம். அதேதேனில், நான் செய்வது ஆண்டவருக்குப் பொருந்தினதினாலல்லவோ பசாசுஅதைப்பொறாமல் அத்தனை விக்கினங்களை எழுப்பப் பிரயாசப்படுமேன்பாராம். நம்மால் விக்கினம் வாராமற்போனால் போதும். மற்றதெல்லாம் பொன்னொளிபெறச் சுடுநெருப்பு உதவுமாப்போல் திருச்சபை வளர்ந்து, அதிகமாய் விளங்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

சு. எப்போதாகிலும் வேதத்தைப்பற்றிச் சிறைப்பட்டிருந்தாயாகில், அதிலே காட்டின மரியாதையென்ன? அந்தத்தறுவாயிலே விசேஷமாய் உன்கையிலே வேதத்தின் மகிமை நிற்பதென்று தேறக்கடவாய். வேதத்தினிமித்தமாகப்பட்ட நிந்தையையும், அடியையும் சற்றுமெண்ணாதிருப்பதுந்தவிர அதுவே உனக்கு வெகுமானமும், சந்தோஷமுமென்று காட்டக்கடவாய். அகங்காரத்தைக் காண்பிக்க ஒண்ணாதாயினும் துணிவும், தைரியமும், உனக்கு அதிலேயும், உன் வார்த்தையிலேயும் காணச்செய்வாய். மீளவும் எப்போதாகிலும் அந்தத்தறுவாயில் உன்னிடத்தில்

ஆண்டவர் மகிமைவிளங்கித் தோன்றவேண்டியதினல், அவர் உனக்கு உதவியாக நிற்பாரென்று விசேஷமாய் நம்பக்கடவாய். அப்போது நீ நிற்பதும், வேதமகிமை நிற்பதும், ஒன்றுகையில் உன் இனத்தைப்பாராமல் தமது வேதத்தை வேண்டியாகிலும் ஆண்டவர் உன்னைத் தாங்கி விழவோட்டாமல் இரட்சிப்பாரென்பது நிச்சயமாமோ!

இதிலே எண்வகுப்பாகப் பிரித்துக்காட்டின உபதேசிக்கு வேண்டின ஒழுக்கமுறைகளை நீங்கள் ஒவ்வொன்றுய் ஆராய்ந்து, உங்களொழுக்கமும் அதற்கோத்ததோ இல்லையோவென்று பார்த்துக் கண்டகுறைகளைத் தீர்த்துக்காட்டின முறையின்படியே ஆண்டவர் உதவியைக்கொண்டு நடக்கத் துணிவீர்கள். ஆண்டவர் பகைத்த பாவங்களை ஒழிக்க அவர் அருளிச்செய்த வேதத்தைப் பரப்ப அவர் மீட்டிரட்சித்த ஆத்துமங்களைக் கரையேற்ற ஆண்டவர்மேலே பத்தியும், ஆத்துமங்கள்மேலே இரக்கமும், உங்கள்மேல் பட்சமும் ஆசையுமுண்டாயிருந்தால்; காட்டின முறையோடொழுக்க ஆசையுமுண்டாம்.

வேதியரொழுக்கம் முற்றிற்று.

Date Due

Remington Rand Inc. Cat. no. 1139.

YALE UNIVERSITY LIBRARY
3 9002 02964 6214
Tib5
B46

Tib5
B46

Beschi, C.J.
AUTHOR

Instructions to catechists.
TITLE

DATE DUE	BORROWER'S NAME
	PRINTED IN U.S.A.